சோழ நாட்டுத் திருப்பதிகள்

முதற் பகுதி

67

பேராசிரியர்
டாக்டர். ந.சுப்புரெட்டியார்

அவ்வை

சோழ நாட்டுத் திருப்பதிகள்

(முதற் பகுதி)

'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'வைணவ இலக்கியமாமணி'
'தமிழ் வாகைச் செம்மல்'

பேராசிரியர். டாக்டர். ந. சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி., டி.லிட்.,

அவ்வை
எண்.1, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
☎ 55688527

நூலின் தலைப்பு	:	**சோழ நாட்டுத் திருப்பதிகள் [முதற் பகுதி]**
நூலாசிரியர்	:	*பேராசிரியர் டாக்டர்.* ந. சுப்புரெட்டியார்
பதிப்பு	:	திருந்திய செவ்விய முதற் பதிப்பு
ஆண்டு	:	நவம்பர் 2004
நூல் வகை	:	கட்டுரைகள்
பக்கங்கள்	:	XVI + 176 = 192
நூல் அளவு	:	டெம்மி
அட்டைப்படம் & ஒளி அச்சு	:	கிளாசிக் டிசைன்ஸ், சென்னை - 17
அச்சிட்டோர்	:	ஜே.எம்.ப்ராசஸ், சென்னை - 5
விலை	:	ரூ. 75/-

வெளியீடு

அவ்வை

எண்.1, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
☎ 55688527

வானமாமலை மடத்து 28-வது பட்டம்

ஸ்ரீமத் பரமஹம்ச சடகோப

ராமாநுஜ ஜீயர் சுவாமி

அவர்களின் திருவடிகளில்

பக்திப் படையல்

மோனமா தவத்தின் முடிமணி யான
முகுந்தனின் கருணையில் உருகும்
ஞானமா தவர்கள் பதின்மருக் குளத்தை
நற்பெருங் கோயிலாச் செய்து
தானமே முதலாம் குணங்களாம் பணியால்
சால்புடன் அலங்கரித் துவக்கும்
வானமா மலைநஞ் சீயர்தம் பாத
மலரினிற் சிறக்கஇந் நூலே.

அணிந்துரை

(ஜஸ்டிஸ் ஜி. இராமாநுஜம்)

''சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்'' என்று முமுட்சுப்படி பேசும். இதுவே சேதநருக்கு நலம் அளிப்பதெனக் கொண்டனர் ஆழ்வார் பெருமக்கள். இந்த அர்ச்சாவதார எம்பெருமான்களை 108 என்று கணக்கிட்டு கூறுபவர்களின்மீது பாசுரங்கள் பாடிப் போற்றியுள்ளார்கள். இந்த எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ள சோழ நாட்டுத் திவ்விய தேசங்கள் 40. இந்த நூல் திருவரங்கம் பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை முடிய 20 திருக் கோயில்களைப் பற்றியும் அங்குப் பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார எம்பெருமான்களைப் பற்றியும் கூறுவது. ஏனைய 20 திருத்தலங்கள் பற்றி அடுத்த பகுதியில் வெளிவரும் போலும்.

சைவ சமயத்தைச் சார்ந்தவர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் என்பதை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பயின்றபோதே அறிவேன். வைணவ சமயத்தைச் சார்ந்த நான் இன்று வைண சமயத்தில் பேராசிரியர் ரெட்டியார் இவ்வளவு ஊற்றம் பெற்றிருப்பதையும் ஆழ்வார் பாசுரங்களில் மிகவும் ஆழங்கால் பட்டிருப்பதையும் காணும்போது எனக்குப் பெரு வியப்பு ஏற்படுகின்றது. ஆழ்வார் பாசுரங்களில் இவர் தன்னைப் பறிகொடுத்திருப்பதை நூலெங்கும் காணலாம். ஆங்காங்கு வைணவ தத்துவக் கருத்துகளை எடுத்துக் காட்டியிருப்பது இத்திருத்தலப் பயண நூலுக்கு பொலிவும் அழகும் ஊட்டி யிள்ளன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறும் 'மாயோன்' தமிழ் நாட்டில் கண்ணனாக வளர்ந்ததையும் இதுவே தமிழ் நாட்டார் கிருஷ்ணபக்திக்கு முதலிடம் தந்திருப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் (பக்கம்-15) ஆசிரியர் சுட்டியுள்ளது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

வைணவ சமயம் கூறும் அர்த்த பஞ்சக ஞானம் (பக். 31-33) சரீர - சரீரிபாவனை (பக். 36-39, 142-144) இதனை விளக்க ஈட்டாசிரியர் காட்டும் எடுத்துக் காட்டு (பக். 41-42), இறைவன் மூன்று காரணங்களாக இருக்கும் நிலை (பக். 46-47), பெரிய பிராட்டியாரின் புருஷகாரம் (பக். 68), நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தொகுக்கப் பெற்ற வரலாறு (பக். 74-75), வைணவ தத்துவ விளக்கம் (பக். 138-140) அழகின் தத்துவமே ஆண்டவன் தத்தும் (பக். 152-155) போன்ற கருத்துகள் நூலினைப் படிப்போருக்கு ஓரளவு வைணவதத்துவம் பற்றிய சிறு சிறு விளக்கங்களாக அமைந்திருப்பது போற்றத் தக்கது. ஆங்காங்குக் காட்டப் பெற்றுள்ள பாசுரங்களின் விளக்கம் படிப்போரிடம் பிரபந்தத்தைப் பயிலவேண்டும் என்ற அவாவை எழுப்புவதாக அமைந்துள்ளது. வியாக்கியாதாக்கள் கூறியுள்ள குறிப்புகளைச் சுட்டி உரைத்திருப்பது வியாக்கியானங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை நம்மிடம் தூண்டுகின்றது. சுருக்கமாகக் கூறினால் இந்நூல் படிப்போருக்கு ஆராவமுதமாய், தெவிட்டாத தெள்ளமுதமாய் இனிக்கின்றது என்று கூறின், அது மிகையாகாது.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவைப் பாடுபட்டுப் பெற்றவர். அத்துறைகளில் எல்லாம் பன்னூல்களை எழுதிக் குவித்திருக்கின்றார். இன்றும் எழுதிக் கொண்டே இருக்கின்றார். பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையைத் தன் முயற்சியால் நிறுவி அதன் தலைவராக இருந்து பணியாற்றியவர். இதில் இவர் எடுத்துக் கொண்ட முயற்சி பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பெறவேண்டியது. இவருடைய பல துறை அறிவு, ஆட்சித் திறன், விடா முயற்சி, எண்ணியதைச் செய்து முடிக்கும் திண்ணிய ஆற்றல் இவை யனைத்தும் ஒருங்கே யமைந்து ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவி அதைச் சிறப்புற வளர்க்கும் திறன் இவரிடம் அமைந்து கிடப்பதை நேரில் பார்க்கின்றேன். இத்தனைக்கும் மேலாக, இவருடைய தெய்வ பக்திக் கொப்பத் தமிழ் பக்தியும் இவரிடம் நிறைய உண்டு. பலதுறை அறிவு நூல்கள் தமிழில் பெருகினாலன்றி தமிழ் ஏற்றம் பெறாது என்ற அதிராக் கொள்கையை யுடையவர். இவர், எல்லாம் இறைவன் செயலால் தான் நடைபெறும் என்ற நம்பிக்கையுடையவர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதியில் தமிழ்ப் பணியாற்றியதால் திருவேங்கடவன் திருவருள் இவர்மீது வெள்ளங் கோத்திருப்ப

தாகவே கருதுகின்றேன். ஒய்வு காலத்திலும் தளராது எழுதி வருவதைப் பாராட்டுகின்றேன். அதுவும் தத்துவம், சமயம் இவைபற்றிய நூல்களை எழுதி வருவது பாராட்டற் பாலது. வயதிற்கும் ஏற்றது. இவர்தாம் முயற்சி வெல்க. இவர் நோய் நொடியின்றி நெடிது வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒல்லும் வகையெல்லாம் பணியாற்றவேண்டும் என்று இறைவனை நினைந்து வாழ்த்துகின்றேன்.

ஜி. இராமாநுஜம்

நூல் முகம்

தாதுஆடு வனமாலை தாரானோ?
என்றுஒன்றே தளர்ந்தாள் காண்மின்.
யாதானும் ஒன்றுஉரைக்கில் எம்பெருமான்
திருவரங்கம் என்னும்; பூமேல்
மாதுஆளன் குடம்ஆடி மதுசூதன்,
மன்னர்க்குஆய் முன்னம் சென்ற
தூதாளன் என்மகளைச் செய்தனகள்,
எங்ஙனம்நான் சொல்லு கேனே?[1]

- திருமங்கையாழ்வார்

'சிதம்பரம் போகாமல் இருப்பேனோ?' என்ற ஏக்கத்தைக் கொண்ட நந்தனாரைப்போல, 'என்று நான் டாக்டர் பட்டம் பெறுவேன்?' என்று ஏங்கிக் கிடந்தேன். 1943இல் தொடங்கிய இந்த ஏக்கம் தொடர்ந்து என்னை வாட்டத் தொடங்கியது. 'ஊழிற் பெருவலி யாவுள?' என்ற வள்ளுவர் வாக்கு என் எண்ண அலைகளின்மீது மேலோங்கி நின்றது. சென்னைப் பல்கலைக் கழக விதி என் 'தலைவிதி' போல் நின்று தடுத்தது.

புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே[2]

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கினைச் சிரமேற் கொண்டு, தமிழகத்தில் ஒரு கல்லூரிப் பேராசிரியர் - தமிழ்த் துறைவர் பதவியைத் துறந்து திங்கள் தோறும் ரூ. 153 இழப்பில், திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவியை ஏற்றேன் 1960-ஆகஸ்ட் முதல் நாள். திருப்பதி வந்தது டாக்டர் பட்டம் பெறுவதற்கு, பயன் இல்லை. இங்கும் பல்கலைக் கழக விதி குறுக்கே நின்றது. எனினும் என் ஆசை

1. பெரி. திரு. 5.5 : 6
2. திருவாய். 6.10 : 10

அரும்பு நான்கு ஆண்டுகளில் போதாகி ஏழுமலையான் திருவருளால் 1964-ஆகஸ்டில் மலரத் தொடங்கியது. திருவேங் கடவன் பல்கலைக் கழகம் வட மொழித்துறையில் பதிவு செய்து கொள்ள இசைவு வழங்கியது. பக்தி இலக்கியத்தின் கொடு முடியாகத் திகழும் '**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**' என் மனக்கண்முன் நின்றது. '**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம்**' என்ற தலைப்பை ஆய்பொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு என் ஆய்வினைத் தொடங்கி 1969இல் பிஎச்.டி. பட்டமும் பெற்றேன். 'புண்ணியமும் புருஷார்த்தமும்' ஒருசேர என்னை வந்தடைந்தன.

திருப்பதி வந்ததும், தமிழக அரசின் மானியம் பெற்றுத் தமிழை வளர்க்க வேண்டும் என்ற எண்ணமும் என்பால் முகிழ்க்கத் தொடங்கியது. அப்பொழுது சென்னைஅரசு கல்வி - நிதி அமைச்சராக இருந்தவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள். அவர் திருப்பதி வந்தபோது (1961-இல்) என் எண்ணத்தை அவரிடம் வெளியிட்டேன். நிதியை உடனே அளிக்க ஒருப்பட்டார் அப்பெருமகனார். 'சில சூழ்நிலைகளால்' திருப்பதிப் பல்கலைக்கழகம் மானியத்தை ஏற்க ஒப்பவில்லை. என்னையும் மறந்து என் குடும்பத்தையும் (ஆறு ஆண்டுகள்) துறந்து அறிவியல் நூல்களை எழுதுவதிலும் பிஎச்.டி. ஆய்விலும் ஈடுபட்டேன். அறிவியலில் பல துறை அறிவினைப் பெற பலர், குறிப்பாக விலங்கியல் துறையைச் சார்ந்த **திரு. ரங்கராவ், திரு. சீநிவாசலு** என்போர் உற்றுழி உதவினர். ஏற்கெனவே அறிவியலில் ஆழங்கால் பட்டிருந்த எனக்கு மீன் குஞ்சினை நீரில் விட்டது போலாயிற்று. என் அறிவுப்பசிக்கேற்ற உணவு தொடர்ந்து கிடைத்தவண்ணம் இருந்தது. இக்காலத்தில் ஆறு - அறிவியல் நூல்களை எழுதிமுடித்தேன். வெளிவந்ததத்தில் தாமதம் ஏற்பட்டதால் எழுதும் உற்சாகம் குறையத் தொடங்கியது.

1968இல் நான் பிஎச்.டி. பட்டம் பெற்றதும் "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலின்" திருவருளால் தமிழ் வளர்ச்சிக்காக யான் மேற்கொண்ட முயற்சி பலன் அளித்தது. ஏறக்குறையப் பத்தாண்டுகள் சென்னைப் பயணமும், ஏறக் குறைய இக்காலத்தில் 100 நாள்கள் விடுப்பும், சில ஆயிர ரூபாய் சொந்தப் பொறுப்பில் ஏற்ற செலவும், தலைமைச் செயலகத்தில் யான் வட்டமிட்டதும் 'கண் மூடி மௌனி'யாக நிற்கும் ஏழுமலையான் திருவுள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும்.

''படமுடி யாதினித் துயரம் பட்டதெல்லாம் போதும்'' என்ற மன நிலை ஏற்பட்டபோது எம்பெருமான் திருவருள் சுரந்தது. ஒரு சமயம் மானியத்திற்கு விண்ணப்பம் செய்யவே பதிவாளர் மறுத்தார். அப்போது துணை வேந்தராக இருந்த 'வாமன மூர்த்தி' துணை நின்றார். விண்ணப்பமும் அனுப்பப் பெற்றது. எவரை நாடியும் பயனளிக்காத நிலையில் எம்பெருமான் என்னை முன்பின் அறியாத தலைமைச் செயலகத்தில் ஏதோ ஒரு துறையில் இணைச் செயலராகப் பணியாற்றிய **திரு. செ.முத்துப் பிள்ளை** அவர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தான். தமிழ் வளர்ச்சியில் யான் கொண்டிருந்த துடிப்பையும் பேரார்வத்தை யும் கண்ட பிள்ளையவர்கள் என்மீது கழிவிரக்கம் கொண்டு தாம் முயன்று ஆவன செய்வதாக வாக்கு தந்தார். விரைவில் அரசு ஐந்தாண்டுகட்கு ஐம்பதாயிரம் மானியம் என்ற ஆணையையும் பிறப்பித்தது. 1970-லிருந்து திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் '**தமிழ்த்துறை**' என்று பெயரளவில் இருந்த துறை வளர்ந்தது. இதற்கு உறுதுணையாக இருந்தவர் துணை-வேந்தர் டாக்டர் **டி. சகந்நாத**ரெட்டி அவர்கள். இந்த அளவில்,

> **எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
> **திண்ணிய ராகப் பெறின்.**[3]

என்ற வள்ளுவர் வாக்கின் பொருளை நன்கு உணர்ந்தேன்.

மீண்டும் 'கலி' என்னைப் பற்றினான் துணைவேந்தர் உருவில். 'ரீடராக' வேண்டுமானால் ஐந்தாண்டுகள் எம்.ஏ. வகுப்பு கற்பித்த பட்டறிவு வேண்டும் என்ற விதி குறுக்கிட்டது. தமிழகத்திலிருந்து துணைவேந்தர் ஒருவரும், பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரும் நியமனக் குழுவில் அமர்ந்தனர். துணைவேந்தர் ஒரு 'கார்க்கோடகர்'. தமக்குத் தெரிந்த பத்து ஆண்டுகள் எம்.ஏ. கற்பித்த ஒருவரை (அவருக்கு பிஎச். டி. பட்டமும் இல்லை, ஆராய்ச்சி வெளியீடுகளும் இல்லை, எழுத்துப் பழக்கமே இல்லாதவர்) ரீடராகவும் துறைத் தலைவராகவும் கொண்டு வர முயன்றார். ஆனால் எம்பெருமான் காஞ்சி '**வரதராசராக**' நின்று என்னைக் காத்தார். ரீடரானேன். என் முப்பதாண்டு அநுபவம், என் முப்பத்தாறு நூல்கள், பி எச்.டி. பட்டம் எல்லாம் பயனற்றவையாக ஆக்கத் துணிந்தார் தமிழ்த்துணை வேந்தர். என் செய்வது? 'கடுகுள்ளம்' படைத்தவர்கள் பெரிய இடத்தில் அமர்வதால் ஏற்படும் விளைவு

3. குறள் - 666

இது. 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்றிருந்தேன். தெய்வம் துணைநின்றது, ரீடர் பதவியும் வந்தது. ஓய்வுபெறும் ஆண்டில் (1977) பேராசிரியர் பதவியும் வந்தது. வாணலியில் வறுபடும் பொருளைப்போல் துன்புற்றேன். திருப்பதியில் யான் ஆற்றிய 'தமிழ்ப் பணியைத்' தமிழ்கூறு நல்லுலகம் நன்கு அறியும். ஆறு ஆண்டுகளில் 'மூன்று டாக்டர்களை' உண்டாக்கி னேன்; நான்கு எம்.ஃபில்களைத் தோன்றச் செய்தேன். ஏழு மலையான் என்னைக் கசக்கிப் பிழிந்தான். உழைப்புக்கு அஞ்சாதவனை ஆண்டவனாலும் ஒன்றும் செய்யமுடியாது. ஊழையும் உப்பக்கம் காண்பவரல்லவா உழைப்பாளிகள்? நிற்க.

பிஎச். டிக்குப் பதிவு செய்து கொண்ட அன்றே ஆழ்வார் பெருமக்கள் மக்களாசாசனம் செய்த 108 திவ்விய தேசங் களையும் சேவிக்க வேண்டுமென்ற அவா முகிழ்த்தது என் உள்ளத்தில். அப்போது காரைக்குடியில் மூன்றாவது படிவம் படித்து வந்த என் இளையமகன் (1980-ஜூன் முதல் என்புருக்கி நோய் ஆய்வு மருத்துவ மனையில் ஆய்வு ஆஃபீசராகப் பணியாற்றும் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்,M.D.) என்னுடன் வர, சோழநாட்டுத் திவ்விய தேச யாத்திரை 1965 செப்டம்பரில் தொடங்கியது. சோழ நாட்டில் திருவரங்கம், உறையூர், உத்தமர் கோவில் (கரம்பனூர்) திருவெள்ளறை, அன்பில், திருப்பேர் நகர் (கோயிலடி) என்ற ஆறு திவ்விய தேசங்களையும் கட்டுரை (1-6), பாண்டி நாட்டில் திருக்கோட்டியூர், திருமெய்யம், திருப் புல்லாணி, திருக்கூடல் (மதுரை), திருமோகூர், திருமாலிருஞ் சோலை, சீவில்லிபுத்தூர், திருத்தண்கால் ஆகிய திவ்விய தேசங் களையும் சேவிக்கும் பேறு பெற்றேன். மீண்டும் 1968-ஜூன் திங்கள் என் துணைவி, மூத்த மகன் எஸ். இராமலிங்கம், M.Sc., (இப்பொழுது பாரத் ஓவர்சிஸ் வங்கி தலைமை அலுவலகத்தில் ஆஃபீசராக இருப்பவன்) இளைய மகன் என்னுடன் வர சோழ நாட்டுத் திருப்பதிகளில் திருவாரூரில் தங்கி திருக்கண்ணங்குடி, திரு நாகை, திருக்கண்ண மங்கை என்ற மூன்று திருத்தலங் களையும் (கட்டுரை 18-20), திருக்குடந்தையில் தங்கி திருக் குடந்தை, திருவிண்ணகர், நந்திபுர விண்ணகரம், திருநறையூர், திருச்சேறை, திருவெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, ஆதனூர், கபித்தலம் என்ற ஒன்பது திருத்தலங்களையும் (கட்டுரை 9-17), தஞ்சையில் தங்கி திருத்தஞ்சை, திருக்கண்டியூர் என்ற இரண்டு திருத்தலங்களையும் (7,8) சேவித்தேன்.

ஏற்கெனவே, **மலை நாட்டுத் திருப்பதிகள் (1971,) தொண்டை நாட்டுத் திருப்பதிகள் (1973), வடநாட்டுத் திருப்பதிகள் (1980)** என்ற நான்கு நூல்கள் வெளி வந்துள்ளன. இந்த நூல் **சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி** ஆகும். இருபது திருப்பதிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இவைபற்றிய கட்டுரைகளில் ஆழ்வார் பெருமக்களின் பக்தியுணர்ச்சியின் கொடுமுடிகளைக் காணலாம். பாசுரங்களின் சொல்வளம் வியாக்கியாதாக்கள் பாசுரங்களில் ஆழங்கால் பட்ட பாங்கு, என் சிறிய உள்ளம் பாசுரங்களை அநுபவித்த முறை ஆகியவற்றைக் கண்டு மகிழலாம்.

சென்னை உயர்நீதி மன்றத்து **நீதிபதி திரு. ஜி. இராமாநுஜம்** திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் என் ஒரு சாலை மாணாக்கர். நாங்கள் பயின்ற காலத்தில் ஒரே விடுதியில் தங்கியிருந்தோம். நெருங்கியும் பழகினோம். திரு. இராமாநுஜம் எவரிடமும் இனிமையாகப் பழகுபவர்; அதிகம் பேசாதவர். மாணாக்கர் வாழ்விலேயே பெருமித தோரணையும் அடக்க நடையும் (Reserved type) உள்ளவர். இறையறாத தெய்வ பக்தியுள்ளவர்; குடிவழியாக வைணவ குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் குடும்பம் சீவில்லிப்புத்தூருக்கருகிலுள்ள மூன்று சிற்றூர் களில் மூன்று திருமால் திருக்கோயில்களைக் கண் காணித்து வருகின்றது. இருபத்திரண்டு ஆண்டுகள் (1947-69) சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றியவர். இவரி டம் இயல்பாகவே அமைந்துள்ள நேர்மை, ஒழுங்கு, அடக்கம், பெருமித தோரணை, எளிமை முதலிய நற்குணங்களையும் வழக் குரைஞர் தொழிலும் இத்தகைய நற்பண்புகளையும் மிகுதிறமை யையும் கண்டு மைய அரசு நேரடியாகச் சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியாக நியமனம் செய்தது. 1969 தொடங்கி இன்று வரை நேரிய முறையில் 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்' அமைந்து சான்றாண்மை குன்றாது பணியாற்றி வருவதை இந்திய மக்கள் நன்கு அறிவர். இத்தகைய என் கெழுதகை நண்பர் இந்நூலுக்கு அணிந்துரை நல்கி நூலைச் சிறப்பித் தமைக்கு என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

சிரீவரமங்கலம் என வழங்கும் நாங்குநேரியில் திருக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் தோத்தாத்திரிநாதன்.

இவரை '**வானமாமலை**' என்றே திருநாமம் சூட்டுவார் நம்மாழ்வார் (திருவாய். 5.7.6). மணவாள மாமுனிகள் காலத்திலிருந்தே இத்திருத்தலத்து வானமாமலை மடம் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது. இத்திருமடத்தை நிறுவிய முதல் சீயர் மணவாள மாமுனிகளின் திருவடி சம்பந்தம் பெற்றவர். பண்டைய பெருமைகள் பழுதுபடாது காத்துப் புர்ப்பவர் 28-வது பட்டம் **ஸ்ரீமத் பரமஹம்ச சடகோப ராமாநுஜ ஜீயர் சுவாமி** அவர்கள்.

79-அகவை நிரம்பிய சுவாமி அவர்கள் சீவில்லி புத்தூரை அடுத்த வடகரை அக்கிரகாரத்தில் அழகிய சிங்கர் - செங்கமல நாச்சி யாரின் திருக்குமாரராகத் தோன்றியவர்; கோபாலையங்கார் என்ற திருநாமம் சூட்டப்பெற்றவர். இளமை முதலே சமயப் பற்று மிக்கவர். வானமாமலை மடத்தில் ஜீயராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சின்ன கலியன் சுவாமிகளிடம் திருவிலச்சினையும் சம் பிரதாய அர்த்த விசேடங்களையும் பெற்றவர். காஞ்சி, திரு வரங்கம் என்ற திவ்விய தேசங்களில் பயின்றவர். அவ்விடங் களில் கைங்கரியமும் புரிந்தவர். காரப்பங்காடு சிங்கப்பெருமாள் பக்கம் ஐந்து ஆண்டுகள் உபயவேதாந்த கிரந்த காலட்சேபம் பயின்றவர். காஞ்சி பிரதிவாதி பயங்கரம் **அண்ணங்கராசாரிய சுவாமிகளின்** திருக்கண் நோக்கிற்கு இலக்காகி இருப்பவர். மணவாள மாமுனிகளின் 600-வது ஆண்டு விழாவை முன்னிட்டு இவர் சீவிலிப்புத்தூரில் உபந்யாசம் நிகழ்த்தி வருகையில் வான மாமலை 27-வது பட்டம் ஜீயர் சுவாமிகள் இவரைக் கடைக்கண் நோக்கி 27-10-70 அன்று இளவரசாக அபிஷேகம் செய்து அருள் புரிந்தார். 1980-ல் பெரிய சுவாமி திருநாடலங்கரித்ததும் இளவரசு சுவாமி பெரிய சுவாமியாக திருவபிஷேகம் செய்யப் பெற்று வைணவ சாம்ராஜ்யத்தின் தலைவராக இருந்து வருகின்றார். இந்த மடத்தின்பால் தனிப்பற்றும், இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் தோத்தாத்திரி நாதன்பால் தனி ஈடுபாடும் எனக்கு உண்டு. இவற்றின் நினைவாக இத்திரு நூலை இந்த ஜீயர் சுவாமிகளின் திருவடிகளில் படைத்து மகிழ்கின்றேன். சுவாமிகளின் திருக்கண் நோக்கும், எம்பெருமானின் திருவருளும் என்னை உய்விக்கும் என்று நம்புகின்றேன். ஜீயர் சுவாமிகளின் ஆசியால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் ஆசாரியர்களின் உரைகளிலும் எனக்குத் தெளிவும் பக்தியும் மேலும் மேலும் பெருகி என்னை உய்விக்கும் என்பது என் திடமான நம்பிக்கை. நம்மாழ்வாரின்,

ஆர்வனோ ஆழியங் கைஎம்பி ரான்புகழ்
பார்விண்நீர் முற்றும் கலந்து பருகிலும்
ஏர்விலா என்னைத்தன் னாக்கிஎன் னால்தன்னை
சீர்பெற இன்கவி சொன்ன திறத்துக்கே?[4]

என்ற திருவாய்மொழியை நினைவுகூர்கின்றேன். ஆழ்வார் கருதுவதுபோல் இந்நூலை யான் எழுதி வெளியிட்டதற்கு மூல காரணம் என்னுளே இருக்கும் எம்பெருமானே ஆவன். என்னைக் கருவியாகக் கொண்டு எம்பெருமான் தன் புகழை நிலை நிறுத்திக்கொண்டான் என்பது என் நம்பிக்கை. நம்முடைய தற்புகழ்ச்சி விருப்பதைவிட எம்பெருமானின் தற்புகழ்ச்சி அவா எல்லாவகையாலும் விஞ்சி நிற்பது. சகஸ்ர நாமப் பிரியன் அல்லவா? இங்ஙனம் எனக்கு எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப்படுத்தி வரும் திருவேங்கட முடையானை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி இறைஞ்சி வணங்குகின்றேன்.

வந்தாய்; என்மனம் புகுந்தாய்; மன்னிநின்றாய்
நந்தாதகொழுஞ் சுடரே, எங்கள் நம்பீ
சிந்தா மணியே! திருவேங் கடம்மேய
எந்தாய்! இனியான் உன்னை என்றும்விடேன்.[5]

- திருமங்கையாழ்வார்

4. திருவாய் 7.9 : 8
5. பெரி. திரு. 1.10:9

திருந்திய செவ்விய முதற்பதிப்பு

மிக கவனத்துடனும் பொறுப்புடனும் திருத்தம் பெற்ற இச்செவ்விய பதிப்பு அவ்வை பதிப்பகம் மூலம் வெளிவருகிறது. வெளியிட ஒப்புக் கொண்ட பதிப்பக உரிமையாளர் திருமதி.தேவகி அம்மையாருக்கு என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன். இப்பதிப்பின் அட்டை முகப்பை திருவரங்கம் பெரிய பெருமாள் அணி செய்து படிப்போருக்கு ஆசி வழங்குகின்றார்.

‘வேங்கடம்’
A.D.13-14, அண்ணாநகர்,
சென்னை - 600 040.
நவம்பர் - 2004

ந. சுப்புரெட்டியார்
தொ.பே. 26211583

உள்ளுறை

	பக்திப்படையல்	iii
	அணிந்துரை	ix
	நூல்முகம்	vii
1.	அணி அரங்கத்து அரவணைப் பள்ளியான்	1
2.	உறையூர் அழகிய மணவாளன்	31
3.	கரம்பனூார் உத்தமன்	36
4.	திருவெள்ளறை அஞ்சன வண்ணன்	41
5.	அன்பில் திருவடி அழகிய நம்பி	46
6.	திருப்பேர் கிடக்கும் திருநாரணன்	50
7.	திருத்தஞ்சை எம்பெருமான்	59
8.	கண்டியூர் கமலநாதன்	68
9.	திருக்குடந்தை ஆராவமுதன்	74
10.	திருவிண்ணகர் ஒப்பிலியப்பன்	85
11.	நந்திபுர விண்ணகரத்து நாதன்	96
12.	நறையூர் நின்ற நம்பி	101
13.	திருச்சேறை எம்பெருமான்	115
14.	வெள்ளியங்குடி கோலவில் இராமன்	124
15.	புள்ளம் பூதங்குடிப் புனிதன்	132
16.	ஆதனூார் ஆண்டளக்கும் ஐயன்	138
17.	ஆற்றங்கரைக் கிடக்கும் கண்ணன்	142
18.	திருக்கண்ணங்குடிக் கண்ணன்	146
19.	நாகை அழகியார்	152
20.	கணமங்கைக் கற்பகம்	165

பதிப்புரை

சோழ நாட்டுத் திருப்பதிகள் முதல் பாகத்தில் இருபது திருப்பதிகளை ஆசிரியர் அவர்கள் நேரில் சென்று எம்பெருமானின் அவதாரப் பெருமையையும் மகிமையையும் நெஞ்சுருக அனுபவித்து எழுதியுள்ளார். 'யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' என்ற நோக்கோடு படிப்பவர் அனைவருக்கும் அந்தந்த திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் பெருமானை நேரில் சேவித்த பரவசத்தை ஏற்படுத்தும் வண்ணம் நூல் அமைந்துள்ளது.

ஆழ்வார் பாசுரங்களில் உள்ளம் உருகி உருகி அனுபவித்து ஆனந்த பரவசம் அடைந்த ஆசிரியர் ஒவ்வொரு திருப்பதியின் பெருமாள் அவதாரப் பெருமையை கூறுவதோடு பக்தர்கள் தரிசிக்க ஏதுவாக வழித்தடங்களையும் சொல்லிக் கொண்டே செல்வது நாமும் அவருடன் சென்ற ஓர் உன்னத உணர்வை அடையச் செய்கிறது. ஆசிரியர் டாக்டர். ந.சுப்புரெட்டியார் அவர்களின் இந்நூலை வெளியிட எம்பெருமான் அருள்பாலித்துள்ளமையெண்ணி மகிழ்வுறுகிறோம்.

ஆர். தேவகி

1. அணி அரங்கத்து அரவணைப் பள்ளியான்

எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் 108 திவ்விய தேசங்களில் திருநாடும் திருப்பாற்கடலும் நீங்கலாக 106 திருத்தலங்கள் அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளி யிருப்பவை. சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம் என்று முமுட்சுப்படி பேசும்.[1]

தமருந்தது எவ்வுருவம்
அவ்வுருவம் தானே [2]

என்று பொய்கையாழ்வார் பேசுவது இந்த அர்ச்சை நிலை எம்பெருமானையே. இந்த நிலை எம்பெருமானை கண்ணாலே காணலாம்படி இருக்கும். இந்த நிலை எம்பெருமான்கள் நான்கு வகையினராகப் பிரித்துப் பேசப் பெறுவர். இவர்களுள் மனிதர்களால் பிரதிட்டை செய்யப் பெற்றுப் பூசிக்கப் பெறும் திருமேனிகள் 'மானுஷம்'; வியாசர் போன்ற மாமுனிவர்களால் பிரதிட்டை செய்து பூசிக்கப் பெற்றவை 'ஆர்ஷம்''; நான்முகன் முதலிய தேவர்களால் பிரதிட்டை செய்து பூசிக்கப் பெற்றவை 'தைவம்'. இவ்வாறன்றி எம்பெருமான் ஸ்வயமாகவே ஆவிர்க்கப் பெற்றுப் பிறகு தேவர் முதலியோரால் பூசிக்கப் பெற்று வருபவை 'ஸ்வயம் வியக்தம்' எனப்பெறும்; நம் நாட்டில் உள்ள இவை எட்டு. இவை. திருஅரங்கம், திருவேங்கடம், ஸ்ரீ முஷ்ணம்,[3] வானமா மலை, புஷ்கரம்,[4] நைமிசாரண்யம், பதரிகாச்சிரமம், சாளக்கிராமம் என்ற இடங்களிலுள்ளவை. திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகள் மானுஷம் ஒழிந்த மற்றையவை மூவகை அர்ச்சையினைச் சேர்ந்தவை; இவற்றுள் சில ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற 108 திருப்பதிகளில் சேரவில்லை; இங்ஙனம் விடுபட்டவை 'புராணத் திருத்தலங்கள்' என்றும், 'அபிமானத் திருத்தலங்கள்' என்றும் பேசப்பெறும்.

1. முமுட்சுப்படி- 109.
2. முதல் திருவந் - 44.
3,4. ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெறவில்லை.

திருச்சியில் தங்கியிருக்கும் நம் சிந்தையில் இந்த எண்ணங்கள் குமிழிட்டெழுந்த வண்ணம் திருவரங்கம் என்ற திருத்தலத்திற்குப் போகச் சித்தமாகின்றோம். இந்தத் திருக் கோயில் விழுப்புரம்-திருச்சி இருப்பூர்திப் பாதையில் திரு வரங்கம் நிலையத்தினின்றும் முக்கால் கிலோ மீட்டர் தொலைவி லுள்ளது. நிலையத்தினின்றும் எல்லாவித வாகன வசதிகளும் கிடைக்கும். திருவரங்கம் ஒரு பெரிய நகரமாதலின், சத்திரங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், இராமாநுச கூடங்கள் முதலியவை இங்கு உள்ளன. திருத்தலப் பயணிகள் ஏதாவது ஒன்றில் தங்க ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். திருச்சியி லிருந்து திரு அரங்கத்திற்கு நகரப் பேருந்துகள் அடிக்கடிப் போய் வந்துகொண்டுள்ளன. திருச்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இத்திருத்தலத்திற்கு நகரப்பேருந்து மூலம் வந்து கொண்டிருக்கின்றோம். நம் மனத்தில் பல்வேறு கருத்துகள் எழுகின்றன.

காவிரி தென்பெண்ணை பாலாறு-தமிழ்
கண்டதோர் வையைப் பொருநைநதி-என
மேவிய யாறு பலவோடத்- திரு
மேனி செழித்த தமிழ்நாடு[5]

என்ற தமிழ் நாட்டின் வளத்தைக் காட்டும் பாரதியாரின் சொல்லோவியம் நம் மனத்தில் திரையிடுகின்றது. தமிழகத்தை வளப்பமுறச் செய்து அணி செய்யும் ஆறுகளுள் தலை சிறந்தது காவிரி. இந்த ஆற்றங்கரையில் இயற்கை வளத்தடன் அறிவு வளத்திற்கும் பேர் போன தலங்கள் இடம்பெற்றுள்ளன. காவிரி பாயும் இடம் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கருவூலமாக இருந்தது போல் அறிவு வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் பெரிய ஒரு கருவூலமாகத் திகழ்ந்தது என்பதை வரலாறு காட்டுகின்றது.

தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் தோன்றிய காலத்திலும் அதற்குச் சற்றுப் பின்னரும் வைணவத்தின் வளர்ப்புப் பண்ணைகளாகத் திகழ்ந்த பெருந்தலங்கள் திருவரங்கம், திருமாலிருஞ்சோலை, திருவேங்கடம், காஞ்சிபுரம் என்பவை யாகும். இவற்றுள் '**பெரிய கோயில்**' என வழங்கப் பெறும் திருவரங்கம் தனிப்பெறும் புகழிற்கு உரிய தலமாகும்.

5. பாரதியார் கவிதைகள் - செந்தமிழ் நாடு - 3.

ஆற்றிடைக்குறையாகிய இந்த அரங்கம் நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே பொருந்திச் சோலைகள் சூழ்ந்து விளங்குகின்றது. இதன் வளத்தை,

''முருகனுறை குறிஞ்சித்தேன் முல்லை பாய
முல்லைநிலத் தயிர்பால்நெய் மருதத்தோட
மருதநிலக் கொழும்பாகு நெய்தல் தேங்க
வருபுனல்கா விரிசூழ்ந்த வளம்''[6]

என்று வருணித்திடுவர் **திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்.** இந்த அரங்கநாதனைக் காவிரியும் அதன் கிளையாறாகிய கொள்ளிடமும் மாலையிட்டுச் செல்வதுபோல் அமைந்துள்ளன.

''திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணி''[7]

என்று இவரை இந்நகரில் அரவணைப்பள்ளியில் அறிதுயில் கொண்டுள்ளவராகக் குலசேகரப்பெருமாள் காண்பர்.

பக்தி வளத்திற்குப் பேர்போன இத்தலம் 'பூலோக வைகுந்தம்' என்று போற்றிப் புகழப் பெறுகின்றது. ஆழ்வார்கள் பாடிய திருப்பதிகளுள் இதுவே முதன்மையானதாக மதிக்கப் பெறுகின்றது. வட நாட்டினரும் தென்னாட்டினரும் இதனை இந்தியாவின் புனிதத் தலங்களுள் மிக்க புகழ்பெற்றதாகக் கருதுகின்றனர்.

''தென்நாடும் வடநாடும் தொழநின்ற
திருவரங்கத் திருப்பதி''[8]

என்பது பெரியாழ்வாரின் திருவாக்கு. இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த திருவரங்கம்,

பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்த நாடும்
சித்தர்களும் தொழுது இறைஞ்சத்
திசை விளக்காய்.[9]

6. சீரங்கநாயகர் ஊசல்-29,

7. பெரு. திரு-1.1

8. பெரியாழ், திரு 4,9:1

9. பெரியாழ், திரு,4.9:6.

நின்று திகழும் காட்சியைப் பெரியாழ்வார் நமக்குக் காட்டுவர். திருவரங்கத்தில் அரங்க நகர் அப்பனுக்கு அடிமைத் தொழில் புரிந்த தொண்டரடிப் பொடியாழ்வார் இப்பெருமான் திருக்கோயிலில் அமைந்திருக்கும் சூழ்நிலையை,

வண்டினம் முரலும் சோலை
மயிலினம் ஆலும் சோலை
கொண்டல் மீ(து) அணவும் சோலை
குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை
அணிதிரு அரங்கம்.[10]

(முரலும் - ஒலிக்கும், ஆலும் - ஆடும், அணவும் - தொட்டுக் கொண்டிருக்கும்.)

என்று அழகான சொல்லோவியத்தில் எடுத்துக் காட்டுவர்.

இந்த ஞானப் பேரூரில் கிடந்த கோலத்துடன் திகழும் பெரிய பெருமாளை அடியிற் கண்டவாறு ஆழ்வார்கள் பாசுரங்களிட்டுப் பரவியுள்ளனர்.

1.	பொய்கையாழ்வார்	1
2.	பூதத்தாழ்வார்	4
3.	பேயாழ்வார்	1
4.	திருமழிசையாழ்வார்	14
5.	திருப்பாணாழ்வார்	10
6.	குலசேகராழ்வார்	31
7.	பெரியாழ்வார்	35
8.	ஆண்டாள்	10
9.	தொண்டரடிப் பொடியாழ்வார்	55
10.	திருமங்கையாழ்வார்	72
11.	நம்மாழ்வார்	12
	ஆக மொத்தம்	245

மதுர கவியாழ்வார் மட்டிலும் தமது ஆசாரியாராகிய நம்மாழ்வாரைத் தவிர வேறு எந்த எம்பெருமானையும் பாடவில்லை. மேற்குறிப்பிட்ட பாசுரங்கள் யாவும் **'நாலாயிரத்தில்'** இடம் பெற்றுள்ளன. இந்த ஆழ்வார்கள் பன்னிருவரும் தமிழ் நாட்டில்

10. திருமாலை - 14.

வைணவ சமயத்திற்குப் புத்துயிர் அளித்தவர்கள். இவர்கள் எம்பெருமானது மங்கள குணங்களாகிய அமுத வெள்ளத்தில் ஆழங்கால் பட்டிருந்தமையால் '**ஆழ்வார்கள்**' எனப் பெயர் பெற்றனர் என்பது ஈண்டு அறியத்தக்கது. இந்த எண்ணங்களுடன் திருவரங்கம் '**பெரிய கோயிலை**' வந்தடைகின்றோம்.

திருவரங்கத்தின் சிறப்பு வரலாற்றுக் காலத்தையும் கடந்து நிற்கின்றது என்பதை இத்திருப்பதி குறித்து வழங்கும் புராணக் கதைகளால் அறியலாகும். ஒரு சமயம் இமயமலைச் சாரலில் கங்கை, யமுனை, சரசுவதி முதலிய நதிகள் தெய்வகன்னிகையர் வடிவங்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். இவ்வமயம் வானவீதியில் சென்று கொண்டிருந்த கந்தருவன் ஒருவன் இவர்கள் இருந்த திசை நோக்கித் தொழுது அகன்றனன். யாரை வணங்கினான் அவன் என்பது குறித்து அந்த நதிக் கன்னிகையர் தமக்குள் பூசலிடத் தொடங்கினர். ஒவ்வொருவரும் தன்னைத் தான் அவன் தொழுது சென்றனனாக வாதாடினர். ஓடியாடி விளையாடிய விளையாட்டு இப்படிப் பூசலில் முடியவே சில நதிக் கன்னிகையர் அலுப்பும் சலிப்புமாக, 'இஃது என்ன தொல்லை? நம்முடைய கடமைகளை ஆற்றுவோம்' என்று சொல்லிக்கொண்டு மக்களின் விடாமையும், பயிர்ப்பச்சைகளின் தாகத்தையும், பூமகளின் தாபத்தையும் தீர்க்கப் போய்விட்டனர்.

கங்கையும் காவிரியும் மட்டிலும் இறுதிவரை வாதாடிக் கொண்டிருந்தனர். சொற்போருக்கு முடிவு காணாததால் இந்த இரு நதி நங்கையரும் திருமாலிடம் சென்று முறையிட்டுத் தமது வழக்கினைத் தீர்க்குமாறு வேண்டினர். உடனே பெருமாள் புன்முறுவலுடன் கங்கையை, நோக்கி, 'உன் உரிமையை எங்ஙனம் நிலை நாட்டுகின்றாய்?' என்று வினவினார். கங்கை இறைவனது திருவடியைத் தொட்டு 'இங்கிருந்துதான் தோன்றினேன் நான்' என்று கூற, பகவானும் அதனை ஒப்புக் கொண்டு கங்கையின் சார்பாகத் தீர்ப்புக் கூறினார். காவிரிக்குச் சினம் வந்துவிட்டது. '**கங்கையிற் புனிதமாய காவிரி**' என்று என்றாவது ஒருநாள் புகழ் அடையவேண்டும் என்று உறுதிகொண்டு ஒருமையுள்ளத்துடன் அவள் தவம் கிடந்தாள். காவிரியின் தவம் அன்பு நெறியில் செல்லும் தொண்டர்கட்கு மகிழ்ச்சிஅளித்தது. தொண்டர் நாதனாகிய திருமாலும் அவளுடைய தவத்தைப் பாராட்டி, 'நான் இங்கே வந்து சயனித்துக் கொள்ளப் போகின்றேன். அப்போது நீ எனக்கு

மாலையாக அமையும் பேறு பெறுவாய். நீ கங்கைக்கும் மேம்பட்டவள் என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாடப் போகின்றார்' என்று வரம் அளித்தாராம்.

நாளடைவில் காவிரியினிடையே ஒரு தீவு தோன்றியது. அந்தத் தீவில் அரங்கநாதனோடு கூடிய விமானமும் தோன்றியது. ஆற்றின் நடுவிலுள்ள இந்த அரங்கம் இயற்கை வளத்தாலும் இறையருளாலும் அரிய பொலிவுடன் திகழ்ந்தது. தொண்டரடிப் பொடியாழ்வார் இதனை,

"கங்கையிற் புனிதம் ஆய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம்."[11]

(பாட்டு - ஏழன் உருபு, பொழில் - சோலை)

என்று பாரட்டுகின்றார். அரங்க விமானத்தினுள்ளே மூலவரான அரங்நாதன் ஆயிரந்தலைகட்கு அறிகுறியான ஐந்து தலைகளுடன் கூடிய அரவணையின்மீது பள்ளி கொண்டுள்ளான். இந்தச் சயனத் திருக்கோலத்தைத் தொண்டரடிப் பொடியாழ்வார்,

"குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு
உடல்எனக்கு உருகு மாலோ
என்செய்தேன் உலகத் தீரே."[12]

(குடதிசை- மேற்குத் திக்கு; குணதிசைகிழக்குத் திக்கு; பின்பு - முதுகு; அரவணை - பாம்புப் படுக்கை)

என்று அநுபவித்துப் பாடுகின்றார். "மேலைத்-திக்கு-உபய விபூதிக்கும் தலைமை வகித்தலைத் தெரிவிக்குமாறு தான் புனைந்துள்ள திருவபிடேகத்தையுடைய திருமுடியை வைப்பதனாலும், கீழைத் திக்கு - எல்லா உலகங்களும் உய்யும்படி

11. திருமாலை - 23.

12. மேலது- 19.

சரணமடைவதற்குரிய தனது திருவடிகளை நீட்டுவதனாலும், வடக்குத் திக்கு - முரட்டு சமஸ்கிருதம் நடையாடுவதாகி ஆழ்வார் களின் செவிக்கினிய ஈரச்சொல் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கிலுள்ளாரும் ஈடேறுவதற்கு ஏற்பட வேண்டிய பின் னழகையெல்லாம் காட்டுவதனாலும், தெற்குத்திக்கு - தனது அந்தரங்க பக்தனான வீடணனுக்காகத் தனது திருக் கண்களை வைத்து அன்போடு நோக்குவதனாலும் என இவ்வாறு நான்கு திக்குகளும் பயன்படும் என்க''[13] என விளக்குவர் பிரதிவாதி பயங்கரம் **அண்ணங்கராசாரிய சுவாமிகள்**. சேதநர்க்கு (உயிர் கட்கு)த் தன் மீது அன்பை யுண்டாக்குமாறு எம்பெருமான் தான் பள்ளிகொள்வதற்காகவே திக்குகளைப் படைத்தான் என்பது இப்பாசுரத்தால் பெறப்படும் சிறப்புப் பொருளாகும்.

திருவரங்க விமானம் பகவானால் நான்முகனுக்கு அளிக்கப் பெற்றதென்றும், அதுவே சூரியகுலத்தைச் சார்ந்த இட்சுவாகு மன்னனுக்கு நான்முகனால் வழங்கப் பெற்றதென்றும் புராணம் கூறுகின்றது. இட்சுவாகு காலம் முதல் அவர் வழித்தோன்ற லாகிய இராமன் காலம் வரையில் அஃது அயோத்தி அரசர்களின் குலதனமாகக் கருதப் பெற்றது. மனித உருவம் கொண்ட **பெருமாளாகிய** இராமபிரானால் வணங்கப் பெற்றமை பற்றி அரங்கநாதனுக்குப் **'பெரிய பெருமாள்'** என்பது திருநாமம். இந்தக் குலதனம் இராமனால் வீடணனுக்கு அளிக்கப் பெற்றது. இராமனது திருமுடிசூட்டு விழாவிற்குப் பிறகு அயோத்தியி லிருந்து இலங்கைக்குத் திருவரங்க விமானத்துடன் திரும்பிய வீடணன் காவிரி தீரத்தைக் கடந்து செல்லும்போது காவிரி யாற்றுக்கிடையே அரங்கமாக இருந்த தீவினைக் கண்ணுற்றதும் அந்த அழகிற்கு உள்ளதைப் பறிகொடுத்து அங்கேயே விமானத் தை வைத்து அன்றைய வழிபாட்டை நடத்தினான். அப் பொழுது **தர்மவர்மன்** என்ற சோழ மன்னனும் சில முனிவர் களும் அங்குவந்து அரங்கநாதனை வணங்கினதாகப் புராணம் கூறுகின்றது. வீடணன் இலங்கைக்குச் செல்ல விடைபெற்று விமானத்தை எடுத்துச் செல்ல முயலுகையில் அவனால் அவ்விமானத்தை அசைக்கவும் முடியவில்லை; அரங்கநாதன் வீடணனிடம் தான் காவிரிக்கு அளித்திருந்த வரத்தைப் பற்றிய வரலாற்றை வெளியிட்டு ''அந்த வாக்கை நிறைவேற்ற உன்மூலம் இங்கு வந்து சேர்ந்தோம். இனி நாம் இவ்விடத்தை

13. மேலது - திவ்யார்த்த தீபிகை (உரை காண்க)

விட்டு அசையப் போவதில்லை; உன்னுடைய தென்திசை இலங்கை நோக்கி இப்படியே சயனித்துக் கொண்டிருப்போம்'' என்று உரைத்தான். இங்ஙனம் புராண வரலாறும் ஆழ்வார் கூறும் சயனத் திருக்கோலத்தை அரண் செய்கின்றது.

'பெரிய கோயில்' உண்மையிலேயே பெரிய கோயில் தான். மதில் கிட்டத்தட்ட முக்கால் மைல் சதுரப் பரப்பை நிறைத்துக்கொண்டுள்ளது. ஏழாவது மதிலின் நீளம் 3072 அடி; அகலம் 2521 அடி; இவற்றிலிருந்து கோயில் எவ்வளவு பெரியது என்று தெரிகின்றதல்லவா?[14] ஏழு உலகங்களும் இத் திருக் கோயிலின் ஏழு திருச்சுற்றுகளாக (பிராகாரங்களாக) அமைந் துள்ளன என்று கூறுவர். இந்த மதில்கள் எழுந்த வரலாறு மிகவும் சுவையானது. அன்று வீடணன் கொண்டு வந்த அரங்க விமானத்தையும் அரங்கநாதனையும் காலப் போக்கில் காவிரி மணல் விழுங்கி விடுகின்றது. தர்மவர்மன் என்ற சோழ மன்னன் வேட்டைக்கு வந்தபோது ஒரு கிளி அவன் காதில் அங்கு அரங்கவிமானம் புதையுண்டு கிடக்கும் இரகசியத்தைக் கூறுகின்றது. காடுவெட்டி நிலந் திருத்திய சோழமன்னன் அரங்கவிமானத்தை வெளிக் கொணர்கின்றான். கோயில், கோபுரம், விமானம், மண்டபம் முதலியவற்றை நிறுவி அரங்கநாதனையும் எழுந்தருளப் பண்ணுகின்றான். கிளி சொன் னதை மறவாமல் **கிளி மண்டபம்** ஒன்றையும் கட்டுகின்றான். தன் பெயரால் தர்மவர்மன் திருச்சுற்று (பிராகாரம்) என்ற ஒன்றையும் எழுப்புகின்றான். இதன் பின்னர் வந்த மன்னர்களும் மக்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வாரு திருச்சுற்றாகக் கட்டி முடிக் கின்றனர். இப்படி ஏழு சுற்றுகள் ஏழு வீதிகளாக அமைந்து கிடக்கின்றன. வெளியிலிருந்து இவை முறையே மாடமாளிகை சூழ்திருவீதி அல்லது சித்திரைத் திருவீதி (7), திருவிக்கிரமன் திருவீதி (6), அகளங்கன் திருவீதி (5), ஆலிநாடன் திருவீதி (4), குலசேகரன் திருவீதி (3), இராசமகேந்திர சோழனது திருவீதி (2), அரங்கநாதனின் திருச்சந்நிதி திருச்சுற்று (1) என்று அமைந் துள்ளன. இவற்றைத் தவிர 'எட்டாவது பிராகாரம்' என்று சொல்லக் கூடியதாக ஒன்றுள்ளது. இஃது ஏழுபிராகாரங் களையும் அவற்றின் உள்ளிட்ட சந்நிதிகளையும் ஆடைபோல் வளைந்திருப்பதால் இஃது 'அடையவளைந்தான் வீதி' என்று வழங்கப்பெறுகின்றது. சுற்றியுள்ள மதிலின் உயரம் 20 அடி

14. தில்லைச் சிற்றம்பலமும், இங்ஙனமே மிகப்பெரியது. இதுவும் 'கோயில்' என்றே சைவப் பெருமக்களால் வழங்கப்பெறுகின்றது - ஓர் ஊரின் பெயர்போல.

8 அங்குலம்; மேல்பாகம் 6 அடி அகலமுள்ளது. பெருங்கற்களால் கட்டப்பெற்ற இஃது இப்போது அதிகமாகக் காணப் பெறாது. அடையவளைந்தான் வீதியின் தென்மேற்கு மூலையில் **வெளியாண்டாள்** சந்நிதியொன்று உள்ளது. ஆண்டாளுடன் பெரியாழ்வார் திருஅரங்கம் வந்தபோது இந்த இடத்திலிருந்து காவிரியில் நீராட்டம் செய்து கொண்டாதாகவும், அதன் நினைவாக பெரியாழ்வாரின் சீடரான **வல்லபதேவன்** என்ற பாண்டிய மன்னன் இவ்விடத்தில் ஆண்டாளுக்கும் பெரியாழ்வாருக்கும் இக்கோயிலை அமைத்தான் என்பதும் இதன் வரலாறாகும். ஆடிப் பதினெட்டு அன்று காவிரியைத் திருமணம் புரிந்து கொண்டு கோயிலுக்கு எழுந்தருளும் போதும், பங்குனி உத்தரத்தில் உறையூர் சோழகுலவல்லியை (கமல வல்லி) மணம் புரிந்து கொண்டு திரும்பும்போதும் வெளி ஆண்டாளுடன் அரங்கநாதன் மாலைமாற்றிக் கொள்ளுகின்றான்.

திரு அரங்கத்தின் ஏழு சுற்றுகளிலுமுள்ள திருமதில்களின் மொத்த நீளம் 32154 அடி, அதாவது கிட்டத்தட்ட ஆறு மைல்களாகும். மொத்தச் சுற்றுகளின் உள் சதுர அமைப்பு 155 1/2 ஏக்கர்களாகும். பெரிய கோயிலின் உட் கூறுகளை ஒரு தனிப்பாடல் நன்கு விளக்குகின்றது.

மாட மளிகை சூழ்திரு வீதியும்
மன்னுசேர்திரு விக்கிரமன் வீதியும்
ஆடல் மாறன் அகளங்கன் வீதியும்
ஆலிநாடன் அமைந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியும்
குலவிராச மகேந்திரன் வீதியும்
தேடரியதர்ம வர்மாவின் வீதியும்
தென்ன ரங்கன்திரு வாரணமே.

என்ற பாடலில் ஏழு திருவீதிகளும் கூறப்பெற்றுள்ளமை காணலாம்.

ஏழு சுற்றுகளோடு கூடிய இந்தக் கோயிலுக்கு சிறியனவும் பெரியனவுமாக 21 கோபுரங்கள் உள்ளன. இவை பல நூற்றாண்டுக் காலத்தில் எழுந்தவை. இவற்றின் சிற்ப நுணுக்கங்களை நோக்குமிடத்து ஒவ்வொன்றினதன் காலவரையறையும் நன்கு தெளிவாகும். இக்கோபுரங்களுள் 13 ஒரே நேராகத் தெற்கு வடக்காகத் தோன்றுகின்றன. கோயிலின் வளர்ச்சி தெற்கு - வடக்காக இருப்பதுவும் அரங்கநாதன் தெற்குநோக்கிப் பள்ளி

கொண்டிருத்தலும் குறிப்பிடத்தக்கவை. மேற்குறிப்பிட்ட 21 கோபுரங்களுள் கிழக்குப் பக்கத்திலுள்ள **வெள்ளைக் கோபுரமும்** (5-ம் திருவீதி) தெற்குப் பக்கத்திலுள்ள **நான்முகன் கோபுரமும்** (7-ம் திருவீதி) முக்கியமானவை. வண்ணம் பூசாது வெள்ளைச் சாந்தின் நிறமாகவே இருப்பதால் இது வெள்ளைக் கோபுரம் என்று வழங்கப்பெறுகின்றது. இருபத்தொரு கோபுரங் களுள் இதுவே யாவற்றிலும் உன்னதமானது; 164 அடி 2 அங்குலம் உயரமுடையது; ஒன்பது நிலைகள் கொண்டது. கோபுரத்தின் நிலப்பரப்பு 7410 சதுர அடி. திருவாயிலின் அகலம் $11^{3/4}$ அடி; உயரம் $24^{3/4}$ அடி. இதன் அளவையும், இதிலுள்ள கல்சாந்து களையும் கருதி இதன் நிறை 24,880டன் இருக்கலாம் என்று ஒருவாறு கணக்கிடப் பெற்றுள்ளது. நான்முகன் கோபுரம் அடைய வளைந்தான் திருவீதியின் திருவாயிலாக அமைந் துள்ளது. விசயநகர ஆட்சியில் எழுந்த ஒரு பெரிய கோபுரத்தின் தொடக்கம் ஆகும் இது. கிருட்டிண தேவராயர் ஆட்சியின் காலத்தில் எழுந்ததால் **இராயர் கோபுரம்** என்று இதனை வழங்குகின்றனர். 1565-ஆம் ஆண்டில் தளிக் கோட்டைப் (Talikota) போருக்குப் பின்னர் விசயநரகப் பேரரசு சின்னபின்ன மாக்கப் பெற்றதன் காரணமாக இக்கோபுரத்தின் திருப்பணி முற்றுப்பெறாது நின்றது. இதன் திருப்பணி முற்றப் பெற்றிருக்கு மாகில் இது 300 அடிக்குமேல் வளர்ந்து வானளாவி இருக்கும். இதன் தற்கால நீளம் 130 அடி; அகலம் 100 அடி; உயரம் 43 அடி. திருக்கோயிலுக்குப் போகின்றவர்கள் இதன் வழியாகத்தான் செல்ல வேண்டும்.[15]

ஆழ்வார் பெருமக்கள் திரு அரங்கத்தைப்பற்றியும் அரங்க நகர் அப்பனைப்பற்றியும் கூறியுள்ள சில கருத்துகள் நம் மனத்தில் எழுகின்றன. முதலாழ்வார்களில் ஒருவரான பொய்கை யாழ்வார் திருவரங்கத்தைப் பெரும் பக்தியுடன் குறிப்பிடு கின்றார்.

''ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்
இன்று மறப்பனோ, ஏழைகாள்? அன்று
கரு அரங்கத் துள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்கம் மேயான் திசை''[16]

15. அகாபில மடத்துத் தலைவர் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகள் 62 இலட்சம் செலவில், இதனை எழுப்பித் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

16. முதல் திருவந் -6.

(ஓதநீர் - கடல்நீர்; ஏழைகாள் - அறிவிலிகளே; கரு அரங்கம் - கருப்பம்; மேயான் - மேவியபெருமாள்)

என்பது இவரது பாடல். இறைவன் தம்முடைய கருவுலக வாழ்விலேயே தன்னைப் பக்தனாக்கிவிட்டான் என்று கருது கின்றார் இவ்வாழ்வார். இளமையிலேயே ஏற்பட்ட பக்தி இவரை அவ்வளவு தன்னம்பிக்கை கொள்ளுமாறு செய்து விட்டது. அதனால்தான் 'அரங்கநாதன்பள்ளி கொண்டுள்ள அத்திசை நோக்கிக் கைதொழுதேன்; கண்டேன்' என்று பாடி வழுத்துவர்.

பெரியாழ்வாரின் ஒரே மகள் ஆண்டாள்; அவரால் திருமகள்போல் வளர்க்கப் பெற்றவள். இந்த அன்னையார் திருவரங்கத்துச் செல்வன்மீது ஆராக் காதல் உறுகின்றாள். அப்பெருமான் அவளுக்கு,

"என் அரங்கத்து இன்னமுதர்
குழல்அழகர் வாய்அழகர்
கண்அழகர் கொப்பூழில்
எழுகமலப் பூ அழகர்"[17]

எனக் காட்சி அளிக்கின்றார். அழகிய மணவாளர்மீது தான் கொண்ட காதலின் உரத்தை, உறுதியை,

"மானிடவர்க்கு என்று பேச்சுப் படின்
வாழகில்லேன் கண்டாய்"[18]

என்று புலப்படுத்துகின்றாள். இறுதியில் அரங்கனையே கணவனாகவும் அடைகின்றாள். இச்சூடிக் கொடுத்த சுடர்க் கொடியைப் போலவே குலசேகரர் புதல்வி சேர்குல வல்லியும், நந்த சோழன் மகள் கமலவல்லியும், பின்னாளில் தில்லி பாதுஷாவின் மகள் துலுக்க நாச்சியாரும் அழகிய மணவாள னாகிய அரங்கநாதனையே காதலித்துப் பேறு பெற்றனர் என்பதை வைணவ உலகம் நன்கு அறியும்.

இறைவன்மீது பக்திக் காதலுள்ளவர்கள் தங்களைக் காதலிமார்களாகப் பாவித்துக்கொண்டு பக்தி செய்து பாடும் வழக்கத்தை ஆழ்வார்களின் பக்திப் பூங்காவில் காணலாம்.

17. *நாச். திரு. 11 : 2.*
18. *மேலது 1 : 5.*

இதனை 'நாயக - நாயகி பாவனை' என்று வழங்குவர்.[19] கம்ப நாடனும்,

''கண்ணில் காண்பரேல்
ஆடவர் பெண்ணினை அவாவும் தோளினாய்''[20]

என்று முற்றும் துறந்த முனிவர் விசுவாமித்திரரே இராமனது பேரழகில் ஈடுபட்டுப் பேசுவதாக வருணித்துள்ளான். புருடோத்தமனாகிய அழகனது பேராண்மைக்கு முன் உலக முழுவதும் பெண் தன்மையுடையதே என்பது வைணவரது கொள்கை. தம் நிலை மாறிப் பெண்நிலை பெற்றுப் பேசும் ஆழ்வார்கள் காதலியாகப் பேசுவதோடு தோழியாகவும் தாயாகவும் பேசுவதுண்டு. திருமங்கையாழ்வார் தாயார் நிலையில் இருந்து பேசுகின்றார்.

''தாதுஆடு வனமாலை தாரானோ?
என்றென்றே தளர்ந்தாள் காண்மின்;
யாதானும் ஒன்றுரைக்கில் 'எம்பெருமான்
திருவரங்கம்' என்னும்; பூமேல்
மாதஆளன் குடமாடி மதுசூதன்
மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன் என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சொல்லு கேனே?''[21]

''சிறிது கூட ஒய்வில்லாமல் கலகலவென்று எதையேனும் பேசிக்கொண்டிருக்கும் என்மகள் இப்போது பேச்சு ஒய்ந்திருக்கின்றாள். 'அவர் மார்பில் அணிந்த வனமாலையை என் மார்வில் கொணர்ந்து புரட்டீரே' என்று சொல்ல மாட்டாதவளாய் 'வனமாலை தாரானோ?' என்று மட்டிலும் சொல்லிக் கொண்டு தளர்கின்றாள். 'நங்காய் இப்படிப்பட்ட தளர்ச்சி உனக்குத் தகாது' என்று நாம் இதமாக ஏதாவது சொல்லத் தொடங்கினால் நம் சொற்கள் தன் காதில் விழவொண்ணாதபடி காதை மூடிக் கொண்டு '**திருவரங்கம், பெரிய கோயில்**' என்று மிடற்றொலி செய்கின்றாள். இங்ஙனம் செய்தவன் சாதாரணமானவனா?

19. இத்துறையில் ஆழ்வார்கள் வெற்றி கண்டதற்கு சங்க இலக்கிய அகத்துறைப் பாடல்களும், அவற்றின் தத்துவத்தை விளக்கும் தொல்காப்பியமும் அவர்கட்குப் பெரிதும் கைகொடுத்து உதவி உள்ளன.

20. கம்பரா: தாடகை வதை. 41. ஒப்பிடுக, பிராட்டியின் அழகில் ஈடுபட்ட சூர்ப்பணகை 'பெண் பிறந்தேனுக் கென்றால் என் படும் பிறர்க்கு என்றாள்' (சூர்ப்பண 60)

21. பெரி. திரு. 5. 5, 6

தாமரைப் பூவின்மீது வாழ்ந்து கொண்டிருந்த பிராட்டி '**இது நெருப்பு**' என்று அந்த மலரைவிட்டுத் தன்மார்பில் வந்து சேரும்படி அபகரித்துக் கொண்டவன். அங்ஙனம் பெற்ற ஒருத்தி போதாது என்று ஆயர்பாடிப் பெண்களையெல்லாம் குடக் கூத்தில் தோற்பித்து அவர்களை வசப்படுத்திக் கொண்டவன். பஞ்சவர்க்குத் தூது சென்றவன். அடியவர்களின் பகைவர்கள் யாவரையும் பொடிபடுத்திவிடும் வீரன். இங்ஙனம் தன் மேன்மையும் நீர்மையுமான பண்புகளையெல்லாம் காட்டி என் மகளை இப்பாடுபடுத்துகின்றான். இதை எப்படிச் சொல்லு வேன்?'' என்பதாகத் தாய் பேசுகின்றாள்.

இதே தாய் இன்னும் பேசுகின்றாள்:

''வார்ஆளும் இளங்கொங்கை வண்ணம்வேறு
ஆயினவாறு எண்ணாள்; எண்ணில்
பேர்ஆளன் பேர்அல்லால் பேசாள்;இப்
பெண்பெற்றேன் என்செய்கேன் நான்?''[22]

இதில் தன் பெண் பசலை நிறங்கொள்ளுகைக்கு வருந்துகின்றாள். பசலையோ நீர்ப்பாசி போன்றது. தண்ணீரில் நாம் கை வைத்தோமாகில் கைப்பட்டவிடங்களில் பாசி நீங்கும், கையை அகற்றிவிட்டோமாகில்அவ்விடமெல்லாம் பாசி மூடிக்கொள்ளும். அங்ஙனமே, காதலர் கைபடும் இடங்களில் பசலை நிறம் நீங்கும் (இயற்கையான அழகிய நிறமே இருக்கும்). அணைத்த கையை நெகிழ்த்தலால்அப்பசலை நிறம் படரும். ''என் மகளுக்கு அறிவு அடியோடு தொலைந்தது. வீணாக ஆசை வைத்ததனால் மனநோய் காரணமாகக் கொங்கை நிறம் வேறுபட்டதே என்று அறியமாட்டுகின்றனள். இவளுக்கு இவ்வுலகைப்பற்றின சிந்தனையும் தன்னைப்பற்றிய சிந்தனையும் கழிந்தனவேயன்றி எம்பெருமானுடைய திருநாமங்கள் இவள் வாயில் வந்த வண்ணம் உள்ளன. இத்தகைய பெண்ணைப் பெற்ற நான் என்செய்வேன்?'' என்று வருந்துகின்றாள். 'இப்பெண் பெற்றேன்... நான்' என்பதற்கு இரண்டு பொருள் கூறுவர் **பிரதிவாதி பயங்கரம்**. 'இப்படி என் சொற்கேளாத அடங்காப் பெண்ணைப் **பெற்றேனே!** இவளை இழந்து அநியாயமாகக் கெட்டேனே! என் செய்வேன்?' என்று பிறர் நினைக்க வேண்டும். 'என்னைப்போல் பெண்பெற்றார்

22. மேலது. திரு. 5:5:7

உண்டோ? இவ்வளவு சிறிய பருவத்தில் இறையன்பு கொண்டு பக்தியில் ஆழங்கால் படும்படியான பேறு வாய்ந்த பெண்ணைப் பெற்ற நான் என்ன நோன்பு நோற்றேனோ?' என்ற மகிழ்ச்சியும் தொனிக்கும்.

இவவாழ்வார் தன்னைக் காதலியாக வைத்துப்பேசும் பாசுரங்கள் திருநெடுந்தாண்டகத்தில் உள்ளன. பரகால நாயகி பேசுகின்றாள்:

''மின்இலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி,
என்நலனும் என்நிறையும் என்சிந் தையும்
என்வளையும்கொண்(டு) என்னைஆளும்கொண்டு
பொன்அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலி னூடே
புனல்அரங்கம் ஊர்என்று போயி னாரே.''[23]

(திருஉரு-திருமேனி; கரி-யானை (குவலயா பீடம்); மகரம்-குண்டலம் ; நலன்-அழகு; நிறை-அடக்கம்; சிந்தை-நெஞ்சம்; நறுஞ்செருந்தி -மணம் மிக்க சுரபுன்னை)

'புள் ஊரும் கள்வன்' தன்பக்கலிலுள்ள அனைத்தையும் எனக்குக் காட்டி என் பக்கலிலுள்ள எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு போயினாரே'' என்று பேசுகின்றாள். ''ஒருவருடைய வீட்டில் கொள்ளையடிக்கப்போன கள்வன் அவருடைய எல்லாச் சொத்துகளையும் பறித்து அவற்றை அவ் வீட்டுக் குடையவரது தலையிலேயே வைத்துச் சுமக்கச் செய்து கொண்டுபோமாப் போலே இருக்கின்றது என்னை அடிமை யாக்கிக் கொண்ட நிலை'' என்கின்றாள்.

நம்மாழ்வாரும் திருவரங்கத்தைப்பற்றித் தாயார் பாசுரங் களாகப் பதினொரு பாசுரங்களைத் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார். ஒரு பாசுரத்தைக் காண்போம்:

''கங்குலும் பகலும் கண்துயில் அறியாள்,
கண்ணநீர் கைகளால் இறைக்கும்,
சங்குசக் கரங்கள்! என்றுகை கூப்பும்;
தாமரைக்கண்! என்று தளரும்;

23. திருநெடுந்-25.

எங்஫னே தரிக்கேன் உன்னைவிட்(டு); என்னும்?
இருநிலம் கைத்துழா இருக்கும்
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்.
இவள்திறத் தென்செய்கின் றாயே "[24]

(கங்குல் - இரவு; துயில் - உறக்கம்)

நீரைவிட்டுப் பிரிந்த மீன் துன்புறுதைப்போல இவள் துன்புறுவாள் என்பதை அறிந்திருந்தும் இங்஫னே இவளைப் பிரிந்திருத்தல் தகுதியோ? என்ற தொனிப் பொருள் இதில் தோன்றுகின்றது. மேற்கூறிய பாசுரங்களிலெல்லாம் உயிர் (சீவான்மா) இறைவனை (பரமான்மா) நாடிநிற்கும் தத்துவம் பேசப்பெறுகின்றது.

ஆழ்வார்கள் யாவரும் திருமால் அவதாரங்களில், குறிப்பாக இராம - கிருஷ்ணாவதாரங்களில், அதி பக்திகொண்டு அநுபவித்துப் பாசுரங்களை அருளியுள்ளார்கள். பெரியாழ்வாருக்கு விஷ்ணுபக்தி என்றாலே கிருஷ்ண பக்திதான். கிருஷ்ண பக்தியே விஷ்ணுபக்தியாகி வைணவம் ஆயிற்று என்று கூறுவதுமுண்டு.

"மாயோன் மேய
காடுறை உலகமும்"[25]

என்ற தொல்காப்பிய நூற்பா அடியில் கண்ணனை முதலில் வைத்துக் கூறுவதிலிருந்து கிருஷ்ண பக்திக்குத் தமிழ் நாட்டார் அளித்திருந்த முதலிடத்தை ஊகித்துக் கொள்ளலாம். இக் கண்ணன் கதைகளில் தமிழ் நாட்டிற்கே உரிய சில வரலாறுகளும், வரலாற்று வேற்றுமைகளும் இங்கு வழங்கி வந்தன. அஃதாவது, கண்ணனைக் குறித்துப் பாரதம், விஷ்ணுபுராணம் முதலான இதிகாச புராணங்களில் சான்று பெறாத சில கதைகளும் அதிகக் கதைகளும் தமிழ் மக்களிடையே வழங்கிவந்தன.

கண்ணன் குழலோசை எங்கும் கேட்கின்றது. இயற்கையில் கண்ணன் இசைமயமாய் இருக்கின்றான். நதியும் கடலும் செய்யும் முழக்கங்கள், வண்டும், குயிலும் பாடும் பாட்டுகள் ஆகியவை யாவும் புல்லாங்குழலின் எதிரொலிகளே என்பது

24. *திருவாய்: 7.2:1*

25. தொல் - பொருள் - அகத் - நூற்பா 5.

தத்துவம். இவற்றுடன் வேதாந்தத்தின் பனிமூடிய கொடு முடிகளும், சித்தாந்தத்தின் அன்புக் கடலோடு பல்வேறு தனிக்கடல்களும் புல்லாங்குழல் ஓசையில் விதையிலடங்கிய ஆலமரம் போல் அடங்கியுள்ளன என்பது கிருஷ்ண பக்தர்களின் கொள்கை. அழகுக் கடவுளின் முழுமை நிறைந்த அவதாரம் என்று கண்ணனைப் போற்றுகின்ற பெரியாழ்வார்,

"குன்றாடு கொழுமுகில்போல்
குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமால்"[26]

(கொழுமுகில் -நீர் நிறைந்த மேகம்; குவளை-நீலோற்பலம்; குரை-ஒலிக்கும்; கணமயில்-மயில்கூட்டம்)

என்றவாறு அப்பெருமானை இயற்கை எங்கும் காண்கின்றார்; விண்ணிலும், மண்ணிலும் காண்கின்றார்; காட்டிலும் நாட்டிலும் காண்கின்றார்; குன்றிலும் கடலிலும் காண்கின்றார்; பூவிலும் மயிலிலும் காண்கின்றார். இத்தகைய இயற்கையழகு நிறைந்த ஊர்தான் திருவரங்கம் என்பது இவரது கொள்கை.

குன்றூடுபொழில்நுழைந்து
கொடிஇடையார்முலைஅணவி
மன்றூடுதென்றல்உலாம்
மதில் அரங்கம் என்பதுவே.[27]

(பொழில்-சோலை; கொடி இடையார்-கொடிபோன்ற இடையையுடைய மகளிர்; அணவி - படர்ந்து)

என்ற அடிகளில் இக்கொள்கை வெளிப்படுவதைக் காணலாம்.

சைவ சமயத்தைச் சார்ந்த நந்தனாருக்கு முக்தியளித்த சிதம்பரத்தைப் போலவே திருவரங்கம் திருப்பாணாழ்வாருக்கு முக்தி அளித்தது. இருவரும் தாழ்த்தப்பெற்ற குலத்தைச் சார்ந்தவர்கள். யாழையே தெய்வமாகப் போற்றி வந்த பாணர்குல விளக்காகிய திருப்பாணாழ்வார் அந்த இசையாகவும் இசையின் பயனாகவும்இருக்கும் தெய்வத்தைத் திருவரங்கப் பெருமானாகக் கண்டார். இசைப்புலமையுடன் இயற்றமிழ்ப் புலமையும் உடைய இவர் **அமலனாதி பிரான்** என்ற பத்தே பாசுரங்களைக் கொண்ட சிறு பிரபந்தத்தை இயற்றியுள்ளார்.

26. பெரியாழ் - திரு. 4:8:9
27. மேலது . திரு 4.8:9

"அண்டர்கோன் அணிஅரங்கன்
என்அமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்
காணாவே."[28]

என்ற பாசுரப் பகுதி அரங்கநகர் அப்பன்மீது இவ்வாழ்வார் கொண்டுள்ள ஆராக்காதலை வெளியிடுகின்றது. இச்சிறு பிரபந்தத்தில் இவரது திருவாக்கு நான்மறையின் செம் பொருளைச் செந்தமிழால்வெளியிடுவதாக் கருதுவர் வைணவ பக்தர்கள்.[29] வேதாந்த தேசிகரும்,

"பாண்பெருமாள் அருள்செய்த
பாடல் பத்தும்
பழமறையின் பொருளென்று
பரவு கின்றோம்."[30]

என்று உரைத்துப் போயினர். பாதாதிகேச மாலையாகத் திருவரங்கப் பெரமானைப் பாடியுள்ள இதில் பிரணவத்தின் அகரம், உகரம், மகரம் என்ற மூன்று திருவெழுத்துகளுள் முதல் எழுத்தாகிய அகரத்தை முதற் பாசுரத்தின் முதலிலும், இரண்டாம் எழுத்தாகிய உகரத்தை இரண்டாம் பாசுரத்தின் முதலிலும், மூன்றாம் எழுத்தாகிய மகரத்தை மூன்றாம் பாசுரத்தின் முதலிலும் முறையே அமைத்துள்ள சிறப்பு ஈண்டு கருதத் தக்கது. இப்பாசுரங்கள் அன்பாகிய அமிழ்தம் நிரம்பிய பொற்குடங் களாய் விளங்குகின்றன.

வைணவ சமயத்திற்குப் புத்துயிர் அளித்த எம்பெரு மானார் எனப்படும் இராமாநுசரே திருவரங்கக் கோயிலின் நடைமுறைகளை வகுத்தனர் என்று சொல்லப் பெறுகின்றது. இப்பெரியார் பல்லாண்டுகள் வாழ்ந்து வைணவத்தை நாடறியச் செய்தார். சித்தாந்தத்தை நிறுவியவர்களான மத்வர் முதலான ஆசார்யர்களும் இந்நகர்ப் போந்து அரங்கனை வழிபட்டுப் பெரும்பேறு பெற்றனர். **கிருஷ்ண சைதன்யர், துளசி தாசர்** முதலிய வடநாட்டுப் பக்தமணிகளும் அழகிய மணவாளனை வணங்கி அருள் பெற்றனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

28. அமலனாதி - 10
29. இராமாநுச நூற் - 11
30. தே. பி. - 132

இசைக் கலைக்குப் புத்துயிர் அளித்த தியாகய்யர் முதலானவர்கள் பல கீர்த்தனங்களால் திருவரங்கத்தைப் போற்றியுள்ளனர்.

"அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு அரங்கர் மணிதிகழ் முகுந்தர்
அழகிய மணவாளர்"[31]

என்று திவ்வியகவி போற்றியுள்ள திருவரங்கப்பெருமானது திருக்கோயில் வரலாற்றுக் காலத்திலிருந்து நாளிதுவரை வாடாத சிறப்புடன் திருமால்பக்தியின் வளர்ப்பும் பண்ணையாகத் திகழ்ந்துவந்துள்ளது என்று சொல்லலாம்.

இந்தக் கருத்துகள் நம்சிந்தையில் எழுந்தவண்ணம் இராயர் கோபுரவாயிலாகத் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். தென்திசை நோக்கி அரவணையில் '**உறங்குவான்போல் யோகு செய்யும்**' அரங்கநாதனைச் சேவிக்க தென் வாயில் வழியாகச் செல்வதுதானே முறை? இந்த வாயில்வரை வண்டிகளும் காரும் செல்லும். இதன் வழியாகச் சித்திரை வீதிக்கு (7-வது வீதி) வருகின்றோம். இந்த வீதியின் நான்கு திக்குகளிலும் கோபுர வாயில்கள் உள்ளன. இவற்றுள் கிழக்கிலுள்ள 'தாமோ தரன் கோபுரவாசல்' முக்கியமானது. இந்த வாசலுக்குள் தாமோத ரனான **கண்ணபெருமானின் சந்நிதி** இருக்கிறபடியால் இப் பெயர் வழங்கிவருகின்றது. தேள் முதலிய நச்சுயிர்களின் துன்ப நிவர்த்திக்காக மக்கள் வெண்ணெய் கொண்டுபோய் இந்தப் பெருமானுக்குச் சாத்துவது வழக்கம். இவ்வீதியில் பங்குனியில் நடைபெறும் பெருவிழாவிலும் (ஆதிப்பிரம்மோற்சவம்), சித்திரைத் திருநாளிலும், அரங்கநாதன் வாகனங்களிலும், பல்லக் கிலும், இரதத்திலும் வீதி வலம் வந்து அடியார்கட்குச் சேவை சாதிக்கின்றான். இது தவிர வைகாசி வசந்தோற்சவ இறுதி நாள் குதிரை வாகனத்திலும், உறியடி உற்சவத்தில் இரண்டு பிராட்டி மார்கள், கண்ணன் இவர்களுடனும், மாசி மாதத்தில் தெப்பம், பந்தக் காட்சிகளிலும் இத்திருவீதிவழியாக திருஉலாச் செல்லு கின்றார்.

பல மண்டபங்களைக் கடந்து திருவிக்கிரமன் வீதி (6-வது வீதி) என்ற உள் வீதிக்கு வருகின்றோம். இவ்வீதிக்கும் நாற்புறமும் கோபுர வாயில்கள் உள்ளன. இவற்றுள் மேல்புற

31. திருவரங். கலம். - 7

வாயில் நீங்கலாக மற்ற வாயில்களின் வழியாக அழகிய மண வாளன் திருவுலாக் கொள்ளுகின்றார். தைமாதம் நடைபெறும் இரதோற்சவம் நடைபெறுங்கால் காலை, மாலை வாகனங் களிலும் பல்லக்கிலும் பெருமாள் இரு நாச்சிமார் களுடன் திருவீதியில் வலம் வருகின்றார். மாசி மாதம் நடைபெறும் தெப்ப உற்சவத்தில் முதல் ஏழு நாட்கள் எழுந்தருள்கின்றார். இந்த வீதியின் தென்கிழக்கு மூலைக்கருகில் **மணவாளமாமுனிகளின்** சந்நிதி உள்ளது. இந்தச் சந்நிதியின் கம்பத்தடியில் மாமுனிகள் யோகத்திலிருக்கும் போது அவ்விடம் சென்ற உத்தம நம்பிக்குத் தன் அவதார இரகசியத்தைக் காண்பித்தபடி ஓவிய உருவமாக எழுந்தருளியுள்ளனர். இதுவே இவர்தம் மூலத் திருஉருவம். இச் சந்நிதியினுள் இவர்தம் உற்சவத் திருமேனி மிகச் சிறியது.

மாமுனிகளின் திருவருள் பெற்று அகலிங்கன் திருவீதிக்கு (5-வது வீதி) வருகின்றோம். இங்கிருந்துதான் கோவில் தொடங்குகின்றது. இதன் வடக்கு, கிழக்கு, தெற்கு பக்கங்களில் வாயில்களும் கோபுரங்களும் உள்ளன. தென்புற வாசல் கோபுரம் நான்கு திக்குகளையும் நோக்கும் நான்கு முகங்களோடு கூடியிருப்பதன் காரணமாக இது **'நான் முகன் கோபுரவாயில்'** என்ற திருநாமத்துடன் திகழ்கின்றது. இவ்வாயிலினுள் நுழைந்த தும் நடுவில்ஒரு நான்குகால் மண்டபத்தோடு ஒரு விசாலமான திறந்த வெளியையும் அதன் முன்புறம் ஒருபெரிய மண்டபத் தையும் காண்கின்றோம். பெரிய மண்டபமே **அரங்கவிலாசம்;** அரங்கநாதர் எழுந்தருளும் மண்டபம். திறந்த வெளியிலுள்ள நடு மண்டபத்தின் தூண் ஒன்றில்முறுக்கு மீசையும் திருகிக் கட்டிய கொண்டையும் கொண்ட பெரியவர் கூப்பிய கையுடன் நிற்பார் சிலை உருவில். இது எவ்விதத்திலும் கம்பர் சிலை அன்று என்பது தெளிவு; இது நாய்க்க மன்னர்களில் ஒருவரின் சிலை யாக இருக்கலாம். அரங்கமண்டபத்தின் வடகோயில் அரங்க நாதனுடைய விளக்குத் தூணும் (தீபஸ் தம்பம்) மகாபலி பீடமும் உள்ளன. திருக்கார்த்திகை நாளன்று சொக்கப் பனை என்று ஒருதென்னை மரத்துண்டை நட்டு அதைச் சுற்றிப் பனை ஓலை களைக் கட்டி அரங்கநாதனுக்கு ஆரத்தி செய்த பந்தத்தினால் தீயை வைத்து கார்த்திகைத் தீப விழா கொண்டாடப் பெறு கின்றது. அரங்கமண்டபத்தைச் சுற்றி ஆழ்வார் சந்நிதிகள், நாத முனிகள் சந்நிதி உள்ளன. நாத முனிகள் சந்நிதியில் ஆளவந்தார், திருவரங்கப் பெருமாளரையர் சேவை சாதிக்கின்றனர்.

இதற்கு அடுத்தது யானை ஏறு மண்டபம். இந்த மண்டபத்தில் அரங்நாதன் எழுந்தருளி இளநீர் அமுது செய்து அதன்பின் யானை வாகனத்தில் ஏறுவார். இம்மண்டபத்தின் வடக்கிலுள்ள உள் ஆண்டாள் முன் நின்று மாலைமாற்றிக் கொண்டு செல்கின்றார். இங்கு வாகன மண்டபம், அமிர்த கலசக் கருடன் சந்நிதி, கூரத்தாழ்வான் சந்நிதி, தொண்டரடிப் பொடி யாழ்வார் சந்நிதி, திருப்பாணாழ்வார் சந்நிதி ஆகிய சந்நிதிகள் உள்ளன.

அரங்க விலாசத்தைத் தாண்டியதும் அகளங்கன் திருவீதி (5-ம் வீதி) வருகின்றது. இவ்வீதியின் தென்மேற்கு மூலையில் **சக்கரத்தாழ்வார்** சந்நிதி உள்ளது. மூலத் திருமேனி முன்பக்கம் சக்கரமாகவும் பின்பக்கம் நரசிம்மனாகவும் சேவை சாதிக்கின்றார். திருவுலாத் திருமேனி எட்டுக்கரங்களுடன் சுதர்சன சக்கரமாகத் தோன்றுகின்றார். பேய், பிசாசு, பில்லிசூனியம் முதலிய வற்றால் ஏற்படும் துன்பங்களைத் துடைப்பவர் இவர். சனிக் கிழமைகள் தோறும் மக்கள் நெய் எண்ணெய்விளக்குகள் ஏற்றி இவரை வழிபடுகின்றனர். இச்சந்நிதியின் தென்-மேற்கு மூலையில் இராமாநுச நூற்றந்தாதி' அருளிய **திருவரங்கத்தமுதனார்** திருமேனி உள்ளது. சக்கரத்தாழ்வார் கோயிலை யொட்டி வடக்கிலுள்ள தோப்பில் இருக்கும் வசந்த மண்டபத்தில் அரங்கநாதனுக்கு வசந்த உற்சவம் நடைபெறுகின்றது.

வசந்த மண்டபத்திற்கு வடபுறம் அகளங்கன் திருவீதியின் வடமேற்கில் **சீரங்க நாச்சியாரின்** திருச்சந்நிதி உள்ளது. இவர் படிதாண்டாப் பத்தினி. இவரது திருவிழாக்கள் யாவும் இவரது சந்நிதியிலே நடைபெறுவதற்கேற்ப ஒரு பெரிய தனிக் கோயிலாகவே அமைந்துள்ளது. இச் சந்நிதியில் இரண்டு மூல நாச்சியார்களும் ஓர் உற்சவரும் உள்ளனர். இவருக்கு நடை பெறும் நவராத்திரி ஆண்டுவிழா, பங்குனி உத்தரத்தன்று நடை பெறும் ஊடல் உற்சவம் (பிரணயகலக உற்சவம்) அல்லது மட்டையடித் திருவிழா பேர் பெற்றவை.

தாயார் சந்நிதிக்குக் கிழக்கில் உள்ளது **மேட்டு அழகிய சிங்கரின்** சந்நிதியாகும். சந்நிதியின் எதிரே ஒரு நாற்கால் மண்டபம் உள்ளது. இதில்தான் கம்பர் தம் இராமாயணத்தை அரங்கேற்றியதாக வரலாறு. அரங்கேற்றத்தில் இரணியவதைப் படலம் சேர்த்திருப்பது ஆட்சேபிக்கப் பெற்றதாகவும், அதற்கு

நரசிம்மன் தான் எழுந்தருளியிருந்த கோபுரத்தினின்றும் தான் உகந்ததற்கு அடையாளமாக கர்ச்சித்தார் என்றும் கூறுவர். இதற்கு அடுத்த அருளாளப் பெருமாள் பெரு மண்டபத்தில் பதினேழு நாட்கள் உடையவருக்கும் யக்ஞமூர்த்திக்கும் நடந்த சமயவாதப் போரில் மேட்டு அழகிய சிங்கர் தம் தலையசைத்து உடையவரை ஏற்று யக்ஞமூர்த்தியின் தோல்வியை வெளிப் படுத்தினதாக **திவ்விய சூரி சரிதை** கூறும். சீரங்க நாச்சியார் சந்நிதிக்குக் கிழக்கில் கோபுர வாயிலை ஒட்டி **வேதாந்த தேசிகரின்** சந்நிதி உள்ளது. அடுத்து **பெரியவாச்சான் பிள்ளை** திருவேங்கட முடையானுடன் காட்சி தருகின்றார். சீரங்க நாச்சியார் சந்நிதிக்குக் கிழக்கிலிருப்பது ஆயிரக்கால் மண்டபம். இதன் நீளம் 500 அடி, அகலம் 160 அடி, 951 ஒற்றைக் கற்களாலான தூண்களை யுடையது. இதன் நடுவிலிருக்கும் சிறிய மண்டபம் **திருமாமணி மண்டபம்** ஆகும். இங்குத்தான் மார்கழி மாதம் **பகல்பத்து இராப்பத்து** என்ற திருமொழி - திருவாய்மொழித் திருவிழா நடைபெறும். இப்பிராகாரத்தில் ஆயிரம்கால் மண்டபத்தின் முன் உள்ள திறந்த வெளிக்கும் கிழக்கேயுள்ளது **வெள்ளைக் கோபுரமாகும்.** இக்கோயில் வாயிலையொட்டி சேஷகிரிராயர் அணிதிகழ் மண்டபமும் இதற்குத் தெற்கில் **பிள்ளை உலக ஆசிரியரின்** சந்நிதியும் உள்ளன. இதற்குத் தெற்கி லிருப்பது பாஷ்யக்காரர் எனப்படும் **இராமாநுசரின் சந்நிதி** யாகும். இந்த இடம் ஆதியில் சீரங்க நாதனின் வசந்தமண்டப மாகஇருந்தது. உடையவர் திருநாடு அலங்கரித்ததும், அவரது பூத உடம்பை அரங்கநாதன் கட்டளைப்படி வசந்த மண்டபத் திலேயே திருப்பள்ளிப் படுத்தப் பெற்றுள்ளது. இது அவரது சந்நிதியாகத் திகழ்கின்றது. நாடோறும் இங்குத் திராவிட வேத பாராயணம் நடைபெறுகின்றது. இச்சந்நிதியின் மண்டபத் தில் உடையவரின் வரலாறு ஓவியத்தால் தீட்டப் பெற்றுள்ளது. **திருவரங்கத்து அமுதனார்** உடையவர்மீது இயற்றியுள்ள இராமாநுச நூற்றந் தாதியைக் கேட்டுக் கொண்டே **அரங்கநாதன்** தமது பிரம்மோற் சவம் 10-ஆம் நாளில் திருவீதிவலம் வருங்கால் இந்தச் சந்நிதிக்கு வந்து உடையவருக்கு அருள் செய்வார். இச்சந் நிதியின் முன் மண்டபத்திற்கு மேற்கில் திருமதிலையொட்டி ஆதி யில் குதிரை கட்டும் இடமாகவும் பசு மண்டபமாகவும் இருந்த கட்டடம் இப்போது (1935) நூல் நிலையமாகவும் அரும் பொருட் காட்சிச் சாலையாகவும் மாற்றப் பெற்றுள்ளன. இவற்றிற்கு அடுத்து **திருக்கோயில் ஆட்சியர்** அலுவலகம் உள்ளது.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அரங்கநாதனின் நான்காவது பிராகாரத்தினுட் புகும் திருவாயிலுக்கு வருகின்றோம். கங்கையும், யமுனையும் இவ்வாயிலுக்குக் காப்புச் செய்கின்றன. இந்தத் திருவாயிலைக் கடந்து ஆலிநாடன் என்னும் திருமங்கை மன்னன் அமைத்த ஆலிநாடன் திருவீதிக்கு (4-வது திருவீதி) வருகின்றோம். எதிரே காண்பது **கருடாழ்வார்** சந்நிதியின் பின்புறம். முன்புறத்தின் எதிரே நிற்கும் பெரிய திருவடி பெருமாளை நோக்கிக் கூப்பிய கையுடன் இருக்கும் திருக்கோலத்தைக் காண்கின்றோம். இதனையொத்த அழகியதும், பெரியதுமான கருடாழ்வார் சந்நிதி எங்கும் இல்லை. கருடனைச் சுற்றி எழுப்பப் பெற்றுள்ள மண்டபம் **தேவராசன் குறடு** என வழங்கப்பெறுகின்றது. இந்த நாற்கால் மண்டபத்தில் **பகல் பத்து** பத்தாம் திருநாள் இரவு அரங்கநாதன் மோகினி அவதாரத்துடன் வந்து அடியார்கட்குச் சேவை சாதிப்பார்.

கருட மண்டபத்திற்கு மேல்புறம் **நம்மாழ்வார் சந்நிதி** உள்ளது. இவர் மதுரகவியாழ்வார் திருமங்கையாழ்வார் இவர்களுடன் எழுந்தருளியுள்ளார். கருட மண்டபத்தின் தென்-கிழக்கு மூலையில் **திருக்கச்சி நம்பிகளின்** சந்நிதி உள்ளது. இந்த ஆலிநாடன் வீதியை வலமாக வருங்கால் **மேல் பட்டாபிராமன் சந்நிதி, முதலாழ்வார்களின் சந்நிதி**, தீர்த்தக் கரை **வாசுதேவப் பெருமாள் சந்நிதி**, இவர் அருகில் **சந்திர புஷ்கரிணி** ஆகியவை இருப்பதைக் காண்கின்றோம். அரங்க விமானத்தின் மேல் விழும் மழைநீர் முழுவதும் இந்தப் புஷ்கரிணியில் வந்து சேர்கின்றது. பங்குனி உற்சவம் நீங்கலாக ஏனைய உற்சவங்களில் அரங்கநாதன் இந்தப் புஷ்கரிணியில் தீர்த்தம் ஆடுவார். பங்குனி உற்சவத்தில் மட்டிலும் கொள்ளிடத்தில் ஆடுவார். புஷ்கரிணியின் கீழ்க்கரையில் **கோதண்டராமர்** சந்நிதி உள்ளது. இங்கு குலசேகரப்பெருமாள் சேவை சாதிக்கின்றார். அடுத்து **பரமபதநாதன்** சந்நிதி, **பண்டார மண்டபம், திருமழிசையார் சந்நிதி** இவற்றைக் காண்கின்றோம்.

இனி மூன்றாவது பிராகார வாயிலாகிய ஆரியபடாள் திருவாசலுக்கு வருகின்றோம். ஆதியில் வடக்கிலிருந்து வந்த ஆரிய அந்தணர்களால் காவல் புரியப்பெற்றதால் இவ்வாயில் இத் திருநாமம் பெற்றது. திருவாயில் இருமருங்கும் சக்கரத்தாழ்வாரும் கருடாழ்வாரும் காவல் புரிகின்றனர். இத்திருவாயிலைக் கடந்து குலசேகரன் வீதி (3-வது திருவீதி) க்கு

வருகின்றோம். எதிரில் காண்பது **அணியரங்கன் திருமுற்றம்.** திருவாயிலுக்கு மேல்புறமிருப்பது **திருப்பவித்திர மண்டபம்.** இங்குப் பெருமாளுக்கு ஆவணியில் பவித்திர உற்சவம் நடைபெறும். இம்மண்டபத்தின் மேற்குப் பகுதியில் **ஹயக்கிரீவர்,** சரசுவதி சந்நிதிகள் உள்ளன. திருவாயிலுக்குக் கிழக்கிலிருப்பது கொடியேற்று (துவஜாரோகண) மண்டபம். இம்மண்டபத்தின் வட-மேற்கு மூலையிலுள்ள ஒரு தூணின் மீது அரங்கநாதனைச் சேவித்த வண்ணம் **அநுமார்** சேவை சாதிக்கிறார். இம்ண்டபத்திற்கு மேற்கிலிருப்பது **ஊஞ்சல் மண்டபம்.** இதில் பெருமாளுக்கு ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இத்திருவீதியின் மேல்பாகத்திற்கு **திருநடை மாளிகை** என்பது திருநாமம். இதன் வடக்கு மூலையில் இருப்பது உள்கோடை மண்டபம். இதில் கோடை உற்சவத்தில் அரங்கநாதன் எழுந்தருளுவார். இப்பிராகாரத்தின் வடக்கு வாயிலாக இருப்பது **பரமபதவாசல்.** இதன் கீழ்ப்புற மூள்ள கிணறு விரஜாநதி ஆகும். திருவீதியை வலம் வருங்கால் காண்பது **அரவிந்த நாயகியாரது** திருமடைப் பள்ளிகளாகும்.

அடுத்து நேர்படுவது **நாழிகைகேட்டான்** வாயில். இதனைக் கடந்து இரண்டாம் பிராகாரமாகிய இராஜ மகேந்திர சோழனது திருவீதிக்கு வருகின்றோம். இந்த வாயிலின் முன்புறம் **பத்ரன், சுபத்திரன்** என்ற தேவதைகளும், பின்புறம் **சங்கநதி, பதுமநிதி** என்போரும் காப்புச் செய்கின்றனர். இப்பிராகாரத்தில் ஐந்து பருவ உற்சவங்களும் மார்கழி முதல் ஒன்பது நாட்களின் இராப்பத்து உற்சவமும் நடைபெறுகின்றன. சித்திரைக் கோடைத் திருவிழா 6 முதல் 9 நாட்கள் வரை நான்கு நாட்களில் அரங்க நாதன் ஏகாந்த சேவை சாதித்து வீணை கேட்டுக் கொண்டு உள்ளே எழுந்தருளுகின்றார். நாழிகை கேட்டான் வாசலுருக்கு தென்மேற்கே கோயில் கருவூலம் உள்ளது. விலையுயர்ந்த பொருள்கள் யாவும் இங்கு பாதுகாப்பாக வைக்கப் பெற்றுள்ளன. இதற்கு வடக்கில் பெருமாளுக்குச் சந்தனம் அரைக்கவும், திருநீராட்டுக்கு வெந்நீர் போடவும், திரு ஆடைகள் உலர்த்தவும் தனித்தனி அறைகள் உள்ளன. இவற்றின் வடக்கே இருப்பது **சுக்கிரவார அறை.** இங்குப் பெருமாளுக்கு வெள்ளிக்கிழமைகளில் சாத்த வேண்டிய புனுகெண்ணெய் தயாரிப்பது, கஸ்தூரி திருமண் காப்பு சேர்ப்பது, சந்தனத்திற்கு வாசனைப் பொருள்கள் கலத்தல் முதலியன நடைபெறுகின்றன.

இங்குத்தான் படியேற்றம் சேவை சாதிக்கும் இராஜ மகேந்திரன் திருவாசல், யாக சாலை,விஸ்வக்சேனர் சந்நிதி உள்ளன. அரங்கநாதர் வெளியில் எழுந்தருளும் போதெல்லாம் தனது அரசுப் பொறுப்பை விஸ்வச் சேனரிடம் ஒப்புவித்துச் செல்வதும், திரும்பி வந்ததும் இவருக்குப் பிரதிநிதியான கோவில் மணியக்காரருக்குத் தனது மாலையை வழங்குவதும் நடை முறையிலுள்ளது. **சேனை முதலியார்** விஸ்வக் சேனர் சந்நிதிக்கும் கீழ்ப்புறமிருக்கும் பரந்த மண்டபம் **அர்ச்சுன மண்டபம்** ஆகும். இங்குப் பகல் பத்துத் திருவிழா நடைபெறு கின்றது. பத்தாம் நாள் மாலை பெருமாள் மோகனாவதாரத்துடன் இம்மண்டபத்தி லிருந்து புறப்படுகின்றார் கைசிக ஏகாதசி, சீராமநவமி விழாக் களிலும் இம்மண்டபத்திற்கும் வட மேற்கு மூலையில் **குலசேகர நாச்சியார்** என்னும் சேரகுலவல்லி சந்நிதி உள்ளது. சீராமநவமி யன்று இவர் அர்ச்சுன மண்டபத்தில் அரங்கநாதனுடன் ஒரே ஆசனத்திலமர்ந்து சேவை சாதிப்பார். இந்தச் சந்நிதியின் அருகில் **சுல்தானி** என்ற **துலுக்க நாச்சியாரின்** சந்நிதி உள்ளது. சந்நிதியில் நாச்சியார் ஓவியமாக வரையப் பெற்றுள்ளார். **பகல் பத்து விழாவில்** அரங்கநாதன் இவருக்கு சிறப்புச் சேவை பாலிக் கின்றார். இன்றும் காலை கோதுமை ரொட்டியும், மதுரப் பருப்பும், கிச்சிடி அரிசியாலான பொங்கலும், பச்சைப்பாலும் பெருமாள் அமுது செய்தருளுகின்றார்; கைலி கட்டிக்கொண்டு தீர்த்தமாடுகின்றார்.

அர்ச்சுன மண்டபத்திற்கு முன்பாக இருப்பது **ரேவதி** மண்டபம். அரங்கநாதன் இங்குத் தனது நட்சத்திரமான ரேவதி அன்று எழுந்தருளி தீர்ததமாடுதல் முதலியன கண்டருளு கின்றார். இம்மண்டபத்தின் தெற்கிலுள்ளது **கிளி மண்டபம்.** இம்மண்டபத்தின் ஓரிடமிருந்து பரவாசுதேவரைச் சேவிக்கலாம். இதன் தென்-கிழக்கு மூலையிலுள்ளது **கிருஷ்ணன் மண்டபம்.** இங்குக் கிருஷ்ணன், வசுதேவர், தேவகி, உரோகிணி முதலியவர் களின் திருமேனிகள் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக உள்ளது சீநிவாசனின் அழகிய கற்கள் பதிப்பித்த வண்ணப்படம். திவ்விய கவி பிள்ளைப் பெருமாளய்யங்கார் அரங்கநாதனிடம் கொண் டிருந்த அதிக பக்தியால் '**சீநிவாசனைப்பாடேன்**' என்று சொன்ன போது தானே சீநிவாசன் என்றும், சீநிவாசனே தான் என்றும் தெரிவித்தற்பொருட்டு அரங்கநாதன் இந்த இடத்தில் சீநிவாச னாகச் சேவை சாதித்தார். இதன் நினைவாக உண்டாக்கப் பெற்றது இந்த வண்ணப்படம்.

அடுத்து நம்முன் தோன்றுவது **அழகியமணவாளன் திரு. மணிமண்டபம்.** இதைச் **சந்தன மண்டபம்** என்றும் வழங்குவர். அரங்கநாதன் விசுவரூபத்தைக் காண்பவர்கள் நிவேதனங்கள் முதலானவை நடைபெற்றுத் தீபாராதனை நடக்கும் போது இங்கிருந்து சேவிப்பார்கள். இந்த மண்டபத்தில் அரங்கநாதன் ஏகாதசி, அமாவாசை முதலான ஐந்து பருவங்களில் எழுந்தருளி திருமஞ்சனம் முதலானவை கண்டருளுகின்றார். அரங்க நாதனின் திருச்சந்நிதி வாயிலுக்கு எதிரில் தாமிரத்தாலான சந்நிதியில் கருடன் சதா சேவையிலிருப்பதைக் காண்கின்றோம். கருட சந்நிதிக்கு மேற்கிலுள்ளது கண்ணாடி அறை. பிரம்மோற் சவங்களில் உற்சவம் முடியும்வரை பெருமாள் இரவில் இந்த அறையில் தங்குவார். இங்கு அரங்க நாதனைச் சேவிப்பது ஒரு திவ்விய தரிசனமாகும். இந்தத் திருமண்டபத்திற்கு கீழ்ப்புறமும் மேற்புறமும் **ஏறும் சுருள் யாழிப்படிகள்** உள்ளன. இந்தப் படிகள் வழியாகப் பெருமாள் ஏறும்போது படியேற்றம் நடைபெறும்.

பக்தர்கள் மேற்குறிப்பிட்ட அழகிய மணவாளன் திருமண்டபமிருந்தே அரங்கநாதன் திருச்சந்நிதியை அடைதல் வேண்டும், இதைச்சுற்றி அமைந்திருப்பதே **திருச்சந்நிதிப் பிராகாரம்**(1-ஆம் திருச்சுற்று). இச்சந்நிதியை **ஜயன், விஜயன்** என்ற துவாரபாலகர்கள் காப்புச் செய்கின்றனர். அதன் மணிக் கதவுகள் மணிகளால் அலங்கரிக்கப் பெற்றுள்ளன. சந்நிதியின் திருவாயில் **திருவணுக்கன் திருவாயில்;** இந்த வாயிலையொட்டி **'திருமணத்தூண்'** என்ற இருதூண்கள் உள்ளன. அவை விமானத்தின் மேலிருந்து சேவைசாதிக்கும் பரவாசுதேவரின் கால்களாக அமைக்கப்பெற்றுள்ளன. இந்தத் தூண்களின் அருகி லிருந்து தான் பெருமாளைச் சேவிப்பது ஆதி காலத்து வழக்கமாக இருந்தது. குலசேகராழ்வாரும்,

காயாம்பூ மலர்ப்பிறங்கல் அன்ன மாலைக்
கடிஅரங்கத்து அரவணையிற் பள்ளி கொள்ளும்
மாயோனை மனத்துளே பற்றி நின்று என்
வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே [32]

(பிறங்கல் - மாலை; அரவு அணை - பாம்புப் படுக்கை; மாலை- அரங்கநாதனை; என்றுகொலோ - என்றைக்கு வாய்க்குமோ)

32. பெரு.திரு.1:2

என்று கூறுவதிலிருந்து இதனை அறியலாம். இப்போது பக்தர்கள் உற்சவருக்கு அருகிலுள்ள '**குலசேகரன் படி**'க்குப் பக்கம் நின்று சேவிக்கின்றனர்.

திருவணுக்கன் திருவாயிலினுள் நுழைந்ததும் விமானப் பிரதட்சிணமாகிய திருவிண் ஆழி சூழப்பெற்ற திருச்சந்நிதியை அடைகின்றோம். இதனைச் சுற்றிலும் உள்ளது தர்மவர்மாவின் திருவீதி (1-வது சுற்று). திருவரங்க விமானம் ஏழு திருச்சுற்றுகளுக்கும் நடுவிலுள்ளது, பிரணவ ஆதாரமாயுள்ளது. நான்கு திருமறைகளும் சாத்திரங்களும் தூபிகளாயுள்ளன. பரவாசுதேவர் இதிலிருந்து சேவை சாதிக்கின்றார். விமானத்தின் வெளியில் மேல் திசையில் கஜானனும் (விநாயகர்) கீழ்த்திசையில் அரங்கநாதனின் யோகமாயையாகிய துர்க்கையும் விமானத்தைக் காத்து வருகின்றனர். இதனைத் திவ்விய கவி,

அருமறை யோதியவோர் எட்டெழுத்தும்
அயன்ப டைத்த
இருநிலம் மீதினில் யாவருங்காண
இலங்கு துத்திக்
குருமணி நாகத்தில் எங்கோன்
விழிதுயில் கொண்டரிளத்
திருமதில் ஏழும் விமானமும்
ஆகிச் சிறக்கின்றவே [33]

(அயன் - நான்முகன்; இருநிலம் - பெரிய நிலம்; காண - சேவிக்க; துத்தி - படப் புள்ளி; குருமணி-மாணிக்கம்; நாகம் - அனந்தாழ்வான்; விழி துயில் - துயிலாத் துயில்)

என்ற பாடலால் காட்டுவர். '**ஓம்**' என்ற பிரணவம் விமானமாகவும், '**நமோ நாராயணாய**' என்பதிலுள்ள ஏழு எழுத்துகள் ஏழு மதில்களுமாகவும் அமைந்துள்ளன.

இந்த விமானத்தின் முன் பகுதியில் நிற்பது காயத்திரி மந்திரத்தின் அறிகுறியாக நிற்கும் 24 தூண்களால் அமைக்கப் பெற்ற **காயத்திரி மண்டபம்**. இந்த மண்டபத்தின் நடுவில் பெருமாளுக்குத் தளிகைகள் சமர்ப்பிக்கும் அமுது பாறை உள்ளது. பிராகாரத்தின் நான்கு மூலைகளிலும் நாராயணர், நாபி நளினர், நாகசயனர், நரசிம்மர் என்பவர்கள் அரங்க

33. திருவரங். மாலை-95.

விமானத்திற்குக் காவல் புரிகின்றனர். இதனுள் முதற்கண் புலப்படுவதே வட்டவடிவமையுள்ள **திருஅரங்கம்**. அதன் முதலடியில் கணநாதரான தும்பிக்கையாழ்வாரும், அதன் வலக்கடையில் துர்க்காதேவியும் காப்புச் செய்கின்றனர். இதன் சிகரமே பொன்தட்டால் வேயப் பெற்ற **திருஅரங்க விமானம்**.

திருவிண்ணாழியின் சுற்றிய முப்புறச் சுவரிலும் சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்ட 108 வைணவத் திருத்தலங்களின் உண்மைத்தோற்றங்களை ஒளிப்படம் (Photo) பிடித்துக் காட்டுவன போல் அழகியவண்ண ஓவியங்கள் உள்ளன. இதன் விவரங்கள் அடங்கிய தெலுங்குக் குறிப்புகள் ஒவ்வொன்றின் கீழும் உள்ளன. இவற்றைக் கண்ணுற்றும் வலம்வந்தும் அறிதுயில் கொண்டிருக்கும் அரங்கநகர் அப்பனைச் சேவிக்கின்றோம்.

திருவரங்கத்தில் அரங்கநாதன் பள்ளி கொண்டது எதற்காக என்பதைக் குலசேகரப் பெருமான்,

வன்பெருவா னகம்உய்ய அமரர் உய்ய
மண்உய்ய மண்உலகில் மனிசர் உய்யத்
துன்பமிகு துயர்அகல அயர்வுஒன்று இல்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ.[34]

(வானகம்-சுவர்க்கம்; மண்-பூ உலகம்; அமரர்-தேவர்; துயர்-பாவம்; அயர்வு-துக்கம்)

என்று விளக்குவர். இதற்காகத்தான் அரங்கப்பெருமான் தென் திசை நோக்கிப் பள்ளி கொண்டுள்ளான் என்பது இவர்தம் கொள்கை.

சுமார் பதினைந்து அடி நீளமுள்ள கருவறை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றான் திருவனந்தாழ்வான். அவனது பாயலில்தான் அழகாகத் திருக்கண் வளர்கின்றார் அரங்கநாதன்-'**கருணைமாமுகில்**.' இவர் வலக்கையால் தனது திருமுடியையும், இடக்கையால் தனது திருவடிகளையும் காட்டித் தானே எல்லா உலகங்கட்கும் நாதன் என்றும், எல்லோரும் தனது திருவடிகளைப் பற்ற வேண்டும் என்றும் போதிக்கின்றார். திருஅனந்தாழ்வானும் அரங்கநாதனும் சுதை உருவில் உருவானவர்கள். அனந்தாழ்வான் பொன் முலாம் பூசிய

34. பெரு. திரு. 1.10.

தகடுகளால் பொதியப்பெற்றுள்ளான். அரங்கனோ கன்னங்கரிய வடிவினராகத் தைலக்காப்புள்ளே புதைந்து கிடக்கின்றார். அவர்தம் அகன்ற மார்பில் முத்தாரம், கௌஸ்துபம், புரளும் வனமாலை காட்சி அளிக்கின்றன. தலையில் நீண்டுயர்ந்த கிரீடம் அணி செய்கின்றது. இத்தனைக் கோலத்துடன் அவர் ஏனோ தனிமையை நாடியுள்ளார். பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் இவர்கட்குக்கூட அங்கு இடம் இல்லை. திருவுந்தியி ினின்றும் நான்முகனும் எழவில்லை. இந்தச் சயனத் திருக்கோலத்தைத்தான் இளங்கோ அடிகள்,

நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந்தகலாது படிந்தது போல
ஆயிரம் விரிந்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெரு துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும.[35]

(திறல்-வலிமை; பாயல்பள்ளி-பாம்புப் படுக்கை; துருத்தி-ஆற்றிடைக் குறை, தீவு)

என்று காட்டியுள்ளார்.

இந்தக் கிடந்தத் திருக்கோலத்தின்முன் நின்ற திருக்கோலத் தில் செப்புச்சிலை வடிவில் **அழகிய மணவாளன்** இரண்டு துணைவியருடன் தங்கமஞ்சத்தில் காட்சி தருகின்றார். இருவரை யும் சேவித்து உளங்குளிர்கின்றோம்.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெரினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.[36]

(அச்சுதன் - அச்யுதன் - என்றும் நழுவாதவன், தன் அடி பணிந்தோரை நழுவ விடாதவன்; அமரர் - தேவர்)

35. சிலப் காடுகாண். அடி (35-40)
36. திருமாலை-2

என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பாசுரத்தைப் பாடிப் பரவு கின்றோம்.

எய்ப்பென்னை வந்து நலியும்போ தங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்து அரவணைப் பள்ளியானே.[37]

(எய்ப்பு-இளைப்பு; நலியும்போது-தொல்லை தரும் போது)

என்ற பெரியாழ்வார் பாசுரமிட்டு நாமும் விண்ணப்பிக்கின் றோம்.

நாவுண்டு நீவுண்டு நாமம் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ-பூவுண்டு
வண்டுறங்கு சோலை மதில்அரங்கத் தேஉலகை
உண்டுஉறங்கு வான்ஒருவன் உண்டு.[38]

என்று அவன் அருள் நமக்கு என்றும் உண்டு என்ற உறுதியையும் கொள்ளுகின்றோம்.

நாளும் பெரிய பெருமாள்
அரங்கர் நகைமுகமும்
தோளும் தொடர்ந்துஎன்னை ஆளும்
விழியும் துழாய்மணக்குந்
தாளும் கரமும் கரத்திற்சங்
காழியும்தண் டும்வில்லும்
வாளும் துணை வருமே
தமியேனை வளைந்து கொண்டே.[39]

(வளைந்து கொண்டு-சூழ்ந்து கொண்டு)

என்ற திவ்விய கவியின் அநுபவத்தைப் பெறுகின்றோம்.

சீர்விந்த உந்தித் திசைமுகனால் அல்லாதுஎன்
சோர்விந்த சொல்லிற் சுருங்குமோ- ஆர்வம்
ஒருவரங்கங் கோயில் உகந்தவரை யாள்வான்
திருவரங்கம் கோயில் சிறப்பு .[40]

37. *பெரியாழ். திரு. 4.10:1.*
38. *தனிப்பாடல்*
39. *திருவரங். மாலை - காப்பு.*
40. *நூற்.திருப்.அந். 1.*

(சீர்-சிறப்பு;உந்தி-கொப்பூழ்;திசை முகன்-நான்முகன்; சோர்விந்த - குற்றம் பொருந்திய, ஒருவர்-ஒருவர்; அங்கு அங்கு - அந்தந்த விடங்களில்; ஆர்வம் ஒயில்-ஆசை ஒழிந்தால்; அவரை-அந்தப் பற்றற்ற அன்பரை; உகந்து-விரும்பி; ஆள்வான்-அடிமை கொள்வான்)

திருவரங்கத்தின் பெருமையை நான்முகன் ஒருவனால் தான் கூறமுடியும் என்ற கருத்துக் கொண்ட திவ்வியகவியின் இப்பாசுரத்தையும் ஓதி உளங்கரைகின்றோம்.

இதுகாறும் கண்டு அநுபவித்தவற்றையெல்லாம் சுருங்க உரைக்கும் அநுபவமாக,

ஆராத அருளமுதம் பொழிந்த கோயில்;
அம்புயத்தோன் அயோத்தி மன்னர்க்கு அளித்த கோயில்;
தோலாத தனிவீரன் தொழுத கோயில்;
துணையான வீடணற்குத் துணையாம் கோயில்;
சேராத பயன்எல்லாம் சேர்க்கும் கோயில்;
செழுமறையின் முதல்எழுத்துச் சேர்ந்த கோயில்;
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்;
திருவரங்கம் எனத்திகழும் கோயில் தானே.[41]

(ஆராத-தெவிட்டாத; அருள் அமுதம்-அரங்கன்; அம்புயத்தோன் -நான்முகன்; தோலாத தனி வீரன்-இராமன்; சேராத-வேறு இடத்தில் பெற முடியாத; முதல் எழுத்து-ஓம் என்ற பிரணவம்; அரங்கம் என்பது விமானத்தின் பெயர் ; இது திருப்பதிக்குப் பெயராயிற்று (தானியாகு பெயர்)

என்ற வேதாந்த தேசிகரின் ஓத ஓதத் தெவிட்டாத திருப் பாசுரத்தை மிடற்றொலி கொண்டு ஓதிய வண்ணம் நாம் தங்கியிருக்கும் இடத்திற்குத் திரும்புகின்றோம்.

41. தே. பி. - 81.

2. உறையூர் அழகிய மணவாளன்

'**வேண்டுதல்** வேண்டாமை இலான் அடிசேர்ந்து'[1] பெரும்பயன் அடைவதற்கு அறிய வேண்டிய உறுதிப் பொருள்கள் ஐந்து என்று கூறும் வைணவ சமயம். இவை, இறைவன் இயல்பு, உயிர் இயல்பு, உயிர் இறைவனை அடைவதற்கு உள்ள தடையின் இயல்பு, அத்தடையை நீக்கி உயிர் இறைவனை அடைதற்குரிய உபாயம் (வழி), இறைவனை அடைந்து பெறும் பயன் என்பனவாம். இவை ஐந்தும் '**அர்த்த பஞ்சகம்**' என வழங்கப்பெறும்.

இறைவன் இயல்பு-ஐம்பொறிகளாலும், மனத்தாலும் உணரும் அளவுக்கு அப்பாற்பட்ட தன்மையும் ஒப்புயர்வற்ற தன்மையும் பிறவுமாகும். அவனது சிறப்பியல்பு.

> **மத்துறு கடைவெண்ணெய் களவினில்**
> **உரவிடை யாப்புண்டு**
> **எத்திறம், உரவினோடு இணைந்திருப்பது**
> **ஏங்கிய எளிவே** [2]

(உரம்-மார்பு; ஆப்புண்டு-கட்டுண்டு; இணைந்திருந்தது - பொருந்தி இருந்தது; எளிவு-எளிமைக் குணம்)

என்று நம்மாழ்வார் கூறிவாறு, இத்தகைய மேன்மையுடைய னாயினும் அடியார்க்கு எளியனாக இருக்கும் நிலைமை. உயிரின் இயல்பு-ஞானமும் ஆனந்தமும் உடைமை; அதன் சிறப்பியல்பு தன்னை இறைவனுடைய அடியார்க்கு அடியனாகக் கொள்ளு தல். அதாவது நம்மாழ்வார் தன்னை 'திருமாலுக்கு, உரிய தொண்டர் தொண்டர் தொண்டன்'[3] என்றும்,

> **நீக்கம் இல்லா அடியார்தம்**
> **அடியார் அடியார் அடியார்-எம்**
> **கோக்கள்,**[4]

1. குறள்-4.
2. திருவாய்: 1.3.2.
3. மேலது 6.9:1
4. மேலது 8.10:10

என்றும், 'நேர்பட்ட தொண்டர், தொண்டர், தொண்டர், தொண்டன்'[5] என்றும் கொள்ளுதல். தடையின் இயல்பு-'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும் ஆகும். அதன் சிறப்பியல்பு உலகப் பொருள்களில் பற்றற்று இறைவன் திருவடிக்கண் தொண்டு செய்யுமிடத்தும் 'யான் செய்கிறேன்' என்று கருதுவது அகங்காரமாகும். உபாயமாவது இறைவன் திருவடிகளே தஞ்சம் என்று அடைதல்; அதன் சிறப்பியல்பு-நாம் சரண் புகுந்தாலும் அவன் அருளில்லாதபோது பயன் எய்தாதாதலின், அவன் அருளையே உபாயமாகக் கொள்ளுதல். பயனாவது, இறைவன் திருவடிக்கண் எல்லாத் தொண்டுகளும் செய்யப்பெறுதல்; அதன் சிறப்பியல்பாவது-உயிர், தன் விருப்பப்படித் தான் விரும்பிய தொண்டுகளைச் செய்து மகிழாமல், இறைவன் விருப்பப்படி அவன் விரும்பும் தொண்டுகளைச் செய்து, அவன் மகிழ்வது கண்டு தான் மகிழ்தலாகும். இத்தனையும் உள்ளடக்கித்தான் நம்மாழ்வார் ''அறிந்தறிந்து தேறித்தேறி''[6] என்று கூறினார் என்று பெரியோர் பணிப்பர். இந்த அர்த்த பஞ்சக ஞானத்தைத்தான் '**திருமந்திரம்**' பேசுகின்றது,

இதுதான் திருவாய்மொழியிலும் நுவலப் பெறுகின்றது. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திருப்பாவை குறிப்பிடுவதும் இந்த அர்த்தபஞ்சக ஞானத்தையே. இந்த விவரங்களை எல்லாம் சுருக்கி,

> **'மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்**
> **தக்க நெறியும் தடையாகி-தொக்கியலும்**
> **ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்**
> **யாழினிசை வேதத் (து) இயல்'** [7]

என்று அழகிய வெண்பாவால் அருளிச் செய்வர் பராசரபட்டர்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் உறையூர் அழகிய மணவாளன் சந்நிதிக்குப் புறப்படுகின்றோம். உறையூரைக் **கோழி** என்று குறிக்கும் சங்க இலக்கியம்.[8]

5. மேலது *8.9:11*
6. மேலது *4.7:7*
7. திருவாய் மொழித் தனியன்
8. புறம்-67

முற்காலத்து ஒரு கோழி யானையை எதிர்த்துப் போர் செய்து வென்றது. போர் செய்த இடத்தில் நிறுவப்பெற்ற நகராதலால் கோழி என்பது பெயராயிற்று.

முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம்[9]

(முறஞ்செவி வாரணம்-முறம் போன்ற காதுகளையுடைய யானை; சமம் - போர்; முருக்கிய-கெடுத்த; புறஞ்சிறை வாரணம்-புறத்தே சிறகினையுடைய கோழி)

என்பது சிலப்பதிகாரக் குறிப்பு. இந்நகர் நிறுவப் பெற்ற பொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனால் புறஞ் சிறை வாரணம் எனப்பட்டது என்பர் அரும்பத உரையாசிரியர். புறஞ்சிறை வாரணம் என்பதற்கு புறத்தே இறகினையுடைய கோழி, புறத்தே சேரிகளையுடைய கோழியூர் எனப்பொருள் உரைப்பர் அடியார்க்கு நல்லார்.

உறையூர் தற்சமயம் திருச்சியைச் சார்ந்த ஒரு பகுதி திருச்சி-ஈரோடு இருப்பூர்திப் பாதையில் திருச்சி கோட்டை என்ற நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. மெயின்-கார்டு கேட் என்ற இடத்திலிருந்து நகரப் பேருந்து வசதி உண்டு. உறையூரிலுள்ள இத்திருத்தலம் '**நாச்சியார் கோயில்**' என்றே பொதுமக்களால் வழங்கப் பெறுகின்றது. நாச்சியார் கோயில் இறங்குமிடம் எனக்கேட்டு இறங்கி மேற்கு நோக்கி நடந்து சென்று இத்திருக்கோயிலை அடையலாம்.

உறையூர் பல நூற்றாண்டுகட்கு முன்னர் சோழர்களின் தலை நகராக இருந்தது. இங்கு ஆண்ட நந்த சோழன் தான் அரங்கநாதரின் அருட் பிரசாதமாகப் பெற்ற தன் மகள் கமலவல்லியைஅரங்கநாதனுக்குப் பல சீர்வரிசைகளுடன் திருமணம் செய்து கொடுத்து நாச்சியாருக்குத் திருக்கோயிலைக் கட்டினான். இத்திருக்கோயில் திருவிழா பங்குனித் திங்கள் இரேவதி நட்சத்திரத்தில்தொடங்கிப் பத்து நாட்கள் நடைபெறுகின்றது. பங்குனிஉத்திரத்தன்று அரங்கநாதன் உறையூரில் எழுந்தருளி அரங்கநாதனும் கமலவல்லித் தாயாரும் சேர்ந்த நிலையில் காட்சி தருகின்றனர்.

திருமங்கையாழ்வார் ஒருவரே இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார்.

9. சிலப். 1.10. 247.48.

கோழியும் கூடலும்,[10]

என்ற ஒரே சொற்றொடரால் மங்களாசாசனம் செய்துள்ளார். இங்குக் 'கோழி' என்பது உறையூரிலுள்ள திவ்வியதேசம், 'கூடல்' என்பது மதுரை மாநகரிலுள்ள கூடல் அழகரின் திருக்கோயிலைக் குறிப்பது. கோயில் சிறியதாக இருப்பினும் மிக அழகானது. இங்கு எம்பெருமான் வடக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். எம்பெருமானின் திருநாமம் **அழகிய மண வாளன்;** தாயார் **உறையூர் வல்லி, வாசவல்லி** என்ற திரு நாமங்களால் வழங்கப்பெறுகின்றார். அழகிய மணவாளர் அரங்க நாதன் உறையூர் வல்லி நாச்சியரை மணந்த இடமாதலால் இத்திருத்தலம் '**நாச்சியார் கோயில்**' என்ற திருநாமம் பெற்றுப் பொது மக்கள் வாக்கில் வழங்கப்பெறுகின்றது. சேர்ந்து சேவை சாதிக்கும் இருவரையும் மனமாரச் சேவிக்கின்றோம். இத்திருக் கோயிலில் உற்சவ மூர்த்தி இல்லை.

திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்குவர அதனை மிடற்றொலியிட்டு ஓதுகின்றோம்.

சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள்-உறப்போந்(து)
அறந்தையா நின்ற அரங்கா! திருவாழ்
உறந்தையா இக்குறைந்த(து) ஒது''[11]

(மறப்பு-மறதி; உறப்போந்து-எழுந்தருளியிருந்து; அறம் தையா நின்ற-அறத்தைப் பதியுமாறு செய்கின்ற; திரு-இலக்குமி; இங்கு-என் மனத்தில்; ஓது-கூறுக)

''திருப்பதிகளில் திருவுள்ள முவந்து வாழ்வதுபோல மிகவும் தண்ணியனான அடியேன் மனத்தில் வாழ்வது காரணம் பற்றாத நினது கடைக்கண் நோக்கால் வெள்ளம் கோத்து வரும் நின் கருணையே யாகும்'' என்கின்றார் அய்யங்கார்.

உறையூர் திருப்பாணாழ்வார் திருவவதரித்த திருத்தல மாகும். அவர் அரங்கநகர் அப்பன்மீது பத்துப் பாசுரங்களாக லமைந்த 'அமலனாதி பிரான்' என்ற சிறிய பிரபந்தத்தை

10. பெரி. திரு. 9.2:5.

11. நூற். திரு. அந். 2.

அருளியுள்ளார். யாழையே தெய்வமாகப் போற்றி வந்த பாணர் குலத்தில் தோன்றிய 'பாணர்விளக்கு' திருவரங்கப் பெருமானை இசைப் பயனாகவும் காண்கின்றார். இவர்தம் பாசுரங்களின் பெருமையை,

காண்பனவும் உரைப்பனவும்
    மற்றொன்(று) இன்றிக்
கண்ணனையே கண்டுரைத்த
    கடிய காதல்
பாண்பெருமாள் அருள்செய்த
    பாடல்பத்தும்
பழமறையின் பொருளென்று
    ' £µÄ ª ß PÒ [12]

என்று போற்றிப் புகழ்வர் வேதாந்த தேசிகர். திருவரங்கத்து அமுதனாரும்,

சீரிய நான்மறைச் செம்பொருள்
    செந்தமி ழால் அளித்த
பார்இய லும்புகழ்ப் பாண்பெரு
    மாள்.[13]

என்று பாண்பெருமாளின் வாக்கு நான்மறையின் செம் பொருளைச் செந்தமிழால் வெளியிடுகின்றது என்று போற்றிப் புகழ்வர். இச்செய்திகளை எல்லாம் அறிந்த நிலையில் மனநிறைவு பெற்ற வண்ணம் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

12. தே. பி. *-132.*

13. இராமா நூற் *- 11.*

3. கரம்பனூர் உத்தமன்

வைணவ தத்துவங்களாகிய சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக இருக்கும் நிலையை 'சரீரசரீரி' பாவனை (உடல்-உயிர் உறவு) என்று குறிப்பிடுவர் மெய்விளக்க இயலார். இறைவனது இந்த இருப்பை 'உடல் மிசை உயிர் எனக் கரந்துளன்'[1] என்று நம்மாழ்வார் குறிப்பிடுவார்.

திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலும் சற்றுச் சேய்மையிலும் உள்ள திருப்பதிகளைச் சேவிக்கும் எண்ணத்துடன் திருச்சி **மாயவரம் தங்கும் விடுதியில்** தங்கியிருக்கும் நம் மனத்தில் மேற்குறிப்பிட்ட தத்துவம் குமிழியிடத் தொடங்குகின்றது. நம்மை ஆழ்ந்து சிந்திக்கவும் வைக்கின்றது. திருச்சியிலிருந்து நகரப் பேருந்து மூலம் **கரம்பனூர்** என்ற **உத்தமர் கோயில்** என்ற திவ்விய தேசர்தை நோக்கிப் புறப்படுகின்றோம். கதம்ப முனிவருக்கு எம்பெருமான் நேர் காட்சி தந்த திருத்தலமானது பற்றிக் கரம்பனூர் என்று திருநாமம் பெற்றது. **கதம்பனூர்** என்ற பெயர் **கரம்பனூர்** என்று மருவி விட்டது போலும். இன்று **உத்தமர் கோயில்** என்ற திருப்பெயரே பெருவழக்கிலுள்ளது. இத்திருத்தலம் திருச்சி நகரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து (மீட்டர் அகலவழி) வடதிசையில் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருவரங்க நிலையத்திலிருந்து (மீட்டர் அகலவழி) மூன்றரை கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. உத்தமர் கோயில் என்ற இருப்பூர்தி நிலையமும் உள்ளது. திருவரங்கத்திலிருந்து இருப்பூர்தி மூலம் இங்கு வரலாம். இந்தத் திருத்தலம் திருச்சி-சேலம் பெருஞ்சாலையிலும் உள்ளது. ஆனால் இவ்வூருக்கு அடிக்கடி நகரப்-பேருந்து வசதிகள் இருப்பதால் நாம் இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றோம்.

பேருந்தில் வரும்போதே நம்மனம் மேற்குறிப்பிட்ட வைணவ தத்துவத்தில் ஆழங்கால் படுகின்றது. **'உடல் மிசை உயிரெனக் கரந்துளன்'** என்ற ஆழ்வார் வாக்கினைச் சிந்திக்

1. திருவாய். 1.1.12.

கின்றோம். உயிர் உடம்பினுள் இருந்து அதனைத் தரிக்கச் செய்கின்றது. உயிரின்றேல் உடல் வீழ்ந்து விடுதல் கண்கூடு. மேலும், உயிர்தான் உடலை இயக்குகின்றது. உயிர் உடலுக்குத் தலைவனாக உள்ளது. அங்ஙனமே இறைவன் எல்லாப் பொருள்களுள்ளும் இருந்து அவற்றைத் தரிக்கச் செய்து அவற்றைத் தன் விருப்பம்போல் நடத்தி அவற்றிற்குத் தலைவனாக இருக்கின்றான். ஆயினும், உடம்பினுள் உயிர் இருப்பதற்கும், எல்லாப்பொருள்களினுள் இறைவன் இருப்ப தற்கும் வேறுபாடு உண்டு. உயிர் அணு அளவினதாய் உடம்பி னுள் ஓரிடத்திலிருந்து தன் ஞானத்தால் (தர்மபூதஞானம்) உடல்முழுவதும் வியாபித்து இவ்வுடலைப் பற்றிய நிகழ்ச்சிகளை உணர்த்துகின்றது. இறைவன் இங்ஙனமின்றி ஒவ்வொரு பொருளுள்ளும் முழுவதும் தன் சொரூபத்துடன் வியாபித் துள்ளான். அன்றியும் உடலினுள், உயிர் இருப்பதற்கும் உடல் உயிர் ஆகிய இரண்டினுள் இறைவன் இருப்பதற்கும் மற்றொரு வேறுபாடும் உண்டு. உயிர் உடலினுள் இருக்கும் போது அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வுகள் (விகாரங்கள்) உயிருக்கு உண்டாவதில்லை. ஆனால், அவ்வுடலைப்பற்றிய இன்பதுன்ப உணர்ச்சிகள், அறிவின் சுருக்கம்பெருக்கம் ஆகியவை உயிருக்கு உண்டு. உடலின்மீது தண்ணிய காற்று வீசுங்கால் இன்புறுதலும், தீ சுடுங்ககால் துன்புறுதலும் உடலினுள் இருக்கும் உயிருக்கு நேரிடுகின்றன. இனி குழவிப் பருவத்தில் அதனுள் இருக்கும் உயிரின் அறிவு சுருங்கிய நிலையிலிருந்து பின்பு வளர்ச்சியுறுதலைக் காண்கின்றோம். மற்றும் மக்கள் உடம்பினுள் உள்ள உயிர் ஐம்பொறி அறிவும் உடையதாக உள்ளது. அவ்வுயிரே மரம், எறும்பு முதலிய உடலில் புகுந்தால் ஐம்பொறியறிவுமின்றிச் சில குறையவும் பெறுகின்றன. இனி உயிர் பரு உடலைப் பெறாத நிலையில் அறிவு சுருங்கி இருத் தலும், பரு உடலைப் பெற்ற நிலையில் அறிவு விரிந்திருத் தலும் உண்டு. இங்ஙனமாக உடலைப்பற்றி நிற்கும் உயிர் இவ்வுடலுக் கேற்ப இன்பதுன்ப உணர்ச்சிகளும், அறிவின் சுருக்கமும் பெருக் கமும் அடைதல் தெளிவாகும். ஆனால், உடல் உயிர் இவ்விரண் டினுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை இவ்வேறுபாடுகள் சிறிதும் அடைவதில்லை. இக்கருத்தினை ஆழ்வார்,

"புலனொடு புலன் அலன்"[2]

2. *திருவாய் - 1.1:3.*

எனச் சுருக்கமாக உரைத்துள்ளார். இதனையே பிறிதோரிடத்தில்

'யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயம் தோறும்
தோய்வு இலன்; புலன்ஐந் துக்கும்
சொலாப்படான்; உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்று இலாத
பாவனை அதனைக் கூடில்
அவனையும் கூட லாமே''[3]

(சமயம்-அவத்தை, விகாரம்; ஆவி-உடல் (ஆகு பெயர்); உயிர் - பரமான்மா)

என்று விரிவாகவும் வெளியிட்டுள்ளார். உயர்திணை அஃறிணை யாகிய எல்லாப் பொருளும் இறைவன் கலந்து நின்று அவற்றின் அவத்தைகள் தன்னைத் தொடராதபடி இருக்கின்றான். உடலிலுள்ள உயிர் அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வு நரை திரை முதலிய விகாரங்களை அடைவதில்லை என்பதை நாம் உணர்வோமாயின், அவ்வுடல் உயிர் இரண்டின் விகாரங்களும் இறைவனை அடைவதில்லை என்பதையும் உணரலாம் என்பது இதற்கு இராமாநுசர் அருளிய விளக்கம் ஆகும்.[4]

இந்தச் சிந்தனையுடன் நாம் உத்தமர் கோயிலை வந்தடை கின்றோம். இத்திருத்தல எம்பெருமானைத் திருமங்கை யாழ்வார் மட்டிலுமே மங்காளசாசனம் செய்துள்ளார். திருவரங்கப் பெரு மானை மங்களாசாசனம் செய்யும்போது திருப்பேர்நகர், திருக் குறுங்குடி, திருத்தண்கால் எம்பெருமான்களுடன் கரம்பனூர் உத்தமனையும் சேர்த்து மங்களாசாசனம் செய்கின்றார்.

'பேரானை குறுங்குடிஎம்
பெருமானை திருத்தண்கால்
ஊரானை கரம்பனூர்
உத்தமனை''[5]

என்பது பாசுரப் பகுதி. உத்தமன் திருக்கோயில் கொண்டுள்ள இடம் உத்தமர் கோயில் என்ற திருநாமம் பெற்றது என்பதனை யும் அறிகின்றோம்.

3. மேலது - 3.4:10.
4. ஈட்டின் தமிழாக்கம் திருவாய். 3.4:10 இன் உரை காண்க.
5. பெரி. திரு. 5.6:2

திருக்கோயிலில் வந்தடைந்த நிலையில் நேராகச் சந்நிதி சென்று கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு சயனத் திருக்கோலத்தில் (புயங்க சயனம்) சேவை சாதிக்கும் **புருடோத்த மனை** வணங்குகின்றோம். தாயாரின் திருநாமம் **பூர்வதேவி** என்பது. இவரையும் வணங்கி இவருடைய திருவருளைப் பெறுகின்றோம். இங்கு மும்மூர்த்தி வழிபாடு நடைபெறுகின்றது. திருக்கோயிலின் மேற்குச் சந்நிதியில் சிவபெருமான் சேவை சாதிக்கின்றார். வேறோர் இடத்தில் நான்முகனும் இடம் பெறு கின்றான். இவர்களைத் தவிர இத்திருக்கோயிலில் வேணு கோபாலன், இராமர், வரதராசப் பெருமாள், புருடோத்தமன், பூர்ணவல்லித் தாயார், அநுமன், சனி பகவான், தசரத லிங்கம் பிட்சாடண் மூர்த்தி, சவுந்திர பார்வதி, நடராசர், நான்முகன், சரசுவதி ஆகிய கடவுளர்களும் காட்சி தருகின்றனர். ஆழ்வார் பெருமக்களுள் திருமங்கை மன்னன், நம்மாழ்வார், குலசேகராழ் வார் ஆகியோரும், ஆசார்யர்களுள் இராமநுசரும் மணவாள மாமுனிகளும் இடம்பெறுகின்றனர்.

கதம்பமுனிவர் பரப்பிரம்மத்தைக் காண இங்கு நெடுங் காலம் தவம் புரிந்தார். சிவபெருமானும், நாராயணனும் முனி வருக்கு விசுவரூப தரிசனம் அருளினர். ஆகவே, இத்திருத்தலம், '**கதம்பவனம்**' என்ற பெயர் பெற்றது. இம்முனிவரைத் தவிர மார்க்கண்டேயர், சனகர், சதாநந்தர், சனத்குமாரர், திக்குப் பாலகர்கள், கருடன் ஆகியோரும் தவம் புரிந்த இடமாகும் இக் '**கதம்ப வனம்**'.

இந்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்கு வர அதனை ஓதுகின்றோம்.

> ''சிலமா தவம்செய்தும் தீவேள்வி வேட்டும்
> பலமா நதியிற் படிந்தும் - உலகில்
> பரம்பரநூல் சுற்றுப் பயனில்லை நெஞ்சே!
> கரம்பனூர் உத்தமன்பேர் கல்''[6]

(மாதவம் - பெருந்தவம்; வேட்டும் - வேள்விகள் செய்தும்; மாநதி - சிறந்த நதி; பரம்பர - விரிவாக; கல் - பலதரம் கூறு)

என்பது பாசுரம். ''பகவானை அடைவதற்கு விரோதியான உடலுறவினை அறுத்துத் தள்ளி எம்பெருமானை அடைய

6. நூற். திருப். அந்-5.

வேண்டும் என்ற கருத்தால் அரும்பெரும் தவம் செய்தல், பெரு வேள்விகள் செய்தல், சிறந்த நதிகளில் நீராடல், விரிவாகச் சாத்திரங்களைப் பயில்தல் ஆகிய இவற்றால் யாதொரு பயனும் இல்லை. கரம்பனூரில் எழுந்தருளியிருக்கும் புருடோத்தமன் திருநாமத்தைப் பலதரம் கூறுவாயாக'' என்று தம் நெஞ்சிற்கு உபதேசம் செய்கின்றார் அய்யங்கார்.

உத்தமர் கோயிலுக்கு நல்ல வருவாய் உண்டு. ஆவணியிலும் சித்திரையிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இட வசதி, நீர் வசதி, போக்குவரவு வசதிகள், பிற வசதிகள் நன்கு இருப்பதால் சிக்கனமாகவும், பெருமையாகவும் திருமணங்கள் நடைபெறுவதற்குச் சிறந்த இடமாகத் திகழ்கின்றது உத்தமர் கோயில்.

இச்செய்திகளையெல்லாம் அறிந்த நிலையில் **திருவெள்ளறை** என்ற திருத்தலத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

* * *

4. திருவெள்ளறை அஞ்சன வண்ணன்

'உடல் மிசை உயிர் எனக் கரந்துளன்'[1] என்பது சரீர-சரீரிபாவனையைக் காட்டும் நம்மாழ்வாரின் திருவாக்கு. உடலினுள் இருக்கும் உயிருக்குச் சில வேறுபாடுகள் உண்டா வதற்கும், உடல் உயிர் இவ்விரண்டினுள் இருக்கும் இறை வனுக்கும் யாதொரு வேறுபாடும் உண்டாகாமைக்கும் காரணம் என்ன? ஆன்மா உடலில் கர்மம் அடியாகப் பிரவேசிக்கின்றது. இறைவன் உடல், உயிர் இவற்றுனுள் திருவருள் காரணமாகப் பிரவேசிக்கின்றான். ஆகவே வினைத் தொடர்பு உண்மையால் அதன் பயனை அடைகின்றது உயிர். அதனால் உயிருக்குச் சில வேறுபாடுகள் உண்டாகின்றன. வினைத் தொடர்பு இன்மையால் இறைவன் ஒருவித வேறுபாடும் எய்துவது இல்லை. இதனை ஈட்டாசிரியர்[2] ஓர் அருமையான எடுத்துக் காட்டால் விளக்கு கின்றார். பிறருக்குத் தீங்கிழைத்த ஒருவன் அதன் காரணமாக ஒறுக்கப்பெற்றுச் சிறையில் இருக்கின்றான். சிறைச்சாலைச் செயல்கள் சரிவர நடைபெறுகின்றனவா என்பதைக் காண்பதற்கு அரசன் சிறையுள் புகுகின்றான். அதே நேரத்தில் தீங்கிழைத் தவன், அரசன் ஆகிய இருவரும் சிறைச்சாலையினுள் உள்ளனரா யினும், இருவர் மன நிலையும் ஒன்றாகாது. தீங்கிழைத்தவன் மனம் துன்புறுகின்றது. நாடாளும் அரசனின் மனம் அருளுதலை உடையவனாக உள்ளது. தீங்கிழைத்தவன் அநுபவிக்கும் சிறைத் துன்பம் அரசனுக்கு இல்லை. உயிரின் நிலை தீங்கிழைத் தவன் நிலையினையும்இறைவனின் நிலை நாடாளும் மன் னனின் நிலையையும் ஒத்துள்ளன. இப்பொழுது காரணம் தெளிவாகின்றது அல்லவா?

இந்தச் சிந்தனையுடன் கரம்பனூரிலிருந்து திருவெள் ளறையை வந்து அடைகின்றோம் பேருந்து மூலம். இது திருச்சி - துறையூர் நெடுஞ்சாலையில் உள்ளது. சாலையிலிருந்து திருவெள்ளறைக்கு ஒரு கிளைச் சாலை உள்ளது. கைகாட்டியும்

1. திருவாய். 1.1.2
2. ஈட்டின் உரை காண்க

வழி காட்டி நிற்கின்றது. பெருஞ்சாலையிலிருந்து பிரியும் கிளைச் சாலை வழியாக நடந்து சென்றால் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள திருவெள்ளறையை வந்து சேரலாம். ஊர் மிகச் சிறிய ஊர். எந்தவித வசதிகளும் இல்லாதது. நெடுஞ்சாலையிலும் ஊரிலும் பெயரளவில் சிற்றுண்டி விடுதிகள் உள்ளன. திருக்கோயில் சுமார் 100 அடி உயரமுள்ள ஒரு குன்றின்மீது உள்ளது. வெள்ளறை-வெண்மையான பாறைகளாலியன்ற மலை (அறை-பாறை). மலையின் திருநாமமே ஊரின் திருநாமமாயிற்று. இத்திருத்தலத்து எம்பெருமானைப் பெரியாழ்வாரும்[3] திருமங்கையாழ்வாரும்[4] மங்களாசாசனம் செய்துள்ளனர். திருக்கோயில் மண்டபத்தின் ஓரிடத்தில் அமர்ந்து ஆழ்வார்களின் பாசுரங்களைச் சிந்திக்கின்றோம். இருவர் பாசுரங்களும் வெள்ளறையில் நின்ற கோலத்தையே திரும்பத் திரும்பக் கூறுகின்றன.

திருமங்கையாழ்வாரின் பாசுரங்களின் முன்னிரண்டு அடிகளில் தமது வேண்டுகோளும், பின்னிரண்டடிகளில் ஊர்ச் சூழலும் குறிப்பிடப்பெறுகின்றன. திருவெள்ளறை யின் சூழல் எப்படிப்பட்டது? தென்றல் மாந்தோப்புகளினூடே புகுகின்றது. சோலைகளிலுள்ள மல்லிகை முல்லை மொட்டுகளை மலரச் செய்து நறுமணத்தைப் பரப்புகின்றது (1). குருக்கத்தி மலர்களில் அணைந்து செல்லும் மெல்லிளங் காற்று வீதிகள் தோறும் நறுமணம் பரப்புகின்றது (2). வரால் மீன்கள் துள்ளி விளையாடப் பெற்றவையும் தாமரை மலர்களில் மணம் வீசப் பெற்றவையுமான தடாகங்களால் சூழப்பெற்றது இவ்வூர்(3). மாஞ்சோலைகளில் போய்ப் புகுந்து அவற்றின் தளிர்களைக் கோதியதனால் வாய் துவர்ப்படைந்த பெண்குயில்கள் பலாப் பழங்களின் மதுவை உண்டு அத்துவர்ப்பை மாற்றுகின்றன (4). பெரிய காட்டு முல்லைகள் கரும்புகளின் மேலேறிப் படர்ந்து வெண்ணிறப் பூக்களை மலர்விக்கின்றன. அம்மலர்களின்மீது வண்டுகள் மொய்க்கும்போது அவற்றின் வாய்களில் தேன் பெருகுகின்றது (5). ஆணும், பெண்ணுமாய்ப் பூவிலே படுத்திருந்த வண்டுகளினிடையே ஊடல் உண்டாக, உடனே ஆண்வண்டு பேடைக்குத் தெரியாத ஓரிடத்தில் மறைந்திருக்க எண்ணி மகளிரின் கூந்தலிலே மறைந்திருக்கைக்காக மதி மண்டலத்தில் படிந்திருக்கும் சிகரங்களையுடைய மாளிகைகளில்

3. பெரியாழ். திரு. 1.5.8:2.8. (பதிகம்)

4. திருமங்கையாழ்வார் 5.3. (பதிகம்) ; 10.1.4

சென்று அணைகின்றன (6). தாமரைப்பூக்களிலுள்ள தேனினைப் பருகின மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக வண்டுகள் இனிய பாக்களைப் பாடுகின்றன (7). மாமரங்களிலும் தாழை மரங்களிலும் மாறாமல் பூத்திருக்கும் மலர்களையுடைய சோலைகளில் சுரும்பு என்னும் ஒருவித சாதி வண்டுகள் 'தென்ன தென்ன' வென இசைபாடுகின்றன (8). ஓங்கி வளர்ந்த அசோக மரத்தின் சிவந்த பூக்களின்மீது வண்டுகள் சஞ்சரிக்க அதனைக் கண்ட குயில்கள் 'அந்தோ? இவ்வண்டுகள் நெருப்பில் அகப்பட்டனவே' என்று கூவுகின்றன (9). இத்தகைய சூழலை யுடைய திருவெள்ளறை '**மஞ்சுலாமணி மாடங்கள்**' சூழ்ந்தது (10).

இந்த அழகிய சூழ்நிலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் யார்? பெரிய மழு ஏந்தி இருபத்தொரு தலைமுறையில் க்ஷத்திரியப் பூண்டுகள் ஒழியமாறு செய்த பரசுராமன்(1); நான் மறைகளைத் தோற்று வருந்தின நான்முகனுக்குக் கருணைக் கூர்ந்து ஹயக்ரீவாவதாரம் செய்து இத்திருமறைகளை மீட்டுக் கொண்டுத்தவன்(2); ஏழுலகங்களையும் ஒருங்கே நலிந்து கொண்டிருந்த இரணியன் மார்பு இரு கூறாகும்படி தன் திருக்கை நகங்களாலேயே பிளந்த பெருமான் (3); பாரதப் போரில் எதிரிகளான அரசர்களை மாளச் செய்து பஞ்சபாண்டவர்கட்கு அரசினைப் பெற்றளித்தவன்(4); உடற் பண்பாலும் உயிர்ப் பண்பாலும் சிறந்தவளான பூமிப் பிராட்டியார் பிரளயப் பெரு வெள்ளத்தில்புக்கு அழுந்தினபோது கோலவராக வடிவு கொண்டு அண்டபித்தியில் ஒட்டிக் கிடந்த பூமியைத் தோண்டி எடுத்துத் தன் கோட்டிடை வைத்தருளிய கோமான்(5); தேவர்கட்கு அமுதளிப்பான் வேண்டி ஆமையாகத் திருவவதரித்த ஆதிமூலன்(6); இராவணனின் பத்துத் தலைகளும் அற்று விழும்படி கோலவில்லினை வளைத்து அம்பெய்த கோமகன்(7); முன் பொருகால் இவ்வுலகங்களெல்லாம் அறிவுகெட்டு அஞ்ஞான இருளில் மூழ்கியிருந்த பொழுது அன்னமாகி அருமறை பயந்த வள்ளல்(8); மாவலி யின் வேள்வி பூமியில் வாமன மாணியாக எழுந்தருளி அவனிடம் மூவடிமண் இரந்து பெற்று அப்பொழுதே அகல் இடம் முழுவதையும் சுவாதீனப்படுத்திக் கொண்ட பரமன்(9); இங்ஙனம் பெருமைகள் எல்லாம் ஒருங்கே கொண்ட அஞ்சன வண்ணன் திருவெள்ளறையில் கோயில் கொண்டுள்ளான். அந்தப் பெருமானை நிற்பணிந்தெழுவேன்; எனக்கு அருள் புரியே' என்று வேண்டுகின்றார் திருமங்கையாழ்வார்.

பெரியாழ்வார் திருவெள்ளறையில் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் குழந்தைக் கண்ணனாகப் பாவித்து யசோதைப் பிராட்டி அக்குழந்தையை நீராட்டிக் குழல் வாரிப் பூச்சூட்டின பின்பு அவனுக்குப் பிறர் கண்ணெச்சில் வாராதபடி காப்பிடக் கருதியவள். இவனை அந்தி வேளையில் காப்பிட்ட படியை ஆழ்வாரும் அநுபவிக்க எண்ணி தம்மை அப்பிராட்டியாகப் பாவித்து அவள் பேச்சாலே இவனைக் காப்பிட அழைத்து இனியராகின்றார். ''இந்திரன் நான்முகன் சிவன் மற்றுமுள்ள தேவர்கள் மந்திரமாமலர் கொண்டு மறைந்து நிற்கின்றனர்; இதுவே அந்திவேளையாகும் (1); நான் உன்னைக் கூவி நிற்பதால் பசுக்களெல்லாம் கன்றுகள் இருக்குமிடத்தில் வந்து கறப்பாரின்றிக் கத்துகின்றன. அந்தி வேளையில் நாற்சந்தியில் நில்லாதே (2); மகளிர் அட்ட சிறு சோற்றையும் கட்டின மணல்வீட்டையும் அழித்திட்டபோது உன்னை அதட்டினேன்; இப்போது ஒன்றும் செய்யேன் (3); நீ கண்ணில் மண்ணைத் தூவி உதைத்தாய் என்று எண்ணற்ற பிள்ளைகள் முறையிடுகின்றார்கள்; ஆதலால் நீ அங்குப் போகாமல் இங்கு வா (4); இவ்வூரில் தீம்பு செய்யும் பிள்ளைகள் எண்ணற்றவர்கள்; அவர்கள் செய்யும் தீம்புகளை உன்மேலேற்றிச் சொல்லுகின்றனர்; ஆதலால் அவர்களிடம் செல்லாமல் இங்கே வா (5); கம்சன் உன்னைக் கொல்வதற்குக் கருநிறசெம்மயிர்ப் பூதனையை அனுப்பிய செய்தியை எல்லோரும்அறிவர்; அவன் வேறு யாரையாவது உன்மீது ஏவக் கூடும்; ஆதலால் நீ அங்கு நிற்பதற்கு அஞ்சுகின்றேன் (6); பார்த்தால் சிறுவன் போலுள்ளாய்; நீ செய்யும் செயலோ மனிதர்களால் செய்ய முடியாதவை; உனது உண்மையான சொரூபத்தை என்னால் அறியக் கூடவில்லை இப்போது படுத்து உறங்கும் நேரம் (7); செல்வனே; நீ இருக்கிற இடம் கண்டார்க்கு நடுக்கத்தை விளைவிக்க வல்ல துர்க்கையின் இருப்பிடமாகும்; ஆகவே, நீ அங்கு நில்லாமல் விரைந்தோடி வா (8); நீ நாற்சந்தியில் செருக்குடன் விளையாடித் திரிதல் கூடாது; அது துட்ட தேவதைகள் வசிக்கும் இடம்; நான் சொல்வதை சிலகாலமாவது கேள் (9); உனக்குக் காப்பிட அந்திவிளக்கு ஏற்றுகின்றேன். நீ அவ்விடத்தை விட்டுக் கடுக வருவாயாக'' என்று வேண்டுகின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் ஆழ்வார்களின் அநுபவம் பெற்ற நிலையில் இறைவன் சந்நிதிக்கு வருகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும்

புருடோத்தமனை வணங்குகின்றோம். **பங்கயச் செல்வி, செண்பகவல்லி** என்பன தாயாரின் திருநாமங்கள். இவரை வணங்கிஇவர்தம் ஆசியையும் பெறுகின்றோம். இறைவன் சந்நிதியில் ஆழ்வார்களின் திருப்பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

எம்பெருமானார் மண்டபத்தில் 'குறிப்பிட்ட' ஒரு தூண் உள்ளது. அதன் முன் நின்று ஒலி எழுப்பினால் அவ்வொலி அந்தத் தூண் உள்ள திருச்சுற்றில் (பிராகாரம்) மும்முறை சுழன்று வந்து நம் காதில் எதிரொலிக்கும். முன்பு இந்த இடத்தில்தான் பிரபந்த சேவை செய்யப்பெற்றதாக செவி வழிச்செய்தியால் அறிகின்றோம். இஃது அக்காலத்தில் விளங்கிய பொறியியல் நுட்பத்தினை வியக்கத்தக்க முறையில் எடுத்துக் காட்டுகின்றது. நாமும் இதனைச் சோதித்து நம்மை மறக்கின்றோம்.

இந்நிலையில் திவ்வியகவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

> **''கல்லிருந்தான் தந்தை கமலத்தோன்; அக்கமலத்**
> **தில்லிருந்தான் தந்தை அரங்கேச னென்றே-தொல்லைமறை**
> **உள்ளறையா நின்றமையால் உள்ளமே; கள்ளமின்றி**
> **வெள்ளறையான் தோளே விரும்பு''**[5]

> (கல்-கைலாயமலை; கமலத்தோன்-தாமரையில் தோன்றிய நான்முகன்; அரங்கேசன்-திருவரங்கநாதன்; தொல்லை மறை-பழமையான வேதம்; கள்ளம்-கபடம்; தாள்-திருவடிகள்)

''நான்முகன் சிவபெருமான் இவர்கட்கும் காரணமென்று திருமறைகளில் சிறப்பித்துக் கூறப்பெறும் தலைமை பெற்றுள்ள எம்பெருமானின் திருவடிகளை விரும்பிச் சரணம் அடைவாயாக'' என்று தம் நெஞ்சிற்கு உபதேசம் செய்கின்றார் அய்யங்கார்.

இத்திருத்தலம் **உய்யக் கொண்டார், எங்களாழ்வான்** இவர்களின் பிறப்பிடம். வேதாந்த தேசிகரின் '**ஹம்ச சந்தேசம்**' என்ற தூதுப் பிரபந்தத்தில் இத்திருத்தலம் குறிப்பிடப் பெறுகின்றது. இவற்றை அறிந்த நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

5. நூற். திரு. அந்-6

5.அன்பில் திருவடி அழகிய நம்பி

உலகில் ஒரு பொருளைச் செய்து முடித்தற்கு முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்று காரணங்கள் அமையும் என்பதை நாம் அறிவோம். இறைவன் உலகைப் படைப்பதற்கும் மூன்று காரணங்கள் வேண்டும். இறைவனே மூன்று காரணங்களும் ஆகின்றான் என்பது வைணவ சமயக் கொள்கை. இக்கொள்கையை **"எல்லாப் பொருட்கும் வித்தாய் முதலிற் சிதையாமே"**[1] என்ற நம்மாழ்வாரின் பாசுரத் தொடர் விளக்கும். இறைவன் முதற் காரணம் என்று சொல்வதில் ஒரு குறை தட்டுப்படும். குடத்திற்கு மண் முதற் காரணம். மண் குடமாக மாறினால் பின் அங்கு மண் இராது. அதுபோல இறைவன் முதற் காரணமாகி உலகப் பொருளாக மாறினால் பின் இறைவன் என வேறு பொருள் இருத்தல் இயலாது அல்லவா? இக்குறைபாட்டை விலக்குவதற் பொருட்டே **"வித்தாய் முதலிற் சிதையாமே"** என்று குறிப்பிட்டார் ஆழவார். இதைத் தெளிவாக விளக்குதல் இன்றியமையாதது. இவ்வுலகப் பெருள்கட்கு அவற்றின் நுண்ணிய நிலை முதற்காரணம். பருப்பொருளாக மாறிய நிலையே காரியம். இறைவன் நுண்ணிய நிலையிலுள்ள சித்து அசித்துகளுள்ளேயும் அந்தர்யாமியாக உள்ளான். பருப்பொரு ளாக உள்ள நிலையிலும் அந்தர்யாமியாக உள்ளான். நுண்மை யான சித்து அசித்துகளில் இறைவன் அந்தர்யாமியாக இருக்கும் நிலை முதற் காரண நிலையாகும். பருப்பொருளாகவுள்ள சித்து அசித்துகளில் இறைவன் அந்தர்யாமியாகவுள்ள நிலையே காரிய நிலையாகும். அதனால், இறைவன் முதற்காரணமாகவுள்ள நிலையிலும், காரியமாகவுள்ள நிலையிலும் சிறிதும் வேறுபடுவ தில்லை. இக்கருத்தை ஆழ்வார் பாடலிலுள்ள **"வித்தாய் முதலிற் சிதையாமே"** என்ற தொடர் அழகாக விளக்குகின்றது. உலகத்துப் பொருள்கள் போலன்றி இறைவன் தன் நிலையில் சிறிதும் சிதைவின்றி இருந்து கொண்டே எல்லாப் பொருள்கட்கும் வித்தாக உள்ளனன் (முதற் காரணமாகின்றான்) என்பது

1. திருவாய். 1.5.3

கருத்தாகும். இங்ஙனம் இருத்தல் அவனு டைய ஆச்சரிய சக்தியாகும். இதனையே திவ்விய கவி பிள்ளைப் பெருமாளய் யங்கார்.

"சின்னூல் பலபலவாயால் இழைத்துச்
சிலம்பி பின்னும்
அந்நூல் அருந்தி விடுவதுபோல்
அரங்கர் அண்டம்
பன்னூறு கோடி படைத்தஅவை
யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர்போத
மனம் மகிழ்ந்தே"[2]

(சின்னூல் - மெல்லிய நூல்; இழைத்து - நூற்று; சிலம்பி - சிலந்திப் பூச்சி; மன்ஊழி தன்னில் - மகா பிரளயத்தில்; போத - மிகவும்; பழ படியே- முன்போலவே)

என்ற மிக அழகான உவமை கலந்த பாடலாக விளக்குவர். சிறிய சிலந்திப் பூச்சி தன்னிடத்திலிருந்து நூலை உண்டாக்கிப் பின் அதனை விழுங்குகின்றது. நூலை உண்டாக்குவதற்கு முதற் காரணமான சிலந்திப்பூச்சி தன் நிலையில் அழிவதில்லை. ஒரு சிறிய சிலந்திப்பூச்சிக்கு இச்செயல்கூடுமேல், தன் நிலையில் சிதைவின்றித் தான் உலகிற்கு முதற் காரணமாதல் எல்லாம் வல்ல இறைவனுக்கு அரியதாகுமோ? "ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் சர்வசக்திக்குக் கூடா தொழியாதிறே"[3] என்ற தத்துவத்திரய வாக்கியமும் ஈண்டு சிந்திக்கத் தக்கதாகும்.

இந்தச் சிந்தனைகளுடன் அன்பில் என்ற திருத்தலத்திற்குப் பயணப்படச் சித்தமாகின்றோம். திருச்சி மாயவரம் விடுதியிலிருந்து பேருந்துமூலம் அன்பிலுக்கு வருகின்றோம். இத்திருத் தலம் தென்னிந்திய இருப்பூர்தி திருச்சி-விழுப்புரம் குறுக்குப் பாதையிலுள்ள இலால்குடி நிலையத்திற்குக் கிழக்கே எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து பல இடங்கட்குப் பேருந்து செல்லும் வழியிலும் உள்ளது. இலால்குடி நிலையத்திலிருந்து அன்பிலுக்குப் போகக் குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள், பேருந்துகள் கிடைக்கும். அன்பில் ஒரு சிறிய ஊர். சத்திரங்களும் உணவு விடுதிகளும் பிற வசதிகளும் இங்கு இல்லை. நேராகத் திருக்கோயிலுக்கு

2. திருவரங். மாலை, 18.

3. தத்துவத்திரயம்-ஈசுவரப்பிரகரணம்-சூத்திரம்,29

வருகின்றோம். திருக்கோயில் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ளது. திருமழிசை யாழ்வார் மட்டிலும் இத்திருக் கோயில் எம்பெருமானை ஒரே ஒரு பாசுரத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார். இத்திருத்தலத்து எம்பெருமானின் திருநாமம் **திருவடி அழகிய நம்பி** என்பது; தெற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சயனத் திருக்கோலத்தில் (புயங்க சயனம்) சேவை சாதிக்கின்றார். தாயார் **அழகியவல்லி நாச்சியார்** என்ற திருநாமத்துடன் வழங்கப் பெறுகின்றார். இவர்கள் இருவரையும் மனமாரச் சேவிக் கின்றோம். திருமழிசையார் பாசுரத்தையும் மிடற்றொலி கொண்டு ஓதுகின்றோம்.

''நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத்தணை யரங்கம் பேர்அன்பில்-நாகத்து
அணைப்பால் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன் ஆவான்''[4]

(நாகத்து அணை-பாம்புப் படுக்கை; வெஃகா-சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில்; திருவெவ்வுள் - திருவெள்ளூர் ; பேர்-திருப்பேர் நகர்; பால் கடல்-திருப்பாற் கடல்; அணைப்பார் - அன்பர்)

என்பது பாசுரம். இதில் ஏழு திருத்தலங்களுடன் அன்பில் என்ற திருத்தலத்தையும் சேர்த்து மங்களா சாசனம் செய்கின்றார். இவைபோக ஏனைய 101 தலங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அன்பர்கள் நெஞ்சில் புகுவதற்காகவே திருக்குடந்தை திருவெஃகா, திருவெவ்வுளூர், திருவரங்கம், திருப்பேர் நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய ஏழு தலங்களில் நாகத் தணையிலே கிடந்தருள்வது அன்பருடைய இதயத்தில் புகுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதேயாகும். எம்பெருமானுக்குப் பரமபதம், திருப்பாற் கடல், கோயில் (திருவரங்கம்), திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி வரதராசர் கோயில்) முதலிய உகந்தருளின இடங் களில்இருப்பதைக் காட்டிலும் மெய்யடியாருடைய இதயத் தாமரையில் வாழ்வதே பெரு விருப்பமாகும். இதற் காகவே சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு திவ்விய தேசங்களில் தங்கியுள்ளான். அன்பர்களின் நெஞ்சகத்தில்இடம் கிடைத்து விட்டால் திவ்விய தேச வாசத்தில் ஆதரம் மட்டமாய் இருக்கும். நம்மாழ்வாரும் இக்கருத்தினை,

4. நான். திருவந் - 36.

"கல்லும் கனைகடலும் வைகுந்தம் வான்நாடும்
புல்என்று ஒழிந்தனகொல் ஏபாவம் வெல்ல
நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான்
அடியேனது உள்ளத்து அகம்"[5]

(கல் - திருவேங்கடமலை; கணை - ஒலிக்கும்; கடல் - திருப்பாற்கடல்; வான் நாடும் - வான் உலகம்; வெல்ல நெடியான் - மிக உயர்ந்தவன்)

என்ற பாசுரத்தில் அருளிச் செய்துள்ளதை சிந்தித்துப் பார்க்கின்றோம்.

இந்நிலையில் பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் திருப்பாசுரம் நம் நினைவிற்கு வர அதனையும் ஓதுகின்றோம்.

"போற்றிசெய ஓர்குடைக்கீழ்ப் பொன்நாடும் இந்நாடும்
நாற்றிசையும் ஆண்டாலும் நன்கில்லை-தோற்றமிலா
எந்தைஅன்பில் ஆதி இணைத்தா மரைஅடிக்கே
சிந்தையன்பு இலாதார் சிலர்"[6]

(போற்றி செய-வாழ்த்துக்கூற; நன்கு இல்லை-நன்மை உண்டாகாது; தோற்றம்-பிறப்பு; ஆதி-முழு முதற் கடவுள்; இணை -இரண்டு; சிந்தை-மனம்; அன்பு-பக்தி)

அழியாப் பேரின்பத்தைப் பெற்று உய்யுமாறு எம்பெருமானிடத்து பக்தி செய்வதைவிட்டு அழிந்தொழியும் தன்மையதாகிச் சிற்றின்பத்திற்கே இடமான இந்திரபதவி முதலிய சிறப்புகளை ஒருங்கே அடைந்து எல்லா உலகங்களையும் தனிச் செங்கோல் செலுத்தும் பெருமை பெற்றாலும், அது நற்கதி பெறுவதற்குக் காரணம் ஆகாததால் அதனால் யாதொரு பயனும் இல்லை என்பது திவ்விய கவி உணர்த்தும் குறிப்பு.

இத்திருக்கோயிலின் சுவரில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. இவையல்லாம் படியெடுக்கப்பெற்று விளக்கத்துடன் வெளியிடப்பெற்றுள்ளன. தேவையானவர்கள் தொல்பொருள் ஆய்வாளர்களால் வெளியிடப்பெற்றுள்ள நூல்களை நாடிப் பெறலாம். அடுத்து, திருப்பேர் நகர் என்ற திவ்விய தேசத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

5. பெரிய திருவந் - *68*
6. நூற். திருப். அந்-*4*

6. திருப்பேர் கிடக்கும் திரு நாரணன்

எம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் அந்தர்யாமித்துவம் ஒன்று. அந்தர்யாமித்துவவம் என்பது எம்பெருமான் சேதநர்களின் ஆன்மாவினுள்ளே தன் சொரூபத்தாலே வியாபித்து நிற்பது. இங்குச் சேதநரின் எல்லாச் செயல்கட்கும் ஏவுபவனாக இருப்பான் எம்பெருமான். புண்ணியத்தின் காரணத்தால் சுவர்க்கம் செல்வதற்கும், பாவத்தின் காரணமாக நரகத்தில் பிரவேசிப்பதற்கும், இரண்டின் காரணமாகக் கருக்குழியிலே புகுவதற்குமான எல்லா நிலைகளிலும் இராமடம் ஊட்டுவாரைப் போல்[1] சேதநரின் இதயத்தின் உள்ளே பதிந்து கிடந்து அவர்கட்கு எல்லாவகையிலும் துணையாய் நிற்கும் நிலையாகும் இது. சேதநர்க்குத் தியான ருசி[2] பிறக்கும்போது தியனத்திற்கு உரியவனாக இருப்பான். துன்பம் நேரிடுங்கால் காப்பவனாக இருப்பான். இந்நிலையில் எம்பெருமான் அழகே வடிவெடுத்தாற் போன்ற மங்களகரமான திருமேனியுடன் எல்லாவித ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவனாய் பெரிய பிராட்டியோடு கட்டைவிரல் அளவாக நம் இதயத் தாமரையில் வீற்றிருப்பான் என்று சாத்திரங்கள் பேசும். இந்நிலையை ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் பலபடியாகப் பேசுவர். விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார்,

> **"பனிக்கடலில் பள்ளி - கோளைப்**
> **பழகவிட்டு ஓடிவந்துஎன்**
> **மனக்கடலில் வாழவல்ல**
> **மாயமணாள நம்பீ"[3]**

(பள்ளிகோள்-பள்ளி கொள்ளல்)

1. மகன் ஒருவன் தன் தாயிடம் நேராகத் தனக்கு வேண்டு வனவற்றைப் பெறாமல் தன் அகந்தையினால் துன்புற்று உழலுங்கால், மகனைக் கைவிடுவதற்கு மனமில்லாத தாய் பிறர் அறியா வண்ணம் இரவில் அன்னம் இடும் சத்திரங்கட்குச் சென்று தன்முகம் காட்டாமல் மறைந்திருந்து அவனுக்கு அன்னம் இட்டு அவன் பசிப்பிணியை ஆற்றி அவனை உயிர்வாழச் செய்யும் அன்னை-இராமடம் ஊடுவார்.

2. ருசி-பாவச் செயல்களையோ புண்ணியச் செயல்களை யோ அறிந்தே செய்தற்குக் காரணமாயுள்ள சுவை.

3. பெரியாழ் திரு. 5.4:9.

என்று பேசுவர். இவரே பிறிதோரிடத்தில்,

"அரவத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்றபிரான்"[4]

(அரவம் - பாம்பு; அமளி - படுக்கை; அரவிந்தப் பாவை - பெரிய பிராட்டியார்; பரவை - கடல்; திரை - அலை)

என்று குறிப்பிடுவர்.

இந்த எண்ணங்களுடன் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள அன்பிலிலிருந்து ஆற்றைக் கடந்து அந்நதியின் தென் கரையிலுள்ள திருப்பேர் நகருக்கு வருகின்றோம். நாம் வந்தது கோடைக்காலத்து மே மாதமாதலால் மணலில் நடந்தே கடக்கின்றோம். மழைக்காலத்தில் காவிரியில் கரை கடந்த வெள்ளம்பெருக்கெடுக்கும்போது கொள்ளிடத்தில் நீரைத் திருப்பிவிடுவர். ஏனைய காலங்களில் நதியில் சிறிதளவு ஊற்று நீரே ஓடும். ஆற்றைக் கடக்குங்கால் சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவு நடக்க வேண்டும். திருச்சியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் கீழ் திசையில் உள்ளது இத் திருத்தலம். கல்லணைவரை பேருந்து வசதி உண்டு. அணையைத் தாண்டி வந்தால் கும்பகோணத்திலிருந்து திருவையாறு வழியாகக் கல்லணைக்கு வரும் பேருந்தில் சென்று இவ்வூரில் இறங்கலாம்.

இத்திருத்தலத்து எம்பெருமான் சேவை சாதிக்கும் திருக்கோயில் இருபது அடி உயரத்தில் அமைந்துள்ளது. திருமழிசையார் (ஒரு பாசுரம்), நம்மாழ்வார் (11 பாசுரங்கள்), பெரியாழ்வார் (3 பாசுரங்கள்), திருமங்கையாழ்வார் (22 பாசுரங்கள்) ஆகிய நான்கு ஆழ்வார்கள் இத்தலத்து எம் பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர். திருமழிசை யாழ் வார் பல தலங்களுடன் திருப்பேர் நகரின் பெயரையும் கூறி இவையெல்லாம் எம்பெருமான் அடியார்களின் மனத்தில் தங்குவதற்குரிய 'பாலாலயங்கள்' ஆகும் என்கிறார்.[5] பெரியாழ் வார் குழந்தைக் கண்ணனே திருப்பேர் நகரில் கோயில்

4. மேலது 5.2:10.
5. நான். திருவந். 36.

கொண்டுள்ளான் என்றும்,[6] கோட்டியூர், திருப்பேர் நகர் போன்ற இடங்களில் விளையாடுபவனும் குழந்தை கண்ணனே என்றும்,[7] பாலக்கிரீடைபுரியும் கண்ணனே திருப்பேர் நகரில்கிடக்கும் நாரணன் என்றும்[8] பாடிப் பகவதநுபவம் பெறுகின்றார்.

திருமங்கையாழ்வாரும் சாளக்கிராமத்திலிருப்பவனும்,[9] திருவரங்கத்து எம்பெருமானும்,[10] திருவழுந்தூர் ஆமருவி அப்பனும்,[11] திருப்பேர் நகர்ப் பெருமானே என்று முடிவு கட்டுகின்றார். பல திருப்பதிகளைக் கூறும் பதிகத்தில் திருப்பேர் நகரையும் சுட்டுகின்றார்,[12] இவற்றைத் தவிர ஒருமுழுப் பதிகத்தில் தென்திருப்பேர் நகர் எம்பெருமானை அநுபவித்து இனியராகின்றார். ஊரின் சூழலை 'செய் அலர் கமலம் ஓங்கும் தென்திருப்பேர்' (1), 'திங்கள் மாமுகில் அணவு செறி பொழில்' (2), 'தேனமர் பொழில்கள் சூழ்ந்த தென் திருப்பேர்' (4), 'சேலுகள் வயல் திருப்பேர்' (9)என்று பேசுகின்றார். ஊரைப் பற்றி 'பெருவரை மதிகள் சூழ்ந்து பெருநகர்' (3), 'திண்ணமா, மதிகள் சூழ்ந்த தென்திருப்பேர்' (7),'செம்பொனார் மதிள்கள் சூழ்ந்த தென்திருப்பேர்' என்று நகர் அமைப்பினைக் காட்டி, இப்படிப்பட்ட நகரில் 'நலக்கொள் நான்மறை வல்லார்கள்' (6) வாழ்வதையும் குறிப்பிடுகின்றார்.

அடுத்து, எம்பெருமானை ஆழ்வார் அனுபவிக்கும் விதம் அற்புதமானது. ஆழ்வார் கூறுவார்: திருவாழி, திருச்சங்குகளைக் கைகளில் உடையவன்; காளமாமுகில்வண்ணன்; தன்னுடைய சிறப்பியல்புகளையெல்லாம் தன் அடியார்கட்குக் காட்டிக் கொடுப்பவன்; தன் திருவடிகளைப் பணிபவர்கட்கு அடிமைத் தன்மையை அருள்பவன்; திருவனந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவன் (1); பிரளய காலத்தில் கடல் சூழ்ந்த உலகம் ஏழையும் உண்டு, பின்னர் உமிழ்ந்தவன் (2); நான்முகனைத் திருநாபிக் கமலத்தில் உண்டாக்கினவன்; தன் மார்பிலுள்ள வியர்வை நீரால் சிவனின் சாபத்தை தொலைத்து 'நீ முன்போல்

6. பெரியாழ் திரு 2.5:1
7. மேலது - 2.6:2.
8. மேலது - 2.9:5.
9. பெரி.திரு 1.5:4.
10. மேலது 5.6:2.
11. மேலது 7.6:9
12. மேலது 10.1.4:10.

உம்பருலகை ஆளக்கடவாய்' என்று விடை கொடுத்தவன் (3,4); 'வக்கரன் வாய்முன் கண்ட மாயனே' என்று வணங்கின தேவர்களின் வேண்டுகோட்கு இரங்கி நரசிம்மனாகி இரணியனின் உடலை நகங்களால் கிழித்துத் திருவுள்ளம் மகிழ்ந்தவன் (5); விலங்கலால் கடல் அடைத்து விளங்கிழை பொருட்டு வில்லால் இலங்கை மாநகர்க்கிறைவனின் இருபது புயங்களையும் துணித்தவீரன் (6); அளவு மீறி வெண்ணெய் அமுது செய்ததால் யசோதை பிராட்டி மத்தினால் புடைப்பதாக வெருட்டிக் கண்ணினுண் சிறுத்தாம்பினால் கட்டுவதற்கு இசைந்திருந்த கண்ணன் (7); நப்பின்னைப் பிராட்டியின் திருமேனியை அணைவதற்காக ஏழு எருதுகளைக் கொன்றொழித்தவன் (8); இத்தகைய எம்பெருமான் தன் இதயகமலத்தில் இடைவிடாது வீற்றிருப்பன். இவனது திருநாமங்களை நாள் தோறும் ஏத்தித் தாம் உய்ந்தமையை ஒரு தரத்திற்கு ஒன்பதுதரம் எடுத்துக்கூறி இனியராகின்றார் ஆழ்வார்.[13]

நம்மாழ்வார் திருப்பேர் நகர் எம்பெருமானை ஆரா அமுதாய் அநுபவிக்கும் திறன் சொல்லுந் தரமன்று.[14]

> "திருமாலிருஞ் சோலை
> மலைஎன்றேன், என்ன
> திருமால் வந்து என் நெஞ்சு
> நிறையப் புகுந்தான்"(1)

என்று எடுத்த எடுப்பில் ஒரு சிறு காரணத்தை முன்னிட்டு எம்பெருமான் தம் நெஞ்சில் புகுந்தபடியை எடுத்துக்கூறி வியக்கின்றார் ஆழ்வார். 'திருமாலிருஞ்சோலை மலை என்ற ஒருசொல் தற்செயலாக வெளி வந்தது. மற்ற மலைகளைக் காட்டிலும் இம்மலைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டென்று கருதி அறிவு நிலையில் வைத்துச் சொன்னேனல்லேன். கொக்குமலை, குருவிமலை என்று பல மலைகளையும் சொல்லிப்போகிற வரிசையில் 'திருமாலிருஞ் சோலை மலை' என்று இதனையும் சொன்னேன். இதனையே ஒரு பற்றாசாகக் கொண்டு அவன் பெரிய பிராட்டியோடு என் நெஞ்சு நிறையப் புகுந்தான்' என்கின்றார் ஆழ்வார்.

> "பேரே யுறைகின்ற
> பிரான்இன்று வந்து

13. மேலது. 5.9.
14. திருவாய். 10.8.

பேரேன் என்றுஎன்
நெஞ்சுநிறையப் புகுந்தான்"(2)

(பேரே-திருப்பேர் நகரிலேயே)

என்று புகுந்த நிலையைப் பேசுகின்றார். எல்லா உலகங் களையும் காத்தும்கூட தான் ஒன்றும் செய்யாதவனாகக் குறைபட்டிருந்தான் எம்பெருமான் ஆழ்வார் திருவுள்ளத்தில் வாசம் கிடைக்கப்பெறாமையினாலே. தாமரைப் பூவைத் துறந்து தன் திருமார்பிலே வந்து சேர்ந்த பிராட்டியார் 'அகலகில்லேன், அகலகில்லேன்' என்று சொல்லிக் கொண்டிருந்ததுபோல் தானும் 'பேரேன், பேரேன்' (ஆழ்வார் திருவுள்ளத்தை விட்டுப் பேர்ந்து செல்ல மாட்டேன்) என்று சொல்லிக்கொண்டே புகுந்தான் என்கின்றார்.

"திருப்பேரான் அடி சேர்ந்தமையானது அடியேனுக்கு எளிதான விதம் என்னே" என்று கூறி வியக்கின்றவர்,

"பிடித்தேன் பிறவி
கெடுத்தேன் பிணிசாரேன்
மடித்தேன் மனைவாழ்க்கையுள்
நிற்பதோர் மாயையை" (3)

(மனை வாழ்க்கை-சம்சாரம்; மடித்தல்-திரும்புதல்; மாயை-அஞ்ஞானம்)

என்று கூறி இனியராகின்றார். இங்கே ஈட்டில் ஓர் ஐதிகம். உண்ட வுடன் நூறடி நடக்க வேண்டும் என்பது சாத்திரம். இதனை அநுசரித்து எம்பெருமானார் உணவுண்டவுடன் மடத்திற் குள்ளே உலவினார். அப்போது திருமாலிருஞ் சோலைத் திருவாய்மொழியை அநுசந்தானம் செய்து கொண்டிருந்தார். 'மடித்தேன்' என்று இதற்குச் சேர மேலே போகாமல் திரும்பி யருளினார். இதனைக் கதவின் சந்து வழியாக எம்பார் கண்டு 'இப்போது இன்ன திருவாய்மொழி அநுசந்தான மன்றோ திருவுள்ளத்திலோடுகிறது" என்றாராம். 'ஆம்' என்று விடை யிறுத்தாராம் எம்பெருமானார்.

திருப்பேர் நகர் எம்பெருமான் திருநாட்டையே தந்து விட்டான் என்ற களிப்பால், எக்களிப்பால்,

"எளிதாயின வாறென்று
என்கண்கள் களிப்ப

களிதாகிய சிந்தையனாய்க்
களிக்கின்றேன்'' (4)

(சிந்தை-நெஞ்சு; களித்தல்-பரமானந்தம் அடைதல்)

என்று தன் பரமானந்தத்தை வெளியிடுகின்றார். ''என் உடம்பினுள் புகுந்து புண்ணிய பாவங்களைப் போக்கி யருளினான்'' (5); ''என்பால் எழுந்தருளி வரும்போதே 'இருப்பேன், இருப்பேன்' என்று செல்லிக் கொண்டே வந்தான்'; அவனுடைய அபிமானத்தைப் பெற்று அமுதம் பருகினதோ டொப்பக் களித்தேன்'' (6).

அடுத்து, இக்களிப்பை அமைதியாக வெளியிடுகின்றார்.

''உண்டுகளித் தேற்கு
உடம்பென்குறை? மேலைத்
தொண்டுஉகளித்து அந்திதொழும்
சொல்லப் பெற்றேன்'' (7)

(உம்பர்-மேலுலகம்; அந்தி தொழும் உகளித்து- அதிசயித்து; சொல்-நம: என்பது)

''இப்படிப்பட்ட அநுபவம் பெற்றுக் களிப்பதைவிட பரமபதாநுபவத்தில் என்ன சிறப்பு உள்ளது? (அதில் விருப்பம் உடையோம் அல்லோம் என்பது கருத்து) கையங்கர்ய ரசம் அதிசயித்தால் அதன் எல்லையான நிலைமையிலே செல்லக் கடவதான தொழும் சொல் நம: என்பது. இதுதான் முடிவான பேறு; இதனையும் இங்குப் பெற்றேன்'' என்கின்றார்.

''கண்ணுள் நின்றகலான்;
கருத்தின்கண் பெரியன்;
எண்ணில் நுண்பொருள்
ஏழிசையின் சுவைதானே'' (8)

(கண்ணுள் நின்று - கண்ணை விட்டு; கருத்து-மனோரதம்; எண்ணில் - சிந்திக்கப் புகுதல்)

என்று பேரன்பே வடிவெடுத்தவனாய், ஏழிசையின் சுவையே உருக்கொண்டவனாய், தன்னைவிட்டு ஒரு நாளும் நீங்க மாட்டாதவனாய்த் தன்னுள் புகந்தபடியைப் பேசுகின்றார்.

அடுத்து, ஆழ்வார் எம்பெருமானை நோக்கி வினா வொன்று எழுப்புகின்றார்.

"இன்றென்னைப் பொருளாக்கித்
தன்னைஎன்னுள் வைத்தான்
அன்றென்னைப் புறம்போகப்
புணர்த்த தென்செய்வான்-" (9)

(இன்று-மயர்வுஅற மதி நலம் அருளப் பெற்ற பின்பு; அன்று-அவர் திருவருளைப் பெறுவதற்கு முன்பு; புறம்போகப் பண்ணுதல்-பராமுகம் செய்தல்; புணர்த்தல்-மாயையை இட்டு மயக்குதல்)

என்பது வினா. இப்பாசுரம் இத்திருவாய் மொழியின் உயிரானது. இந்த வினா மூன்று வகையில் அமைகின்றது. முதல்வகை, தனக்குத்தானே சிந்தித்தலில் நோக்கு. இரண்டாம் வகை, இறைவனைக் குறித்துக் கேட்டலில் நோக்கு. மூன்றாம் வகை அதிசங்கையில்நோக்கு. இவ்விடத்தில் ஓர் இதிகாசம்: 'ஆழ்வார் எம்பெருமானை நோக்கி இப்படி ஒரு வினா எழுப்பினாரே, இதற்கு எம்பெருமான் என்ன மறுமொழி கூறினான்?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, அதற்குப் பட்டர், 'அவன் பதில்சொல்வதற்கு என்ன இருக்கிறது? இவர் தலையிலே ஒரு பழியை ஏறிட்டுப் பல காலம் இழந்து கிடந்த நாம் சொல்லுவது என்? என்று நாணம் உற்றவனாய்க் காலாலே தரையைக் கீறி நிற்பது தவிர வேறுண்டோ?' என்று அருளிச் செய்தார். எம்பெருமான் கூறிய விடை 'நீர் பெற வேண்டிய பேற்றினைப் பெற்றீராகில் அதுவே அமையாதோ?' என்ன, அதுவே அமையும் என்கின்றார்; தேங்காய்க்கு இளநீர் புக்க வழி ஆராய்ந்தோ விடாய்த்தவன் இளநீர் குடிப்பது?

பின்னர் ஆழ்வார், 'திருவாய் மொழி பாடுகையாகின்ற இக் கைங்கரியத்தைப் பரமாநந்தமாகச் செய்யப் பெற்ற எனக்கு வேறு என்ன விருப்பம் உள்ளது?' என்கின்றார்.

"உற்றேன்; உகந்து
பணிசெய்து உன்பாதம்
பெற்றேன்; ஈதே
இன்னம் வேண்டுவது?" (10)

(பணி-திருவாய்மொழிபாடுகை; ஈதே-இதுவே)

என்பது ஆழ்வார் திருவாக்கு.

இங்ஙனம் ஆழ்வார் பாசுரங்களில் ஆழ்ங்கால் பட்ட வண்ணம் திருக்கோயிலில் நுழைகின்றோம். எம்பெருமானின் திருநாமம் **அப்பக்குடத்தான்** என்பது; இவன் தன்

வலக்கையின்கீழ் ஒரு சட்டி நிறைய அப்பங்கள் வைத்திருப்பதைக் காணலாம். **வக்கரன் வாய் முன் கீண்ட மாயன்** என்பது திருமங்கையாழ்வார் இந்த எம்பெருமானுக்குச் சூட்டிய திருநாமம்.[15] எம்பெருமான் மேற்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு சயனத்திருக்கோலத்தில் (புயங்கசயனம்) சேவை சாதிக்கின்றான். **இந்திராதேவி, கமலவல்லி** என்பவை தாயாரின் திருநாமங்கள். இவரையும் வணங்குகின்றோம். திருமங்கை யாழ்வார், நம்மாழ்வார் இவர்களின் பதிகங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

இந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

"போமானை எய்து பொரும்ஆனைக் கொம்புபறித்(து)
ஆம்ஆனை மேய்த்து உவந்த அம்மானைத் - தாமச்
செழுந்திருப் பேரானைச் சிறுகாலைச் சிந்தித்(து)
எழுந்திருப் பேற்குண்டோ இடர்"[16]

(போம் - ஓடிச்சென்ற; மான் - மாரீசன்; பொரும் - போர் செய்யும்; ஆனை - குவலயாபீடம்; ஆம் ஆனையை - பசு மந்தையை; உவந்து - மகிழ்ந்து; தாமம் - இடம், மாலை; சிறுகாலை - விடியற் காலத்துக்கு ஐந்து நாழிகை முற்பட்ட நேரம்; இடர் - பிறவித் துன்பம்)

என்பது பாசுரம். நாடோறும் வைகறைப்போதில் எம்பெருமானைத் தியானித்துக் கொண்டே துயில் ஒழிந்து எழுதலால் அந்த எம்பெருமான் என்னைப் பிறவித்துயர் அணுகாதவாறு பாதுகாப்பான்" என்கிறார் அய்யங்கார். போமானை, பொருமானை, அம்மானை என்று வந்துள்ள சொல்நயம் பாசுரத்தை மீண்டும் மிடற்றொலி கொண்டு பாடத் தூண்டுகின்றது.

இத்திருத்தல எம்பெருமான் அடியார் ஒருவருக்கு அவர் விரும்பிய கண்ணனின் சிறு குழந்தை விளையாட்டுகளுடன் சேவை தந்ததாக வரலாறு. யார் ஒருவர் அப்பக்குடத்தானை இத்திருத்தலத்தில் வழிபடுகின்றனரோ அவர் வீடுபேறு

15. பெரி. திரு. 5.9: 5.
16. நூற், திருப். அந்-8.

அடைவது உறுதி என்று நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வரும் கூறுகின்றனர். ''கூடுவர் நீள் விசும்பே'' என்று திருமங்கை மன்னனும்'' ''ஆள்வது சூழ்பொன் விசும்பே'' என்று நம்மாழ்வாரும் தத்தம் பல சுருதிப் பாசுரங்களில் கூறுவதைச் சிந்திக்கின்றோம். கல்லணையிலிருந்து குறுக்கே ஆற்றைக் கடந்து இலால்குடி வந்து அங்கிருந்து பேருந்து மூலம் நாம் திருச்சியில் தங்கியிருக்கும் மாயவரம் விடுதியை அடைகின்றோம்.

7. திருத்தஞ்சை எம்பெருமான்

"சேஷத்வ போக்த்ருத்வங்கள் போல
அன்றே, பாரதந்திர்ய போக்யதைகள்."[1]

என்பது ஆசாரிய ஹிருதயத்தின் ஆன்ம சொரூபத்தின் உண்மை நிலை இன்னது என்பதை எடுத்துக் காட்டும் நூற்பா ஆகும். சேஷன்-பிறனுடைய (இறைவனுடைய) பயனையே தனக்கு முக்கியமான பயனாகக் கொண்டிருப்பவன். இவனுடைய தன்மை சேஷத்வம். போக்தா -அநுபவிக்கின்றவன். இவன் தன்மை போக்த்ருத்வம். போக்யதை-இனிய பொருளாக இருத்தல். பாரதந்திரன்-பிறன் ஒருவனைப் (இறைவனைப்) பிரதானமாகக் கொண்டிருப்பவன்; இவனுடைய தன்மை பாரதந்திரியம்.

ஆன்மாவின் உண்மை நிலையை அறியப் புகுந்தால் பகவானுக்கு அடிமைப்பட்டிருக்கும் சேஷத்வமும், பகவானோடு கூட இன்பத்தை அநுபவிக்கின்ற போக்த்ருத்வம் ஆகிய இரண்டு தன்மைகள் விளங்குவனவாகும். சாத்திரங்களின் சாரமான திருமந்திரத்தில் உட்புக்கால் பாரதந்திரியமும், இறைவனுக்கு இனிய பொருளாக இருக்கும் தன் போக்யதையும் ஆகின்ற ஆன்ம சொரூபத்தின் உண்மை நிலை தெளிவாகும்.

ஆன்மாவின் தன்மை விஷயமான ஞானம் சொரூப ஞானம் என்றும், சொரூப யாதாத்மிய ஞானம் என்றும் அவை தம்முள் உள்ள ஏற்றத் தாழ்வுகளினால் இருவகைப்படும். சொரூப ஞானம் என்பது சேஷத்வ ஞானத்தையும் போக்த்ருத்வ ஞானத்தையும் கொண்டது. சொரூப யாதாத்மிய ஞானம் என்பது பாரதந்திரிய ஞானத்தையும் போக்யதா ஞானத்தையும் கொண்டது. யாதாத்மிய ஞானம்-உண்மை ஞானம். சேஷத்வத்தைக் காட்டிலும் பாரதந்திரியம் சிறந்தது. போக்த்ருவத்தைக் காட்டிலும் போக்யதை சிறந்தது என்று கூறுகின்றது மேற் காட்டிய சூத்திரம்.

1. ஆசா ஹிரு -21 (புருடோத்தம நாயுடு பதிப்பு).

சேஷத்வமாவது, இறைவன் தன் விருப்பின்படி செய்யும் செயல்கட்குத் தகுதியாக இருத்தல். பாரதந்திரியமாவது, இறைவன் தன் விருப்பின்படி செய்யும் செயல்கட்குப் பயன்படுதல். ''கட்டிப் பொன்போலே சேஷத்வம்; பணிப் பொன்போலே பாரதந்திரியம்'' என்று பெரியாரும் பணித்தார். 'கட்டிப் பொன்போலே' என்றதுஇஷ்ட விநியோகத்திற்குத் தகுதியாக இருத்தலைநோக்கி. 'பணிப் பொன்போலே' என்றது, ்ணியிலே (தொழிலிலே) பயன்பட்டுக் கொண்டிருக்கிற பொன்போலே என்ற கருத்தில். போக்த்ருத்வமாவது, அறியும் தன்மையின் பயனாலே இன்ப நிலையில் விளைகின்ற சுவை களைத் தான் அநுபவிக்கின்றவனாக இருத்தல். போக்யதை யாவது, ஒரு பொருளிலுள்ள சுவை நிறம் முதலியவைகள் அநுபவிக்கின்றவனுக்கே இனியனவாக இருப்பதுபோலே ஆன்மாவில் உள்ள ஞானம் முதலியவைகளும் இறைவனுக்கே இனியனவாக இருத்தல். இவற்றை இன்னும் தெளிவுபடுத்து வோம். ஆன்மாவின் தன்மையைச் சாத்திர முகத்தாலே அறியு மளவில் 'இவ்வான்மா பகவானுக்கு அடிமைப்பட்டது, பகவா னுடைய அநுபவத்தை நுகர்வது' என்னும் சேஷத்வமும் போக்த் ருத்வமுமே ஆன்மாவின் சொரூபமாக (ஆன்மாவின் தன்மை யாக) விளங்கும். சாத்திரங்களின் சாரமான திருமந்திரத்தை நுணுகி ஆராய்ந்தால் பாரதந்திரியமும் போக்யதையுமாகிய ஆன்மாவின் உண்மை நிலை விளங்கா நிற்கும். இவற்றில் 'இஷ்ட விநியோகத் திற்குத் தகுதியாக இருக்கும் தன்மை' என்னும் அளவேயான சேஷத்வத்தைக் காட்டிலும் இறைவனுக்கு விருப்பப்பட்டுத் தீர்தலாகிற பாரதந்திரியம் சிறந்தது என்பதும், இன்பத்தில் 'இந்த இன்பம், நம்முடைய இன்பம்' என்று அபிமானம் உண்டா வதற்குக் காரணமான போக்த்ருத்வத்தைக் காட்டிலும் அந்த அபி மானத்தை வேர் அறுப்பதாய் போத்ருத்வத்தை இறை வனுடைய மகிழ்ச்சிக்குப் பயன்படும்படி ஆக்கிக் கொடுப்பதான போக்யதை சிறந்தது என்பது நாம் இங்கு அறியத்தக்கன.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் தஞ்சை அரசர் விடுதியிலிருந்து திருத்தஞ்சைத் திருக்கோ யிலுக்குப் புறப்படுகின்றோம். இத்திருக்கோயில் சென்னை - விழுப்புரம்-கடலூர்-திருச்சி இருப்பூர்தி பாதையில் தஞ்சை இருப்பூர்தி நிலையத்தருகில் உள்ளது. இருப்பூர்தி நிலையத்தி லிருந்து வட திசையில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலை விலுள்ளது. இத்திருக்கோயில்தஞ்சை மாமணிக் கோயில்,

தஞ்சையாளிக் கோயில், மணிக்குன்றப் பெருமாள் கோயில் என்ற மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் இரண்டு கோயில்களும் தஞ்சைக்கு வடதிசையில் விண்ணாற்றங் (வெண்ணாற்றங்) கரையிலுள்ளன; மூன்றாவது கோயில் இவற்றின் அருகிலுள்ளது. தஞ்சை இருப்பூர்தி நிலையத்தி லிருந்து குதிரை வண்டி, மாட்டுவண்டி, நகரப் பேருந்து, தஞ்சை - திருவையாறு செல்லும் பேருந்துகள் ஆகிய எல்லாவித ஊர்தி வசதிகளும் உள்ளன. நாம் நகரப் பேருந்தினைப் பயன் படுத்திக் கொள்ளுகின்றோம்.

இத்திருத்தலத்தை வந்தடைந்ததும் திருத்தலப்புராணம் கூறும் செய்திகள் நினைவுக்கு வருகின்றன. பூதவுடலுடன் வானுலகு ஏற முயன்ற திரிசங்குவின் வரலாற்றை நாம் அறி வோம். வசிட்ட முனிவரின் சாபத்தால் சண்டாளனாகி, விசு வாமித்திர முனிவரின் தவ வலிமையால் வானுலகு சென்ற திரிசங்கு அங்கிருந்து தள்ளப்படுகின்றான், முனிவரின் தவவலிமையால்; அந்தரத்தில் - திரிசங்கு சொர்க்கத்தில் - நிறுத்தப் பெறுகின்றான். இவன் இங்குத் தவமியற்றிக் கொண்டிருப்பதாக வரலாறு. இதனை அறிந்த காட்டில் வசிக்கும் அக்காலத்து முனிவர்கள் பராசரமுனிவரிடம் வருகின்றனர். "பச்சை மாமலை போல் மேனியனாய், பவளவாய்க் கமலச் செங்கண்ணனாய், அச்சுதனாய், அமரர் ஏறாய்"[2] த்திகழும் பரமாத்மாவை, நீலமுகில் வண்ணனை, இப்பிறவியிலேயே கண்டுகளிக்க வேண்டு மென்ற தங்கள் அவாவைப் பராசரமுனிவரிடம் வெளியிடு கின்றனர். பராசரருக்கும் இவ்வெண்ணம் தோன்றியது; முனிக் கணங்களுடன் பூலோக வைகுந்தமாநகருக்குத் திருத்தலப் பயணமாகக் கிளம்புகின்றார்.

தாங்கள் வரும் வழியிலுள்ள எல்லாப் புண்ணிய நதிகளிலும் நீராடி அங்கங்கே திருக்கோயில் கொண்டுள்ள எம்பெருமானகளை வழிபட்டுக் கொண்டு மணிமுத்தாறு நதி தீரத்திற்கு வருகின்றனர். அங்குக் குடில்அமைத்துக் கொண்டு 'வம்புலாம் சோலை மாமணி வண்ணனைக்' கண்டு களித்து இன்புறுவாராயினர். பராசரமுனிவர் தம் தவவலிமையால் விண்ணுலகத்திலிருந்து அமிர்தத்தைப் பெற்று மணிமுத்தா நதி நீரில் கலக்க அதுவே 'அமிர்த சரஸ்' என்று திகழ்வதாயிற்று. இதனை விண்ணாறு என்றும் வழங்கினர் விவரம் அறிந்த மக்கள். விளக்கம் வேண்டுமா? கங்கையிற் புனிதமாய காவிரியின்

கிளைகளில் ஒன்றானதும், என்றும் வற்றாத சீவநதியாகத் தஞ்சைவாழ் மக்களுக்குக் கடுங்கோடையிலும் 'தண்' என்றிருக்கும் நீரை வாரி வழங்கி வருகின்றதுமான நதியே விண்ணாறு. இதன் கரையில் பூலோக வைகுந்தமாகத் திகழ்வது 'தஞ்சை மாமணிக் கோயில்,' 'விண்' என்றால் வானம். வானத்தில்திகழும் வைகுந்த மாநகரின் எல்லையில் பெருகி ஓடும் விரஜை என்னும் நதியை 'விண்ணாறு' என்று சாத்திரங்கள் சாற்றுக்கின்றன. அந்த விண்ணாற்றைக் கடந்தால் 'வைகுந்த மாமணிக் கோயிலை' அடைவோம் என்று நான்மறைகள் நவில்கின்றன. ''பூலோக விரஜை'' என்ற இந்த 'விண் ணாற்றைக்' கடந்தால் செளந்தர்ய விமான நிழலில் 'தஞ்சை மாமணிக் கோயிலை'க் காண்பது நம் கண் காணும் உண்மை.

பராசர முனிவர் காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றி முனிவர்கள் அனைவரும் நாடோறும் மணிமுத்தா நதியில் (விண்ணாற்றில்) நீராடியும், திருமந்திரத்தின் பெருமைக்குக் காரணனான 'நீலமேகனைக்' கண்டுகளித்தும் இன்புற்று வரும் நாளில் சால்மலித்வீப வாசிகளான தஞ்சகன், தண்டகன், தாரகன் என்ற மூன்று அசுரர்கள் தங்கள் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகத் தஞ்சை மாமணிக் கோயிலின் பெருமையையும் அப்பகுதியின் வளப்பத்தையும் கேள்வியுற்று அமைதி நிலவும் மணிமுத்தா நதி தீரத்திற்கு வருகின்றனர். அங்கு வாழும் முனிவர் கட்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

பராசர முனிவர் அத் தீயவர்களைஅடக்க எண்ணுகின்றார். நான்முகனை நோக்கித் தவமியற்றுகின்றார். நான்முகனும் முனிவர்முன் தோன்றித் தம்மால் அசுரர்களை அடக்க முடியாதென்றும், உருத்திரனை நோக்கித் தவமியற்றுமாறும் பணித்து மறைகின்றார். அங்ஙனமே முனிவர் தவம் இயற்ற, உருத்திரன் அவர் முன் தோன்றி அவ்வரக்கர்களை அழிக்கத் தன்னால் இயலாது என்றும், தேவகி வயிற்றில் தோன்றிக் கம்சனை அச்சுறுத்திய காளிதேவியை அனுப்புவதாக் கூறி மறைகின்றார். பிறை சூடிய பிஞ்ஞகனின் ஆணை பெற்றுக் காளிதேவியும் கத்தி, கேடயம், கோடரி போன்ற ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம் தோன்றி அசுரர்களுடன் போரிடத் தொடங்குகின்றனள். தண்டகனும் தாரகனும் கொல்லப் பெறுகின்றனர். உருத்திரனிடமிருந்து வரம் பெற்ற தஞ்சகன் தலைமறைவாகின்றான். காளிதேவியும் 'கோடியம்மன்'

எனப்பெயர் பெற்றுத் தஞ்சையின் வடபால் தெய்வமாகத் தங்கிவிடுகின்றாள்; இன்றும் இவள் மக்களின் வழிபாட்டுக் குரியவளாகத் திகழ்கின்றாள்.

தஞ்சகன் தன் உடன் பிறப்பாளர்கள் காளிதேவியால் கொல்லப் பெற்றனர் என்பதை அறிந்து மிகுந்த சினம் அடைகின்றான். தேவர்கட்கும் முனிவர்கட்கும் எண்ணற்ற இடையூறுகளை விளைவித்து வருகின்றான். நலிவுற்ற அமரர்களும் முனிவர்களும் பராசரரை முன்னிட்டுத் திருமாலை வேண்டுகின்றனர். எம்பெருமானும் மீண்டும் ஒருமுறை நரசிங்கனாகத் தோன்றி தஞ்சகாசுரனை வதம் செய்து விடுகின்றார். இது புராண வரலாறு.

இத்திருக்கோயில் எம்பெருமான்களை பூதத்தாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். ''மாயோனை வாள்வலியால்மந்திரங்கொள் மங்கையர் கோன்'' திருமந்திரத்தின் பெருமையைப் பேசுங்கால்,

எம்பிரான், எந்தை, என்னுடைச் சுற்றம்,
எனக்குஅரசு, என்னுடைய வாழ்நாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி,
அவர்உயிர் செகுத்தஎம் அண்ணல்;
வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம் [3]

(செகுத்த - அழித்த; அண்ணல் - பெருமை பொருந்தியவன்; வம்பு - மணம்; உய்ய - கடைத்தேற)

என்ற பாசுரத்தில் முதலாவதான தஞ்சை மாமணிக்கோயிலைக் குறிப்படுவர். ''எனக்கு உபகாரம் பண்ணினவனும், எனக்குத் தந்தையும், எனக்கு எல்லாவித உறவு முறையும், பகைவர்களை அழித்து என்னை ஆண்டவனும், என்னுடைய உயிர்க்கு உயிரானவனும், அம்பு மழையால் அரக்கர்களைக் கிழங் கெடுத்தவனுமான பெருமை பொருந்திய எம்பெருமான் எழுந்தருளியிருகின்ற பரம போக்யமான தஞ்சை மாமணிக் கோயிலைத் தொழுது 'எல்லாவித உறவினனும் அவனே' என்பதன் பொருளுக்கு வாசகமான திருநாமத்தைக் காணப்

3. பெரி. திரு. 1.1:6.

பெற்றேன்'' என்கின்றார். இந்த உணர்வுடன் எம்பெருமான் சந்நிதியை அடைகின்றோம். எம்பெருமானின் திருநாமம் **நீலமேகப் பெருமாள்;** இருந்த திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலத்துடன் உபய நாச்சியமாருடன் பெரிய திருஉருவுடன் சேவை சாதிக்கின்றார். அவரை வணங்கு கின்றோம். பராசர முனிவர் கூப்பிய கையுடன் எம்பெருமான் அருகில் நின்று கொண்டிருப்பதைக் காண்கின்றோம். உற்சவ மூர்த்தியும் கையில்செங்கோலுடன் காட்சி தருகின்றார். திரு மங்கை மன்னனின் மேற்குறிப்பட்ட பாசுரத்தை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். கருவறையின் உட்புறத்தில் வடகிழக்கு மூலையில் நாச்சியாருடன் கல்யாண வேங்க டேசனும் அபயகரத்துடன் வரதராசனும் உற்சவமூர்த்திகளாகக் காட்சி தருவதையும் காண்கின்றோம்.

கருவறையின் வெளியில் வந்து, வலது தொடையில் இலக்குமியைத் தாங்கிய வண்ணம் காட்சி தரும் நரசிம்மனையும், ஆண்டாளையும், விஸ்வக்சேனரையும் சேவிக்கின்றோம். கையில் கமண்டலத்தைத் தாங்கிய வண்ணம் வராக முகத்துடன் காணப்பெறும் சிலை யாருடையது என்பது தெரியவில்லை. பெரிய பிராகாரத்தின் தென்புறத்தில் **செங்கமலவல்லித்** தாயார் சந்நிதி உள்ளது. அருள்வெள்ளம் பெருக்கெடுத்தோடும் அன்னையின் திருமேனியை நாள் முழுதும் கண்களாரக்களித்துக் கொண்டே இருக்கத் தோன்றும். சந்நிதியில் ஒரு கம்பத்தின் ஒரு பக்கம் யோக நரசிம்மரும், மற்றொரு பக்கம் ஆஞ்சநேயரும் காட்சி தருகின்றனர். இவர்களிருவரையும் நாடோறும் 108 முறை வலம் வந்தால் தமக்கு ஏற்பட்ட, ஏற்படும் இன்னல்கள் யாவும் ''தீயினில்தூசாகும்'' என்ற நம்பிக்கை இப்பக்கத்து மகளிரிடம் இருந்து வருகின்றது.

தாயார் சந்நிதியை விட்டு வலப்புறமாக வலம் வருங்கால் வடகிழக்கு மூலையில் **தேசிகன்** சந்நிதியைக் காணலாம். இதனை இவர் மகன் நயினாராச்சாரியார் பிரதிட்டை செய்தனர் என்று சொல்லப் பெறுகின்றது. இதுவும் இவ்வூரின் சிறப்புக்கு ஒரு காரணமாகும். பராசரமுனிவருக்கு காட்சி தந்த இடமாதல்பற்றி இவ்வூர் ''**பராசர க்ஷேத்திரம்**'' என்றும் வழங்கப் பெறுகின்றது.

அடுத்து, அருகிலிருக்கும் தஞ்சையாளிக் கோயிலை அடைகின்றோம். திருநறையூர் எம்பெருமானை மங்களா சாசனம்

செய்யும்போது இடையிலே 'தஞ்சையாளி'யையும் நினைக்கின்றார் ஆழ்வார்.

என்செய் கேன்அடி யேன்உரை யீர்இதற்கு
என்று என்மனத் தேயிருக் கும்புகழ்,
தஞ்சை ஆளியைப் பொன்பெய ரோன்நெஞ்சம்
அன்றி டந்தவ னைத்த ழலேபுரை
மின்செய் வாளரக் கன்நகர் பாழ்படச்
சூழ்க டல்சிறை வைத்திமை யோர்தொழும்,
பொன்செய் மால்வரை யைமணிக் குன்றினை
அன்றி என்மனம் போற்றிஎன் னாதே.[4]

(என்றும்-எக்காலமும்; புகழ்-கீர்த்தியை யுடையவன்; ஆளியை - ஆள்பவனை; பொன் பெயரோன் - இரணியன்; இடத்தல் - பிளத்தல்; தழல் - நெருப்பு; மின்செய்-ஒளி விடும்; சிறைவைத்து-அணைகட்டி; மால்வரை-பெரியமலை போன்றவன்; போற்றி-மங்களாசாசனம்)

என்பது பாசுரம். "எப்போதும் என் இதயத்தை விட்டுப் பிரியாமையால் வந்த புகழையுடையவனாய், தஞ்சை மாமணிக் கோயிலிலே எழுந்தருளியிருப்பவனாய், பிரகலாதன் பொருட்டு இரணியனின் மார்பைப் பிளந்தொழித்தவனாய், இராவணனின் இருப்பிடமான இலங்கையைச் சுடுகாடாக்குவதற்குக் கடலிலே அணை கட்டி எழுந்தருளினவனாய், இப்படிப்பட்ட வியத்தகு செயல்கட்குத் தோற்றுத் தேவர்களால் வணங்கப் பெறுபவனாய், அப்படி வணங்கப் பெறுதலால் ஒளி பெற்ற வடிவை யுடையவனான எம்பெருமானையன்றி மற்றொருவரை என் மனம் வாழ்த்த விரும்பாது" என்கிறார் ஆழ்வார். தன்னுடைய பாரதந்திரியத்தைப் பேசுகின்றார். இந்தப் பாசுரத்தை மிடற்றொலி கொண்டு சேவித்த வண்ணம் தஞ்சையாளிக் கோயிலில் நுழைகின்றோம். இங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானின் திருநாமம் **நரசிம்மன்**; இரணியனைக் கொன்ற நிலையில் காட்சித் தருகின்றார். தஞ்சகாசுரனை வதம் செய்த பெருமானல்லவா இவர்? கிழக்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். தாயார், **தஞ்சைநாயகி**; இருவரையும் சேவித்து மீண்டும் பாட்டை இசைத்த வண்ணம் வெளி வருகின்றோம்.

இத்திருக்கோயிலை அடுத்துள்ள மணிக்குன்றப் பெருமாள் சந்நிதிக்குப் போகின்றோம். மேல் குறிப்பிட்ட பாசுரத்தில்

4. பெரி. திரு. 7.3:9.

வரும் '**மணிக்குன்றினை**' என்ற தொடர் இந்தத் திருக்கோயில் எம்பெருமானைக் குறிக்கின்றது போலும். இதனால்தான் இந்த மூன்றாவது கோயில் எம்பெருமான் '**மணிக்குன்றப் பெருமாள்**' என்ற திருநாமம் பெற்றனரோ என்று நினைக்கத் தோன்று கின்றது. தாயார், **அம்புயவல்லி**; இந்த எம்பெருமானும் இருந்த திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலங்கொண்டு சேவை சாதிக்கின்றார். இருவரையும் வணங்கி விடைபெறுகின்றோம், பாசுரத்தை மீண்டும் ஒருமுறை சேவித்த வண்ணம்.

இந்த மூன்று திருக்கோயிலிலும் உள்ள உற்சவர் **சீமன் நாராயணன்** என்ற திருநாமத்தால் வழங்கப்பெறுகின்றார். தஞ்சைமாமணிக் கோயில் எம்பெருமானைப் பல அர்ச்சாவதார மூர்த்திகளைக் குறிப்பிடும்போக்கில் மங்களாசாசனம் செய் கின்றார் பூதத் தாழ்வார்.

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும்தண்பொருப்புவேலை-தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிள்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக்கு இடம்[5]

(தமர்-பக்தர்; தண் பொருப்பு-அழகியமலை; வேலை- திருப்பாற்கடல்; ஏவல்ல எதிரிகளை முடிக்கவல்ல)

என்பது இவர் பாசுரம். அன்பருடைய நெஞ்சம், தஞ்சை மாமணிக் கோயில், திருவரங்கம் பெரிய கோயில், திருத்தண் கால், திருவேங்கடம், திருப்பாற்கடல், திருக்கடல் மல்லை, திருக்கோவலூர், திருக்குடந்தை என்னுமிடங்களை இதில் மங்களா சாசனம் செய்துள்ளமையைக் காணலாம். தமருள்ளம் சிறந்தமையால்அது முதலில் நுவலப்பெற்றது. இந்தப் பாசுரம் மூன்று திருக்கோயில்கட்கும் பொருந்தும்.

இந்த நிலையில் திவ்வியகவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் இச்சந்நிதியில் ஓதி உளங்கரைகின்றோம்.

ஓதக்கேள் என்நெஞ்சே உனக்கும்இது நன்(று) எனக்கும்
மேதக்க நன்மைஇனி வேறுஇல்லை-போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று.[6]

5. *இரண். திருவந்-70*
6. *நூற். திருப். அந்-3*

(ஓத - சொல்வதை; மேதக்க - மிக்க நன்மையைத் தரவல்ல ; மாமணி - மாணிக்கம் போன்ற இறைவன்; போத - நன்றாக; பேணி - விரும்பித் துதித்து; வடிவம்-திருமேனி; பொருந்து - பொருந்திய; அஞ்சை - பஞ்சாயுதங் களையும்; மா - இலக்குமி, மணி - கௌஸ்துப ரத்நம்; போற்று - வாழ்த்துவாயாக)

என்பது பாசுரம். **தஞ்சைமாமணி** என்பது இத்தலத்து எம்பெருமானின் திருநாமம். "தஞ்சை மாமணியையும் அவனது திவ்விய ஆயுதங்களையும் கௌஸ்த்துப ரத்தினத்தையும் போற்றினால் சம்சாரத்தில்அழுந்தியுள்ள உனக்கும் அதனால் உண்டான மாசு ஒழிய எனக்கும் நற்பேறு வாய்க்கும்" என்று தன் நெஞ்சை நோக்கித் தெருட்டுகின்றார் அய்யங்கார். தஞ்சகாசுரனை எம்பெருமான் வதைத்த தலமாதல்பற்றிஇத் திருத்தலம் '**தஞ்சை**' என்று திரு நாமம் பெற்றதாகக் கூறுவர்.

கடந்த பலஆண்டுக் காலமாக தஞ்சை மாமணிக் கோயிலின் உற்சவமூர்த்தியான நீலமேகப் பெருமானுக்குப் பீடத்தில் சில குறைபாடுகள் ஏற்பட்டு அதனால் உற்சவங்கள் கண்டறிய முடியாத நிலை இருந்து வந்தது. அண்மையில் பொது மக்கள் தம் நன்கொடையால்ரூ. 20,000 செலவில்இக்குறையை நீக்கினர். மேலும், இத் திருக்கோயிலின் திருமடப்பள்ளி, தாயார் சந்நிதி, திருச்சுற்று முதலான இடங்களிலும் உள்ள குறைகளை நீக்கத் திருப்பணி மேற்கொள்ளப் பெற்று நிறைவு பெற்றது. 1-6-80 இல் நீலமேகப் பெருமாள் கருடன்மீது இவர்ந்து தஞ்சை இராஜ வீதி நான்கிலும் வலம் வந்து மக்களுக்குக் காட்சி தந்தார். இந்த உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்தச் செய்திகளைஅறிந்த வண்ணம் மன நிறைவுடன் **கண்டியூர்** என்னும் திருத்தலத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

* * *

8. கண்டியூர் கமலநாதன்

''நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே, குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக''[1]

எம்பெருமான் அருள் நிறைந்த திருவுள்ளத்தன். எனினும், சேதநன் செய்யும் அளவு கடந்து குற்றங்கள், குளிர்ந்த நீரில் நெருப்புப் பிறத்தல் போன்று, அவனுக்குச் சீற்றத்தை உண்டாக்குகின்றன. அச்சீற்றத்தை மாற்றிக் கொண்டு இவனுடைய குற்றங்களைப் பொறுப்பது பிராட்டியாருக்காகவே ஆகும் என்பது இந்த நூற்பாவின் பொருளாகும். பகவான் ஏன் பிராட்டியாருக்காக இவனுடைய குற்றங்களைப் பொறுத்தல் வேண்டும்? இதனை உரையாடல் மூலம் தெளிவுபடுத்தலாம்.

சேதநன் எம்பெருமானிடம் ருசி[2] பிறந்து இவனை உபாயமாகப் பற்றும்போது, ஈசுவரன் சினங் கொண்டு 'என் முன் நில்லாதே' எனச் சீறி விழுகின்றான். இதை நோக்கிய பிராட்டியார், எல்லாம் அறிந்தவராயிருப்பினும், ஒன்றும் தெரியாதவர் போன்று 'ஈதென்ன?' என்கின்றார்.

பகவான்: இவன் செய்த குற்றங்களுக்கோ அளவில்லை. பொறுத்தற்கு அரிய பல பிழைகளை இழைத்துள்ளான்.

பிராட்டி: பெருமானே, தாங்கள் இவன் புரிந்த அபராதங்களைக் கணக்கிட்டு இவனை இங்ஙனம் தள்ளிக் கதவடைத்தால், இவனுக்கு வேறொரு புகலிடம் உண்டோ? இவனுக்கும் தங்கட்கும் உள்ள தொடர்பை நோக்கினால் ''உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது'' என்கிறபடி எக் காரணத்தாலும் நீங்காத தொன்றன்றோ? இம்முறையில் தாங்கள் இவனைக் கைவிட முடியுமா?

1, முமுட்சுப் படி-127

2. பாவச் செயல்களையோ, புண்ணியச் செயல்களையோ அறிந்தே செய்தற்குக் காரணமாயுள்ள சுவை. ஆதலின் இவன் குற்றங்களுக்கேற்ப இவனைத் தண்டித்தே ஆக வேண்டும்.

பக: இதைக் கருதிஇவன் எத்தனைத் தீங்குகள் புரியினும், யான் இவனை அங்கீகரிக்க வேண்டுமா, என்ன? அவ்வாறு செய்ய வேண்டும் என்னும் இன்றியமையாமை தான் என்ன?

பிராட்டி: இவனைப் பெறுதல், உரியவரான தங்கட்குத் தானே பேறாய் உள்ளது. தாங்கள் இன்னும் உறுதியுடன் இருப்பின், இவ்வுலகில் ஒருவனேனும் தங்கட்குக் கிடைப் பனோ? உயிர்களைத் திருத்தி பெறுதற் பொருட்டே பலவற்றை அவதாரங்களையும் எடுத்து உழலும் தங்கட்கு யான் அறிவுறுத்தல் வேண்டுமா? தங்களை இரட்சகப் பொருளாக நாடி வந்த இவனைக் காக்கவில்லையேல் தங்களுடைய சர்வ இரட்கசத் தன்மைக்குக் குறைவு ஏற்படாதா?

பக: அநாதி காலமாய் நம்முடைய கட்டளையை அவமதித்து, தன் இச்சையின்படி ஒழுகிப் போந்த இவனைக் குற்றங்கட்கேட்பத் தண்டியாமல் ஏற்றுக்கொள்ளின் நாம் ஏற்படுத்திய சாத்திரத்தின் மதிப்பும் மரியாதையும் குன்றாதோ?

பிராட்டி: ஆம்; அஃதுண்மையே. ஆயினும், தங்களை நாடிவந்தஇவனைக் காக்காமல், இவனது குற்றங்களையே நோக்கித் தண்டிக்கில் தங்களுடைய அருட்குணம் நிலைப்பது எவ்வாறு? அதற்குப் பயன்தான் என்ன? இவனைப் பாவங் களினின்றும் நீக்கி இரட்சித்தாலல்லவா, அதற்குப் பயன் ஏற்படும்.

பக: இவனைத் தண்டிக்கவில்லையேல் சாத்திரம் நிலையாது. இவனைக் காக்க வில்லையேல், அருட்குணம் நிலைத்திராது. இந்த இக்கட்டான நிலைமையை எங்ஙனம் சமாளிப்பது?

பிராட்டி: இதற்காகவா சிந்திக்கின்றீர்கள்? தங்களைச் சிறிதும் நோக்கிப் பாராது தன்னிச்சையில் செல்பவனிடம் சாத்திர முறையைப் பயன்படுத்துங்கள்; தங்களிடம் அன்புடன் அண்டி வந்த இவனைப் பாவங்களினின்றும் நீக்கி இரட்சியுங்கள். இங்ஙனம் செய்வதால் சாத்திரமும் பழுது படாது; தங்களது அருட்குணமும் உயிர் பெற்றுத் துலங்கித் திகழும்.

இங்ஙனம் எம்பெருமானுக்கு ஏற்ற பற்பல இனிய சொற்களைப் பகர்ந்து, அவன் சினத்தை மாற்றி, அவனுக்குச் சேதநனிடம் அருள் பிறக்குமாறு செய்பவர் பிராட்டியாரே யாவர். இவ்வினிய சொற்களாலும் ஈசுவரனது நெஞ்சம் நெகிழ

வில்லையேல், பிராட்டியார் தம் அழகைக் காட்டி அவனைத் தம் வசப்படுத்திச் சேதநனை அங்கீகரிக்கமாறு செய்வர். ஆதலின், சேதநனுக்குப் பிராட்டியாரின புருஷகாரம் (தகவுரை கூறுதல்) இன்றியமையாததென்றும், பகவான் சேதநனுடைய குற்றங்களைப் பிராட்டியாருக்காகவே பொறுக்கின்றான் என்றும் அறிதல்வேண்டும். ஈண்டு,

> **"உபதேசத் தாலே மீளாத போது**
> **சேதநனை அருளாலே திருத்தும்;**
> **ஈசுவரனை அழகாலே திருத்தும"[3]**

என்ற பெரியாரின் வாக்கும் நோக்கத் தக்கது.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்டவண்ணம் தஞ்சைமாமணிக் கோயிலினின்றும் **திருக்கண்டியூர்** என்னும் திருத்தலத்திற்கு ஏகுகின்றோம். இத்திருத்தலம் தஞ்சை இருப் பூர்தி நிலையத்தினின்று தஞ்சை- திருவையாறு சாலையில் சுமார் ஒன்பது கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. தஞ்சை மாமணிக் கோயில் இச்சாலையிலேயே இருப்பதால் தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் பேருந்தில் ஏறிச் சென்று திருக் கண்டியூரில் இறங்குகின்றோம். சுமார் நூறு மீட்டர் தொலைவிற் குள்ளேயே அருகருகே திருமால், நான்முகன், சிவன் இவர் களுக்கு மூன்று திருக்கோயில்கள் தனித்தனியே உள்ளன. இத் திருத்தலத்தின் பெருமை பிரம்மாண்ட புராணத்தில் எட்டு இயல் களில் பரக்கப் பேசப் பெறுகின்றது. கபால தீர்த்தம் திருமால் திருக்கோயிலுக்கு மேற்புறத்திலும், பத்ம தீர்த்தம் திருக்கோ யிலுக்கு முன் புறமாகவும் அமைந்துள்ளன. பத்ம தீர்த்தம், பலி தீர்த்தம் என்றும் வழங்கப் பெறுகின்றது. அருகில் காவிரியின் கிளை நதியான குடமுருட்டி ஓடுகின்றது.

தஞ்சை - திருவையாறு நெடுஞ்சாலையில் திருக்கோயில் கிழக்கு நோக்கிய வண்ணம் சாலையை நோக்கியவாறு அமைந்துள்ளது. திருக்கோயிலின் இராசகோபுரம் மூன்று தளங்களால் ஆனது. இங்குச் சக்கரத்தாழ்வாருக்கு ஒரு சிறு கோயில் உள்ளது. சக்கரத்தின் மறுபுறம் இலக்குமி நரசிம்மனின் திருமேனி அமைந்துள்ளது. மூன்று புறமுள்ள சுவர்கள் மிகவும் நெருங்கியிருப்பதால் இலக்குமி நரசிம்மர் கண்கட்குத் தென்படுவதில்லை. வலம் வருவதற்கும் வாய்ப்பு இல்லை.

3. ஸ்ரீ வசபூஷ - 14 (புருடோத்தம நாயுடுபதிப்பு)

சக்கரத் தாழ்வாரும் இலக்குமி நரசிம்மனும் சிறந்த வரப் பிரசாதிகள். திருக்கோயிலின் விமானம் திறந்துள்ள தாமரை மலர் போல் உள்ளது. இது கமலகிரீதி விமானம் என்று வழங்கப் பெறுகின்றது.

இவற்றையெல்லாம் பார்த்த வண்ணம் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **கமல நாதனை** வணங்குகின்றோம். தயாரின் திருநாமம் **கமலவல்லி நாச்சியார்.** இவரையும் சேவிக்கின்றோம். உற்சவர் **அரன் சாப விமோசனப் பெருமாள்** என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுகின்றார். இவரைத் தவிர **சந்தான கோபாலன், நவநீத கிருஷ்ணன்** என்ற வேறு இரண்டு உற்சவர்களும் உள்ளனர். இந்தத் திருக்கோயிலில் கமல க்ஷேத்திரம், கமலப் புஷ்கரிணி, கமல விமானம், கமல நாதன், கமல வல்லி என்ற ஐந்து கமலங்கள் உள்ளன. இவை திருச்சேறை திருத்தலத்தை நினைவுகூரச்செய்கின்றன. இத்திருக்கோயில் 222 அடி நீளமும், 115 அடி அகலமும் உடையது. தென் புறத்திலுள்ள தேசிகன் கோயில் சிறியது, இவருக்கு உற்சவர் இலர்.

இத்திருத்தலத்தை, *108* - இல் *86* திருத்தலங்களைச் சேவித்த திருமங்கையாழ்வார் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளர்.

பிண்டிஆர் மண்டை ஏந்தி
பிறர்மனை திரிதந்து உண்ணும்
முண்டியான் சாபம் தீர்த்த
ஒருவன்ஊர் உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால்
மற்றையார்க்கு உய்யல் ஆமே.[4]

(பிண்டி - உளுத்த பொடிகள்; *திரிதந்து-திரிந்து;* முண்டியான் - மொட்டை யாண்டி; ஒருவன் - ஒப்பற்றவன்)

என்பது பாசுரம். இதனை இத்திருத்தலத்தில் ஓதுகின்றோம். ''எம்பெருமான் இதில் உகந்தருளின கண்டியூர், திருவரங்கம், திருமெய்யம், திருவெஃகா, திருப்பேர்நகர், திருக்கடன் மல்லை

4. திருக்குறுந் - 19.

ஆகிய திருப்பதிகளிலெங்கும், "பதியே பரவித் தொழும் தொண்டர்" என்னும்படியாக மூழ்கியிருப்பவர்கள் உய்ய வழி உண்டேயல்லது அல்லாதவர்களுக்கு ஒருநாளும் உய்ய வழி இல்லை" என்கிறார் ஆழவார்.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வர, அதனையும் ஓதி உளங் கரைகின்றோம்.

பேசவரின் தென்அரங்கன் பேரெல்லாம் பசுகவாய்;
கேசவனைக் காண்கவிழி; கேட்கசெவி - ஈசனார்
உண்டியூர்தோறும் உழன்று இரவாமல் தவிர்த்தான்
கண்டியூர் கூப்புகஎன் கை.[5]

(பேசவரின் - பேசத் தொடங்கினால்; விழி - கண்கள்; செவி - காது; ஈசனார் - சிவ பெருமான்; இரவாமல் - யாசிக்க வொட்டாமல்; தவிர்த்தான் - நீக்கியருளியவனுடைய; கூப்புக - அஞ்சலி செய்க)

என்பது பாசுரம். எம்பெருமான் வாய் முதலிய உறுப்புகளை அளித்து மாநுடர்களைப் பிறப்பித்ததன் காரணம் எல்லா வகையாலும் இவர்கள் தன்னையடைந்து வழிபட்டு நற்கதி பெறும்பொருட்டேயாதலால், அப்பெருமானது திருநாமங்களைச் சொல்லித் துதிக்குமாறு வாயையும், அவனது திருவுருவத்தைச் சேவிக்குமாறு கண்களையும், அவனது புகழைக் கேட்குமாறு செவிகளையும், அவனது திருத்தலங் களைக் கூப்பித்தொழுமாறு கைகளையும் வேண்டுகின்றார் அய்யங்கார். இவரே திருவரங்கக்கலம்பகத்திலும்,

கேசவனை யேசெவிகள் கேட்க; திருவரங்கத்(து)
ஈசனையே சென்னி இறைஞ்சிடுக; - நேசமுடன்
கண்ணனையே காண்க; இரு கண்ணிணர்கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகஎன் வாய்.[6]

(சென்னி - முடி; இறைஞ்சிடுக - வணங்கிடுக; நேசம்-பக்தி; இணர்கொள் - கொத்தாக மலர்ந்த)

என்று பாசுரம் இட்டுள்ளர். இந்த இரண்டு பாசுரங்களும்,

வாழ்த்துகவாய்; காண்ககண்; கேட்கசெவி; மகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால் - சூழ்ந்த

5. நூற். திருப். அந். 15.
6. திருவரங். கலம் -20

துழாய்மன்னு நீள்முடிஎன் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி, மதித்து.[7]

(மகுடம்-தலை; மன்னு-பொருந்தியிருக்கப் பெற்ற)

என்ற திருமழிசையாரின் பாசுரத்தை அடியொற்றி அமைந்தவையாகும்.

சிவனது சாபத்தைக் கண்டனம் செய்தது போலச் சேவை சாதித்த இடமாதலால் இத்திருத்தலம் **திருக்கண்டியூர்** என்று திருநாமம் பெற்றது. இதனை வட மொழியில் **கண்டந புரம்** என்று வழங்குவர்.

நான்முகனுக்குரிய திருக்கோயில் திருமால் திருக்கோயிலுக்கு வடபால் உள்ளது. இதன் இராசகோபுரமும் மூன்று தளங்களைக் கொண்டது. இதுவும் கிழக்கு நோக்கியே அமைந்துள்ளது. ஒரு காலத்தில் இது பெரிய திருக்கோயிலாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும். இப்பொழுது சிதிலமடைந்து கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. நான்முகன் திருமேனி இருந்த இடத்தில் சிவலிங்கம் நிறுவப் பெற்றுள்ளது. நான்முகன், நாமகள் இவர்களின் மூலவர்கள் சிவன் கோயிலில் ஒரு சிறு கோயிலில் உள்ளனர். இவர்கட்கு உற்சவர்கள் இலர்.

கண்டியூர், திரிமூர்த்தி க்ஷேத்திரம் என்றும் வழங்கப் பெறுகின்றது. இது **உத்தமர் கோயிலை** நினைக்கச் செய்கின்றது.

கண்டியூரின் வட மேற்கு திசையில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பெரும்புலியூரும், வடகிழக்குத் திசையில் கூடலூார் என்ற திருத்தலமும் உள்ளன.

இச் செய்திகளை அறிந்த வண்ணம் மன நிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

7. நான். திருவந் - 11.

9. திருக்குடந்தை ஆராவமுதன்

திருக்குடந்தையில் நகரின் நடுவே அமைந்திருப்பது சார்ங்கபாணிப் பெருமாள் திருக்கோயில். இதில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் **ஆரா அமுதன்.** இப்பெருமான் மீது நம்மாழ்வார் பாடியுள்ள 'ஆராஅமுதே[1]'' எனத்தொடங்கும் திருவாய்மொழியே 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் பக்திப் பனுவல் கிடைப்பதற்கு ஒரு திறவுகோலாக இருந்தது. இது ஒரு சுவையான வரலாறு.

தில்லைச் சிற்றம்பலவன் திருக்கோயில் கொண்டிருக்கும் சிதம்பரத்துக்கருகில் சுமார் 25 கி.மீ. தொலைவில் **காட்டு மன்னார் கோயில்** என்ற ஒரு வைணவத் திருத்தலம் உண்டு. அதன் பழம்பெரும் பெயர் **வீரநாராயணபுரம்** என்பது. இத் திருத்தலத்து எம்பெருமான் மன்னனார் திருக்கோயிலில் அடிமைத்தொழில் செய்து வந்தவர் **நாதமுனிகள்** என்று வழங்கப்பெறும் **அரங்கநாத முனிகள்** (9-வது நூற்றாண்டு). ஒருநாள் மேல்நாட்டிலிருந்து வைணவர் இருவர் வந்து மன்னனாரைச் சேவித்து அவர் திருமுன் **'ஆராவமுதே'** எனத் தொடங்கும் பதினொரு பாசுரங்களையும் ஓதி நின்றனர். அருகிலிருந்த நாதமுனிகள் இப்பாசுரங்களின் இன்சுவையிலும் அவை நல்கும் பேரின்பத்திலும் ஈடுபட்டவராய் இறுதிப் பாசுரத்தில் "**ஆயிரத்தில் இப்பத்தும்**" என வரும் தொடரால் இப்பாடல்கள் ஆயிரம் பாசுரங்கள் கொண்ட ஒரு பிரபந்தத்தில் உள்ளவை எனக் கருதி அப்பிரபந்தத்தைப்பற்றி அவர்களை வினவுகின்றார். அவர்கள் இந்தப் பதினொரு பாசுரங்களைத் தவிர தமக்கு வேறு யாதும் தெரியாது என மறுமொழி பகர்கின்றனர். இப்பிரந்தத்தை எப்படியாவது கண்டறிய வேண்டும் எனப் பேரவாக் கொள்ளுகின்றார் நாதமுனிகள். திருக்குடந்தை வருகின்றார். ஆராஅமுதனைச் சேவிக்கின்றார். அவன்மீதுள்ள திருவாய் மொழியை அவன் திருச்சந்நிதியின் முன் உளமுருக ஓதி அவன் திருவருள் பெற்று இத்திருவாய்மொழியின் இறுதிப் பாசுரத்தில்

1. திருவாய். 5-8.

வரும் ''**குருகூர்ச் சடகோபன்**'' என்ற மற்றொரு தொடரைக் கொண்டு இவை சடகோபன் திருவவதரித்த இப்போது ஆழ்வார் திருநகரி என வழங்கப் பெறும் திருக்குருகூரில் இருத்தல் கூடும் எனக் கருதி அவ்வூருக்குப் புறப்படுகின்றார்.

திருக்குருகூரை அடைந்தவர் அங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் பொலிந்து நின்ற பிரானையும் **திருப்புளியாழ்வாரையும்**[2] சேவித்து அப்பகுதியிலுள்ள சிலரை இப்பிரபந்தைப்பற்றி உசாவுகின்றனர். அவர்கள் நம்மாழ்வாரின் திருவடி சம்பந்தம் பெற்ற மதுரகவிகளின் மரபில் வந்த **பராங்குதாசரை** வினவினால் இதுபற்றிய விவரம் தெரியக்கூடும் எனக் கூறி அவர்தம் இருப்பிடத்தையும் தெரிவிக்கின்றனர். அப்பராங்கு சதாசரிடம் வருகின்றார் நாதமுனிகள்; முனிகள் அவரை வினவ, அவர் பதினொரு பாசுரங்களைக் கொண்ட '**கண்ணிநுண் சிறுத் தாம்பு**'[3] என்ற பிரபந்தைப் பன்னீராயிரம் முறை ஒன்றிய மனத்துடன் நம்மாழ்வார் திருமுன் உருப்போடுகிறவர்கட்கு ஆழ்வார் தோன்றியருள்வார் என்று உரைத்தருளுகின்றார். இங்ஙனமே முனிகளும் செய்ய, ஆழ்வார் அவர்முன் தோன்றித் தாம் அருளிய **திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி** இந்த நான்கு பிரபந்தங்களையும் ஏனைய ஆழ்வார்கள் பாடியருளியவற்றையும் திருமந்திரத்தையும் அட்டாங்க யோகத்தின் நுட்பங்களையும் கூறியருளுகின்றார். பின்னர் தம் பதி திரும்பி, வேத வியாசர் திருமறைகளை நான்காக வகுத்தாற் போல, இப்பாசுரங்களை **முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி** என்ற நான்கு பகுதிகளாக வகுக்கின்றார். தம்முடைய மருமக்களாகிய **மேலையகத்தார், கீழையகத்தார்** என்பவர்களைக் கொண்டு பண்முறைகளையும் அமைகின்றார். இந்த நான்கு தொகுதிகளும் '**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**' என்ற பெயரில் நம்மிடையே வழங்கி வருகின்றன.

இந்தச் சிந்தனைகள் நம் மனத்தில் அலை பாய சார்ங்க பாணித் திருக்கோயிலை நோக்கிப் புறப்படுகின்றோம். இத்திருக்கோயில் ஊருக்கு நடுவே நடுநாயகம்போல் அமைந்துள்ளது.

2. வைணவர்கள் நம்மாழ்வார் தங்கியிருந்த புளிய மரத்தையும் ஆழ்வார் என வழங்குதல் மரபு.

3. மதுரகவிகள் நம்மாழ்வார்மீது பாடிய ஒரு சிறு பிரபந்தம்.

இத் திருக்கோயில் கும்பகோணத்திலுள்ள எல்லாக் கோயில் களையும் விடப் பெரியது. கோபுரமும் அப்படியே மிகப் பெரியதாக அமைந்துள்ளது. பதினோரு மாடங்களைக் கொண்டது. பெருமாள் சந்நிதியும் முன் மண்டபங்களும் ஓர் இரதம்போல் அமைக்கப்பெற்றுள்ளன. மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் சக்கரங்கள், இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகள் இருக்கின்றன. இதனை நோக்கிய திருமங்கையாழ் வாரும் இத்திருக்கோயில் எம்பெருமானைப் பற்றி மங்களா சாசனம் செய்துள்ள '**திருஎழுக் கூற்றிருக்கை**' என்னும் பிரபந்தத்தை '**இரதபந்தம்**' என்ற சித்திர கவியாக அமைத்தனர் போலும். இது சரணாகதித் தத்துவத்தை விளக்கும் பாசுரமாகும்.

இத்திருக்கோயில் அமைப்பையும் இதன் பின்புறமுள்ள திருக்குளத்தையும் பார்க்கும் நாம் புராணகாலத்திற்கு இழுத்துச் செல்லப் பெறுகின்றோம். பிருகு முனிவர் ஒரு சமயம் வைகுந்தம் வருகின்றார் பரந்தாமனைச் சேவிப்பதற்கு. பரந்தாமன் ஏதோ காரணத்தினால் முனிவரைக் கவனியாது பாராமுகமாக இருக்கின்றார். இதனால் சினங்கொண்ட முனிவர் பரந்தாமனின் திருமார்பில் எட்டி உதைக்கின்றார். பராந்தாமனோ சிறிதும் கவலாது முனிவரின் திருப்பாதங்களைத் தொட்டு அவரைச் சேவிக்கின்றார். அவன் மார்பில் இருக்கும் இலக்குமிக்கு எம்பெருமானின் இச்செயல் சிறிதும் பிடிக்கவில்லை. சினங் கொள்ளுகின்றார். 'அகிலகில்லேன் இறையும்'[4] என்று அவன் திருமார்பில் உறைவள் அல்லவா? நேராக உதை வாங்கியவள் சும்மா இருப்பாரா? இதனால் பிணங்கிக் கொண்டு வைகுந்தத்தை விட்டு இப்பூவுலகிற்கு வருகின்றார்; வந்தவர் கொல்லபுரம் என்ற இடத்தில் தங்கி விடுகின்றார். பெரிய பிராட்டியாரைத் தேடிக் கொண்டு பூவுலகிற்கு வருகின்றார் பரமபத நாதன். வந்தவர் பதுமாவதியைத் திருமணம் புரிந்து கொண்டு திருப்பதியில் சீநிவாசனாகத் தங்கிவிடுகின்றார். இந்நிகழ்ச்சியை நாரதர் மூலம் கேள்வியுற்ற இலக்குமிதேவிக்கு மேலும் சினம் மிகுகின்றது; அவரைத் தண்டிக்க வேண்டு மென்று திருப்பதிக்கு விரைகின்றார். நாரதரின் யோசனைப்படி அச்சங்கொண்ட சீநிவாசன் குடந்தை வந்து அங்கு ஒரு பிலத்தினுள் நுழைந்து கொள்ளுகின்றார்.[5] சீநிவாசனைத் தேடிக் கொண்டு குடந்தை வருகின்றார் இலக்குமி.

4.திருவாய்.1.10:10

5.இதனை நினைவு படுத்தும் முறையில் இத்திருக் கோயிலில் பாதாள சீநிவாச சந்நிதி அமைந்துள்ளது.

சீநிவாசன் அஃகப்படவில்லை. நீர் வளமும் நிலவளமும் இயற்கை எழிலும் நிறைந்த குடந்தை இவர் மனத்தைத் கவர்கின்றது; சினமும் தணிகின்றது. இத்திருத்தலத்தின் எம்பெருமானுடன் இணைந்து வாழ நினைக்கின்றார். திருக்கோயிலருகிலுள்ள திருக்குளத்திலுள்ள பொற்றாமரையில் **பால கோமள வல்லியாக** அவதாரம் செய்கின்றார். இறைவனை நோக்கித் தன்னைத் திரும்பப் பெறுமாறு தவங் கிடக்கின்றார். இந்தக் காலத்திற்குள் பிருகு முனிவரும் ஹேம முனிவராகப் பிறக்கின்றார். தம்முடைய தவறுதலுக்குப் பரிகாரம் தேடுகின்றனர். தந்தை நிலையிலிருந்து பால கோமள வல்லியைப் பராமரிக்கின்றார்; அவரைச் சேர்த்துக் கொள்ளவும் இறைவனை வேண்டுகின்றார். எம்பெருமானும் இருவர் வேண்டுகோளுக்கும் இறங்கி திருவரங்கத்திலுள்ள பிரணவ விமானத்தினின்றும் வைதிக விமானத்தைப் பிரித்துக் கொண்டு, ஓர் இரதத்தில் குடந்தைக்கு ஒரு மகா சங்கராந்தியன்று எழுந்தருளுகின்றார். பால கோமள வல்லியைத் திருமணம் புரிந்து கொண்டு இருவர் மனங்களையும் நிறைவு செய்து விடுகின்றார். தானும் திருக்குடந்தையில் ஹேம முனிவரின் தவத்தை மெச்சும் வகையில் சார்ங்கம் ஏந்திச் **சார்ங்கபாணி** என்ற திருநாமத்துடன் தங்கி விடுகின்றார்; அரங்கநாதனைப் போலவே இவரும் கிடந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். திருக்கோயிலின் பின்புறமுள்ள பொற்றாமரைத் திருக்குளத்தின் கரையில் ஹேம முனிவருக்கு ஒரு சிறிய சந்நிதி உள்ளது. ஹேம முனிவரின் நினைவாக இத்திருக்குளம் **ஹேம புஷ்கரிணி** என்றும், இலக்குமி பொற்றாமரையில் பால கோமள வல்லியாக அவதரித்தமையால் **பொற்றாமரைக் குளம்** என்றும் திருநாமம் பெற்று வழங்குகின்றன.

இத்தலத்து எம்பெருமானைப் பூதத்தார், பேயார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார் என்ற ஏழு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். பூதத் தாழ்வார்,

> **படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்**
> **குடமூக்கில் கோயிலாகக் கொண்டு.**[6]

(குடமூக்கு - கும்பகோணம்)

என்று பாடுவார்; ஒரு புராண வரலாற்றையும் நினைவு படுத்துவார். ஒரு காலத்தில் நான்முகன் அமிர்தம், வேதங்கள்,

6.இரண்.திரு.97

படைப்பின் விதைகள் ஆகியவற்றை ஒரு கலசத்தில் (கும்பம்) சேர்ந்து அக்குடத்தை (கும்பம்-குடம்) மேரு மலையின் உச்சியில் வைத்திருந்தார். பிரளய காலத்தில் இக்குடத்தை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. அது வெள்ளத்தில் மிதந்து தெற்கு நோக்கி வந்தது. வெள்ளம் வடிந்ததும் திருக்குடம் கும்பகோணத்தில் (கும்பம்-குடம்; கோணம் - மூக்கு) தங்கியது. தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமான் ஓர் அம்பெய்து திருக்குடத்தை உடைத்தருளினார். குடத்திலிந்த அமுதம் இரண்டு பிரிவாகப் பாய்ந்து ஒன்று **மகாமகக் குளமாகவும்**, மற்றொன்று **பொற்றாமரைக் குளமாகவும்** அமைந்துவிட்டன. உடைந்த குடத்து ஓடுகளையும் அமிர்தத்தையும் சிவலிங்கமாக்கினார். கும்பத்திலிருந்த பெருமான் **கும்பேசர்** என்ற பெயருடன் கோயில் கொண்டு விட்டார். **ஊரும் கும்பகோணம்** என்ற திருப்பெயரைப் பெற்றது.

பக்திசாரர் என்ற சிறப்புத் திருநாமம் பெற்ற திருமழிசை யாழ்வார் இத்திருத்தலத்திற்கு எழுந்தருளுகின்றார்; ஆராவ முதனைச் சேவிக்கின்றார். பெருமான் வாய் திறந்து ஒரு சொல் பேசாமலும் கைகோலி அணைத்தருளாமலும் அயர்ந்து கண் வளரக் காண்கின்றார் ஆழ்வார். இவர் 'இஃது அர்ச்சாரவதார சமாதி' என்று திருவுள்ளம் பற்றாமல், ஏதோ அளவற்ற சிரமத்தால் இங்ஙனம் ஆழ்ந்து உறங்குவதாகக் கருதி,

நடந்த கால்கள் நொந்தவோ?
நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய்கு லுங்கவோ?
விலங்கு மால்வ ரைச்சுரம்
கடந்த கால்ப ரந்தகா
விரிக்க ரைக்கு டந்தையுள்
கிடந்த வாறெழுந் திருந்து
பேசு வாழி கேசனே.[7]

(ஞாலம்-பூமிப் பிராட்டி; ஏனம்-பன்றி; இடந்த-தோண்டித் தூக்கின; மெய்-திருமேனி; விலங்கு-தடை; மால்-பெரிய மலை; சுரம்-பாலை நிலம்; கால்-வாய்க்கால்)

என்று பாடுகின்றார். பக்தன் பாட்டு வீணாகுமா? '**கிடந்தவாறு எழுந்திருந்து பேசு**' என்ற ஆழ்வாரின் வேண்டுகோளுக்கு

7. *திருச். விரு.61.*

இசைந்து அப்படியே எழுந்திருக்க முயல்கின்றார். அது கண்ட ஆழ்வார் அர்ச்சாவதார சமாதி குலையவொண்ணாது என்று திருவுள்ளம்பற்றி '**வாழி கேசனே**' என்ற மங்களாசாசன முகத்தால் அப்படியே கிடந்தருளுமாறு வேண்டுகின்றார். எம்பெருமானும் தான் எழும் முயற்சியை நிறுத்திக் கொண்டாராம். இன்றைய அர்ச்சையில் '**தலை தூக்கிய நிலை**' விளங்குமாறு இருப்பதைக் காணலாம். இதனை '**உத்தான சயனம்**' என்று கூறுவர். இந்த ஆழ்வார் இத்திருத்தலத்தில் தங்கித் தவமியற்றித் திருநாடு அலங்கரித்தார் என்று அவர் வரலாறு தெரிவிக்கின்றது.

ஆண்டாள் ஆராவமுதனிடம் அளவு கடந்த ஈடுபாடு கொண்டவர். கண்ணன் என்னும் கருந்தெய்வத்தின்மீது கட்டுமீறி காதல் கொள்கிறார். தன்வயம் இழந்து கிடந்த நிலையில் இவ்வாறு பேசுகின்றார்!

ஆரே உலகத்து ஆற்றுவார்?
ஆயர்பாடி கவர்ந்து உண்ணும்
காரேறு உழக்க உழக்குண்டு
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை
ஆரா வமுதம் அனையான்தன்
அமுதம் வாயில் ஊறிய
நீர்தான் கொணர்ந்து புலராமே
பருகி இளைப்பை நீக்கீரே.[8]

(கவர்ந்து - கொள்ளை கொண்டு; கார் ஏறு - கறுத்த காளை; உழக்க - இம்சிக்க; உழக்குண்டு - துன்பப்பட்டு; அமுதவாய் - அமுதம் சுரக்கின்ற வாய்; பருகி - பருகும்படி செய்து)

திருமங்கையாழ்வாரும் ஆராவமுதனிடத்தில் அளவற்ற ஈடுபாடு கொண்டவர். இந்த ஆழ்வார் இத்தலத்துப் பெருமானை "**குடந்தை உத்தமன்**"[9] என்கின்றார்; "**தன் குடந்தை நகராளன்**"[10] என்று பேசுகின்றார்; "கொந்துலாம் பொழில் சூழ்க் குடந்தை தலைக்கோவினை... மறக்கேனே"[11] என்று உளம் உருகப் பாடுகின்றார்.

8. நாச். திரு 13 : 4.
9. பெரி. திரு 1.5 : 4.
10. மேலது 3.6 : 5.5 : 7
11. மேலது 7.3 : 3

தூவிசேர் அன்னம் மன்னும்
சூழ்புனல் குடந்தை யானைப்
பாவியேன் பாவியாது
பாவியேன் ஆயினேன்.[12]

(தூவி - சிறகு; பாவியாது - சிந்தியாமல்)

'பழுதே பல பகலும் போயின' என்று அங்கலாய்க்கின்றார். திருவுக்கும் திருவாகிய அழுந்தையில் மன்னிநிறை அஞ்சனக் குன்றம்தன்னைச் சேவிக்கும் போதும், இந்த நகர் எம்பெருமான் ஆழ்வார் மனக்கண்முன் காட்சி தருகின்றார்.

பேரானை குடந்தைப்
பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வளமுலையாள்
மலர்மங்கை நாயகனை
ஆரா இன்னமுதைத்
தென்அழுந்தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக்
கண்டு களித்தேனே.[13]

(இலங்கு - விளங்குகின்றது; மலர் மங்கை - இலக்குமி; ஆரா - தெவிட்டாத; அழுந்தை - திருவழுந்தூர்; முகில் - மேகம் (உருவகம்)

என்று எக்களிப்புடன் பாடுவதைக் காணலாம்.

எம்பெருமான் ஆசாரியனாக நின்று அவரிடம் திருமந்திர உபதேசம் பெற்ற ஆழ்வார்,

தூவிசேர் அன்னம் துணையோடு புணரும்
சூழ்புனல் குடந்தையே தொழுதுஎன்
நாவினால் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம்.[14]

(தூவி - சிறகு; துணை - பெண் அன்னம்)

என்று பாடுகின்றார்; "ஆரா அமுதப் பெருமானைத் திருங் குடந்தையில் சேவித்தேன்; தீய பொருள்களைப் பேசின வாயாலே திருமந்திரத்தை அநுசந்தித்து ஸ்வரூபம் பெற்றேன்" என்று மகிழ்கின்றார். "தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்"- என்றது பெருமாளும் பிராட்டியும் பிரியாது வாழும்

12. திருக்குறுந். 14.
13. பெரி.திரு.7.6: 9.
14. மேலது 1.1 : 2.

சேர்த்தியைச் சொன்னபடியாம். ஈண்டு அன்னம் என்றது பெருமானை; துணை என்றது பிராட்டியை. நம்முடைய குற்றங்களைப் பொறுப்பிப்பவளும் பொறுப்பவனும் பிரியாது வாழும் இடம் குடந்தை என்றபடி.

ஏனைய திருப்பதிகளைக் காட்டிலும் திருக்குடந்தையில் இந்த ஆழ்வாருக்கு ஆதரம் மிக்கது. முதல் திருமொழியில் இங்ஙனம் பேசிய ஆழ்வார் இறுதிப் பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்திலும் ''தண்குடந்தைக் கிடந்த மாலை, நெடியானை அடி நாயேன் நினைந்திட்டேனே''[15] என்று நாயகி நிலையில் திருக்குடந்தைக் கிடந்த மாலைப் பேசித் தலைக் கட்டுவதால் இந்த ஆதரம் உறுதிப்படுகின்றது. பரகால நாயகி நிலையிலும்,

பெற்றேன்வாய்ச் சொல்இறையும் பேசக் கேளாள்;
பேர்பாடி தன்குடந்தை நகரும் பாடி
பொற்றா மரைக்கயம்நீர் ஆடப் போனாள்;
பொருஅற்றாள் என்மகள்உம் பொன்னும் அஃதே.[16]

(இறை - *சிறிது; பேர் - திருப்பேர் நகர்; பொற்றாமரைக் குளம் - திருக்குளம்; பொரு - ஒப்பு*)

என்று தாய்ப் பாசுரமாகப் பேசுவர் ஆழ்வார். இங்கு ஆழ்வார் நாயகி எம்பெருமானையே '**பொற்றாமரைக் கயமாகப்**' பேசுகின்றாள் என்பது பொருந்தும். அகப்பொருளில் புணர்ச்சியைச் 'சுனையாடல்' என்றும், 'நீராட்டம்' என்றும் பேசுகின்றோமல்லவா? எம்பெருமானோடு கலவி செய்ய விரும்புவதையே இங்குப் பொற்றாமரைக் கயம் நீராட போவதாகச் சொல்லுகின்றாள். இங்கு இன்சுவை மிக்க பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்: ''மகள் 'அணியரங்கம் ஆடுதுமோ?' என்று ஊரைச் சொன்னாள்; தான் பொற்றாமரைக் கயமென்று பெரிய பெருமாளைச் சொல்லுகின்றாள்; 'தயரதன் பெற்ற மரகத மணித்தடம்' (திருவாய். 10,1 : 8) என்றும், ''வாசத் தடம்போல் வருவானே' (திருவாய். 8.5 : 1) என்றும் தடாகமாகச் சொல்லக் கடவதிறே'' என்பதாம். மேலும் 'உம்பொன்' என்கின்றது அல்லாத ஆழ்வார்களை; 'மத்துறு கடை வெண்ணெய் களவினிலுரவிடை யாப்புண்டு, எத்திறம்!

15. திருநெடுந். 29.

16. மேலது 19.

உரலினோ டிணைந்திருந்தேங்கிய எளிவே!' (திருவாய் 1 3 : 1) என்று அவதாரத்தை அநுசந்தித்தே அவர்கள் மோஹித்தது; அர்ச்சாவத்திலிறே இவள் மோஹிப்பது" என்ற வியாக்கியானப் பகுதியும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

இத் திருத்தலமும் எம்பெருமான் பற்றிய நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்களும் கல் நெஞ்சத்தையும் உருக்குவன. இதனாலன்றோ திருவாய்மொழி முற்றிலும் மறைந்த நிலையிலும் இத்திருவாய்மொழிப் பாசுரங்கள் மேல்நாட்டிலிருந்து காட்டு மன்னார் கோயிலுக்குப் போந்த பாகவதர்களின் நாவில் நடமாடியது? இத்திருவாய்மொழி தானே நாலாயிரம் முற்றிலும் பெற உற்ற திறவு கோலாயமைந்தது? ஆழ்வாரும் தாய்ப்பசுப் பக்கம் கிட்டி முகம்பெறாத கன்றுபோல் அமைந்து நோவு படுமாப்போலே அவன் சந்நிதியில் தளர்ந்து கிடந்து ஆர்த்தி யுடன் கூப்பிட்டு அலமருகின்றார். அர்ச்சையிலிருக்கும் எம்பெரு மானைச் "செரு நீர்த் திருக்குடத்தை, ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே' [17] என்று கூறிச் சேவிக்கின்றார். அதன் பின்னர், "திருக்கண்கள் மலர்ந்தாலன்றித் தரிக்ககில்லா அடியேன் இப்படிப் பட்டினி கிடந்து போக வேண்டியது தானோ? (2); கழிகின்ற நாட்களெல்லாம் உன் திருவடிகளையே பற்றிக்கொண்டு நடக்கும்படிக் கடைக்கண் நோக்க வேண்டும் (3); 'நான் உன்னைக் காண்பான் அலப்பு ஆய் (அலமந்து) ஆகாசத்தை நோக்கி அழுவன், தொழுவன்,' (4); உன் சரணம் தந்து என் சன்மம் களையாய் (7): என் அநாதி பாவங்களைத் தொலைத்து உன்னைப் பெறுவதொரு நல்விரகு பார்த்தருள வேண்டும் (6); உடல் தளர்ந்து என் உயிர் சரிந்து போம்போது இளையாது உன் திருவடிகளையே ஒருமிக்கப் பிடித்துப் போகும்படி திருவுளம் கொள்ள வேண்டும் (8); உன் திருவடி களைச் சேரும்படி நீயே வழி செய்ய வேண்டும் (5); நான் கண்டு அநுபவிக்கும்படி என் முன் வருதல் வேண்டும்(9); உனக்கு அடிமைப்பட்ட பிறகு இன்னும் உழல வேண்டு மோ?(10)" என்று கூவிக் கூவிக் கண்பனி சோருகின்றார். இத்திருவாய் மொழிப் பாசுரங்களை வாயார ஓதி உளங்கொள்ளுகின்றோம்.

இந்த எம்பெருமான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார்.

17. திருவாய் 5.8 : 1

இவரையும் தாயார் **கோமள வல்லியையும்** சேவித்த பின்னர் சந்நிதியை விட்டு வெளி வரும் நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே அழிக்கும் தளர்ச்சியோ - வானில்
திருமகுடம் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருங்குடந்தைக் கிடந்தாய் பேசு.[18]

(அளித்து - பாதுகாத்து; தளர்ச்சி - இளைப்பு; வானில் - விண்ணில்; மகுடம் - கிரீடம்; தைக்க - முட்ட; குறளாய் - வாமனனாய்; நீண்ட - நீண்டு வளர்ந்தருளிய)

என்ற பாசுரத்தையும் ஓதுகின்றோம்.

சூட்டோடு சூடாக (உண்மையில் பொடி காலைப் பற்று கிறது) ஆராவமுதனைச் சேவித்த விறுவிறுப்பில் சக்கரபாணி யையும் சேவிக்க விரும்புகின்றோம். தெற்கு நோக்கி நடந்து காவிரியின் தென் கரையிலுள்ள சக்கரபாணித் திருக்கோயிலுக்கு வருகின்றோம். இது ஒரு மாடக் கோயில்; ஒரு சிறிய கட்டு மலையின்மீது சந்நிதி உள்ளது. பெருமாள் ஏந்தியுள்ள சுதர்சன சக்கரம் எனப்படும் திருவாழி ஆழ்வான் உள்ளே எழுந்தருளி யுள்ளார். உற்சவர் சற்று உக்கிரமாகவே காணப்பெறுகின்றார். இருவரையும் சேவித்து விட்டு இராமசாமி சந்நிதிக்கு வர நினைக்கி ன்றோம்.

கும்பேசுவரர் கோயிலுக்கும் ஆராவமுதன் கோயிலுக்கும் (பின்புறம்) இடையிலுள்ள வீதி வழியாக இத்திருக்கோயிலுக்கு வருதல் வேண்டும். இது ஒரு கலைக்கோயில்; பழைய கோயில் அல்ல. பதினாறாவது நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் எழுந் திருக்க வேண்டும். இராமர் தம்பிமார்கள் மூவருடனும் அநுமனு டனும் திருமுடி கவிக்கும் நிலையில் எழுந்தருளியுள்ளார். நல்ல கம்பீரமான செப்புத் திருமேனிகள் இவை. இவை தாராசுரப் பகுதியில் மண்ணில் புதைந்து கிடந்தன என்றும், இராமனே தஞ்சையில் ஆண்ட அச்சுத நாயக்கன் கனவில் தோன்றி தான் இருக்கும் இடத்தைக் கூறினான் என்றும், அதன் பின்னர் அச்சுத நாயக்கனே அந்தத் திருமேனிகளை எடுத்துத் திருக்கோயில் எடுப்பித்துப் பிரதிட்டை செய்தான் என்றும் அறிகின்றோம்.

18. நூற். திரு. அந். 14

இத்திருக்கோயிலின் மகாமண்டபம் ஒரு பெரிய கலைக் கூடமாகக் காட்சி அளிக்கின்றது. மண்டபம் முழுதும் மிகப் பெரிய தூண்கள்; எல்லாம் நுணுக்க வேலைப்பாடுகள் மிக்கவை. இங்குள்ள கலைச் செல்வங்களைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமாயின் விளக்கம் தருவதற்கு **திரு.தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்** நம் அருகில் இருக்க வேண்டும். பல மணி நேரம் இம்மண்டபத்தில் கழிக்கலாம். மகாமண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் இராமாயணக் கதை முழுவதையும் 200 ஓவியங்களில் தீட்டி வைத்துள்ளமையைக் காணலாம். இவை யாவும் அண்மைக் காலத்தில் உண்டானவை. இவை இத்திருக் கோயிலில் இருப்பது மிகப் பொருத்தமே. இன்னும் கடந்து கருவறை சென்றால் திருமுடிகவிக்கும் கோலத்தில் இராமர் சேவை சாதிப்பதையும் காண்கின்றோம். பட்டாபிராமனைச் சேவித்து நம் இருப்பிடம் திரும்புகின்றோம்.

10. திருவிண்ணகர் ஒப்பிலியப்பன்

பாற்கடல் கடையப்பெற்றபொழுது எத்தனையோ பொருள்கள் தோன்றின. பெரிய பிராட்டியும், துளசி தேவியும் அவற்றுடன் தோன்றியவர்கள். பாற்கடல் நாதன் பிராட்டியைத் தன் திருமார்பில் தரித்துக் கொண்டான். துளசிதேவி தனக்கும் அங்ஙனமே இடம் ஒதுக்குமாறு வேண்டுகின்றாள். "இலக்குமி பன்னெடுங்காலமாகத் தவமியற்றியதன் பயனாக அவ்விடத்தைப் பெற்றாள்; நீ மார்க்கண்டேயர் தவம் புரியும் வனத்தில் துளசிச் செடி உருவில் தங்கியிருப்பாய். அப்பொழுது உனக்கும் நல்ல காலம் கிட்டும்" என்கின்றான் பாற்கடலுள் பையத் துயின்ற பரமன். துளசி தேவியும் அங்ஙனமே கங்கையிற் புனிதமான காவிரியின் தென்புறத்தில், குடமூக்கிற்கு அருகில், கீழ்த்திசையில் சுமார் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு துளசிச் செடியுருக்கொண்டு வாழ்ந்து வருகின்றாள்.

இதே சமயத்தில் தவத்தில் மேம்பட்டு நின்ற மிருகண்டுவின் புதல்வராகிய மார்க்கண்டேயர் சிரஞ்சீவித்வம் பெற்ற பிறகு திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு பல தீர்த்தங்களில் நீராடிப் பரமபதநாதனைச் சேவித்துக் கொண்டு துளசிதேவி வதியும் காட்டிற்கு வந்து சேர்கின்றார். இவ்வனம் இயற்கை எழில் நிரம்பப்பெற்றதாயும் தனிமையில் நின்று தவம் இயற்றுவதற்கு ஏற்றதாயும் இருப்பதைக் கண்டு இவ்விடத்தைத் தாம் தவம் புரியும் இடமாகத் தேர்ந்தெடுக்கின்றார். பூ தேவியைத் தம் திருமகளாகப் பெற்று இத்தலத்து எம்பெருமானை மணவாளப் பிள்ளையாகப் பெறல் வேண்டும் என்பது இவர் தம் பேரவா. இவ் வவாவை நிறைவேற்றுவதன் பொருட்டுக் கடுந்தவம் புரியத் தொடங்குகின்றார். இத்திருத்தலத்தில் தங்கித் திருக்கோயிலின் அருகிலுள்ள திருக்குளத்தில் முப்போதும் தீர்த்தமாடிக் காய், கனி, கிழங்கு இவற்றையே உணவாகக் கொண்டு ஒரு திருத்துழாய்ச் செடியருகில் அமர்ந்து தவம் இயற்றி வருகின்றார்.

திருப்பாற்கடல் நாதன் முனிவருக்கு அருளத் திருவுளம் கொண்டு 'அகிலகில்லேன் இறையும்' என்று தம் திருமார்பில் உறையும் திருமகளிடம் மண்ணுலகில் தவம் புரியும் மார்க்கண்டேயருக் கருகில் ஒரு திருத்துழாய்ச் செடிக்கருகில் இரண்டாண்டுப் பெண் குழந்தையாகக் கிடக்குமாறு கூறுகின்றான். அங்ஙனமே பெரிய பிராட்டியும் குழந்தையாகக் கிடக்கின்றாள். முனிவரும் அக்குழந்தையை எடுத்து 'பூமிப்பிராட்டி' என்ற பெயரிட்டு வளர்த்து வருகின்றார். எம்பெருமான் வயது முதிர்ந்த ஓர் அந்தணர் உருவத்துடன் முனிவர் முன் வந்து தோன்றி அவர்தம் மகளைத் தமக்கு மணம் புரிவிக்குமாறு வேண்டுகின்றான். முனிவரும் அந்தணரின் வயதுப் பொருத்தமின்மையை எடுத்துக்காட்டி இப்பருவத்தில் மணப்பதைக் கைவிடுமாறு வேண்டுகின்றார். முனிவரின் நல்லுரை அந்தணரின் செவியில் புகவில்லை. தமக்கு மணம் புரிவிக்காவிடில் முனிவரின் எதிரிலேயே உயிரை விட்டு விடுவதாகக் கூறுகின்றார். இதைக் கேட்ட முனிவர் தம் மகள் அட்டில் தொழிலை அறியாதவள்; உணவிற்கு உப்பிடத் கூடத் தெரியாதவள். இவற்றைத் கருதியாயினும் மணம் புரிந்து கொள்ளும் எண்ணத்தைக் கைவிடுமாறு வேண்டுகின்றார். தமக்கு ஒரு வழி காட்டுமாறு எம்பெருமானைச் சரணடைய முடிவு செய்து தன் துயரைத் தீர்க்குமாறு அவன் திருவடி பணிகின்றார்.

எம்பெருமானைத் துதித்தவர் தம் மகளின் கருத்தையும் கேட்டறிய விரும்புகின்றார். தம் மகளிடம் முதியவரை மணம்புரிய ஒருப்படும் எண்ணத்தை வினவுகின்றார்; மணம் புரிவிக்காவிடில் அந்தணர் உயிரை விடுவதாகக் கூறுவதையும் எடுத்துக்காட்டுகின்றார். மகளும் தான் கிழவரை மணக்க விரும்பாததையும், வற்புறுத்தினால் தானும் உயிரை விட்டுவிடத் தயாராக இருப்பதையும் தெரிவிக்கின்றாள். முனிவர் இருதலைக் கொள்ளியின் எறும்பு போலாகித் தவிக்கின்றார். எம்பெருமானைச் சரண் அடைந்து தம் துயர் போக்குமாறு வேண்டிய வண்ணம் தியானத்தில் ஆழ்ந்து விடுகின்றார். நெடும்போது கழித்துத் தம் கண்களைத் திறக்கும்போது அந்தண முதியவர் காணப் பெறவில்லை. இளமை வடிவத்தில் திருவாழி, திருச்சங்கு ஏந்திய வண்ணம் காட்சி தருகின்றான் எம்பெருமான். பொன்னாடை அணிந்த திருவரையில் ஒருகையும் கன்னிகா தானத்தை ஏற்கும் முறையில் ஒரு கையுமாக நிற்கின்றான். முனிவரும் தம் மகளை எம்பெருமானுக்கு மணம் புரிவித்தற்கு

இசைகின்றார். நான்முகனே வந்து தேவர்கள் புடைசூழ ஐப்பசித் திங்களில் திருமணத்தை நடத்தி வைக்கின்றான். எம்பெருமானும் தான் இத்தலத்தில் என்றும் உறையவும், எல்லா நன்மை களையும் அளிக்கவல்ல இத்திருத்தலம் மார்க்கண்டேயர் பெயரால் விளங்கவும், உப்பின்றி எம்பெருமான் அமுது செய்யும் உணவு அடியார்கட்கு மிக்க சுவையுடையதாக இருக்க வேண்டும் எனவும், முனிவர் வேண்டிய மூன்று வரங்களையும் அளிக்கின்றான். எம்பெருமான் விண்ணுலகினின்றும் இத் தலத்தை விரும்பி வந்தபடியால் அவன் விருப்பப்படி இத்திருத்தலம் '**திருவிண்ணகர்**' என்ற பெயர் பெறுகின்றது. மார்க்கணடேயரும் துளசிதேவியும் தவம் புரிந்த இடமாதலால் '**மார்க்கண்டேய க்ஷேத்திரம்**', '**துளசி வனம்**' என்ற திருநாமங் களையும் பெறுகின்றது. இத்திருத்தலத்தில் துளசியின் இதழ் களால் அருச்சனை செய்விப்பவர் ஒவ்வோர் இதழுக்கும் அசுவமேத வேள்வியின் பயனைப் பெறுவர். இத்திருத்தலத் திற்கு நடந்து செல்வோர் ஒவ்வோரடிக்கும் மிக்க புண்ணியத்தை அடைவர். பசுவின் குளம்பளவு நிலத்தை எம்பெருமானுக்கு காணிக்கையாகத் தருவோர் வீடுபேறு அடைவர். சந்தனம், குங்குமம், மலர்கள் இவற்றை வழங்குவோர் பார்ப்பனரைக் கொன்ற பாவத்தினின்றும் நீங்கப்பெறுவர். தூபக்கால், தீபக்கால், அர்க்கிய பாத்திரம், திருமஞ்சனப் பாத்திரம், வெண்கல மணி, ஆடை முதலியன வழங்குவோர் எல்லாப் பாவங்களி னின்றும் விடுபடுவர். எம்பெருமானுக்கு ஏதாவது உற்சவத்தை நடத்தி வைப்போர் மக்கட் செல்வத்தை அடைவர். பங்குனிச் சிரவணத்தன்று அதிகாலையில் திருக்கோயில் திருக்குளத்தில் தீர்த்தமாடி, தானங்களைச் செய்து மறையோர் ஐவருக்குத் திருக்கன்னலமுது (பாயசம்) வழங்கி எம்பெருமானை வணங்கு வோரின் ஐம்பெரும் பாதகங்கள் தீயினில் தூசாகும். '**துளசி வனம்**' என்று மொழிந்த அளவிலேயே பாவங்கள் பறந்து போகும். திருத்தலமான்மியத்தின் வரலாற்றைச் சிந்தித்த வண்ணம் இத்திருத்தலத்திற்கு புறப்படுகின்றோம்.

ஒப்பிலியப்பன் சந்நிதி கும்பகோணத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது; குடந்தையிலிருந்து அடிக்கடி நகரப்பேருந்து வசதி உண்டு. தொலைவிலுள்ள சில ஊர்கட்குப் போகும் பேருந்துகளும் இச்சந்நிதி வழியாகச் செல்லும். நாகேஸ்வர இருப்பூர்தி நிலையத்திலிருந்தும் இச்சந்நிதிக்குச்

செல்லலாம்; இந்நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது இத்திருத்தலம். ஒரு சிறு பயணிகள் விடுதியும் உள்ளது; நல்ல உணவு விடுதிகள் இல்லை. எனவே, புதிதாக வருபவர்கள் கும்பகோணத்தில் நல்ல விடுதியொன்றில் தங்கிக்கொண்டு இத்திருத்தலச் சேவைக்குப் போதல் சிறந்தது. நாம் கும்பகோணத்திலிருந்தே இத்திருத்தலத்திற்கு நகரப் பேருந்து மூலம் புறப்படுகின்றோம்.

ஒப்பிலியப்பனைப்பற்றிய ஆழ்வார் பாசுரங்கள் நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றன. எம்பெருமானைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார், இந்த எம்பெருமானை **'விண்ணகருள் பொன்மலை'** என்று உருவகிக்கின்றார். பெரிய திருமொழியில் மூன்று திருமொழி களில் எம்பெருமானிடம் தம் நிலையை முறையிடு கின்றார். முதல் திருமொழியில்,[1] சம்சாரத்தில் தமக்கு உண்டான வெறுப்பையும் விண்ணகரப்பனிடம் தமக்கு உள்ள விருப்பை யும் அவனது திருவுள்ளத்தில் படும்படி ஒரு முறைக்கு ஒன்பது முறை விண்ணப்பிக்கின்றார். "விண்ணகர் மேவிய எம்பெரு மானே, இவ்வுலகமெல்லாம் பிறர் வசப்பட்டிருக்கையில், நின் திருவடிகளைப் பரப்பி இலச்சினை பட நடந்து அவற்றை ஆட்படுத்திக் கொண்டது போலவே, அடியேனையும் ஆட் படுத்திக் கொள்ள வேண்டும். (1); பாற்கடல் கடையப் பெற்ற பொழுது அதில் தோன்றிய நஞ்சினை அரனுக்கு உண்ணக் கொடுத்தாய்; புறவமுதாகிய உப்புச் சாற்றினை உம்பர்கட் களித்தாய்; **"சீதக்கடலுள் அமுது"** அன்ன பிராட்டியாகிய உள்ளமுதினை நீ ஏற்றுக் கொண்டாய் (2); கரிய திருமேனியை உடையாய், உன் திருமேனியில் சிவனுக்கு வலப்புறத்தில் இடமளித்தாய்; திரிபுரம் எரித்தபோது அவனுக்கு அழல்நிற அம்பானாய் (3); பிரளய காலத்தில் இரு சுடர்களையும் பல்வேறு உலகங்களையும், அவற்றிலுள்ள பிராணிகளையும் நின் திருவயிற்றில் வைத்துப் பாலகனாய் ஓர் ஆலிலையில் திருக்கண் வளர்ந்தாய் (4); ஒலிகட்கெல்லாம் மூல காரணமான அகரமாக இருக்கின்றாய் (5); அசித்தைத் திருமேனியாகக்

1. பெரி. திரு. 6.1

கொண்டாய்; நான்மறைகளின் வடிவமுடையாய் (6); பிரணவத்தின் பொருளாய்த் திகழ்கின்றாய் (7); மங்கையர்பால் காதலைப் பெருக்கிச் சிற்றின்பத்தை நுகர்வதால் பின்னையும் வரும் துன்பத்திற்குக் காரணமான கர்மத்தை நினைந்து அஞ்சி நின் திருவடிகளைச் சரண் அடைகின்றேன் (8); பிறப்பு - இறப்பு வட்டங்களில் உள்ள துன்பங்களை நினைந்து நின் திருவடிகளை அடைந்தேன் (9); உன்னைச் சேவிப்பதாகிய ஒரு பேற்றினை எனக்கு அருள் செய்வாயேல், அடியேன் 'இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான் வேண்டேன்' என்று பேசுகின்றார்.

இனி, தான் அநாதிகாலம் சம்சாரத்தில் உழன்ற படியையும், மேல்வரக்கடவதான நரக யாதனயை நினைத்து அஞ்சுகின்ற படியையும் பரக்க விண்ணப்பம் செய்கின்றார்.[2] "திருவிண்ண கரத்து எம்பெருமானே, நின்னைத் துதித்தற்குரிய சொற்களைக் கொண்டு அற்பர்களைத் துதிக்கும் எண்ணமுடையவனானேன்; ஐம்புல இன்பங்களை நுகர்ந்து தீர்த்தேன்; ஓரொரு காரணத்தை முன்னிட்டுப் பிறரிடமுள்ள அன்பையும் பகையையும் வெறுத் தொழித்தேன்; உன்னைச் சரண் அடைந்தேன் (1); நெடுங் காலம் நின்னை நினையாது மறந்தேன்; அசித்திலும் கடை கெட்டவனானேன்; பிறப்பிறப்பு வட்டத்தில் சிக்கித் தடுமாறி னேன்; இன்று நின் திருவடிப் பேற்றிற்குத் தகுதியானேன். (2); இரண்டு விபூதிகட்கும் நாதனே, மிக்க அன்புடன் என் உள்ளத்தை இடமாகக் கொண்டு தேனைப்போல் இனியனா யிருப்பவனே, 'தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றம் மிகுமுடல்' பயனற்றமை நன்கறிந்து நின்னைச் சரண்டைந்தேன் (3); பெற்ற பிள்ளைகள் மனைவியர் முதலிய சுற்றத்தார் நான் இறக்கும்போது உதவி செய்பவரல்லர் என்பதையறிந்து அவர்களைக் கைவிட்டேன்; நீ பார்த்தனுக்கு அருளிய சரம சுலோகம் என்ற ஒள்வாள் உருவி வினைத் தூறுகளை வேரறுத்தேன்; நின்னைச் சரண் அடைந்தேன் (4); இதுகாறும் நீர்க்குமிழிகள்போல் இருந்து கழிந்த அரசர்கள் பல்லாயிரம் பேர்கள் 'இறந்தனர்' என்ற சொல்லுக்கு இலக்காயினர். ஆகவே, உலக வாழ்வில் வெறுப்புற்று நித்திய ஐசுவரியம் பெறுவதற்காக நின்னை வந்தடைந்தேன். (5); நல்வழி நடக்க உடன்படாத ஐம்பொறிகளும் போகும்

2. பெரி. திரு. 6.2.

வழியில் போகேன்; நீயே மல்லர்களை அடக்கிய மாமல்லன்; மதிள் நீர் இலங்கையழித்த வில்லன்; எனவே நின்னைச் சரண் அடைந்தேன் (6); ஐம்பொறிகளாகிய படுகொலைக்காரர் கையில் இனி ஒரு நொடிப்பொழுதும் நலிவு படமுடியாது; இந்தக் கணத்திலே அடியேனை உனதருளால் வாங்கிவிட வேண்டு கின்றேன் (7); வினையார் சுற்றத்தார்போல், சுற்றிக்கொண்டு என்னை வெந்நரகில் தள்ள விரைகின்றனர்; ஆகவே நின்னைச் சரண் அடைந்தேன் (8); நீயோ பிராட்டிமாரும் நித்திய சூரிகளும் விரும்பிப் போற்றும் பெருமையுடையவன்; கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்றமையால் ஏற்றம் பெற்றவன்; திருமறைகளால் போற்றப் பெறுபவன் (9); ஆகவே நின்னைச் சரண் அடைகின்றேன்'' என்கின்றார்.

மேலும் பேசுகின்றார்: தமது புருஷார்த்தம் இன்னது என்பதையும், திருநாட்டில் எம்பெருமானின் தாளிணைக்கீழ் வாழ்ச்சியில் தமக்குப் பிறந்துள்ள பேரவாவையும் விரிவாக விண்ணப்பிக்கின்றார்.[3] ''நின்னை அநுபவிப்பதால் உண்டாகும் பேரின்பத்தைத் துறவேன்: நின் திருமேனியின் எழிலை என்றும் மறவேன்: சம்சாரத்தில் பிறக்க எண்ணேன்; நினக்கு அடிமைப்பட்டதால் சம்சாரத் தளை நீங்கப் பெற்றேன் (1); உலகப்பொருள்களில் பற்று, அவை கைகூடாவிடில் வரும் சினம், உடலைப்பற்றி வரும் உறவினரின் பற்று இவற்றைக் கைவிட்டேன்; நின் திருவடிகட்கு அடிமை பூண்டேன்; அறமே வடிவெடுத்த நின்னை என் நெஞ்சத்தில் நிலைநிறுத்திக் கொண்டேன் (2); நீயோ குறுங்குடியில் எளியனாயிருப்பவன்; திருநறையூர் தேனாக இனிப்பவன்; மான் போன்ற பார்வையையுடைய மாதர்களின் கண் அம்புக்கு அஞ்சி ஓடிவந்து நின்னைச் சரண் அடைந்தேன் (3); மாதர் இன்பத்தில் மதி கெட்டு மூழ்கினேன்; இதனால் வெந்நரகில் அழுந்தும் பலனைப் பெற்றேன்; நற்பேறாக உய்ந்து நின் திருவடிகளை அடைந்தேன் (4); நின்னையன்றி வேறொரு தெய்வத்தை நினைப்பேனல்லேன்; எல்லோரிலும் மேலானவனான நின்னை என் நெஞ்சில் நிறுத்தி கிடைத்தரியனவற்றைப் பெற்றேன்; சம்சாரத்தில் பிறவாமை யாகிய பேற்றினையும் பெற்றேன் (5); எழுகடல்கள், பூமி, சந்திரன், சூரியன், குலபர்வதங்கள் ஆகியவை யாவும் நீயே; சர்வ சரீரியாகிய நின்னையன்றி

3. மேலது 6.3.

வேறு தெய்வத்தை அறியேன் (6); தேவரீர் சாரமாக ஒன்று சொல்லியருள வேண்டும்; அதற்குமேல் அடியேன் வாய் திறக்க வாய்ப்பு இருக்கக்கூடாது (7); (அஃதாவது 'ஆழ்வீர், உம்மைத் திருவடி சேர்த்துக் கொண்டேன்'); தேவரீர் பக்கம் நெஞ்சைச் செலுத்தியிருக்கும் அடியேனுக்கு பரமபதம் கிடைக்கும் நாள் எதுவோ அந்நாளை அருளிச் செய்ய வேண்டும் (8); பிராட்டி இணை பிரியாதிருக்கும் போது அடியேனுக்கு என்ன குறை? கருமங்கள் நெருங்காமல் பாதுகாக்க வேண்டும்; அவை 'தீயில் தூசாகும்படி' அருளிச் செய்தல் வேண்டும் (9)'' என்று வேண்டுகின்றார்.

நம்மாழ்வார் திருவிண்ணகரப்பனை அநுபவிப்பதையும் சிந்திக்கின்றோம். இந்த ஆழ்வார் பரத்துவத்தை அர்ச்சையில் காண்கின்றார். உலகில் தம்மில் தாம் சேராத மாறுபட்ட பொருள்கள் யாவற்றிலும் எம்பெருமானுடன் அந்தர்யாமியாய்ச் சேர்ந்திருக்கும்படியைக் கண்டு மகிழ்கின்றார்; வியக்கின்றார். ''வறுமை-செல்வம், நரகம்-சுவர்க்கம், பகை-நட்பு, நஞ்சு-அமுது என்று ஒன்றோடொன்று பொருந்தாத பொருள்களாய் விரிந்திருக்கும் எம்பெருமான் என்னை அகப்படுத்திக் கொள்ளவே இங்ஙனம் இருக்கின்றார்; ஒருவனை அகப்படுத்த நினைத்தார் ஊரை வளையுமாறு போலே (1); இன்பம்-துன்பம், கலக்கம்-தோற்றம், சீற்றம்-அருள், தழல்-நிழல் என்று இவை எல்லாவற்றாலும் கண்டு கோடற்கரியவன் திருவிண்ணகரப்பன் (2); இன்பம் நுகர்ந்திருக்கும் நகரத்திலுள்ளார்-பயிர்த்தொழில் செய்து கொண்டு தேக யாத்திரை நடத்திக் கொண்டிருக்கும் நாட்டிலுள்ளார், அறிவு-அறியாமை, ஒளி-இருள், பூமி-ஆகாயம் என்று இருப்பவன் திருவிண்ணகர்மேய பிரான்(3); புண்ணியம்-பாவம், புணர்ச்சி - பிரிவு, நினைவு-மறதி, உண்மை - இன்மை என்று சிறப்பாகத் தோன்றுகின்ற விபூதிகள் யாவும் திருவிண்ணகரப்பன் கருணையால் உண்டாயின (4); வஞ்சனை-நேர்மை, கருமை-வெண்மை, மெய்-பொய், இளமை-முதுமை, புதுமை-பழைமை இவை திருவிண்ண கரப்பன் வைத்து வளர்க்கின்ற சோலைகள் (5); மூன்று உலகங்கள்-பரமபதம், மகிழ்ச்சி-சீற்றம், அவதாரத் திருமேனி, நீண்டநாள் நிலைபெற்றிருக்கும் திருமேனி, வஞ்சனையான காரியங்களைச் செய்பவன் - என்று விண்ணகரில் எழுந்தருளியிருப்பவன் திருவடிகளன்றிப் புகல் ஏதும் இல்லை (7); தேவர்க்குச் சிறந்த புகலிடம் - அசுரர்கட்குக் கொடிய யமன்,

சரண் அடைந்தவர்களைக் காத்தல் - அடையா தாரைக் காவாதிருத்தல் என்ற நிலையில் எழுந்தருளி யிருப்பவன் என்னை ஆளும் அப்பன் (8); விண்ணகரான் எனக்கு அப்பன், செவிலித்தாய், நற்றாய், எனக்குப் பொன்னைப் போன்றவன், மணியைப்போன்றவன், முத்தைப் போன்றவன் (9); நிழல் - வெய்யில், சிறுமை - பெருமை, குறுமை - நெடுமை, திரிபவை - நிற்பவை, மற்றும் ஆயவை - அவை அல்லவை என்ற நிலைகளி லுள்ள விண்ணகரப்பனின் திருவடிகளன்றி வேறு ஒரு பற்றுக் கோடும் இல்லை(10)'' என்கின்றார்.

இந்த மனநிலையில் ஒப்பிலியப்பன் சந்நிதியை அடைகின்றோம்.

என்னப்பன் எனக்காய் இகுளாய்
என்னைப் பெற்றவனாய்
பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பன்
என்னப் பனுமாய்
மின்னப் பொன்மதின் சூழ்திரு
விண்ணகர் சேர்ந்த அப்பன்
தன்ஒப்பார் இல்அப்பன் தந்தனன்
தனதாள் நிழலே.[4]

(இகுளை-செவிலித்தாய்; தன் ஒப்பார் இல் அப்பன் - ஒப்பிலி அப்பன் ; தாள் - திருவடி)

என்பது திருவாய்மொழி. நம்மாழ்வார் இப்பாசுரத்தில் குறிப்பிடும் 'தன் ஒப்பார்இல் அப்பன்'தான் சுருங்கிய முறையில் **ஒப்பிலியப்பன்.** *தல மான்மியப்படி உப்பில்லா உணவைத் திருவமுது செய்பவனாதலால்* **'உப்பிலியப்பன்'** *என்றும் வழங்கப் பெறுகின்றான். இப்பாசுரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், என்னப்பன், திருவிண்ணகரப்பன் என்ற ஐந்து வடிவங்களுடன் ஆழ் வாருக்குக் காட்சி அளித்ததாகத் தெரிகின்றது.*

இனி, நாம் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். நுழைந்ததும் நாம் வடபுறத்தில் காண்பது 'அஹோராத்திர புஷ்கரிணி.' இதற்கு இப்பெயரமைந்தது ஒரு விசித்திரமான கதை. **தேவசர்மா** *என்ற ஓர் அந்தணன்; பரத்துவாச முனிவரின்*

4. *திருவாய். 6.3 : 9.*

மரபில் தோன்றியவன். திருமறைகளைக் கரை கண்டவன். ஒரு சமயம் சோலையில் மலர் கொய்து கொண்டிருந்த ஜைமினி முனிவரின் புத்திரியைக் கட்டாயப்படுத்திப் புணர்ந்தான்; அக்கன்னிகை தன் தந்தையின் செவியில்படும்படி கதறினாள். முனிவர் சினந்து தன் புதல்வியைக் கெடுத்த அந்தணனைக் கிரௌஞ்சைப் பட்சியாகுமாறு சபித்தார். தேவசர்மா தான் செய்த குற்றத்திற்கு மிக வருந்தி சாப விடுதலை வேண்டினான். முனிவர் மார்க்கண்டேய க்ஷேத்திரத்தினுள்ளிருக்கும் பொய்கைக் கரையிலுள்ள ஒரு மரக்கிளையில் தொங்கி நிற்கும்படியும், ஒரு சமயம் புயல் காற்றினால் அக்கிளை ஒடிந்து புஷ்கரிணியில் விழும்போது அதன் புண்ணிய தீர்த்தம் அப்பறவையின்மீது பட்டுச் சாபம் நீங்கும் என்றும் கூறினார். அவ்விதமாக அந்தண இளைஞன் சாபம் நீங்கப் பெற்றான். புண்ணிய தீர்த்தங்களில் இரவு நேரங்களில் நீராடக் கூடாது என்பது பொதுவிதி. அதற்கு விலக்காக இரவில் நீராடிய கிரௌஞ்சப்பட்சி சாபவிமோசனம் பெற்றதால் இந்தப் புஷ்கரிணி '**அஹோராத்திரி புஷ்கரிணி**' என்ற திருநாமம் பெற்றது; இப்பெயரால் இன்றும் வழங்கி வருகின்றது.

உப்பும் மிளகும் கலந்த கலவையைக் கொண்டு செல்லும் நாம் அதனைக் கருடன் சந்நிதிக்கு முன்புறத்தில் அமைந்துள்ள இரண்டு திருவடிகளில் சேர்த்து அப்பால் செல்லுகின்றோம். (இதனால் சருமநோய் அணுகாது என்று சொல்லப் பெறுகின்றது). கருவறையில் எம்பெருமான் **ஒப்பிலியப்பன்** நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான். கிட்டத்தட்ட எட்டடி உயரம்; கம்பீரமான தோற்றம். பால் வடியும் திருமுகம். திருவரையில் **பொன்னாடை**, இரண்டு திருக்கைகளில் திருவாழியும் திருச்சங்கும் இலங்குகின்றன. ஒரு கை திருவரையில் பொருந்த, மற்றொன்று மார்க்கண்டேய முனிவரிடம் கன்னிகாதானத்தை ஏற்கும் நிலையில் அமைந்துள்ளன. அழகனுக்கு ஏற்ற அழகுள்ள தாயார் **பூமிதேவி**. இவர் இருந்த திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் எழுந்தருளியுள்ளார். மார்க்கண்டேயர் தெற்கு நோக்கி அமர்ந்து கன்னிகாதானம் செய்து கொடுக்கும் கோலத்தில் காட்சி தருகின்றார். இத்திருக்கோயிலில் தாயாருக்கென்று தனிச் சந்நிதி இல்லை. பூமிதேவி நாச்சியாரைப் பிரிந்து பெருமாள் மட்டிலும் தனியாக வெளியில் எழுந்தருள்வது இல்லை. இங்கு நடை பெறும் திருவிழாக்களில் ஐப்பசி மாதம் திருவோணத்தில் தொடங்கிப் பத்துநாட்கள் நடைபெறுவது திருக்கல்யாண

உற்சவமாகும். நம்மாழ்வார் என்னப்பன், பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், திருவிண்ணகர் ஒப்பிலியப்பன் என்ற ஐவரையும் மேலே குறிப்பிட்ட பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளதாகக் கண்டோமன்றோ? சந்நிதியின் உட்கட்டடத்திற்கு வெளியே வடபுறத்தில் புஷ்கரிணிக்கு எதிரே தனியாக என்னப்பன் சந்நிதியும், தென்புறத்தில் நந்தவனத்துக்குள் மணியப்பன் சந்நிதியும் உள்ளன. இவர்களையெல்லாம் சேவித்தபின் மற்ற சந்நிதிகட்கும் செல்லலாம்.

வேதாந்த தேசிகன் சந்நிதி ஆலயதிற்குள் கருவறைக்கு வெளியே மிக அருகில் அமைந்துள்ளது. உட்சுற்றில் வலம் வருங்கால்வெளி மண்டபத்தில் வடபுறத்தில் ஆழ்வார்கள் சந்நிதியும், அடுத்துக் கண்ணன் சந்நிதியும், அதற்குக் கிழக்கே இராமர் சந்நிதியும் உள்ளன. உட்கட்டடத்திற்கு வெளியே கருவறையை நோக்கிய கருடன் சந்நிதியும் வீதியிலிருந்து ஆலயத்தினுள் புகும்போது முதலில் வணங்குவதற்குப் பாங்காக ஒரு சிறிய கண்ணன் சந்நிதியும் உள்ளன. இங்கு தேசிகனுக்கு மிக முக்கியத்துவம் உண்டு. பெருமாளும் பெருமாட்டியும் கண்டருளும் எல்லா உற்சவங்களிலும் பெரும்பாலும் தேசிகனும் உடன் எழுந்தருள்வது நெடுநாளைய வழக்கமாக இருந்து வருகின்றது. இந்தச் சந்நிதி வடகலை வைணவ சம்பிரதாயத்தைச் சார்ந்தது. வைகானச ஆகமமுறைப்படி வழிபாடுகளும் சிறப்பான உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன.

திருவிண்ணகரப்பன் காவிரி தீரத்தை நாடி வந்தமையால் இவனைத் தேடி கங்கை, யமுனை, கோதாவரி என்ற மூன்று நதிகளும் ஓடி வந்துள்ளன. கோவிலுக்குத் தெற்கே ஓடும் நட்டாறே தட்சிண கங்கை. அதற்கும் தெற்கே ஓடும் கீர்த்திமானாறே தட்சிண கோதாவரி. அதற்கும் தெற்கே ஓடுவது தட்சிண யமுனை. இது **'அரி சொல்லாறு'** (அரிசிலாறு) என்று வழங்கப்பெறுகின்றது. இச்செய்திகளையெல்லாம் அறிந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

கையும் உரையும் கருத்தும்உனக் கேஅடிமை
செய்யும் படிநீ திருத்தினாய் - ஐயா
திருவிண் ணகராளா சிந்தையினும் எண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு.[5]

5. நூற். திருப். அந். 16.

(உரை - வாக்கு; கருத்து - எண்ணம்; பெருவிண்ணகர் - தேவர் உலகம்; பேறு - செல்வம்).

என்ற பாசுரத்தை கருடன் சந்நிதிக்கு முன்னே நின்று ஓதி உளங் கரைகின்றோம். ''உன் விஷயத்தில் பயன்படுமாறு என் திரிகரணங்களையும் செய்தாயாதலால் பேரின்பத்திற்கு உரிய இடமான பரமபதத்திற்குச் செல்ல இணங்குவேனேயன்றிச் சில காலம் சிற்றின்ப அநுபவத்திற்கே உரிய உம்பருலகத்து இந்திர பதவியைத் தந்தருளினாலும் அதனைச் சிறிதும் பொருட் படுத்தேன்'' என்கின்றார். இங்ஙனம் பரிபூரண பிரம்மாநுபவம் பெற்ற நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

11. நந்திபுர விண்ணகரத்து நாதன்

நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களும் வேதவியாசரால் வகுக்கப்பெற்ற நான்மறைகளின் தன்மையைப் பெற்றுள்ளன என்ற கருத்தினைச் சிந்திக்கின்றோம். நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களும் வேதங்கள் நான்கின் தானத்தில் அருளிச் செய்யப் பெற்றுள்ளன ஆசாரிய ஹிருதயத்தில்.[1]

> **இயற்பா மூன்றும், வேதத்திரயம் போலே;**
> **பண்ணார்பாடல், பண்புரை இசைகொள்**
> **வேதம் போலே.**[2]

(திரயம் - மூன்று).

என்பது ஆசாரிய ஹிருதயம். நாலாயிரத்தில் இயற்பா பிரிவிலுள்ள திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய மூன்று பிரபந்தங்களும், இருக்கு யசுர், அதர்வணம் என்னும் மூன்று வேதங்களின் தானங்களில் கோடல் வேண்டும். 'பண்ணார் பாடல்' (திருவாய். 10.7 : 5) என்று சிறப்பிக்கப் பெறும் திருவாய்மொழி **சாமவேதத்தின்** தானத்திலே கோடல் வேண்டும். 'பண்புரை வேதம்' (திருவாய். 6.6 : 5) 'இசைகொள் வேதம்' (பெரி. திரு 5.3:2) என்ற தொடர்கள் **சாமவேதத்தினைக்** குறிப்பிடுவனவாகும். திருவாய்மொழி பண்ணையும் இசையை யும் உடைத்தாகையாலே சாமவேதத்துக்குப் பண்ணும் இசையும் உண்டு என்பதனை அறிவித்தவாறு.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் கும்பகோணத்தில் நாம் தங்கியிருக்கும் விடுதியினின்றும் நந்திபுர விண்ணகரத்திற்குப் புறப்படுகின்றோம். இது கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து தென்மேற்கு மூலையில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. அடிக்கடிப் பேருந்து வசதி இல்லாததால் நாம் ஒரு மாட்டுவண்டியை அமர்த்திக்

1. ஆசா. ஹி.43.
2. மேலது - 50.

கொண்டு செல்லுகின்றோம். வயல் வெளிகளினூடே குறுக்கும் நெடுக்குமாக அமைந்துள்ள சாலைகளின் வழியாக வண்டி செல்லும்போது இருமருங்கும் உள்ள இயற்கைக் காட்சிகளை அநுபவித்த வண்ணம் செல்லுகின்றோம். நந்திபுர விண்ணகரத்து எம்பெருமானை திருமங்கையாழ்வார் மட்டிலுமே மங்களா சாசனம் செய்துள்ளார்.

தீதுஅறு நிலத்தொடுஎரி காலினொடு
நீர்கெழு விசும்பும் அவையாய்,
மாசுஅறு மனத்தினொடு உறக்கமொடு
இறக்கை அவை ஆய பெருமான்,
தாம்செற உளைந்துதுயிர் உண்டுகுடம்
ஆடுதட மார்வர் தகைசேர்
நாதன்உறை கின்றநகர் நந்திபுர
விண்ணகரம் நண்ணு மனமே.[3]

(தீதுஅறு - குற்றம் அற்ற; எரி - நெருப்பு; கால் - காற்று; கெழு - சிறந்த; விசும்பு - ஆகாயம்; இறக்கை - மரணம்; செற - சீற்றம் கொள்ள; உளைந்து - நடுங்கி; மார்வர் - மார்பை உடையவர்; தகை - அருள்)

என்ற பாசுரம் தொடங்கிப் பத்துப் பாசுரங்களால் மங்களா சாசனம் நடைபெறுகின்றது. 'நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்' ஆகும். திருவல்லிக்கேணியில் தென்னன் தொண்டையர்கோன் போலவும் (பெரி. திரு. 2.3 : 11), பரமேச்சுர விண்ணகரத்தில் பல்லவன் மல்லையர்கோன் போலவும் (மேலது 2.9 : 10), அட்ட புயகரத்தில் வயிரமேகன் போலவும் (மேலது 2.8 : 10), திருநறையூரில் கோச்செங்கணான் போலவும் (மேலது 6.6 : 1, 4) இத்திருப்பதியில் **நந்திவர்மன்** என்னும் ஓர் அரசன் சில திருப்பணிகள் செய்தனனாக அறியக் கிடக்கின்றது. **நந்தி தேவர்க்குக்** காட்சி தந்த நகரமாதல்பற்றி நந்திபுர விண்ணகரம் என்று திருநாமம் பெற்றதாகவும் உரைப்பர். இப்பாசுரத்தில் இறுதியடியிலுள்ள '**நாதன் உறைகின்ற நகர்**' என்ற சொல்றொடரால் இத்திருப்பதி '**நாதன் கோயில்**' என்ற திருப்பெயரால் பெருவழக்காக அறியப்பெறுகின்றது. பாசுரங்கள் தோறும் நந்திபுர விண்ணகரத்தை நாடுமாறு மனத்தை ஆற்றுப் படுத்துகின்றார் ஆழ்வார்.

3. பெரி. திரு. 5.10:1

பெரும்பாலும் பாசுரங்களின் முற்பகுதி எம்பெருமானைப் பற்றியும் பிற்பகுதி திருத்தலச் சூழல், திருத்தலச் சிறப்பு இவைபற்றியும் பேசுகின்றன.

முதலாவதாக, திருத்தலத்தின் சூழ்நிலைப்பற்றி ஆழ்வார் பேசுவதைக் காண்போம். கரிய அழகிய வண்டுகள் தம் இனங்களுடன் மதுவினைப் பருகிப் பூக்களைக் கோதி அதன் பிறகு களிப்புக்குப் போக்குவீடாக இசைபாடப் பெற்ற சோலைகள் நிறைந்தது இத்திருத்தலம் (2); புதிது புதிதாக மலரும் பூக்களையுடைய சோலைகளில் பன்னிறத்தும்பிகள் திரிந்து கொண்டுள்ளன. வயல்கள் எப்போதும் கருவடைந்த பயிர்களால் நிறைந்திருப்பதால் அவை இரவு போல் இருண்ட காட்சியைத் தருகின்றன (3); சிறந்த சிறகுகளையுடைய மயில்களும் குயில்களும் சோலைகளில் நெருங்கி வாழ்கின்றன; நறுமணம் மிக்க மலர்கள் எங்கும் சிந்தப் பெற்றுள்ளன; வண்டுகள் முரன்று இசை ஒலிகளை எழுப்புகின்றன: பரந்து வளர்ந்துள்ள மாமரங்கள் மணம் வீசி நிற்கின்றன (4); இங்குள்ள சோலைகளில் குயில்கள் மரக்கிளைகளினின்றும் குதித்துக் கூவும்; அவ்வொலிகளைக் கேட்டு மயில்கள் நடனமாடும் (5); அன்றியும், வாத்தியங்களின் மெல்லோசையை இவை மேக முழக்கமாகக் கருதியும் கூத்தாடும் (6); மாமுனிகள் அழகு மிக்க இசை நிறைந்த பாடல்களால் துதிசெய்வதையும் அந்த இசைக்குத் தக்கவாறு தாங்களே நர்த்தனங்களும் ஆடக் கண்ட தேவர்கள் இப்பூவுலகில் இத்திருப்பதியைப் போன்ற நகரம் எங்கும் இல்லை' என்று கொண்டாடி மலர்கள் தூவுகின்றனர் (7); நல்ல நீர்வாய்ப்பு அமைந்த இத்திருத்தலத்தில் நீர்ப்பெருக்கில் பலபல மணிகள் கொழிக்கப்பெற்று வரும்; அம்மணிகளின் ஒளி எங்கும் பரவி இத்திருத்தலம் இரவிலும் பகல்போல் காட்சி தரும்(8).

இத்தகைய எழிலார்ந்த திருத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் - **நாதன்** - எப்படிப்பட்டவன்? நிலம் நீர் எரி கால் விசுப்பு என்று வழங்கப்பெறும் ஐம்பெரும்பூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருப்பவன்; எல்லாச் சேதநர்களின் எண்ணங்கட்கும் ஊக்கம் தருபவன்; கண்ணனாகத் திருவவதரித்த காலத்து தயிர் பால் நெய் முதலியவற்றைக் களவு செய்து உண்டவன்; அக் குற்றத்திற்காக யசோதைப் பிராட்டியால் கட்டுண்டவன்; குடக்கூத்தாடிய பெருமான் (1) ; பாலனாய் உலகேழும் தனது திருமேனியளவில்

ஒடுங்கும்படி வியத்தகு முறையில் திருவமுது செய்தவன் (2); இவ்வாறு உண்ட உலகங்களைப் படைப்புக் காலத்தில் வெளிப்படுத்தியவன் (3); அசுரர்களைக் கொன்று குவித்து வெற்றி கொண்ட பெருமான் (4); சுதர்சனம் (திருவாழி). கௌமோதகி (கதை), பாஞ்ச சன்னியம் (திருச்சங்கு), நாந்தகம் (வாள்), சார்ங்கம் (வில்) ஆகிய ஐந்து ஆயுதங்களைத் திருக்கையில் ஏந்தியவன் (5); தம்பியுடனும், துணைவியுடனும் வெம்பி எரி கானகத்தில் உலாவித் திரிந்த காகுத்தன் (6); புத்திரனில்லையே என்று கவன்ற நந்தனின் சோகம் தீரும்படி மதுரையினின்றும் ஒருவருக்கும் தெரியாமல் ஆய்ப்பாடிக்கு வந்து சேர்ந்த பெருமிடுக்கன் (7); தியானத்திற்குத் தகுந்த மூர்த்தியாக நந்திபுர விண்ணகரத்தில் திருக்கோயில் கொண்ட நாதன் (8); இந்த எம்பெருமானின் திருவாணையைச் சிரசாக வகிக்கும் பக்தர்கள் ஊழிப் பெருவெள்ளத்திலும் தம் உடல்கள் அழியப் பெறார் (9); இங்ஙனம் எம்பெருமானுடைய பெருமைகளைப் பேசிய ஆழ்வார் தம் மனத்தை நோக்கி ''நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே'' என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகப் பன்னி யுரைக்கின்றார்.

இங்ஙனம் பாசுரங்களில் ஆழங்கால் பட்ட வண்ணம் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். **விண்ணகரப் பெருமாள்** என்றும், **சகந்நாதன்** என்றும், **நாதப்பெருமாள்** என்றும் திருநாமங்களுடன் வழங்கப் பெறுகின்ற இத்திருத்தலத்து எம்பெருமான் மேற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். தாயாரின் திருநாமம் **சண்பகவல்லி** என்பது. இருவரையும் சேவித்து இவர்தம் திருவருளைப் பெறுகின்றோம். இவர்தம் பாசுரங்களைச் சேவிக்க வல்ல ''அடியவர்கள் கொடு வினைகள் முழுதும் அகலுமே'' என்ற பல சுருதிப் பாசுர அடியின் பகுதியையும் சிந்திக்கின்றோம். நாம் வந்த சமயம் திருக்கோயிலில் கூட்டம் அதிகமில்லாததால் பத்துத் திருப்பாசுரங்களையும் எம்பெருமான் திருமுன் மிடற்றொலி கொண்டு சேவித்து மனநிறைவு பெறுகின்றோம்.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்குவர, அதனையும் சேவிக்கின்றோம்.

செயற்கரிய செய்வோமைச் செய்யாமல் நன்னெஞ்சே!
மயக்குவார் ஐவர் வலியால் - நயக்கலவி

சிந்திபுர விண்ணகரம் என்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகரம் நாடு[4]

(செய்வோமை - செய்யவல்ல நம்மை; செய்யாமல் - செய்யலொட்டாமல்; கலவி - சிற்றின்பம்; சிந்தி - நினைப்பாய்; விண்ணகரம் - சுவர்க்க லோகம்; புர - அரசாள்வாய்; நாடு - விரும்பு)

என்பது பாசுரம். "தவம் முதலிய அரும்பெருந் தொழிலைச் செய்ய வல்ல நம்மை ஐம்பொறிகள் நற்றொழில் ஒன்றையும் செய்யவொட்டாமல் மயக்கிச் சிற்றின்பத்திலேயே வலிய இழுக்கின்றன. மனமே, நீ அவற்றின் வழிப்படாமல் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நந்திபுர விண்ணகரத்தை நாடுதலாகிய இச்சிறு தொழிலை மேற்கொண்டாலும் பேரின்பம் கைகூடும்" என்று தம் மனத்திற்கு அறிவுரை தருகின்றார் அய்யங்கார். மன நிறைவினைத் தரும் இந்தச் சிந்தனைகளுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

4. நூற். திரு. அந்.21.

12. நறையூர் நின்ற நம்பி

மேதாவி என்ற திருநாமம் கொண்ட முனிவர் ஒருவர் திருநறையூர் என்ற திருத்தலத்தில் தவம் செய்து வருகின்றார். திருமகள் தனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்ற பேரவாக் கொண்டிருக்கின்றார் அம்மாமுனிவர். அவர் விருப்பப்படியே முனிவரது தவச் சாலையின் அருகில் வஞ்சுள மரத்தடியில் ஒரு சிறு பெண்குழவியாக அவதரிக்ககின்றாள் பெரிய பிராட்டியார். முனிவர் அக்குழந்தையை எடுத்து **வஞ்சுள வல்லி** என்று திருநாமம் இட்டு வளர்த்து வருகின்றார். அக்குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மங்கைப் பருவம் அடைகின்றது. எம்பெருமானும் ‘அகல கில்லேன் இறையும்’ என்று சொல்லிக் கொண்டு தன் திருமார்பில் வதியும் எம்பெருமாட்டியைத் தேடிக் கொண்டு இப்பூவுலகிற்கு வருகின்றான்: அவன் தனி ஒற்றை ஆளாக வரவில்லை. சங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன், புருஷோத்தமன், வாசுதேவன் என்ற **ஐந்து** உருவத்தாங்கி வருகின்றான். இந்த ஐந்து வியூகப் பரமர்களையும் மேதாவி முனிவரது சீடர்கள் மணிமுத்தாற்றங் கரையில் சந்தித்து முனிவரது ஆசிரமத்திற்கு அழைத்து வருகின்றனர். ஐவரையும் அதிதிகளாக ஏற்று விரும்தோம்புகின்றார் முனிவர். ஐவரில் நடுநாயகமாக அமைந்த **வாசுதேவரின்** கண்கள் முனிவர் மகள் வஞ்சுள வல்லியின் கண்களைச் சந்திக்கின்றன. ‘கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல’ என்றல்லவா சொல்லி வைத்திருக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை? ஐவரும் உணவு அருந்தி விட்டுக் கைகழுவச் சென்ற பொழுது வஞ்சுளவல்லி தண்ணீர் கொண்டு வருகின்றாள். வாசுதேவன் அவள் கையை பற்றுகின்றான். ‘அப்பா இவர் ஒருவர் செய்தது காண்’ என்கின்றாள் அத்திருமகள். ஓடி வந்த மேதாவி முனிவர் தம் மகள் கையைப் பிடித்த நிலையில் வாசுதேவனைக் காண்கின்றார். அவனது அடாத செயலைக் கண்டு சீற்றம் கொள்ளுகின்றார். சாபம் கொடுக்கவும் முனைகின்றார். இந்த இக்கட்டான நிலையை

யுணர்ந்த வாசுதேவன் திருவாழி திருச்சங்கு ஏந்திய வண்ணம் தன் உண்மைத் திருக்கோலத்தைக் காட்டி நிற்கின்றான். வந்திருப்பவன் திருமகள் கொழுநனே என்று அறிந்ததும் முனிவரது சீற்றம் போன இடம் தெரியவில்லை. **வஞ்சுளவல்லி-வாசுதேவன்** திருமணம் நடைபெறுகின்றது. அந்தத் திருமணக் கோலத்துடன் வாசுதேவன் நறையூர் நம்பியாக நின்றருள்கின்றான். திருமணத்திற்கு முன்பதாகவே மேதாவி முனிவர் வாசுதேவனிடம் மூன்று வரங்களைப் பெறுகின்றார். **ஒன்று** தமக்குப் பிறப்பு-இறப்பு வட்டம் இல்லாத பேறு, **இரண்டு** நறையூரில் வாழும் உயிர்கட்கெல்லாம் விண்ணகர வாழ்வு, **மூன்று** நறையூரில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் வஞ்சுளவல்லிக்கே முதன்மை இடம் என்பவை அவை. வாசுதேவன் முனிவருக்கு மூன்று வரங்களையும் நல்குகின்றான். திருமணம் நடந்த அன்று முதல் **நறையூர்** என்ற திருபெயரும் **'நாச்சியார் கோயில்'** என்ற புதுப்பெயர் பெற்றுத் திகழ்கின்றது. நறையூர் நம்பியும் 'மணாட்டிக்கு அடங்கிய மணாளனாகவே (Henpecked husband) இத்திருத்தலத்தில் தங்கிவிடுகின்றான்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் 'நாச்சியார் கோயில்' என்று வழங்கும் திருநறையூருக்குப் புறப்படுகின்றோம். கும்பகோணத்திலிருந்து இத்திருத்தலம் திருவாரூர் செல்லும் நெடுங்சாலையில் சுமார் பத்துக்கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருவாரூரிலிருந்தும் வரலாம். அடிக்கடிப் பேருந்து வசதி உண்டு. திருநறையூரில் **சித்திச்சுரம்** என்ற புகழ்பெற்ற சிவன் கோயிலும் உண்டு. சாதாரணமாக சைவப்புராணங்களிலும் சைவ பக்திப் பனுவல்களிலும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கூறும்போது நாராயணன் சிவனை வணங்கி 'அது, இது' பெற்றனவாகக் கதைகள் உள்ளன. அங்ஙனமே வைணவப் புராணங்களிலும் வைணவ பக்திப் பனுவல்களிலும் நாராயணனுக்குப் பரத்துவம் சொல்லப்பெறும் பொழுது, தோசையைத் திருப்பிப் போட்ட மாதிரி, சிவபெருமான் நாராயணனை வணங்கிச் சிலவற்றைப் பெற்றான் என்ற கதைகள் உள்ளன. நறையூர் நம்பியைத் திருமங்கையாழ்வார் ஒருவரே 109 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார் (இந்த ஆழ்வார் 100க்கு மேற்பட்ட பாசுரங்களால் மங்களா சாசனம் செய்த மற்றோர் எம்பெருமான் திருக்கண்ணபுரத்து சௌரிராஜன்)

ஆறும் பிறையும் அரவமும்
அடர்பும் சடைமேல் அணிந்துஉடலம்
நீறும் பூசி ஏறுஊரும்
இறையோன் சென்று குறையிரப்ப,
மாறுஒன்று இல்லா வாசநீர்
வரைமார்வு அகலத்து அளித்துகந்தான்
நாறும் பொழில்சூழ்ந்து அழகுஆய
நறையூர் நின்ற நம்பியே (6.7:9)

(ஆறு - கங்கை; பிறை - சந்திர கலை; அரவம் - பாம்பு; அடம்பு - ஒரு வகை மலர்; நீறு - விபூதி; ஏறு-இடபம்; மாறு ஒன்று இல்லா - ஒப்பற்ற; வரை மார்பு - மலை போன்ற மார்பு; நாறும்-நறுமணம் வீசும்; பொழில்-சோலை)

என்ற பெரிய திருமொழிப் பாசுரத்தில் மேற்குறிப்பிட்டவாறு ஒரு கதை வந்துள்ளது. ஒரு காலத்தில் பரமசிவன் தன்னைப் போலவே நான்முகனும் ஐந்து தலைகளையுடையவனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குவதற்கு இடமாயிருக்கிறதென்று கருதி அவனது தலை யொன்றினைக் கிள்ளி எடுத்துவிட்டான். பிரம கபாலம் அவன் கையில் ஒட்டிக் கொண்டது. இதனால் மிகவும் கவலையுற்றான் சிவன். தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவம் தொலையப் பிச்சை எடுக்க வேண்டும்; என்றைக்கு இக்கபாலம் நிறையுமோ அன்றைக்குத் தான் இது கையைவிட்டு அகலும்' என்றனர். சிவன் பல காலம் பல தலங்களில் பிச்சையேற்றுத் திரிந்தும் அக்கபாலம் நிறைந்திலது. பின்னர் பதரிகாச்சிரமத்தில் எழுந்தருளிய நாராயணமூர்த்தி தனது திருமார்பிலுள்ள (வியர்வை) நீரை (மார்பைக் கீறிக் குருதியை) எடுத்து இட்டதால் கபாலம் நிறைந்து, அது சிவன் கையை விட்டு அகன்றது என்பது வரலாறு. இந்த வரலாறு நறையூர் நம்பிமீது ஏற்றியுரைக்கப்பெற்றது -எல்லா அர்ச்சை எம்பெருமான்களும் (ஏனைய நான்கு நிலை எம்பெருமான்களும்) ஒருவரே என்ற வைணவ சமய உண்மையை வற்புறுத்துவதற்காக.

திருவிண்ணகர் எம்பெருமானை அநுபவிக்கும் ஆழ்வார் இடையில் "**திருநறையூர்த்தேனே!**" என்று கூறுகின்றார். இதற்குப் பொருள் கூறின பராசரபட்டர், "திருநறையூர்ப் பெருக்குக்குச் சினையாறு படுகிறது கிடாய்!" என்று அருளிச் செய்வர் என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி. இதன் அழகிய கருத்து என்னே எனின்: திரு

விண்ணகர்த் திருப்பதிபற்றிய இத்திருமொழி முடிந்தவுடனே பத்துத் திருமொழிகளால் 100 பாசுரங்களால் திருநறையூரை அநுபவிக்கப் போகின்றார் ஆழ்வார். ஆற்றில் பெருவெள்ளம் வரப் போவதற்கு முன்னே ஆறு பொசிந்து காட்டுவது வழக்கம். அது போல 100 பாசுரங்களால் திருநறையூர்த் திருப்பதி அநுபவமாகின்ற பெருவெள்ளம் அண்மையில் இருப்பதனால் அதற்கு முன்னடையாளமாகத் '**திருநிறையூர்த் தேனே**' என்று இவ்வாறு பொசிந்து காட்டுகின்றது என்பதாம்.

பேருந்து கோயிலருகில் நின்றதும், இறங்கிக் கோயிலை நோக்கி நடக்கின்றோம். பேருந்தில் வருங்கால் திருநறையூரின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே வந்தோம். அக்காட்சிகள் ஆழ்வார் தம் பாசுரங்களிலும் குறிப்பிட்டுள்ளதைச் சிந்திக்கின்றோம். நறையூரை அடுத்துள்ள சோலையைப் பற்றி ஆழ்வார் கூறுவார்; சோலையோ 'நறவு ஆர் பொழில் சோலை' *(7. 1:1)* யாகவும் 'நறைசேர் பொழில்' *(6. 4:10)* ஆகவும் காட்சி தருகின்றது.

தேமாவின் செந்தளிர்களைக் குயில்கள் கோதிக் கூவும் *(6.5.2)*; அவ்விடத்தின் நிலப்பண்பாலே மீன்கள் மிகவும் பருத்திருக்கும்; அவற்றைப் பிடிக்கின்ற உழவர்கள் இரண்டு கையாலும் அவற்றைத் தழுவுவார்கள்; மிக்க வலிவுள்ளவை யாதலால், அவை பிடிப்பவர்களை உதறித் தள்ளி விட்டுப் போய் விடும்; அங்ஙனம் தள்ளப்பெற்று விழுந்த உழவர்கள் மீண்டும் அவற்றைப் பிடிக்க எழுந்திருப்பார்கள்; இதைக் கண்ட ஆமை அஞ்சி வரம்பிலே நின்ற மஞ்சள் புதரிலே புகுந்து மறையும் *(6.6:3)*; அவ்விடத்தில் எழில் மிக்க மயில்கள் நடனமாட, அதற்கேற்ப வண்டுகள் இசைபாடும் *(6.5:4)*.

அங்குள்ள மரத்தின் பொந்துகளில் வாழும் குஞ்சுக்காக இரை தேடும் பறவைகள் நத்தைகளைத் திரட்டிக் கொண்டு செல்லும் *(6.5:7)*; மீன்களை மிகுதியாகப் பிடித்துண்ணும் கொக்குகள் தம் பேடைகளுடன் ஓடிச் சென்று தாமரைப் பூவினுள் தேனைப் பருகா நிற்கும் *(6.5:8)*; இன்னும் இச்சோலையில் வண்டுகள் அப்போதலர்ந்த செண்பக மலர்களின் நறுமண மிக்க தேனையுண்டு மகிழம் பூவின்மீது தங்கியிருக்கும் *(6.6:1)*; அன்னப் பறவைகள் தம் பேடைகளோடு கூடி அங்குள்ள மகளிரின் நடையழகைக் கண்டு தாமும் அப்படியே நடக்க விரும்பும்; அந்த நடை தமக்கு

வாராமையால் வெள்கி ஒதுங்கிப் போகும் (6.5:5); சில அன்னப் பறவைகள் நெய்தற் பூவிலுள்ள மதுவைப் பருகித் தாமரைப் பூவைப் படுக்கையாகக் கொண்டு அதிலே போய்ப் படுத்துறங்கும் (6.5:6); மெல்லிய பூக்களின்மீதுள்ள வண்டுகள் களித்துத் தேனைப் பருகி நிற்கும்; அழகிய தென்றல் மலர்களை வீசி இறைக்கும்; முல்லை மலர்கள் முறு வலிப்பன போன்று மலரும் (6.7:4).

'பள்ளி கமலத் திடைப்பட்ட
பகுவாய் அலவன் முகம்நோக்கி,
நள்ளி ஊடும் வயல்' (6.7:6);

(பள்ளி - படுக்கை; கமலம் - தாமரை; பகுவாய் - பெரிய வாய்; அலவன்- ஆண் நண்டு; நள்ளி - பெண் நண்டு; ஊடும் - பிணங்கும்)

தாமரைப் பூவில் பாயல் கொண்டிருந்த ஆண் நண்டின் முகத்தைப் பார்த்துப் பெண் நண்டு பிணங்கும். இதன் ஆழ் பொருளைப் **பராசர பட்டர்** அழகாக உரைத்தருள்வாராம். ஓர் ஆம்பல் மலரில் நண்டு தம்பதிகள் இனிது வாழ்கின்றன. ஒரு நாள் ஆண் நண்டு (அலவன்) கருக்கொண்டுள்ள தன் பேடைக்கு (நள்ளி) இனிய பொருள்களைக் கொண்டுவந்து தரவேண்டு மென்று ஆசைப்பட்டது. தாமரைப் பூவிலிருந்து மகரந்தத்தைத் திரட்டிக் கொணர்ந்து கொடுக்க நினைந்து மெல்ல நகர்ந்து தாமரைப் பூவை அடைந்தது; அப்போது சூரியன் மறையவே, அத்தாமரை மலர் மூடிக்கொள்ள அதனுள்ளே அகப்பட்டுக் கொண்டது. தாமரையை மலர்த்தி எப்படியாவது வெளிக் கிளம்ப முயன்றும் இயலவில்லை. அடுத்த நாள் சூரியன் தோன்றும் வரையில் காத்திருக்க வேண்டியதாயிற்று. இரவெல்லாம் மலரினுள் புரண்டு பொழுது விடிந்ததும் வெளிப் போந்தது. தாதும் கண்ணமும் உடலில் ஒட்டிய நிலையில் தன் மனைக்கு விரைந்து வந்து சேர்ந்தது. பகற் பொழுதில் ஆம்பல் மலர் மூடிக் கொள்ளுமாதலால் ஆண் நண்டு அங்கு வந்து சேரும் சமயமும், பெண் நண்டு கிடக்கும் ஆம்பல் மலர் மூடிக் கொள்ளும் சமயமும் ஒன்றாக இருந்தது. இதனைப் பார்த்தால், ஆண் இரவில் வேறிடத்தில் தங்கி வந்தபடியாலும், உடம்பில் சுவடு இருந்தபடியாலும் ஊடல் கொண்டு கதவை அடைத்துக் கொண்டது என்று எண்ணும்படியாக இருந்ததாம். ஒரு புறத்தில் மலர்ந்த தாமரை மலர்களும் மற்றொரு புறத்தில் கூம்பியிருக்கும் ஆம்பல் மலர்களும் விளங்கப் பெற்ற வயலைச் சொன்னவாறு

இது. இவ்வாறு பட்டர் விளக்கம் தந்தவுடனே **பிள்ளை திருநறையூரரையர்** 'ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பின்னையன்றோ தண்டிப்பது?' என்று கூற, பட்டர் 'என் செய்வோம்? கேள்வியிலாதபடி பெண்ணரசு நாடாய்த்தே!' என்று அருளிச் செய்தாராம். இதனால் 'நாச்சியார் கோவில்' என்ற புகழ் பெற்ற பெயரைக் குறிப்பிட்டவாறாம் (இவ்வூரில் எல்லாவற்றிற்கும் பிராட்டிக்கே முதலிடம். திருவீதிப் புறப்பாடு களில் நாச்சியார் முன்னே எழுந்தருள்வதும் எம்பெருமான் பின்னே எழுந்தருள்வதுமாயிருக்கும். ஆணரசு நாடாகில் கேட்பாருண்டு; பெண்ணரசு நாடாதலால் கேட்பாரில்லை என்று சுவைபடக் கூறியதாம்).

நிலவளத்தைப் பேசிய ஆழ்வார் நறையூரின் நீர் வளத்தையும் குறிப்பிடுவர். இப்பகுதியைப் பொன்னி எனப் படும் காவிரி நதி பாய்ந்து வளமாக்குகின்றது. காவிரி நதி உழப்படு கின்ற கழனிகளின் வரப்புகளின்மீது மலைப் பகுதிகளிலுள்ள இரத்தினங்களைக் கொணர்ந்து சிதறித் தள்ளுகின்றது. அவற்றுடன் சந்தனக் கட்டைகளையும் அகிற்கட்டைகளையும் எவரும் எடுத்துக் கொள்ளும்படியாகக் கொண்டு வந்து தள்ளுகின்றது (6.6 : 2, 5.7); பொன்களையும் முத்துகளையும் சிங்க நகங்களையும் குளிர்ந்த அலைகளின் மூலமாகக் கொழிக்கின்றது (6.9:6); நறையூரின் அருகிலுள்ள நிலத்தில் கரும்பும் செந்நெலும் போட்டி போட்டு வளர்ந்து பயன் தருகின்றன (6.6:7); நறையூர்ச் சோலைகளில் பாக்குக் குலைகள் குவிந்து காணப் பெறுகின்றன (6.6:8).

நறையூரின் சிறப்பைப்பற்றியும் பேசுகின்றார் ஆழ்வார். இவ்வூரில் வாய்மையுள்ள அந்தணர்கள் அதிகமாக வாழ் கின்றனர் (6.5:1); நான்மறைகளை முறையே ஓதி சோம வேள்விகளை நடத்துவதையே கடமைகளாகக் கொண்ட அந்தணர்களும் அங்கு நிரம்பியுள்ளனர் (6.7:5); நான்கு மறைகள், ஐந்து வேள்விகள், ஆறு வேதாங்கங்கள், ஏழு இசை இவற்றைப் பொழுது போக்காகக் கொண்ட மறையோரும் அங்கு வாழ்கின்றனர் (6.7:7); வள்ளண்மை வாய்ந்த பார்ப்பனர்களும் அங்கு மிகுதியாக வாழ்கின்றனர் (6.7:8).

நறையூர் நம்பியின் பெருமைகளைப்பற்றிப் பேசும்போது ஆழ்வாரின் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடுகின்றது. முதலில்

எம்பெருமாளின் திருமேனியைச் சிந்திக்கின்றார் ஆழ்வார்.

'பவ்வநீர் உடைஆடை ஆகச் சுற்றி
பார் அகலம் திருவடியா, பவளம் மெய்யா,
செவ்விமா திரம்எட்டும் தோளா, அண்டம்
திருமுடியா நின்றான்.' (6.6:3)

(பவ்வம் - கடல்; பார் - பூமி; பவனம் - காற்று; செவ்வி - அழகிய; மாதிரம்- திசைகள்; அண்டம்-அண்ட பித்தி)

''விபுவான எம்பெருமானுக்குக் கடல் திருவரையில் உடுக்கும் ஆடையாகின்றது. நிலப் பரப்பெல்லாம் திருவடியாகின்றது; வாயு மண்டலம் முழுவதும் (ஏன்? விண்வெளி முழுவதும்) திருமேனியாகின்றது; திசைகளெட்டும் திருத்தோள்களாகின்றன; அண்டகடாகம் திருவபிஷேக மாகின்றது'' என்று உலக வடிவமாக இருக்கும் நிலையை உருவகத்தாலே அநுபவிக்கின்றார். இத்திருமேனி இன்னோர் பாசுரத்தில்,

'நின்ற வரையும் கிடந்த கடலும்
திசையும் இரு நிலனும்
ஒன்றும் ஒழியா வண்ணம் எண்ணி
நின்ற அம்மானார். (6.10:7)

(வரை - மலை; இரு நிலம் - பரந்த பூமி; ஒன்றும் - சிறிதும்: ஒழியாவண்ணம் - பாழகாதபடி)

என்று காட்டப் பெறுகின்றது. அசித்தும் இறைவன் திருமேனி யாகவுள்ளது என்ற வைணவ தத்துவத்தின் சரீர-சரீரி பாவனை ஈண்டுக் காட்டப் பெறுகின்றது. இங்ஙனம் பரத்துவ நிலை யிலுள்ள எம்பெருமானே நறையூர் நின்ற நம்பியாக உள்ளான் என்பது ஆழ்வார் கருத்தாகும்.

அடுத்து, எம்பெருமானின் அவதாரச் செயல்களில் இழிகின்றார் ஆழ்வார். கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதம் ஈந்தருளியவன்; பரம பாகவதனான பிரகலாதனுக்கு நேர்ந்த இடர்களைப் பொறுக்கமாட்டாது நரசிங்க மூர்த்தியாகத் தூணில் தோன்றி இரணியனின் முரட்டு மார்பைத் திருநகங்களால் பிளந்தெறிந்த புனிதன்; மச்சாவதாரம் எடுத்து ஹயக்ரீவன் அபகரித்துச் சென்ற திருமறைகளை மீட்டு நான்முகனிடம் அளித்தவன்; பரசுராமனாக அவதரித்து க்ஷத்திரியர்களை

இருபத்தொரு தலைமுறை ஒழித்த திருத்தோளன்; வாணனின் ஆயிரத்தோள்களாகிய காட்டை அறுத்துத் திருவுள்ளம் உவந்தவன்; வாமன மாணியாக வந்து மாவலியிடம் மூவடி மண் இரந்து பெற்று, திரிவிக்கிரமனாக வளர்ந்து மூவுலங்களையும் தனதாக்கிக் கொண்டவன்; இராவணனைத் தொலைத்து வீடணனுக்கு இலங்கையரசை நல்கியவன்; வராக அவதாரம் எடுத்துப் பூமியை அண்டபித்தியினின்றும் விடுவித்தெடுத்த பெருமான். கிருஷ்ணாவதாரத்தில் இந்த ஆழ்வாருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. ஆகவே அந்த அவதாரத்தைப் பல்வேறு நிலைகளில் அநுசந்தித்து அகம் மிக மகிழ்கின்றார். உறியார்ந்த வெண்ணெய் உண்டு உரலில் கட்டுண்டல், ஏழ்விடை வென்று பின்னையை மணத்தல், பூதனையிடம் பால் உண்ணும் வியாஜத்தால் அவள் உயிரையும் உண்ணல், இரட்டை மருத மரங்களைச் சாய்த்தல், பார்த்தனுக்குத் தேரூர்ந்து பாரதப்போரை நடத்துதல், குவலயா பீடம் என்ற யானையை முடித்தல், மல்லர்களை மாய்த்தல், கன்றுகள் மேய்த்துக் குழலூதல், காளியனை அடக்குதல், கஞ்சனை மாய்த்தல், கோவர்த்தனத்தைக் குடையாக எடுத்துக் கல்மாரி காத்தல், குதிரை வடிவாய் வந்த கேசியைத் தொலைத்தல், காண்டவத்தைத் தீ மூட்டல், கொக்கு உருவங்கொண்டு வந்த பகாசுரனைப் பிளந்து மாய்த்தல் போன்ற கண்ணனின் தீரச் செயல்களை யெல்லாம் நினைந்து போற்றுவர். இங்ஙனம் செயற்கரியனவற்றைச் செய்த பெருமானே நறையூர் நின்ற நம்பி.

இவற்றைத் தவிர வியூக மூர்த்தியாக நின்று அருஞ்செயல் புரிந்தவற்றையும் அநுசந்திக்கின்றார். பாலனாகி ஏழுலண்டு ஆலிலை மேல் அறிதுயில் கொண்டவன்; 'ஆதி மூலமே!' என்று கூவியழைத்த கஜேந்திரன்முன் தோன்றி அவன் சமர்ப்பித்த 1008-வது தாமரை மலரை ஏற்று முதலையைக் கொன்றொழித்தவன்; பாற்கடலைக் கடைந்து விண்ணவர் அமுதுண அளித்துப் பெண்ணமுதாம் பெரிய பிராட்டியைத் தான் கொண்டவன்; அன்னமாய் வந்து அருமறைகளை ஓதுவித்து அவற்றைக் காத்தவன்.

இங்ஙனம் பேசியவர் நெஞ்சிற்கும் பிறருக்கும் உபதேசிக்கத் தொடங்குகின்றார். திருநறையூர் நம்பி சந்நிதி **'மணிமாடக்கோயில்'** என்று வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. செம்பியன் கோச்செங்கணான் என்னும் ஓரரசன் நம்பிக்குத்

தொண்டு பூண்டு உய்ந்துபோனான். ''நம்பி ஒரு வாள் கொடுத்தருள அத்தைக் கொண்டு பூமியை யடையத் தன் காலின் கீழே இட்டுக் கொண்டானென்றொரு ப்ரஸித்த உண்டாய்த்து'' என்பது பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானம். எம்பெருமானின் திருவடிகளைப் பெற விருப்பமுடையவர்களை நோக்கித் திருநறையூர் மணிமாடம் சேருமாறு உலகிற்கு உபதேசிக்கின்றார் ஆழ்வார் (பெரி. திரு.6.6)

எம்பெருமானின் திருவடியிணையை வணங்குமாறு நெஞ்சிற்கு ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக உபதேசிக்கின்றார் (பெரி.திரு.6.9). இப்படி உபதேசிக்கும்போது பிராட்டியாரின் புருஷகாரத்தை மறந்தார் இலர்.

'மின்னொத்த நுண்மருங்குல்
மெல்லியலைத் திருமார்பில்
மன்னத்தான் வைத்துகந்தான்
மலரடியே அடைநெஞ்சே.' (6.9:6)

(மின் ஒத்த-மின்னலைப் போன்று: மருங்குல்-இடை; மன்ன - பொருந்தும்படி)

என்று ஆழ்வார் கூறுவதைக் கண்டு மகிழலாம். ''எம்பெருமானின் திருவெட்டெழுத்து மந்திரமே நமக்கு நன்று; தொண்டீர், அடியேன் 'நமோ நாரணமே' என்று அநுசந்தியா நின்றேன். நீங்களும் அதனையே சொல்லுங்கள்'' என்கின்றார் (6.10:7). ஒரு திருமொழியில் மாதர்கள்மீது மையல்கொள்வதும், அவர்கள் வெறுப்பதும், அவமானப்படுத்திப் பேசுவதுமான செயல்கட்கு இடங்கொடாமல் திருநறையூரைத் தொழுமாறு நெஞ்சிற்குப் பணிக்கின்றார்(6.4). திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்ப வனும், திருநாவாயில் உள்ளவனும், திருநீர்மலையில் சந்நிதி பண்ணியிருப்பவனும், திருமெய்யத்தில் திருக்கோயில் கொண்டிருப்பவனும் திருக்குடந்தையில் பள்ளிகொண்டிருப்ப வனும் ஆன எம்பெருமான்களை யெல்லாம் நறையூரில் கண்டதாகப் பேசுகின்றார் (6.8). மற்றும் ஒரு திருமொழியில் பிறப்பைப் போக்குமாறும், தன்மீது திருவருள் பொழியுமாறும், திருவடிகளைச் சேவிக்க அருளுமாறும் இன்னும் பல படியாகவும் நெஞ்சுருக வேண்டுகின்றார் (7.1). 'நாடேன் உன்னையல்லால் நறையூர் நின்ற நம்பி' என்றும், 'நான் தான் உனக்கொழிந்தேன்' என்றும், 'என் சிந்தை தன்னால் நானே எய்தப் பெற்றேன்' என்றும் மிக்க எக்களிப்போடு வேண்டுகின்றார்.

இந்தச் சிந்தனைகளுடன் திருக்கோயிலை நோக்கி நடக்கின்றோம். திருக்கோயிலருகில் ஓடினதாகக் கூறப்பெறும் மணிமுத்தாறு என்ற நதி இன்று கண்ணுக்குப் புலனாகவில்லை. திருக்கோவிலுக்கு முன்புறத்தில் இருப்பது ஒரு பெரிய குளம்; 684 அடி நீளமும் 225 அடி அகலமும் கொண்டது; மூன்று பக்கம் இதற்குப் படிக்கட்டுகள் உள்ளன. இதைத்தான் இன்று 'மணி முத்தாறு' என்று வழங்குகின்றனர். நறையூர் நின்ற நம்பிக்கு அணிவிப்பதற்குத் திருப்பாற்கடலிலிருந்து வைர முடியைப் பெரியதிருவடி (கருடாழ்வார்) எடுத்துக் போகும்போது அதிலுள்ள மணியொன்று சுழன்று இந்தப் புஷ்கரிணியில் விழுந்ததாகவும் அதனால்தான் இத்திருக்குளம் மணிமுத்தாறு என்று பெயர் பெற்றதாகவும் வரலாறு ஒன்று உள்ளது. இது மிகவும் புனிதமான தீர்த்தம்; இறங்கி நீராடுவதற்கும் வசதியாக உள்ளது. நாமும் இறங்கி நீராடுகின்றோம்.

திருக்கோயில் முகப்பில் நிரந்தரமாக ஒரு கொட்டகை போட்டு வைக்கப்பெற்றுள்ளது. வெய்யில் நாளில் திருத்தலப் பயணிகள் சற்று ஓய்வு எடுப்பதற்கு வசதியாக அமைந்துள்ளது. திருக்கோயில் முன்பு கீழ்த்திசையில் சுமார் 75 அடி உயரமுள்ள இராஜகோபுரம் ஒன்று அணி செய்கின்றது. இதன் ஒரு மாடத்தில் தும்பிக்கையாழ்வார் (இவர் இத்திருக்கோயிலின் க்ஷேத்திர பாலகர் போலும்!) அமர்ந்துள்ளார்.

இவரை வணங்கிய பிறகு உள் நுழைகின்றோம். திருமலை நாயக்கர் மஹால் போன்ற மண்டபம் ஒன்றிற்கு வந்து சேர் கின்றோம். பெரியதான உருண்டு திரண்ட பெரிய தூண்கள் தாங்கும் மண்டபம் இது. திருக்கோயில் மிகப் பெரியது; 690 அடி நீளமும் 288 அடி அகலமும் உள்ளதாக அமைக்கப்பெற்றுள்ளது.

திருக்கோயில் விமானம் 'சீநிவாச விமானம்' என்ற பெயர் பெற்றுள்ளது. நறையூர் நம்பிக்கு சீநிவாசன் என்ற பெயரும் உள்ளது. சீநிவாசன் மகிழ்ந்து உறையும் தலத்தில் உள்ள விமானமும் அவன் பெயரில் வழங்குவது மிகவும் பொருத்த மாகத் தோன்றுகின்றது. பெரிய மண்டபத்தினின்று சற்று விலகியே விமான தரிசனம் செய்கின்றோம். படிக்கட்டுகள் ஏறிக் கல்யாண மண்டபத்தைக் கடந்துத் திரும்பவும் படிக்கட்டுகள் ஏறியே கருவறைக்கு வருகின்றோம். இக்கட்டுகளைத் தீர்த்து வைக்கும் நறையூர் நம்பி தன்னைத் தரிசிக்கப் பல படிக்கட்டுகள் ஏறி அடியார்கள் வரட்டுமே என்று எண்ணியே சற்று உயரமான

இடத்தையே தனக்கு இருப்பிடமாக அமைத்துக் கொண்டான் போலும். இந்த உயரமான இடம் '**சுகந்த கிரி**' என்பது. சுகந்தம் - நறுமணம். இதுவே தமிழில் '**நறையூர்**' என்ற திருநாமம் பெற்றது. கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான் **நறையூர் நம்பி**. மேதாவி முனிவருக்கு அன்று திரு ஆழியும் திருச்சங்கமும் ஏந்திய கை களை முன்னே நீட்டிக்கொண்டு காட்சி தந்த அவசரத்திலேயே நிற்கின்றான் இரண்டு கைகளோடு; நான்கு கைகள் இருப்பதை யும் மறந்த நிலை. ''குன்றாடு கொழு முகில்போல், குவளைகள் போல், குரை கடல்போல், நின்றாடும் கணமயில்போல் ''**நிற முடைய**''[1] பெருமான் அவன் என்றாலும் திருமேனி முழுவதும் தங்கக் கவசமும் அழகு மிக்க ஆபரணங்களும் அணிந்து கொண்டு சேவை சாதிக்கின்றான்.

'பொங்கு ஏறு நீள்சோதிப்
 பொன்னாழி தன்னோடும்
சங்குஏறு கோலத்
 தடக்கைப் பெருமானை,
கொங்குஏறு சோலைக்
 குடந்தைக் கிடந்தானை,
நம்கோனை நாடி,
 நறையூரில் கண்டேனே ' (6.8:3)

(பொங்கு ஏறு-மேன்மேலும் அதிசயித்து வரும்; நீள்-அளவற்ற; ஏறு-குடிகொண்ட; கொங்கு-மணம் மிக்க)

என்ற திருமங்கையாழ்வாரின் பெரியதிருமொழிப் பாசுரத்தை ஓதிச் சேவிக்கின்றோம். இப்பெருமானின் அருகில் **வஞ்சுள வல்லித் தாயார்** மரகதக்குன்றின் அருகில் ஓர் இளம் வஞ்சிக் கொடி நிற்பது போல் நிற்கின்றார். இந்த நம்பியை அடுத்து அன்று அவருடன் வந்த சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன், புரு டோத்தமன் ஆகிய நால் வரும் நிற்கின்றனர். மூலவருக்கு முன் னால் உற்சவர் நிற்கின்றார். பொதுவாக எல்லா இடங்களிலும் பெரியபிராட்டியார் பூமிப்பிராட்டியார் இவர்களுடன் நிற்பவன் இங்கே வஞ்சுளவல்லித் தாயாருடன் மாத்திரமே நிற்கின்றான். இந்தத் தாயாரும் 'இத்தலத்தில் எனக்கே முதல் இடம்' என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் ஓரடி எட்டி எடுத்து முன்வந்து நிற் கின்றார். இத்திருக்கோவிலிலும் தாயார் சந்நிதி தனியாக இல்லை.

1. *பெரியாழ் திரு. 4.8:9.*

இத்திருத்தலம் கருட சேவைக்குப் பேர் போனது. ஆகவே, அவனைச் சேவிப்பதற்கு புள்ளரையன் சந்நிதிக்கு வருகின்றோம். இங்குள்ள கருடன் கருங்கல் உருவினன். **'கல் கருடன்'** என்ற சிறப்புப் பெயர் பெற்றவன். நல்ல தோற்றம், நீள் சிறகு, நீள் முடி, அகன்ற மார்பு இவற்றுடன் கூடிய இவன் தனிக் கோயிலில் இருக்கின்றான். இவன் இருக்கும் கோயில் பத்தரை அடிச் சதுர அளவுதான். இவனை இக்கோயிலிருந்து நான்கே பேர் எளிதாக வெளியே எடுத்து வந்து விடுவர். அதன்பின் அவனுக்கு அதிகமான பலம் வந்து விடுகின்றது. பின்னர் வெளியில் எடுக்க வேண்டுமானால் எட்டு பேர்களாகவும் இன்னும் படிகள் இறங்கும் போது முப்பத்திரண்டு பேர்களாகவும் ஸ்ரீபாதம் தாங்குபவர்கள் எண்ணிக்கையில் வளர்ந்துகொண்டே போவர். நறையூர் நம்பி கல்கருடன் மீது ஆரோகணித்துவரும் நாச்சியார் கோயில் கருடசேவை கண்கொள்ளாக் காட்சியாகும். மார்கழி, பங்குனி இம்மாதங்களில் நடைபெறும் இந்தச் சேவைக்குப் பக்தர்கள் பேரளவில் வந்து கூடுவர். இவன் சிறந்த வரப்பிரசாதி என்ற நம்பிக்கை எல்லோரிடமும் உண்டு. நறையூர்நம்பியிடம் கேட்டுப் பெறமுடியாத வரங்களையும் இவன் நல்குவான். இவனுக்கு உகப்பான பலகாரம் 'அமுத கலசம்' என்னும் மோதகம். இப்பிரசாதம் என்றைக்கும் கிடைக்கும். பக்தர்கள் அமுத கலசம் இவனுக்குச் சமர்ப்பித்து தம் கோரிக்கைகளை நிறைவேற்றுவித்துக் கொள்வர். அமுத கலசத்தை சுவைக்காது இத்திருத்தலத்தை விட்டுத் திரும்பலாகாது.

இத்திருத்தலத்தில் நரசிம்மன் சந்நிதி, ஆஞ்சநேயர் சந்நிதி, ஆழ்வார்கள் சந்நிதி ஆகிய இடங்கட்கெல்லாம் சென்று அவர்களைச் சேவிக்கின்றோம். மேலும், எண்ணற்ற செப்புச் சிலைகள் பெரிய அளவிலும், மிகச் சிறிய அளவிலும் இங்கு உள்ளன. சிறிய அளவிலுள்ளவை நல்ல கண்ணாடிப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பெற்றுள்ளன.

நறையூர் நம்பியிடம் ஆராத காதலுடையவர் திருமங்கை மன்னன். இவர் பாடியுள்ள 109 பாசுரங்களும் பாடியவாய் தேனூறும் பான்மையன. இத்தலத்து எம்பெருமானே ஆழ்வாருக்கு முத்திரா தாரணம் செய்து வைத்ததாக வரலாறு. ஆழ்வார் பாடிய இரண்டு திருமடல்களும் நறையூர் நம்பியைப் பற்றியவையே.

'ஊராது ஒழியேன் உலகுஅறிய ஒன்றுதளீர்
சீரார் முலைத்தடங்கள் சேரளவும் - பாரெல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்
மன்றோங்க ஊர்வன் மடல்.'[2]

என்ற சிறிய திருமடல் அநுசந்தித்தபிறகு முடிவில் அநுசந்திக்க வேண்டிய பாசுரத்தால் அறியலாம். இங்ஙனமே பெரிய திருமடலின்,

'பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெயும்
நன்னுதலீர் நம்பி நறையூர்-மன்னுலகில்
என்னிலைமை கண்டும் இரங்காரே யாமாகில்
மன்னும் மடலூர்வன் வந்து.'[3]

என்ற தனிப் பாடலும் பெரிய திருமடலும் நறையூர் நம்பி பற்றியதே என்பதை அரண் செய்கின்றது. நாயகி பாவனையிலுள்ள இரண்டு மடல்களையும் படிப்பவர்கள் "இரண்டும் பிரேமத்தில் பெண் பேச்சாக"ச் செல்வதை அறியலாம்; ஆழ்வாரின் முறுகிய காதல் தெளிவாகப் புலனாகிறது.

திருமங்கை மன்னன் நறையூர் நம்பிக்கு ஒரு **பெரிய மடல்** இயற்றவும் அரங்கநாதனுக்கு ஒரு **பெரிய மதில்** கட்டவும் திட்டங்கள் வைத்திருந்தார். அரவணைப் பள்ளி கொண்டான் மங்கை மன்னனை அழைத்து "மதிலை நறையூரில் கட்டு; மடலை அரங்கத்தில் பாடு" என்று வேண்டியதாக ஓர் ஐதிகம் உள்ளது. கிட்டத்தட்ட 250 பாசுரங்களை ஆழ்வார்களிடம் பெற்ற பெரிய பெருமாளுக்குத் தமிழின்மீது கொள்ளை ஆசை. ஆனால் ஆழ்வாரோ அதற்கு இசைந்திலர். மதிலை அரங்கத்தில் கட்டினார்; அப்பெரியகோயிலுக்கு மதிலே முக்கியம் எனக் கருதினார் போலும். நம்பியிடம் கொண்ட ஆராக் காதலினால் ஒரு மடலுக்கு இரண்டு மடலாகப் பாடி அவனை மனம் நெகிழச் செய்துள்ளார். அரங்கன் வேண்டுகோளையே தட்டிக் கழித்துவிட்டார்.

கோச்செங்கணான் கட்டிய மணிமாடக்கோயிலைப் பின்னர் வந்த மன்னர்கள் விரிவடையச் செய்துள்ளனர்.

2. தனியன் (கம்பன் பாடியதென்பர்)

3. தனியன்.

சடாவர்மன் சுந்தர பாண்டியன் நறையூர் நம்பிக்கு ஒரு தலத்தையே சாசனம் செய்துள்ளான். தஞ்சை இரகுநாத நாயக்கன் நாச்சியாருக்கு ஒரு மண்டபம் கட்டியுள்ளான். இத்தகைய பல தகவல்களை அறிந்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நம் நினைவுக்கு வருகின்றது.

'செய்ய சடையோன் திசைமுகத்தோன் வானவகோன்
ஐயம் அறுத்துஇன்னம் அறியாரே - துய்ய
மருநறையூர் வண்துழாய் மாயோன் செவ்வாயோன்
திருநறையூர் நின்றான் செயல்.'[4]

(சடையோன் - சிவன்; திசை முகத்தோன் - நான்முகன்; வானவர் கோன் - இந்திரன்; ஐயம் - சந்தேகம்; அறுத்து - ஒழித்து; துய்ய - பரிசுத்தமாக; மரு - நறுமணம்; நறை - தேன், வாசனை)

என்பது பாசுரம். சிவனும் நான்முகனும் இந்திரனும் எம்பெருமான் செயலை உள்ளபடி யறிய மாட்டார்கள் என்ற கருத்தடங்கிய இப்பாசுரத்தைச் சேவிக்கின்றோம். மன நிறைவுடன் **'திருச்சேறை'** என்ற திவ்விய தேசத்தை நோக்கிப் புறப்படுகின்றோம்.

4. நூற். திரு. அந். 20.

13. திருச்சேறை எம்பெருமான்

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வருகின்றான் அழகிய மணவாள நாய்க்கன்; இவன் விசய நகரப் பேரரசு வீழ்ந்த பிறகு தமிழகத்தில் ஆண்டு வந்த நாய்க்கர்களில் ஒருவன். இவன் இராஜமன்னார்குடி இராசகோபாலன் திருக்கோயிலைக் கட்டுவிக்க முனைந்திருக்கின்றான். தஞ்சை மாவட்டத்தில் கருங்கல் கிடைப்பது அரிதாதலால் வடக்கே எங்கிருந்தோ கல் கொண்டு வர ஏற்பாடு செய்கின்றான். கல், வண்டி வண்டியாகத் திருச்சேறை வழியாக மன்னார்குடிக்கு வந்து சேர்கின்றது. அழகிய மணவாள நாயக்கனின் அமைச்சன் நரசபூபாலன் என்பான்; இவனுக்குத் திருச்சேறை எம்பெருமானிடம் ஈடுபாடு அதிகம். இவனுக்கு திருச்சேறை எம்பெருமானுக்கு ஒரு திருக்கோயில் எழுப்பவேண்டும் என்பது பேரவா. ஆகவே, மன்னார்குடிக்குச் செல்லும் கல் வண்டிகளினின்றும் வண்டிக்கு ஒரு கல்லாகத் திருச்சேறையில் இறக்குவிக்கக் கட்டளையிடுகின்றான். தமிழகத்தில் புறங்கூறுபவர்கள் இன்று இருப்பதுபோல் அன்றும் இருந்தனர். பெரிய இடங்களில் புறங்கூறுபவர்கட்குச் செல்வாக்கும் அதிகம். பெரிய இடத்துப் பேர்வழிகளிடம் இத்தகைய புறங்கூறுபவர்களால் தெரிவிக்கப் பெறும் பல பொய்ச் செய்திகளையும் உண்மையானவை என்று நம்பும் வழக்கம் இருந்து வந்தமையால் இவர்கள் செல்வாக்குக்குக் குறைவு உண்டா? யாரோ ஒரு புறங்கூறுவோன் அமைச்சன் நரச பூபாலன் அரசுபணத்தை யெல்லாம் திருச்சேறை எம்பெருமானுக்கு கோயில் கட்டுவதில் செலவு செய்கின்றான் என்று 'வத்தி' வைத்து விட்டான். இதன் உண்மையறிய விழைகின்றான் அழகிய மணவாள நாய்க்கன். இச்செய்தியை அறிகின்றான் நரச பூபாலன்.

அரசன் சோதனைக்கு வரப்போகின்றான் என்ற செய்தி எட்டியவுடன் இரவோடு இரவாய் இராசகோபாலனையும் **தாயாரையும்** உருவாக்கி அவர்கட்கு ஒரு சிறு கோயில் கட்டிப் பிரதிட்டை செய்து தயாராய் வைத்திருக்கின்றான். மன்னன் வந்ததும் அந்தச் சிறு திருக்கோயிலைக் காட்டி மன்னனின்

விருப்புத் தெய்வமான இராசகோபாலனின் கைங்கரியமே இங்கும் சிறு அளவில் நடைபெறுவதாகக் கூறி மன்னனின் ஐயுறவைப் போக்கிவிடுகின்றான். மன்னனும் மகிழ்ச்சியுற்று அந்தத் திருக்கோயில் கட்டும் செலவு முழுவதையுமே கொடுத்துத் திருப்பணியை நிறைவு செய்து விடுகின்றான். இத்தகைய ஒரு முறையைக் கையாண்டு திருச்சேறை எம்பெருமான் திருக்கோயிலின் திருப்பணி நிறைவு பெறுகின்றது. இங்கு அமைச்சனின் திருப்பணியைத் தடுக்க வந்த அரசனை உற்சாகப்படுத்தித் திருப்பணியை முற்றுவிக்கக் கருவியாக உதவியிருக்கிறான் இராசகோபாலன்.

இந்த வரலாற்றை அறிந்த வண்ணம் நாச்சியார் கோயிலினின்றும் **திருச்சேறை** என்ற திவ்விய தேசத்திற்கு வருகின்றோம். இத்திருத்தலம் குடந்தைக்குத் தென் கிழக்கில் திருக்குடந்தை-திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலையில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. நாச்சியார் கோயிலில் இந்தப் பேருந்தைப் பிடித்துதான் வருகின்றோம். திருக்கோயிலுக்கு அருகில் இறங்கிக்கோயிலை நோக்கி நடக்கின்றோம். முதலில் நாம் கோயிலுக்கு முன்புறத்தில் காண்பது ஒரு பெரிய தெப்பகுளம். இது **சாரபுஷ்கரிணி** என்று வழங்கப்பெறுகின்றது. இதில் நல்ல விசாலமான படிக்கட்டுகள் கட்டிவைக்கப் பெற்றுள்ளன. தெளிவான நீரும் நிரப்பி வைக்கப்பெற்றுள்ளது. திருக்கோயிலுக்கு வடக்கில் முடிகொண்டான் என்ற ஆறும். தெற்கே குடமுருட்டி என்ற ஆறும் ஓடும்போது திருக்குளத்தில் தெளிவான நீர் இருப்பது ஓர் அதிசயமன்று. நல்ல பக்தி மிக்க திருப்பணி புரிவோர் இருக்கும்போது இத்தகைய வசதிகட்குக் குறையே இராது. இத்திருக்குளத்தில் நீராடி எம்பெருமான் சேவைக்குத் தயாராகின்றோம்.

இந்தச் சாரபுஷ்கரிணி உண்டான வரலாற்றை அறிந்து கொள்வதில் நம் மனம் ஈடுபடுகின்றது. இது ஒரு சுவையான வரலாறு; பிரளய காலத்தில் திருமால் நான்முகனிடம் ஒரு மட்கடம் வனைந்து அதில் திருமறைகள், சாத்திரங்கள், ஆகமங்கள் முதலிய அரிய ஞானக் கருவூலங்களைப் பாதுகாப்பாக வைக்கும்படிப் பணிக்கின்றார். அவரும் தந்தையின் கட்டளைப்படியே பல இடங்களில் மண் எடுக்கச் செய்து கடங்கள் செய்ய முனைகின்றார். அத்தனைக் கடங்களும் உடைந்து போகின்றன;

அல்லது நீரில் கரைந்து விடுகின்றன. கடைசியாக வியாசர், மார்க்கண்டேயர், பராசரர் முதலிய முனிபுங்கரர்கள் தவம் புரிந்த இடத்திற்கு வந்து மண் எடுத்து கடம் செய்கின்றார். அந்தக் கடம் பின்னம் அடையாமல் நிலை பெறுகின்றது. திருமறைகளும் பிற சாத்திரங்களும் அதில் வைக்கப்பெறுகின்றன. பிரளய காலத்திலும் அவை அழியாமல் இருந்துள்ளன. இக்காரணம் பற்றிய இத்திருத்தலம் **சார க்ஷேத்திரம்** என்றும், மண் எடுக்கப் பெற்ற இடம் **சாரபுஷ்கரிணி** என்றும் திருநாமங்கள் பெற்று விளங்கு கின்றன. திருக்குளத்தில் தீர்த்த மாடியதும் முதலில் நாம் தரிசிக்க வேண்டியவர், குளத்தின் மேல்கரையில் தென்மேற்கு மூலையில் அரசமரத்தடியில் எழுந்தருளி இருக்கும் **காவிரித் தாயார்.** அவர் மாமதலைப் பிரானாக அவதரித்த ஒரு குழந்தையை அணைத்த வண்ணம் காட்சி தருகின்றார். அருகில் நான்முகனும் திருமாலும் நின்று கொண்டுள்ளனர். இவர்கள் இங்கு வந்த வரலாற்றைத் திருத்தலப் புராணத்தால் அறிய முற்படுகின்றோம்.

இதுதான் வரலாறு: ஒரு நாள் விந்தியமலை அடி வாரத்தில் கங்கை, யமுனை, கோதாவரி, சரசுவதி, நர்மதை, சிந்து, காவிரி ஆகிய ஏழு கன்னிகையரும் விளையாடிப் பொழுது போக்குகின்றனர். அவ்வமயம் விண்ணின் வழி ஏமும் விச்ரவசு என்ற கந்தருவன் இக்கன்னிகையரை வணங்குகின்றான். 'யாரைக் கண்டு வணங்கினான் அவன்?' என்ற வாக்குவாதம் அவர்களிடையே கிளம்புகின்றது. முடிவு காண்பதற்கு அவர்கள் நான்முகனை அணுகுகின்றனர். அவரோ எம்பெருமான் திரிவிக்கிரமனாக வளர்ந்து நின்றபோது அவர்தம் திருவடியைத் திருமஞ்சனம் செய்ததனால் தோன்றிய **கங்கையே புனித மானவள்** என்று சொல்லி விடுகின்றார். மற்ற அறுவரில் காவிரியைத் தவிர ஏனையோர் இந்த வாக்கு வாதத்தினின்றும் மரியாதையாக ஒதுங்கிக் கொள்ளுகின்றனர். காவிரி நான் முகனின் கருத்திற்கு ஒருப்படாமல் தான் கங்கையை விடப் புனிதமானவளாகக் கருதப்பெறல் வேண்டும் என்று பரந் தாமனை நோக்கித் தவம் புரிகின்றாள். அவள் சாரபுஷ்கரிணியின் கரையிலுள்ள அரசமரத்தினடியில் இருந்து கொண்டு தவம் புரிகின்றாள். பரந்தாமன் அவள் தவத்திற்கு இரங்கி தைத் திங்களில் பூச நட்சத்திரமும் குருவாரமும் பௌர்ணமியும் கூடிய நன்னாளில் ஒரு குழவியாய் அவதரித்துக் காவிரியின் மடியில்

தவழ்கின்றாள். அந்தக் குழந்தையே **பரமபதநாதன்** என்பதனை அறிகின்றாள் காவிரி. அவள் விரும்பியபடியே பெரிய பிராட்டியார் பூமிப் பிராட்டியாருடன் கருடசேவை தருகின்றான் பரமபதநாதன். காவிரியும் இதுதான் தக்க சமயம் என்று மூன்று வரங்கள் கேட்டுப் பெறுகின்றாள் அந்த வாசுதேவனிடம். எம்பெருமான் அந்தச் சாரக்ஷேத்திரத்தில் நித்தியவாசம் செய்ய வேண்டும் என்பது **ஒன்று**. அந்தத் திருத்தலத்தில் வதியும் உயிர்கள் அனைத்திற்கும் வீடுபேறு அளிக்கவேண்டும் என்பது **மற்றொன்று**. தான் கங்கையினும் மேம்பட்டவளாகக் கருதப் பெறல் வேண்டும் என்பது **பிறிதொன்று**. 'கங்கையிற் புனிதமாய காவிரி' (திருமாலை-28) என்று தொண்டரடிப் பொடி யாழ்வாரால் சிறப்பிக்கப் பெறுகின்றாள் காவிரி. கங்கை பரந் தாமனது திருவடியில் தோன்றினாள் என்பது உண்மையே யாயினும் அவன் காவிரியின் மடியிலல்லவா தவழ்கின்றான்? சரியான காரியவாதி காவிரித் தாய். ஆகவே நாம் புஷ்கரிணிக் கரையிலுள்ள காவிரித் தாயை முதலில் வணங்குகின்றோம். இத்திருக்குளத்தின் கீழ்க்கரையிலுள்ள ஆஞ்சனேயனையும் வடகிழக்கு மூலையிலுள்ள தும்பிக்கை யாழ்வாரையும் வணங்கியபின் திருக்கோயிலினுள் நுழைகின்றோம் திருமங்கை யாழ்வாரின் திருப்பாசுரங்களைச் சிந்திக்க வண்ணம்.

திருமங்கை யாழ்வார் மட்டிலுமே இத்தலத்து எம்பெரு மானை மங்களாசாசனம் செய்துள்ளார்.[1] எம்பெருமானுக்கு அடிமைப்படுவதைக் காட்டிலும் அவனுக்கு அடிமைகளான பாகவதர்கட்கு அடிமைப்படுதல் சிறந்தது என்பது வைணவ தத்துவம். பகவத் பக்தியின் உறைப்பே பாகவத பக்தியில் வெளிப்படும். எம்பெருமானின் பாதுகைகளிலே நாம் ஆதரம் வைத்து அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொள்வதும், தலைமேலணிந்து கொள்வதும், அவற்றைக் கழுவித் தீர்த்தத் தைப் பருகுவதும் நம்போலியர் செயல்களன்றோ? அது போலவே ஆழ்வாரும் 'திருச்சேறையையும் அவ்விடத்து எம்பெருமானையும் பணிகின்ற பாகவதர்களே எனக்கு உத்தேச்யர்' என்று அருளிச் செய்கின்ற முகத்தால் அத்திருப்பதி யினிடத்தும் அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானிடத்தும் தமக்குடைய பக்திப்பெருக்கை வெளியிடுகின்றார்.

1. பெரி திரு. 7.4; 10.1:6.

கண்சோர வெம்குருதி வந்து இழிய
வெம்தழல்போல் கூந்த லாளை
மண்சோர முலைஉண்ட மாமதலாய்!
வானவர்தம் கோவே! என்று
விண்சேரும் இளம்திங்கள் அகடுஉறிஞ்சு
மணிமாடம் மல்கு செல்வத்
தண்சேறை எம்பெருமான் தாள்தொழுவார்
காண்மின்-என் தலைமே லாரே[2]

(சோர - சுழலமிட்டுத் தளர; குருதி - இரத்தம்; இழிய - பெருக; தழல்-நெருப்பு; மாமதலாய் - இளம் பிள்ளையே; அகடு - கீழ் வயிறு; உறிஞ்சு-அளாவுகின்ற; மல்கு - நிறைந்திருக்கப்பெற்ற; தாள் - திருவடிகள்; தலை மேலார்- தலைமேல் வீற்றிருப்பர்)

என்பது பாசுரம். "பூதனையை முடித்த சிறு குழந்தாய்! வானவர்தம் கோவே! என்று சொல்லி அவனுடைய பரத்துவ சௌலப்பியங்களைப் போற்றி உருகுகின்ற பாகவதர்கள் எவரோ அவர்களே என் தலைமேல் வீற்றிருக்க உரியார்" என்கின்றார் ஆழ்வார். இத்திருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானப் பிரவேசத்தில், "பிள்ளையழகிய மணவாளரையர் கரையே போகா நிற்க, 'உள்ளே மாமதலைப் பிரானைத் திருவடி தொழுது போனாலோ?' என்ன : 'ஆர்தான் திருமங்கையாழ்வாருடைய பசைந்த வளையத்திலே (வளையம்-திருமுடியிலணியும் மாலை) கால் வைக்க வல்லார்? என்றருளிச் செய்தார்." என்ற வியாக்கியானப் பகுதி இங்கு அநுசந்திக்கத் தக்கவை.

இதனை விளக்குவோம்: **பிள்ளையழகிய மணவாளரையர்** என்பவர் ஏதோ ஒரு காரியமாய்த் திருச்சேறை வழியாய் ஓரிடத்திற்கு எழுந்தருள நேர்ந்தது. அவர் திருச்சேறைப் பதியிற் புகாமல் வயல் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கு அவரைக் கண்ட ஓர் அன்பர் 'வயல் வழியே போவானேன்? திருப்பதியினுள்ளே புகுந்து சாரநாதப் பெருமானைச் சேவித்துப் போகலாகாதோ?' என்று வினவினார். அதற்கு அரையர் சமத்காரமாக ஓர் உத்தரமுரைத்தார்: இத்திருப்பதிபற்றிய பாசுர முரைத்த திருமங்கையாழ்வார் 'தண் சேறை யெம்பெருமான் தாள் தொழுவார் காண்மின்-என் தலைமேலாரே' என்றார்; இப்பாசுரத்தின்படி, 'திருச்சேறை எம்பெருமானைச் சேவிப்

2. மேலது 7.4.1.

பவர்கள் ஆழ்வாருடைய திருமுடியிலேற வேண்டிய தாகும்; அது நமக்கும் பெருத்த அபசாரம் ஆகும்; அதற்கு அஞ்சியே உள்ளுப் புகாமல் கரையோரமே போய் விடுகிறேன்' என்றாராம். இது ஒரு வகையான சுவைநயப் பேச்சு. திருச்சேறை எம்பெருமானைச் சேவிப்பவர்கள் பக்கலில் ஆழ்வார் வசித்திருக்கும் பிரபத்தியை விளங்கக் காட்டினபடியாகும்.

இத்தலத்து எம்பெருமான்மீது திருவாய்மலர்ந்தருளிய பாசுரங்களில் ஆழ்வாரின் பக்தி வெள்ளம்-பாகவதர்களின் மீதுள்ள ஆதரம்-கரை புரண்டோடுகின்றது. பாசுரங்களில் எம்பெருமான் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், நரசிம்மா வதாரங்களில் நிகழ்த்திய வீரச்செயல்கள் குறிப்பிடப் பெறு கின்றன. திருச்சேறை எம்பெருமான்மீது ஆழ்வார் கொண்டுள்ள பக்தியின் ஊற்றம், பாகவதர்களின்மீது அவர் கொண்டுள்ள பேரன்பு ஆகியவை வெளியிடப் பெறுகின்றன. இவற்றைச் சிந்திக்கின்றோம்.

'இத்தலத்து எம்பெருமான் பெரியபிராட்டியாரைத் திருமார்பில் வைத்துக் கொண்டிருப்பவன்; கன்றினால் விளவெறிந்தவன்; இவனே திருச்சேறையில் நித்தியவாசம் செய்பவன். இவன் திருவடிகளைச் சேவிப்பவர்கள் ஒரு நொடிப் பொழுதும் என் நெஞ்சகத்தைவிட்டு நீங்கார்' இதிலுள்ள 'எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே' என்பதற்குப் பெரியவாச்சான் பிள்ளை, பாகவதர்கள் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் நிறைந்திருப்பார்களாதலால் சிந்தைக்கினிய பெருமானுக்கு அங்கு இடமில்லை என்று நயம்படப் பொரு ளுரைப்பார் (2); சூர்ப்பணகையின் 'மூக்கும் காதும் வெம்முரண் முலைக் கண்களும்' போக்கிய வீரனே! என்று சொல்லி எம்பெருமானுடைய திறலில் ஈடுபட்டு அவனது திருக்கழலிணை களையே துதித்து மலர்களையும் தீர்த்தத்தையும் சமர்ப்பிக்கும் அடியார்கள் நித்திய சூரிகளைக் காட்டிலும் சிறந்தவர்களாவர்' (3); 'தேர்வீரனான இராவணனுடைய இலங்கை மாநகரைப் பொடிபடுத்தின பெருவீரனே' என்று சொல்லித் திருச்சேறை எம்பெருமானுடைய பல பல திருநாமங்களை வாயாரப் பாடும் பெருமையுடையார் எவரோ அவரை ஒரு நாளும் பிரியேன்' (4); பிரகலாதாழ்வானைக் காத்தருள வேண்டி நரசிங்க மூர்த்தி யாய்த் தூணில் தோன்றி இரணியனின் மிடுக்கைப் பொடித்த எம்பெருமானுக்கே அடிமையாயிருப்பேனேயன்றி

சமணர் பௌத்தர் முதலானவர்களுடைய திரளில் சேரக் கடவனல்லேன்'(5).

'ஆதிவராக மூர்த்தியாய்த் தோன்றி அண்டபித்தியில் சேர்ந்திருந்த பூமியை அதினின்றும் விடுவித்துக் கொணர்ந்த பண்பாளா!' என்று இடையறாமல் சொல்லிக் கொண்டு நின் திருவடிக்கே அடிமையானேன்; நின் திருவடிகளே எனக்குத் தஞ்சம்; நின்னையன்றி வேறொரு புகலையுடையேனல்லேன்; இது சத்தியம்; திருச்சேறை எம்பெருமானின் அடியார்களைச் சேவித்த மாத்திரத்தில் என்னுடைய கண்களும் நெஞ்சும் களிக்கின்றபடியைக் காணுங்கள்' (6); 'திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் பெருமானே! அஞ்சனமலை போன்ற குளிர்ந்த வடிவையுடைய மாயனே! என்று சொல்லிக் கொண்டு திருச்சேறை எம்பெருமானின் திருவடிகளையே சிந்தித்துக் கொண்டிருக்கும் என்னுடைய எல்லா உணர்வுகளையும் தன் வசமாக்கிக் கொண்ட அப்பெருமானுக்கு ஆட்பட்டவர் எவரோ அவர்கள் திறத்தில் என் அன்பு பெருகுகின்றது' (7); 'விண்ணவரும் மண்ணவரும் ஈண்டித் தொழும்படியான திருவடிகளையுடைய திருச்சேறை எம்பெருமானைக் கண்ணாரக் கண்டும் கையாரத்தொழுதும் பரவசப்படுகின்ற வைணவர்களை நெஞ்சார நினைத்த மாத்திரத்தில் எமபயத்திற்கும் உட்படேன்' (8); 'பாகவதர்களைச் சேவிக்கப் பெற்றதனால் தமக்குண்டான எல்லை கடந்த மகிழ்ச்சிப் பெருக்கைப் பேசி, வஞ்ச நெஞ்சனான எனக்கு இப்படிப்பட்ட மகிழ்ச்சியை அநுபவிக்கும்படியான பேறு எங்ஙனம் வாய்த்ததோ? தெரியவில்லையே' என்று வியப்பெய்துகின்றார் ஆழ்வார் (9).

இங்ஙனம் சிந்தித்த நிலையில் திருக்கோயிலை நோக்கி நடக்கின்றோம். திருக்குளத்தின் மேல்கரையில் சுமார் 120 அடி உயரமுள்ள இராசகோபுரம் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது. இந்தக் கோபுரத்தைக் கடந்து முதல் சுற்றுக்கு வருகின்றோம். அங்கு இடை நிலைக் கோபுரம் ஒன்றுள்ளது. இதனை அடுத்து இருப்பது திருக்கல்யாண மண்டபம்; மண்டபத்தில் வடக்குப் பக்கத்தில் தான் மேலே குறிப்பிட்ட இராசகோபாலன் சந்நிதி உள்ளது. இவனை முந்திக்கொண்டு திருவேங்கடமுடையான் எழுந்தருளி யுள்ளான். இவர்களை அடுத்து சீதாப்பிராட்டி, இலட்சுமணன் இவர்களுடன் இராமனும், சேனை முதலியாரும் ஆழ்வாராதி களும் எழுந்தருளியுள்ளனர். எல்லோருமே நல்ல

செப்புத் திருமேனியைக் கொண்டு திகழ்கின்றனர். இவர்களுடன் இராமனும் சேனை முதலியாரும் தம் பேரெழிலால் நம்மைக் கவர்கின்றனர்.

அடுத்து உள் கட்டில் நுழைந்தால் நரசிம்மன், மணவாள மாமுனிகள் இவர்களைச் சேவிக்கலாம். இவர்கள் எல்லோரையும் சேவித்த பிறகு கருவறையை அடைகின்றோம். இங்குச் சிலை வடிவில் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிப்பவர் **சாரநாதப் பெருமாள்.** இவருக்குப் வலப்பக்கத்தில் மார்க்கண்டேய முனிவரும் இடப்பக்கத்தில் காவிரித் தாயாரும் சிலை வடிவில் காட்சி தருகின்றனர். இவர்கட்கு முன்னால் இருப்பவர் உற்சவர் **சாரநாதர்.** இவர் பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார், நீளா தேவியார் இவர்களுடன் சேர்ந்தே எழுந்தருளியுள்ளார். காவிரித் தாயாரின் மடியில் மாமதலை வடிவிலும் காட்சிதருகின்றார். இன்னும் சந்தான கிருஷ்ணன், செல்வர் இவர்களும் அங்கே இருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் சேவித்த பிறகு வெளியே வந்து வலப்புறமாகச் சுற்றி வந்து **சாரநாயகித் தாயாரைச்** சேவித்து அவருடைய திருவருளைப் பெறுகின்றோம். இங்கு இவருக்குத் தனி சந்நிதி உண்டு.

இவர்களை சேவித்த பிறகு இடை நிலைக் கோபுரத்தருகில் வந்து திருச்சேறை எம்பெருமான்மீதுள்ள ஆழ்வார் பாசுரங்களை மிடற்றொலிகொண்டு ஓதுகின்றோம். மிடுக்கான நடையி லமைந்த பாசுரங்கள் நம்மைப் பக்தியின் கொடுமுடிக்கு இட்டுச் செல்கின்றன.

பூமாண்சேர் கருஞ்குழலார் போல்நடந்து
வயல்நின்ற பெடையோடு அன்னம்
தேமாவின் இன்நிழலில் கண்துயிலும்
தண்சேறை அம்மான் தன்னை
வாமான்தேர்ப் பரகாலன் கலிகன்றி
ஒலிமாலை கொண்டு தொண்டீர்
தூமாண்சேர் பொன்அடிமேல் சூட்டுமின்நும்
துணைக்கையால் தொழுது நின்றே.[3]

(மாண் - அழகு; பெடை - பெண் அன்னம்; தேமா - மாமரம்; வாமான்- ஓடிவரும் குதிரை; மான் - மாட்சிமை)

3. மேலது 7.4 : 10.

'திருச்சேறை எம்பெருமானைச் சேவிக்கச் செல்பவர்கள் வேறு மலர்களைத் தேட வேண்டா; இத் திருமொழிப் பாசுரங்களை அநுசந்நிதித்தாலே பூவிட்டதற்கும் மேலாக எம்பெருமானின் திருவுள்ளம் உசுக்கும்' என்று ஆழ்வாரே சொல்லியுள்ளதை எண்ணி வியப்பெய்துகின்றோம். இந் நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நம் நினைவிற்கு வருகின்றது.

சென்றுசென்று செல்வம் செருக்குவார் வாயில்தொறும்
நின்று நின்று தூங்கும் மடநெஞ்சே - இன்தமிழைக்
கூறைக்கும் சோற்றுக்கும் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு.[4]

(செருக்குவார் - இறுமாப்புக் கொண்டவர்; வாயில் - வாசல்; தூங்கும் - சோர் வடையும்; கூறை - அடை; கூறாது - பாடாமல்; பேறு - வீடுபேறு; செப்பு - பாடு)

என்பது பாசுரம். செல்வச் செருக்குடையார் வாயிலருகில் சென்றுச் சோற்றுக்கும் கூறைக்கும் பாடாமல் சேறை நாயகன் பேர் பாடி பரமபதம் அடைந்து பேராநந்தத்தை அடையுமாறு தம் நெஞ்சிற்கு உபதேசிக்கின்றார் அய்யங்கார். இந்த அநுபவத்துடன் நம் இருப்பிடம் திரும்பச் சித்தமாகின்றோம்.

இத்தலத்து எம்பெருமான், **சாரநாதன்**; **தாயார்**, **சாரநாயகி**; **விமானம்**, **சாரவிமானம்**; **தீர்த்தம்**, **சாரதீர்த்தம்**; **நிலம்**, **சாரக்ஷேத்திரம்**: ஐந்து சாரமுள்ள பொருள்கள் ஒரு சேர அமைந்திருந்தலால் இத்தலம் '**திருச்சேறை**' என்ற திருநாமம் பெற்றது. வடமொழியில் '**பஞ்ச ஸார க்ஷேத்திரம்**' என்று வழங்குகிறது. இங்ஙனம் சாரமுள்ள பொருள்களையுடைய இத்திருத்தலத்தில் காவிரி தவம் செய்து கங்கையை விடச் சிறப்புப் பெற்றனள் என்பர்.

4. நூற். திருப். அந். 12.

14. வெள்ளியங்குடிக் கோலவில் இராமன்

திருக்குடந்தை இருப்பூர்தி நிலையத்தருகில் தங்கி யிருக்கும் நம் நினைவில் நம்மாழ்வாரின்,

> "அடங்குஎழில் சம்பத்து
> அடங்கக்கண்டு ஈசன்
> அடங்குஎழில் அஃதுஎன்று
> அடங்குக உள்ளே"[1]

(எழில் - அழகு; எழில் - செல்வம்)

என்ற திருப்பாசுரம் குமிழியிட்டு எழுகின்றது. இதன் கருத்தைச் சிந்திக்கின்றோம். எம்பெருமானது ஐசுவரியம் அளவற்றது; அப்படிப்பட்ட ஐசுவரிய மெல்லாம் எம்பெருமானுடையது என்று அநுசந்தித்து நாமும் அந்த ஐசுவரியத்தினுள் அடங்கிப் போக வேண்டும் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் உண்மை. அஃதாவது **சம்பந்த ஞானம்** வேண்டும் என்கின்றார்.

இதனை ஈட்டாசிரியர் ஒரு சிறு கதையினால் தெளிவாக்கு கின்றார். ஒரு வணிகன் தன் மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் பொருள் தேடும் விருப்பினால் வெளிநாடு சென்றான்; அவளும் கருவுயிர்த்தாள்; தக்கவயதை அடைந்ததும் மகனும் தனக்கும் தனது தந்தையின் வாணிகமே தொழில் என்று கொண்டு பொருள் தேடப் போனான். இருவரும் தத்தமக்கு வேண்டிய சரக்கு பிடித்துக் கொண்டுவந்து ஒரு கூடாரத்தில் தங்கினர். அந்த இடம் இருவருக்கும் போதவில்லை. இருவரிடையேயும் விவாத முண்டாயிற்று. இருவரையும் அறிவானொருவன் வந்து, 'இவன் நின் தந்தை; நீ இவன் மகன்' என்று அறிவித்தால், கீழ் இழந்த நாட்களுக்கு வருந்தி, இருவர் சரக்கும் ஒன்றாய், அவன் காப்பாற்றுகின்றவனாய், இவன் காப்பாற்றப்படும் பொருளாய்க் கலந்து விடுவார்களன்றோ? இருக்குவேதத்திலும் இதனை விளக்குவதுபோல், "சீவான்மாவும் பரமான்மாவும் உடலாகின்ற

1. *திருவாய். 1.2:7.*

ஒரு மரத்தைப் பற்றியிருந்தால், ஒருவன் இருவினைப் பயன்களை நுகரா நிற்பன்; ஒருவன் நுகர்வித்து விளங்கா நிற்பன்'' என்ற கருத்து உள்ளது. இறைவன் ஏவுகின்றவன்; நாம் ஏவப்படும் பொருள் என்ற உண்மையை ஆசாரியன் உணர்த்த நாம் உணர்கின்றோம்.

இதனை இக்கால அரசியல் கொண்டு விளக்குவோம். 'மக்கள் வாக்கு மகேசுவரன் வாக்கு' என்பதை அரசியல் தலைவர்கள் நன்கு உணர்தல் வேண்டும். அப்படி உணராமல் 'வாக்குகள் எல்லாம் நம் செல்வாக்கில்தான் நம் சார்பில் வந்து குவிந்தன' என்ற அகந்தையினால் மக்கள் வாக்கினால் பெற்ற பலத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினால் இறைவன் வாளா இரான். அடுத்த தேர்தலில் இது தலைகீழ்ப் பாடமாகப் போய் விடும். அங்ஙனமின்றி இந்தச் சந்தர்ப்பம் நமக்கு இறைவனால் வழங்கப்பெற்றது என்று கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் தொண்டாற்றத் தொடங்கினால் நாடும் செழிப்புறும். ஆட்சி புரியும் தலைவனும் புகழுடன் திகழ்வான். சுதந்திரம் பெற்ற பிறகு நாட்டை ஆண்ட தலைவர்கள் இந்த அநுபவத்தைப் பெற்றிருந்தும், சிந்தியாமல் அகந்தையுடன் இருந்தமையால் வீழ்ச்சி அடைந்தனர்; சொல்லொணா அவமானத்தையும் அடைந்தனர்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் எழுந்த வண்ணம் திருவெள்ளியங்குடிக்குப் போகச் சித்தமாகின்றோம். இந்த திவ்விய தேசம் திருவிடை மருதூர் இருப்பூர்தி நிலையத்தி லிருந்து வடதிசையில் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலும், அல்லது மாயூரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து கீழ்த்திசையில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. கும்பகோணத்தி லிருந்து அணைக்கட்டுக்குப் போகும் பேருந்து செல்லும் வழியில் **செங்கனூர்** என்ற ஊரில் இறங்கி தென் திசையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருவெள்ளியங்குடிக்குச் செல்ல வேண்டும்; மாட்டு வண்டியில்தான் செல்ல வேண்டும். சில சமயம் மாட்டு வண்டியும் கிடைப்பதில்லை. நடந்து போகத் தயாராக இருக்க வேண்டும். வண்டி கிடைக்காததால் நாம் நடந்தே செல்லுகின்றோம். கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் **பெரியவாச்சான் பிள்ளை** பிறந்த சேங்காநல்லூர் உள்ளது. சுக்கிரன் தவம் புரிந்து பேறு பெற்ற தலமாதல்பற்றி இது **வெள்ளியங்குடி** என்ற திருநாமம்

பெற்றதாகச் சொல்வார். ஒன்பது கோள்களும் பேறு பெற்ற தலங்கள் நம் நினைவிற்கு வருகின்றன. சூரியன் பேறு பெற்ற தலம் **சூரியனார் கோயில்**; சந்திரன் பேறு பெற்ற தலம் **இந்தளூர்**; செவ்வாய் பேறு பெற்ற தலம் **வைத்தீசுவரன் கோயில்**; புதன் பேறு பெற்ற தலம் **திருவெண்காடு**; குரு பேறு பெற்ற தலம் **ஆலங்குடி**; சுக்கிரன் பேறு பெற்ற தலம் **திருவெள்ளியங்குடி**; சனி பேறு பெற்ற தலம் **திருநள்ளாறு**; இராகு கேது பேறு பெற்ற தலம் **திருவாஞ்சியம்** (ஸ்ரீ வாஞ்சியம்). இவற்றைச் சிந்தித்த வண்ணம் திருவெள்ளியங்குடியை நோக்கி நடக்கின்றோம்.

தஞ்சை மாவட்டம் மருத நிலவளத்திற்குப் பேர் போனது. இதனைத் திருமங்கையாழ்வார் தம் திருப்பாசுரங்களில் குறிப் பிட்டுள்ளதைச் சிந்தித்த வண்ணம் நடக்கின்றோம். அக்காட்சிகள் இன்றும் நம் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். திருக்கோயிலின் புறச் சூழ்நிலை எவ்வாறுள்ளது?

> ''காய்ந்தநீள் கமுகும் கதலியும் தெங்கும்
> எங்கும்ஆம் பொழில்களின் நடுவே
> வாய்த்தநீர் பாயும் மண்ணியின் தென்பால்
> திருவெள்ளி யங்குடி அதுவே''[1]

(நீள் - ஓங்கியிருக்கும்; கமுகு - பாக்கு மரம்; கதலி - வாழை மரம்; தெங்கு- தென்னை மரங்கள், பொழில்கள் - சோலைகள்; மண்ணி - மண்ணியாறு)

என்கின்றார் ஆழ்வார். ''காய்கள் நிறைந்து ஓங்கிக் கிடக்கின்ற பாக்கு மரங்கள், வாழை மரங்கள், தென்னை மரங்கள் இவை மலிந்திருக்கும் சோலைகளில் சென்று பாயும் மண்ணியாற்றின் தென்கரையிலுள்ளது திருவெள்ளியங்குடி (1); நிறைந்து பூத்துக் குலுங்கும் சுரபுன்னை மரங்கள் மொக்குவிட்டுக் கிடக்கும் புன்னை மரங்கள் இவற்றின் பொந்துகளிடையே வண்டுகள் நெருங்கிக் கொண்டு இராமாயண காலத்தில் மதுவனத்தில் புகுந்த வானர முதலிகளைப்போல் பெரிய ஆரவாரத்துடன் மதுபானம் பண்ணி இசைபாடப் பெற்ற சோலைகள் சூழ்ந்த இடம் இது (2); இதன் அருகில் ஓடும் மண்ணியாற்றில் துறைதோறும் அலைகள் நவமணிகளைக் கொண்டு வந்து குவிக்கினறன(4); இத்திருத் தலத்தைச் சார்ந்த வயல்கள் எப்பொழுதும் ஏர் கொண்டு உழப்படுகின்றன. இதனால் வெருவிய வாளை மீன்கள்

1. பெரி. திரு. 4-10:1.

அச்சமின்றி வாழ்வான் வேண்டிப் பொய்கைகளில் சென்று சேர்கின்றன. சம்சார வாழ்க்கை ஆபத்துகளுக்கு இடமென்று துணிந்து அதனை விட்டு நித்தியானந்தமான பரமபதத்தில் வாழ்வதைக் கருதுகின்ற முமுட்சுகளின் நிலையை இங்ஙனம் மீனைக் கொண்டு எடுத்துக் காட்டுவதாகக் கொள்வர் பெரியோர் (5); ஊற்று நீர் உள்ள நிலங்களில் முளைத்திருக்கின்ற வாழை மரங்களினின்றும் உதிர்ந்த நன்கு பழுத்த கனிகளைக் கயல் மீன்கள் மேல் விழுந்து புசித்து சேற்று நிலங்களில் துள்ளி விளையாடுகின்றன (6); மேலும்,

''அள்ளியம் பொழில்வாய் இருந்துவாழ் குயில்கள்
அரிஅரி என்றவை அழைப்ப
வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான்
திருவெள்ளி யங்குடி அதுவே''[2]

(அள்ளி - தாதுக்கள்; எதுகை நோக்கி 'அல்லி' அள்ளி என்றாயிற்று; வெள்ளியார் - சுக்கிரன்; விரைந்து-விரைவில்)

என்று இவ்வூரைக்காட்டுவர். தாதுக்கள் மணம் பரப்பும் அழகிய சோலைகளில் இருந்து மகிழும் குயில்கள் 'ஹரி, ஹரி' என்று கூவும் இடம் இது(7); மணம் வீசப்பெற்ற தாமரைமலர்கள் கரும்புக் காட்டிலும் செந்நெல் கழனிகளிலும் மலர்ந்து காணப் பெறுகின்றன; கரும்புகளும் செந்நெற் பயிர்களும் அசைந்து கொண்டு திகழ்கின்றன. அழகிய அன்னப் பறவைகள் பேடையுடன் கூடி தாமரை மலர்களின்மீது காட்சி அளிக்கின்றன (9); இதற்கு ஓர் உட்கருத்து உரைப்பர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காரச்சாரியார். இருபக்கத்திலும் கரும்பும் செந்நெல்லும் அசைவது சாமரம் வீசுவதொக்கும்; தாமரை மலரின் மீது அன்னமும் பேடையும் கூடி வாழ்வது பெருமானும் பிராட்டியும் கூடிவாழ்வதொக்கும்.[3]

திருவெள்ளியங்குடி சூழ்நிலையைக் கண்டுகளிக்கும் நாம் ஆழ்வார்காலத்து ஊரையும் மானசீகமாகக் கண்டுகளிக்கின்றோம். இந்த ஊரின் மாடமாளிகைத் தூண்களில் அழுத்தப் பெற்றுள்ள தவமணிகளின் ஒளி இடைவிடாது திகழ்வதால் 'இது பகல், இது இரவு' என்று அறியக்கூடவில்லை. இது பொய்யுரை என்று சிலர் ஐயுறுவர். எம்பெருமான் கோயில்

2. பெரி. திரு. 4. 10 : 7
3. மேலது 4.10: 9 (திவ்வியார்த்த தீபிகை).

கொண்டுள்ள இத்தலம் இங்ஙனம் அதிசயம் வாய்ந்ததாக அமையவேண்டும் என்னும் ஆவலால் ஆழ்வார் இங்ஙனம் அருளிச் செய்கின்றார் என்றுகொள்ளல் வேண்டும் (8); அன்பின் மிகுதியால் இங்ஙனம் கூறல்தகும். இத்திருத்தலத்து வாழும் அழகிய மகளிர் செய்யும் நடனப் பயிற்சியினால் எழும் இன்னோசை நாற்றிசைகளிலும் உம்பர் உலகங்களிலும் பரவி அதிர்கின்றது (3). ஆழ்வாரின் ஆதராசியத்தால் விளைந்த கற்பனை இது.

பரத்துவ நிலை, வியூக நிலை, விபவநிலைகளிலுள்ள எம்பெருமானே அர்ச்சை நிலையில் திருவெள்ளியங்குடியில் எழுந்தருளியுள்ளார் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். இந்த மூன்று நிலை எம்பெருமான்களும் பாசுரங்களில் கலந்தே காணப்பெறுகின்றனர். பாசுரங்களில் ஆழங்கால்படும் நிலையில் எம்பெருமான்களையும் சிந்தித்து அநுபவிக்கின்றோம். திருவெள்ளியங்குடியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? ஆய்ச்சியர் முறையிடும் படியாக வெண்ணெய் அமுது செய்த கள்வன்; பிரளய காலத்தில் ஆலந்தளிரில் கண் வளர்ந்தவன்; பூதனையின் மூலைப்பாலை அமுது செய்யும் பாவனையில் அவள் உயிர் குடித்தவன்; இரட்டை மருதமரங்களை முறித்து ஒழித்து நளகூபர மணிக் கிரீவர்களின் சாபம் போக்கியவன்; மாவலியிடம் மூன்றடி மண் பெற்று பெருநிலம் அளந்து கவர்ந்து கொண்டவன் (1); கண்ணனாக வந்து ஆநிரைகளை மேய்த்தவன்; கடலில் சேதுகட்டி அரக்கர்களின் தலைகளை அறுத்துத் தள்ளினவன்; கார் கால மேகம் போன்ற வடிவுடையவன் (2); ‘கடுவிட முடைய காளியன் தடத்தைக் கலக்கி முன்னழித்து, அவன்றன் படம் இறப் பாய்ந்து பன்மணி சிந்தப் பல் நடப்பயின்றவன்’ (3); ‘கறவை முன்காத்துக் கஞ்சனைக் காய்ந்த காளமேகத் திருவுருவன்; பறவை முன் உயர்த்துப் பாற்கடல் துயின்ற பரமன்’ (4); ‘பாரினை உண்டு பாரினை உமிழ்ந்தவன்; பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்து பகைவர்களின் தேர்களைப் பங்கப்படுத்திய பெருமான்’ (5); பூளைப் பூப்போல் உருமாய்ந்து போம்படியாக இலங்கையின் அரக்கர் சேனைகள் ஒழியும்படியாகக் கொடிய கணைகளைச் செலுத்திய கோலவில்லி இராமன் (6); வாமன மாணியாய் மாவலியிடம் மூவடி மண் இரந்து பெற்ற திசைகளெல்லாம் விம்முற வளர்ந்த பெருமான் (7); நான்முகன் முதலிய தேவர்கள் கூட்டம்

கூட்டமாகச் சேர்ந்து எம்பெருமானுடைய பரத்துவ குணங்களையும் சௌலப்பியம், சௌசீல்யம், வாத்சல்யம் என்ற குணங்களையும் சொல்லித் தொழுதேத்த அவர்கட்குத் திருவருள் சுரந்து கொண்டு திருப்பாற்கடலில் அரவணைப் பள்ளியின்கண் துயில் கொண்டிருக்கும் எம்பெருமான் (9); மேலும்,

"முடியுடைய அமர்க் கிடர்செயும் அசுரர்
தம்பெரு மானை அன்று அரியாய்
மடியிடை வைத்து மார்வம்முன் கீண்ட
மாயனார் மன்னிய கோயில்."[4]

(அமரர் - தேவர்; இடர் - துன்பம் ; அரி - சிங்கம்; அசுரர் தம் பெருமான் - இரணியன்)

என்று இத் திருக்கோவிலைப்பற்றிப் பேசுவர் ஆழ்வார். தேவர்கட்குத் துன்பம்இழைத்த இரணியனை நரசிங்கமாக வந்து தம் மடியில் வைத்து அவன் மார்பைக் கிழித்து உயிர் குடித்த பெருமான். பலசுருதிப் பாசுரத்தில் வராக அவதாரம் எடுத்து பூமிப் பிராட்டியாரைத் தம் கோட்டிடை வைத்து அருளியவனும், தெளித்த அலைகள் தம் திருவடிகளின்மீது மோதும்படியாகத் திருப்பாற் கடலில் கண் வளர்ந்தருள்பவனுமான எம்பெருமானே திருவெள்ளியங்குடியில் எழுந்தருளியிருப்பவன் என்கின்றார். மேற்குறிப்பிட்ட எம்பெருமான்களே அர்ச்சை உருவத்தில் திருவெள்ளியங்குடியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ளனர் என்பது ஆழ்வார் உணர்த்தும் கருத்து. எந்த நிலையில் எழுந்தருளியிருந்தாலும் அவனே பரமபதநாதன் என்ற வைணவ சமயக் கருத்தினை உணர்த்தும் நிலையில் பாசுரங்கள் அமைந் துள்ளன.

இங்ஙனம் சிந்தித்துக் கொண்டே திருக்கோயிலை அடைகின்றோம். இத்திருத்தலத்து எம்பெருமானின் திருநாமம் **கோலவில்லி இராமன்** என்பது. இது திருமங்கையாழ்வார் சூட்டிய திருநாமம். இவருக்குச் **சிருங்கார சுந்தரன்** என்ற திருநாமமும் உண்டு. தாயார் **மரகதவல்லி**. இவர்கள் இருவரையும் திருமொழிப் பாசுரங்களை மிடற்றொலியால் ஓதி உளங் கரைந்து வழிபடுகின்றோம். எம்பெருமான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு புயங்க சயனத்தில் (கைகளின் மீது தலையை வைத்துக் கொண்டு) சேவை சாதிக்கின்றான்.

4. மேலது 4.10.8.

இத்தலத்து எம்பெருமானைச் சேவித்துவிட்டால் 108 எம்பெருமான்களைச் சேவித்த பலன் கிட்டும் என்ற நம்பிக்கை அடியார்களிடம் இருந்து வருகின்றது. இங்கு வைகானச ஆகம முறைப்படி வழிபாடு நடை பெறுகின்றது.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் ஓதி உளம் களிக்கின்றோம்.

''கால்அளவும் போதாக் கடன்ஞாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார் - கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகவூண் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர்'' [5]

(கால் - திரிவிக்கிரமன் திருவடி; ஞாலம் - பூமி; நுவல்வார் - உணர்ந்து சொல்லத் தக்கவர்; கோலம் - அழகிய; பருவெள்ளி - வெள்ளிமலை; பாதகவூண் - பிரம்மஹத்தியாகிய பாவம் ; மாய்ந்த - ஒழித்த; சீர் - சிறப்பு)

எம்பெருமானது அனந்த கல்யாண குணங்கள் முழுவதையும் தெளிவாகத் தெரிவிக்கின்ற நூல்களும் இவ்வுலகிலில்லை. 'நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என்பதற்கேற்ப அவ்வெம் பெருமானது குணங்களைச் சிறிதே கூறுகின்ற அந்நூல்களைக் கற்றவர்கள் அதனால் தாம் உணர்ந்து கொண்ட சிறிதளவே எம்பெருமானது திருக்குணங்களைக் கூறவல்லவரே யன்றி முற்றும் உணர்ந்து சொல்லவல்லவர் ஒருவரும் இலர் என்பது அய்யங்கார் பெற வைக்கும் உண்மை.

மயனது வேண்டுகோளுக்கிணங்க இங்கு எம்பெருமான் தனது திருவாழி திருச்சங்குகளைப் பெரிய திருவடியிடம் விடுத்துக் கோதண்டராமனாகக் காட்சி அளிப்பதாகப் புராண வரலாறு கூறுகின்றது. இதற்கேற்ப இத்திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ள கருடன் இவற்றைத் தரித்திருப்பதைக் காணலாம். பகவான் சுக்கிரனுக்கு அருள் புரிந்த தலமாதலால் '**சுக்கிரபுரி**' என்றும், பிருகு முனிவர் நீண்ட காலம் தவம் புரிந்து எம்பெரு மானைக் கண்டு பேரின்பம் எய்தினமையால் '**பார்க்கவபுரி**' என்றும் இத்தலம் வழங்கப் பெறுகின்றது.

இத் திருக்கோயிலின் கருவறை மட்டிலும் கருங்கல்லால் ஆனது. வெளிமண்டபங்கள், மதில், கோபுரம் முதலியவை செங்கலால் கட்டப்பெற்றுள்ளன.

5. நூற். திரு. அந். 29.

இத்தலத்தில் பல மகான்களும், அகோபிலமடத்து சீயர்களும், ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகளும், ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளும் பல நாட்கள் தங்கி சாதுர்மாஸ்யம், வியாசபூசை அநுட்டித்திருப்பதாக அறிகின்றோம்.

இங்ஙனம் பல செய்திகளை அறிந்த நிலையில் இத்திருத் தலப் பயணம் நமக்கு மனநிறை தரும் முறையில் நம் இருப்பிடம் திரும்புகின்றோம்.

15. புள்ளம் பூதங்குடிப் புனிதன்

எம்பெருமான் வாமன மாணியாக வந்து மாபலியிடம் மூவடிமண் பெற்று ''ஓங்கி உலகளந்த உத்தமனாக''[1] வளர்ந்தபோது அவனுடைய திருவடி நான்முகனின் சத்திய லோகம் வரைசென்று அளந்தது. அப்பொழுது நான்முகன் அந்த திருவடிக்குத் திருமஞ்சனம் (நீராடல்) செய்து பெருமையுற்றான். அந்த நீரே கங்கையாகப் பெருகி வழிந்தது. அதனைச் சிவபெருமான் தன் திருச்சடா முடியில் தாங்கினான். இங்ஙனம் அவ்வெம்பெருமானின் பெருமையைத் திரிமூர்த்திகளில் இரு மூர்த்திகள் போற்றினர். இத்தகைய எம்பெருமானின் சொரூபத்தையும் குணங்களையும் அறிவதற்கு நான்மறைகள், மற்ற சாத்திரங்கள் அனைத்தும் முயன்று தேடிக் களைப்படைந்து நிற்கின்றன. அவனோ தன்னை அடைய வேண்டியவர்கள் தன்னைத் தேட வேண்டாதபடி மிகவும் எளியனாய், ஒருசேமநிதி போல், தானாகவே அடியார்களிடம் நெருங்கி நிற்கின்றான். அவன் முன்பு ஆநிரையைக் காத்ததுபோல் இப்போது வேதமாகிய பசுவைக் கறந்து, அதன் சாரமாகிய பாலமிழ்தத்தை எடுத்து **பாஞ்சராத்ரம்** என்னும் சாத்திரமாகப் பொழிந்துள்ளான்; சேதநருக்கு இதுவே காப்பாகும் என்று உலகிற்கு வெளியிட்டருளியுள்ளான். கிருதயுக தருமத்தைத் தெளிவாகப் போதிக்கும் அந்தச் சாத்திரத்தை நாம் நன்கு கற்று இப்பிறவிப் பெருங்கடலின்று உய்யும் வழியை அடைந்தோம். இக்கருத்தினைக் கொண்ட வேதாந்த தேசிகரின்,

பூவலரும் திருவுந்திப் புனிதன் வையம்
 பொன்னடியால் அளந்திருவர் போற்ற நின்ற
நாவலருங் கலைகளெலாம் தன்னை நாட
 நாடாத நன்னிதியாய் நணுகு நாதன்

1. *திருப்பாவை- 3*

கோவலனாய் நிரையளித்த நிறைபோல் வேதம்
கோவாகக் கோமானாய் அதன்பால் சேர்த்துக்
காவலிது நல்லுயிருக் கென்று காட்டும
கார்த்தயுகக் கதிகண்டோம் கரை கண் டோமே.[2]

(பூ-தாமரை; திருவுந்திப் புனிதன்-நான்முகன்; வையம் - உலகம்; தன்னை-தன் சொரூபத்தை; நாட-தேடிநிற்க; கோவலன்-கோபாலன்; கோ-பசு; கோமான்-இடையன்; இது-இந்த சாரம்; காவல்-காப்பு; கார்த்தயுகக்கதி-கிருதி யுகத் தருமத்தைப் போதிக்கும் பாஞ்சராத்ரம்; கண்டோம்-அறிந்தோம்; கரை-பிறவிப் பெருங்கடலின் கரை)

என்ற பாடல் நம் மனத்தில் எழுந்தவண்ணம் கும்பகோணத்தி லிருந்து திருப்புள்ளம்பூதங்குடி என்ற திருத்தலத்திற்குப் பயண மாகின்றோம்.

புள்ளம் பூதங்குடி என்ற இத்திருத்தலம் மயிலாடு துறை-திருச்சி இருப்பூர்திப் பாதையில் சுவாமிமலை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்கிருந்து புள்ளம் பூதங்குடி போவதற்கு மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் கிடைக்கும். கும்போணத் திலிருந்து சுவாமி மலைக்குப் போகும் பேருந்து வழியிலிருப் பதால் கும்பகோணத்திலிருந்தும் போகலாம். தங்க வசதியுள்ள விடுதிகளும் உணவு விடுதிகளும் இங்கு உள்ளன. இராமபிரான் சடாயுவைத் தகனம் செய்து அப்புள்ளரசனைப் 'பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம்'[3] புகச் செய்த தலமாதல்பற்றிப் புள்ளம் பூதங்குடி என்ற திருநாமம் பெற்றது.

பேருந்தில் வந்துகொண்டிருக்கும்போதும் இத்திருத்தலத் தை அடைந்த பிறகும் திருமங்கையாழ்வாரின் இத்திருத்தலம் பற்றிய பாசுரங்களில் நம்மனம் ஆழங்கால் படுகின்றது. திருமங்கையாழ்வார் ஒருவரே இத்திருத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார்.[4] வழக்கம்போல ஆழ்வார் பாசுரங்களின் முற்பாதியில் எம்பெருமானைப் புகழ்கின்றார்; பிற்பாதியில் ஊர்ச் சூழ்நிலை, ஊர் நிலை இவற்றை விளக்கமாகப் பேசுகின்றார்.

இத்திருத்தலத்தின் சூழ்நிலை எப்படியுள்ளது? சோலை களில் நறுமணம் மிக்க மலர்கள்மீது சுரும்பு என்ற வண்டினங்கள் இருந்து கொண்டு இன்னிசை எழுப்புகின்றன; அழகு மிக்க

2. தேசிகப் பிரபந்தம்-197.
3. கம்ப. ஆரணி சடாயுஉயிர்நீத், 215.
4. பெரி. திரு 5.1

மயில்கள் கூத்தாடுகின்றன; பொறி சிறைகொள் கொண்ட வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன் (1); தாழ்ந்திருக்கும் கழனிகளில் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன; பறவைகள் இக்கழனிகட்குச் சென்று தம் குட்டிகட்கு உணவாகக்கூடிய சிறு மீன்களைத் தேடுகின்றன(2); இங்குப் பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடும் ஓர் இதிகாசம்; முற்காலத்தில் ஆலவாயுடையான் என்பானொரு தமிழன் பட்டரிடம் வந்து இப்பாசுரத்தில் (5.1:2)

> பள்ளச் செறுவில் கயலுகளப்
> பழனக்கழனி யதனுள்போய்
> புள்ளுப் பிள்ளைக் கிரைதேடும்
> புள்ளம்பூதங் குடிதானே.

என்ற அடிகளில் ''பள்ளச் செறுவில் கயலுகள'' என்பதாலேயே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்று கிடக்கின்றமை புலனாகிவிட்டது. அப்படியிருக்க ஈற்றடியில் ''புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்'' என்று எப்படிச் சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தாலன்றோ இரை தேட வேண்டும்? கொள்வார் தேட்டமாம்படி குறையற்றுக் கிடக்கும்போது தேடிப்பிடிப்பதாகச் சொல்லுவது பொருந்தாதன்றோ? என்று கேட்டான். இதற்குப் பட்டர் அருளிச் செய்ததாவது, ''பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற் போக்கு அறிந்திலை; 'பிள்ளைக்கு இரைதேடும்' என்றுள்ளது காண்; அங்குள்ள மீன்கள் நிலமிகுதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும்; அவை பறவைக் குஞ்சுகளளின் வாய்க்குப் பிடிக்கமாட்டாவாகையால் உரிய சிறிய மீன்கள் தேடிப்பிடிக்க வேண்டு மத்தனையன்றோ'' என்றாராம்.

திருத்தலத்தைச் சுற்றிலுமுள்ள தோட்டங்களில் தென்னை மரங்கள் நிறைந்துள்ளன; அவற்றினின்றும் தேங்காய் நெற்றுகள் இற்று வீழுங்கால் மீன்கள் துள்ளி அப்பால் ஓடுகின்றன; கழனிகளிலும் தாமரை முதலிய பூக்கள் நிறைந்து காணப் பெறுகின்றன (3); சிவந்த கால்களையுடைய நாரைகள் கழனிகளில் நிறைந்துகிடக்கும் ஆரல்மீன்களைத் தமக்கு இரையாகக் கொள்வதற்கு வந்து சேர்கின்றன (5); ஒரு நாளும் வற்றாத நீர்நிலைகளில் உள்ள தாமரைப் பூக்களில் வண்டுகள் இருந்து இசைபாடுகின்றன ; புன்னை மரங்கள் பொன்னிறமான மகரந்தங்களை உதிர்த்து நிற்கின்றன (6) ; (இந்தப் பாசுரத்தின் ஆழ்வார் திருவாக்கைப் பேணி திருப்புள்ளம் பூதங்குடி

சந்நிதியில் இன்றைக்கும் ஒருதிருப்புன்னை மரம் வளர்க்கப் பெற்று வருதல் அறியத்தக்கது). நாற்புறமும் கழனிகளில் உள்ள அழகிய நீல மலர்கள் வண்டுகள் கூட்டம் கூட்டமாக விருந்து உண்பதற்குத் தேனைப் பெருக்குகின்றன (7); காவிரிநதி ஒளியுடன் திகழும் நவமணிகளையும், மூங்கில் முத்துகளையும், சாமரங்களையும் பொன்னையும் தள்ளி வருகின்றன (9).

சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த மதில்களாலும் மலைகளினாலும், அழகிய இல்லங்களாலும், மாளிகைகளினாலும், அழகிய மண்டபங்களினாலும் சிறந்து காணப்பெறுகின்றது ஊர் (4); பொய்யா நாவில் வேதங்களை ஓதும் அந்தணர்கள் வாழ்கின்ற இடமாகும் இவ்வூர் (5); இவ்வூரில் வாழும் அந்தணர்கள் மறைகளை ஓதுவதுடன் முத்தீயை வளர்ப்பவர்கள்; இதனால் பெரும்புகழையும் பெற்றவர்கள்; பொறுமையும் வள்ளண்மையும் இவர்தம் சிறந்த குணங்களாகும் (8).

இத்தலத்து எம்பெருமானின் சிறப்பு எங்ஙனம் பேசப் பெறுகின்றது? என்பதையும் சிந்திப்போம். "எவருக்கும் தம் முயற்சியால் அறியக் கூடாதவன் ; எல்லாவுலகங்கட்கும் நாதன்; என்னை அடிமையாகக் கொண்டவன்; வாமனமாணி உருவங் கொண்டு மாவலியின் யாகபூமியில் அழகிய நடையுடன் சென்றவன் (1); வாமன உருவத்துடன் சென்று மாவலியை வஞ்சித்து எல்லாவுலகங்களையும் சுவாதீனப்படுத்திக் கொண்டவன்; கஜேந்திரன் துன்பம் தவிர்த்த புனிதன் (2); குதிரை வடிவத்துடன் வந்து கேசி என்னும் அசுரனின் வாயைக் கீண்டவன்; கம்சன் நிறுத்திவைத்திருந்த சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லர்களை வென்றவன்; தவழ்ந்து சென்று இரட்டை மருத மரங்களை முறித்துத் தள்ளினவன் (3); கோவர்த்தன மலையால் இந்திரனின் கல்மாரியைப் பழுதாக்கினவன்; இராவணனின் இருபது தோள்களையும் அறுத்தொழித்த வல்வில்லையுடைய இராமன் (4,7); யசோதைப் பிராட்டி எவர் கண்ணும் படாதபடி மறைத்து வைத்திருந்த தயிரையும் நெய்யையும் குடம் பாலையும் களவு வழியினால் அமுது செய்து திருவாழியைக் கையில் கொண்ட மாயன்(5), நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு மன்னு சினத்த மழ விடைகளை வென்றொழித்தவன் (6); உருத்திரனைப் புறமுதுகிட்டோடச் செய்து வாணனின் ஆயிரந்தோள்களை அறுத்தெறிந்த பெருமான் (7); பாரதப் போரில் பாண்டவர்களின் பட்சபாதியாக

நின்று பார்த்தனுக்குச் சாரதியாகத் தேரோட்டி னவன்; உருத்திரன் கையில் ஒட்டிக் கொண்டு ஒன்றாலும் நிரம்பாதிருந்த பிரம்ம கபாலத்தைப் பிச்சையிட்டு நிறைத்தவன் (8); மண்ணுலகமும், விண்ணுலகமும் இருளால் சூழப் பெற்று மூடிக்கிடந்த நாளில் அன்ன வடிவமாய் அவதரித்து அருமறைகளை வெளிப்படுத்தி அருளியவன் (9); 'இத்தனை அரிய செயல்களை ஆற்றின எம்பெருமானே திருப்புள்ளம் பூதங்குடியில் கோயில் கொண்டிருப்பவன். அர்ச்சையில் விபவங்களும் (இராமன், கண்ணன், வாமனன்) பரத்துவமும் அடங்கி இருப்பனவாகக் காட்டி எல்லா நிலை எம்பெருமான்களும் ஒருவனே என்பதை உணர்த்தும் வகையில் ஆழ்வார் பாசுரங்கள் அமைந்துள்ளன. இந்த எண்ணங்களுடன் திருக்கோயிலை வந்தடைகின்றோம்.

இத்தலத்து எம்பெருமானின் திருநாமம் **வல் வில்லி இராமன்** என்பது, திருமங்கையாழ்வார் இட்ட திருநாமம் (பாசுரம் 5.1:4). கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சயனத் திருக்கோலத்தில் (புயங்க சயனம்) சேவை சாதிக்கின்றான். தாயார் **பொற்றாமரையாள்** என்ற திருநாமம் கொண்டவர். (5.1,15), தவிர, மூலவராகிய இராமன் கையில் திருவாழி திருச்சங்குகளுடன் காட்சி தருவது எங்கும் காணாத காட்சியாகும். அன்னையையும் அப்பனையும் திருமொழிப் பாசுரங்களை மிடற்றொலி கொண்டு உளங்கரைந்து ஓதி அவர்களின் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். "கலிகன்றி, சொல்தான் ஈரைந்து இவை பாடச் சோர நில்லா துயர்தாமே" (10) என்ற படி "துயரற்றவரானோம்" என்ற மன நிறைவு கொள்ளுகின்றோம்.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

"விரும்பி னவைஎய்து வினையனைத்தும் தீரும்
மரும்பரம வீடும் அடைவீர் - பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தம்குடிகொள் காயம் உடை யீர்அடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம்" [5]

(எய்தும் - கைகூடும்; தீரும் - நீங்கும்; பரம - சிறந்த; வீடு; மோட்சம்; அடைவீர் - சேர்வீர்கள்; பெரும் பொறி - வலிய ஐந்து பொறிகள்; கள்ளம்- வஞ்சனைக் குணம்; பூதம் - பஞ்ச பூதங்கள்; காயம் - உடல்)

5. நூற். திரு. அந். 7

என்பது பாசுரம். திருப்புள்ளம் பூதங்குடி என்னும் திருப்பதியை அடைந்தவுடன் அதன் மகிமையால் இம்மையில் விரும்பும் எல்லாப் பலன்களும் கிட்டி, வினையனைத்தும் தீரும்; மறுமையில் வீடு பேறும் கிடைக்கும் என்கின்றார் அய்யங்கார். இத்திருத்தலத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் தொண்டரடிப் பொடியாழ்வார் திருவதரித்த **மண்டங்குடி** என்ற ஊர் உள்ளது. இத்திருத்தலப் பயணத்தில் மிகவும் மன நிறைவு பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

5. நூற். திரு. அந். 7

16. ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயன்

வைணவ தத்துவம் சித்து, அசித்து, ஈசுவரன் என்று மூவகையாகப் பேசப்பெறும். சித்து என்பது உயிர்களின் தொகுதி. அசித்து என்பது உயிரற்ற பொருள்களின் தொகுதி. ஈசுவரன், இறைவன். இந்த மூன்று தத்துவங்களும் தனித்தனி இயல்புடைய வேறு வேறு பொருள்களாகும். இவை அழிவே இன்றி என்றும் நிலை பெற்றிருப்பவை. இவை மூன்றும் எக்காலத்தும் ஒன்றோடொன்று சேர்ந்தே உள்ளன. இந்த நிலையை,

"திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும் ஆய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே"[1]

என்று விளக்குவர் நம்மாழ்வார். இவற்றுள் இறைவன் சித்து (உயிர்), அசித்து (உடல்) இவை இரண்டினுள்ளும் அந்தர்யாமியாக உள்ளான். இதுவே இவற்றின் துண்ணிய நிலை (சூக்கும நிலை). மூலப் பகுதி விரிவடைந்து மக்கள் விலங்கு முதலியவற்றின் வடிவங்களாகவும், மற்றுமுள்ள பொருள்களாகவும் பரிணமிக்கின்றது. உயிர் தன்னுடைய புண்ணிய பாவங்கட்கேற்ப ஒவ்வோருடம்பை அடைகின்றது. இதுவே உயிருக்குப் பிறப்பாகும். இறைவன் மூலப் பகுதியின் விகாரமாகிய எல்லாப் பொருள்களுள்ளும் எல்லா உயிர் களுள்ளும் அந்தர்யாமியாக மறைந்துள்ளான். இதுவே இவற்றின் பரு நிலை (தூல நிலை)

'திடவிசும்பு எரிவளி நீர் நிலம்' என்ற பகுதியால் இப்பெரிய உலகங்களுக்குக் காரணமான ஐந்து பூதங்களைக்

1. *திருவாய், 1.1.2*

கூறுகின்றார் ஆழ்வார். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஐந்து பூதங்களின் கூட்டுறவால் உண்டாவதை,

"அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவுஎனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபாடு உற்ற வீக்கம்"[2]

என்று கம்ப நாடனும் குறிப்பிடுவன். இந்த ஐம்பூதங்களின் கூட்டுறவால் விரிந்துள்ள உலகப் பொருள்கள் எல்லா வற்றையும் உண்டாக்கினான் இறைவன். 'இவைமிசைப் படர் பொருள் முழுவதுமாய்' என்பதால் ,இஃது உணர்த்தப் பெறுகின்றது. 'ஆக்கி' என்னாது 'ஆகி' என்றது 'இறைவனே எல்லாப் பொருள்களாகவும் விரிந்துள்ளான்' என்பதை வற்புறுத்தும் பொருட்டு.

"அனைத்தும் நீ அனைத்துப் பொருளும் நீ"[3] என்ற பரிபாடல் அடியும் இதனை உணர்த்தும். 'அவை அவை தொறும் கரந்து எங்கும் பரந்துளன்' என்பதனால் அங்ஙனம் உண்டாக்கப்பெற்ற ஒவ்வொரு பொருளிலும் இறைவன் அந்தர்யாமியாக மறைந்தும், அவை எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி எங்கும் பரந்தும் உளன் என்பது தெளிவாகின்றது. இந்த இருதன்மைகளும் '**அந்தர்யாமித்துவம்**', என்றும் '**வியாபகத் துவம்**' என்றும் மெய்விளக்க இயலார் குறிப்பிடுவர்.

"அறிகிலேன்-தன்னுள்
அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும்
அவற்றுள் நிற்கும் பிரான்"[4]

என்று பிறிதோர் இடத்திலும் விளக்குவர். 'தன்னுள் அனைத் துலகும் நிற்க' என்றது வியாபகத் தன்மையை. 'தானும் அவற்றுள் நிற்கும் பிரான்' என்றது அந்தர்யாமியாம் நிலையை. இங்ஙனம் இறைவன் எல்லாப் பொருள்களிலும் மறைந் துறைவது என்போல வெனின்! 'உடல்மிசை உயிர் எனக்கரந்துளன்',- உடலினுள் உயிர் எவ்வாறு உளதோ

2. கம்பரா. சுந்தர. காப்பு.
3. பரிபாடல்-3, அடி 68.
4. திருவாய் 9.6:4.

அவ்வாறு அவ்வுயிர் உட்பட எல்லாப் பொருள்களிலுள்ளும் இறைவன் மறைந்து நிற்கின்றான்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் **ஆதனூர்** என்ற திவ்விய தேசத்திற்கு நாம் கும்பகோணத்தில் தங்கியிருக்கும் விடுதியினின்றும் புறப்படுகின்றோம். இந்தத் திருத்தலம் கும்பகோணத்தினின்றும் சுவாமிமலை வழியாகச் செல்லும் பேருந்து சாலையில் எட்டுக்கிலோ மீட்டர் தொலை ்யில் உள்ளது. நாம் பேருந்தில் செல்லுகின்றோம். மயிலாடு துறை-திருச்சி சந்திப்பு இருப்பூர்தி வழியிலுள்ள சுவாமிமலை நிலையத்தினின்றும் இத்திருத்தலத்தை அடையலாம். நிலையத் தினின்றும் மூன்று கிலோ மீட்டர் தொலைவி லுள்ளது இத்திருத் தலம். புள்ளம் பூதங்குடி யினின்றும்[5] இஃது ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இது மிகவும் சிறிய ஊர். இங்குக் கடை களோ, தங்குவதற்குச் சத்திரங்களோ, உணவு விடுதிகளோ இல்லை.

திருமங்கையாழ்வார் மட்டிலும் இத்திருத்தலத்து எம்பெரு மானை மங்களாசாசனம் செய்துள்ளார். பெரிய திருமடலிலுள்ள,

''ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயனை''[6]
(ஆண்டு-வருடம்)

என்ற தொடர் காண்க. இந்த ஒரு வரியைத்தவிர நாலாயிரத்தில் வேறுபாசுரங்கள் இல்லை. எம்பெருமானின் திருநாமம் ஆண்டு **அளக்கும் ஐயன்** என்பது. கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு கிடந்த திருக் கோலத்தில் (புயங்க சயனம்) மரக்காலைத் தலையின்கீழ் வைத்துக் கொண்டு சேவை சாதிக்கின்றான். இது காலதத்துவத்தைத் தன் ஆட்சியில் கொண்டுள்ளான் என்ப தனைக் குறிப்பிட்டவாறாம். தாயார் **அரங்கநாயகியார்** என்ற திரு நாமத்தால் வழங்கப்பெறுகின்றார். திருமங்கையாழ்வாருக்கும் காமதேனுவுக்கும் இந்த எம்பெருமான் காட்சி தந்ததாக வரலாறு. திருமங்கையாழ்வாரின் திருமேனி எம்பெருமான் தங்கியுள்ள கருவறையில் இருப்பது இத்திருத்தலத்தின் சிறப்பாகும். காமதேனுவுக்குச் சேவை சாதித்தது பற்றி இத்திருத்தலம் ஆ + தன் + ஊர் -ஆதனூர் என்ற திருநாமம் பெற்றதாகச் சொல்வர். ஆ-பசு. ஆண்டளக்கும் ஐயனையும் தாயாரையும் திருமங்கை

5. கட்டுரை- 15 காண்க.

6. பெரிய திருமடல்-70

யாழ்வாரையும் மனமாறச் சேவித்து அவர்களின் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம்.

இந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

"இடரான ஆக்கை இருக்க முயல்வார்
மடவார் மயக்கின் மயங்கார் - கடவுளர்க்கு
நாதனூர் ஆதரியார் நானெனதென் னார்அமலர்
ஆதனூர் எந்தையடி யார்"[7]

(இடர் - துன்பம்; ஆக்கை - உடல்; மடவார் - மகளிர்; கடவுளர் - தேவர்கள்; நாதன் - இந்திரன்; ஆதரியார் - விரும்பார்; அமலன் - குற்றமில்லாதவன்)

என்பது பாசுரம். திருமாலடியார்கள் தேகாபிமானம் கொள்ளாமலும், காம மயக்கத்திற்கு உட்படாமலும் நின்று சிற்றின்ப ஆசையை அறவே ஒழித்து அகப்பற்று புறப்பற்றுகளின்றி இருப்பர் என்பதைக் குறிப்பிட்டவாறு. இந்தப் பாசுரத்தை ஓதுகின்றோம். மன நிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

7. நூற். திருப். அந்-9.

17. ஆற்றங்கரை கிடக்கும் கண்ணன்

இறைவன் ஆகாயத்தின்கண் ஒலியாகவும், தீயின்கண் அழிக்கும் ஆற்றலாகவும், காற்றின்கண் வன்மையாகவும், நீரின்கண் அளியாகவும், நிலத்தின்கண் பொறுக்கும் தன்மை யாகவும் உள்ளான்.

> "கரவிசும்பு எரிவளி நீர்நிலம், இவைமிசை
> வரன் நவில் திறல்வலி அளிபொறை ஆய்நின்ற
> பரன்," [1]

(கரம் - திடம்; விசும்பு - ஆகாயம் ; எரி - தீ ; வளி - வாயு ; நீர் - நீர்; நிலம் - பூமி; வான் - சிறந்த; நவில், திறல், வலி, அளி, பொறை - இவை அடைவே ஐந்து பூதங்களின் பண்புகள்; பரன் - சர்வேசுவரன்)

என்பது நம்மாழ்வாரின் திருவாக்கு. முதலடியில் ஐந்து பூதங்களும், இரண்டாம் அடியில் அவற்றின் குணங்களும் சொல்லப் பெறுகின்றன.

(1) விசும்பு-ஆகாயம்; அதன் குணம், நவில்-சப்தம்

(2) எரி-தீ; அதன்குணம், திறல்-எரிக்கும் ஆற்றல்

(3) வளி-வாயு; அதன் குணம், வலி-மிடுக்கு

(4) நீர்-நீர்; அதன் குணம், அளி-குளிர்ச்சி

(5) நிலம்-பூமி; அதன் குணம், பொறை-பொறுமை

என்பவை அறியத் தக்கவை. இங்ஙனம் பரம்பொருளாகிய திருமால் எல்லாப் பொருள்களுள்ளும் எக்காலத்தும் விட்டுப் பிரியாது கலந்து அந்தர்யாமியாக இருக்கும் நிலை சரீர-சரீரி **பாவனை** (உடல்-உயிர்தொடர்பு) என்று கூறுப்பெறும்.

1. திருவாய். 1.1:11.

உயிரல்லாத உலகப்பொருள் அனைத்திற்கும் மூலப் பகுதியே (பிரகிருதி) காரணமாகும். ஒருபொருள் உண்டாவதற்கு மூன்று காரணங்கள் கூறப்பெறுவதுண்டு. மண்குடமாக வனையப் பெறுமிடத்து, மண் முதற் காரணம் ; அதாவது, காரியமாக மாறுவது. அக் குடத்தை வனைபவன் நிமித்த காரணம். அவன் குடத்தை வனைவதற்குக் கருவியாக வுள்ள சக்கரம் முதலியவை துணைக் காரணம். உலகத் தோற்றத்திற்கு இறைவன் மூன்று காரணங்களாகவும் உள்ளான் என்பது வைணவ சமயக் கொள்கையாகும். சித்தும் அசித்தும் சூக்குமமாக (நுண்மையாக) இருக்கும் நிலையில் - அஃதாவது உலக உற்பத்திக்கு முன்னர்-அவற்றுள் இவறைவன் அந்தர்யாமியாக நிற்கும் நிலையே இறைவன் உலகத் தோற்றத்திற்கு முதற் காரணம்; நுண்ணிய நிலையிலிருக்கும் சித்து அசித்துகளை வெளிப்படுத்தி உலகப் படைப்பு செய்வோம் என்று எண்ணுகின்ற நிலையே இறைவன் உலகிற்கு நிமித்த காரணம். இறைவனுடைய ஞானம் சக்தி முதலியவையே துணைக் காரணம். ஆக, இம்முறையில் இறைவன் உலகப் படைப்பிற்கு மூன்று காரணங்களுமாகவும் உள்ளான் என்று மெய்விளக்கஇயல் அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்டவண்ணம் கும்பகோணத்தில் நாம் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து **கபித்தலத்தை** நோக்கிப் புறப்படுகின்றோம். கபித்தலம் மயிலாடு துறை - திருச்சி இருப்பூர்திப் பாதையில் பாபநாசம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்கிருந்து குதிரை வண்டி, மாட்டுவண்டி மூலம் கபித்தலத்தை அடையலாம். கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் பேருந்துமூலம் நாம் இவ்வூரை அடைகின்றோம். இவ்வூரில் சத்திரங்கள், உணவுவிடுதிகள், கடைகள் முதலியவை உண்டு.

நேரே திருக்கோயிலுக்கு வருகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு கிடந்த திருக்கோலத்தில் (புயங்க சயனம்) சேவைசாதிக்கும் **கஜேந்திரவ்ரதனை** வணங்குகின்றோம். தாயாரின் திருநாமம் **இரமாமணி வல்லி**. இவர் **பொற்றாமரையாள்** என்ற திருநாமத்தாலும் வழங்கப் பெறுகின்றார். இத் திருத்தல எம்பெருமான் கஜேந்திரனுக்குக் காட்சி தந்தமையால் '**கஜேந்திர வரதன்**' என்ற திருநாமம் பெற்றான். இப்பெருமான் அநுமனுக்குச் சேவை சாதித்

தமையால் இவன் திருக்கோயில் கொண்டிருக்கும் ஊர் **கபித்தலம்** (கபி-குரங்கு, அநுமன்) என்ற திருநாமம் பெற்றது.

இத்திருப்பதி எம்பெருமானைத் திருமழிசையாழ்வார் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

''கூற்றமும் சாரா; கொடுவினையும் சாரா;தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன் - ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத்து எமக்கு''[2]

(கூற்றம் - எமபயம்; கொடுவினை - கொடிய பாவங்கள்; சாரா - அணுகா; தீமாற்றம் - கெட்ட விஷயங்கள்; மாயன் - ஆச்சரிய பூதன்; உரை - சரம சுலோகம்)

என்பது பாசுரம். ''நான்முகன் முதலிய தேவர்களுக்கு அடையத் தக்கவனாய் திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்ததருள்பவனே திருக்கபித்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ளான்; இப்பெரு மானே பண்டொருகால் பாரதப் போரில் தேர்த்தட்டில் நின்று பார்த்தனைப் பொருளாகக் கொண்டு அனைவருக்கும் உய்யும் பொருளான **சரம சுலோகத்தை** அருளிச் செய்தனன்; இந்தத் தத்துவப்பொருள் என் நெஞ்சில் பதிந்திருப்பதனால் இனி நான் எமபயம் அணுகாமலும் கொடிய பாவங்கள் அணுகாமலும், தீவிஷயங்கள் அணுகாமலும் இருக்கத் தக்க உபாயத்தை அறிந்தவனானேன்'' என்கின்றார் ஆழ்வார்.

இப்பாசுரத்தில் '**கபித்தலம்**' என்கிற திருநாமம் தெளிவாக இல்லையாயினும் ஆழ்வார் திருவுள்ளக் கருத்தைக் கண்டறிந்து கூறும் பேராற்றலுடைய நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெரு மானார், பட்டர் முதலான ஆசாரிய பெருமக்கள் இது கபித் தலத்தை நோக்கின திருப்பாசுரமேயாகுமென்று அறுதியிட்டனர் என்பது உரை மன்னர் பெரிய வாச்சான் பிள்ளைக்கு முற்பட்டவரான திவ்விய கவியாலும் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

''காணியும் இல்லமும் கைப்பொருளும் ஈன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும் - சேனில்
புவித்தலத்தில் இன்பமும் பொங்கரவம் ஏறிக்
கவித்தலத்தில் கண்துயில்வோன் கால்''[3]

2. நான்.திரு-50
3. நூற். திரு .அந்-27

(காணி - பூமி; இல்லம் - வீடு; ஈன்றோர் - பெற்றோர்; பேணிய - விரும்பிய; பேர் உறவு - நெருங்கிய உறவினர்; சேணில் - மறுமையில்; பொங்கு அரவம் - சீறும் ஆதிசேடன்; கால் - திருவடி)

என்பது பாசுரம். ''அநுபவப் பொருளும் அநுபவக் கருவியும் அநுபவ இடமும் எனக்கு எம்பெருமானின் கழலிணைகளே'' என்கின்றார் அய்யங்கார். இந்தப் பாசுரத்தையும் ஓதி உளங் கரைந்த நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

18. திருக்கண்ணங்குடிக் கண்ணன்

திருமகள் கேள்வனான எம்பெருமான் எண்ணற்ற கல்யாண குணங்களின் கருவூலமாக இருப்பவன். இத்திருக் குணங்கட்கு ஓர் எல்லை இல்லை. பலவகைப்பட்டு எல்லை யற்றுக் கிடக்கும் இத்திருக்குணங்கள் மேன்மைக்கு ஏகாந்தமான குணங்கள் என்றும், எளிமைக்கு ஏகாந்தமான குணங்கள் என்றும் இரண்டு வகையாகப் பாகுபடுத்திப் பேசப்பெறும். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்பன போன்ற குணங்கள் பரத்துவகுணங்கள் (மேன்மைக் குணங்கள்) என்றும், சௌலப்பியம், சௌசீலயம், வாத்சல்யம் முதலிய குணங்கள் சௌலப்பியக் குணங்கள் (எளிமைக் குணங்கள்) என்றும் வழங்கப்பெறும். பகவத் குணாநுபவம் பண்ணுபவர்களில் சிலர் பரத்துவ குணங்களையே அநுபவிப்பர்; சிலர் சௌலப்பிய குணங்களிலேயே ஈடுபட்டுக்கிடப்பர்.

தனியான பரத்துவமும், தனியான சௌலப்பியமும் கொண்டாடத் தகுந்தவையல்ல. மேருமலை கைலாயமலை போன்ற மலைகள் மிகச் சிறந்தவைதாம். ஆயினும், அவை ஒருவரும் எளிதாக அடைய முடியாதவையாலே பயனற்றவை யாகின்றன. அவைதாமே அறிஞர்கட்கும் கிட்டக் கூடியவையாக இருந்தால் எவ்வளவோ சீர்மை பெறும். இவ்விதமாக பரத்துவமற்ற சௌல் பியமும் பயனற்றது. தெருக்களில் பரற்கற் கள் பல எளிதாகக் கிடைக்கின்றன. எவர் வேண்டுமானாலும் எளிதாக அவற்றை எடுத்துக் கொள்ளலாம். ஆயினும் அவற்றை விரும்புவாருண்டோ? அவை மணியும் மாணிக்கமுமாயிருந் தால் எவ்வளவோ பயன்படும். எனவே, வெறும் பரத்துவமும் வெறும் சௌலப்பியமும் பயனற்றவை யாகின்றன.

எம்பெருமான் இந்த இருவகைக் குணங்களாலும் நிறைந்தவன். அடியார்கள் கூசாமல் வந்து பணிவதற்கீடான

எளிமைக் குணங்களாலும் குறைவற்றவன். அங்ஙனம் வந்து பணிந்தவர்கட்கு அவர்தம் குறைகளைப் போக்கி விருப்பங் களைத் தலைக்கட்டித் தருகைக் கீடான மேன்மைக் குணங் களாலும் குறைவற்றவன். எனவே, பகவத் குணாநுபவம் பண்ணுபவர்கட்கு இரண்டு வகைக் குணங்களும் கிட்டுவனவாக இருக்கும். ஆழ்வார் பெருமக்கள் இந்த இரண்டு வகைக் குணங் களிலும் ஈடுபட்டுப் பேசுவதை அவர்தம் பாசுரங்களில் கண்டு மகிழலாம். பெரியாழ்வார் 'என் நாதன் தேவிக்கு' (3,9) என்னும் திருமொழியில் இரண்டு ஆயர் மங்கையரின் நிலையைத் தாம் அடைந்து ஒருத்தி கண்ணன் வரலாற்றைப் பேசுவதாகவும் மற்றொருத்தி இராமாவதார வரலாற்றைப் பேசுவதாகவும் அருளிச்செய்துள்ளார். இந்த ஆழ்வாரே 'கதிராயிரம்' (4.1) என்னும் திருமொழியில் தம்மை இரண்டு வகையாக வகுத்துக் கொண்டு 'சர்வேசுவரனைக் கண்ணாலே காண வேண்டும' என்று தேடுகை ஒரு வகுப்பாகவும், 'அப்படித் தேடுகின்றீர் களாகில் அவனை உள்ளபடிக் கண்டாருளர்' என்று விடை சொல்லுகை ஒரு வகுப்பாகவும் அருளிச் செய்ததைக் காண் கின்றோம். இவ்வாழ்வாரின் அருமைத் திருமகளார், சூடிக் கொடுத்த சுடர்க்கொடி, 'பட்டிமேய்ந்தோர் காரேறு' (நாச். திரு.14) என்னும் திருமொழியில் தன்னையே இரண்டு வகுப் பாக்கிக் கொண்டு 'இங்கே போதரக் கண்டீரே' என்று வினவு வதும், 'விருந்தாவனத்தின் கண்டோமே' என்று விடையிறுப்பது மாய் அருளிச் செய்ததையும் ஈண்டுச் சிந்திக்கின்றோம்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் நாம் திருவாரூரில் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து திருக்கண்ணங் குடியை நோக்கிப் புறப்படுகின்றோம். திருக்கண்ணங்குடி திருவாரூர்-நாகப்பட்டினம் இருப்பூர்திப் பாதையில் கீழ்வேலூர் (கீவலூர்) இருப்பூர்தி நிலையத்தருகில் உள்ளது. இந்த இருப்பூர்தி நிலையத்தில் இறங்கி வடபுறத்திலுள்ள இருப்பூர்தித் தடத்தை யொட்டிச் சுமார் ஒன்றரைக் கிலோ மீட்டர் தொலைவு நடந்து சென்று இவ்வூரை அடையலாம். கண்ணன் கோயில் கொண்டி ருப்பதால் '**கண்ணன் குடி**' என்று திருநாமம் பெற்றது. வட மொழியில் இது '**கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்**' என்று வழங்கு கின்றது. தமிழ்நாட்டின் ஐந்து கண்ணன் கோயில்களில் இதுவும் ஒன்று. ஊர் மிகச் சிறியது; எந்தவித வசதிகளும் இல்லாதது. ஒரு சில சிறிய சிற்றுண்டி விடுதிகள் மட்டிலும் உள்ளன.

திருமங்கையாழ்வார் மட்டிலும் ஒரு திருமொழியால்[1] இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார். பாசுரங்களில் பின் இரண்டு அடிகளில் தலத்தைப் பற்றியும் முன் இரண்டு அடிகளில் எம்பெருமானைப்பற்றியும் பேசுகின்றார் ஆழ்வார். குவளை மலர்கள், தாமரை மலர்கள், ஆம்பல் மலர்கள், செங்கழுநீர் மலர்கள், நெய்தல்மலர்கள் ஆகிய இம்மலர்களால் அழகு விளங்கப்பெற்ற கழனிகளால் சூழப் பெற்றது திருக்கண்ணங்குடி (2) ; இங்கு உரிய காலத்தில் மலரும் புன்னை, மல்லிகை, முல்லை ஆகிய மலர்களின்மீது அளாவி நறுமணத்துடன் கூடிய தென்றற்காற்று எல்லாப் பக்கங்களிலும் வீசும் (3); இங்குள்ள கழனிகளில் மென்னடை அன்னங்கள் மெல்லிய தாமரை மலர்களாகிய இருக்கையில் அலையெறிகின்ற நீரில் உண்டான இலையாகிற குடை நிழலில் இரு பக்கமும் செந்நெற் கவரி வீச வீற்றிருக்கும் (5); குலைகள் நிரம்பிய வாழைத்தோப்பும், ஓங்கி வளர்ந்துள்ள பாக்கு மரங்களும், குரவமரங்களும், நல்ல பலா மரங்களும், குளிர்ந்த மாமரங்களும், குருக்கத்தியும் நிறைந்த செழிப்புள்ள சோலை களால் சூழப்பெற்றது இவ்வூர் (6); அன்றியும், மேகங்கள் முரசொலிபோல் முழங்க, தேன்களில் திரியும் பொறிவண்டுகள் இன்னிசை முரல, கானில் உலாவும் மயிற் கணங்கள் கூத்தாடும் (7); சிறந்த மணிகளையும், மரகதக் குவியல்களையும், வயிரங்களையும், மூங்கிலில் உதிர்த்த முத்துகளையும் ஆற்றலை கள் தள்ளிக் கொண்டு வந்து கழனிகளெங்கும் குவிக்கும் (8); நெருங்கிய குருக்கத்திகளும், சுரபுன்னைச் சோலைகளும், சூழ்ந் துள்ள செண்பகங்களும் ஆகிய இவற்றின் மலர்களில் வண்டுகள் 'தென்ன, தென்ன' என முரன்று இன்னிசைப் பண்களை எழுப்பிய வண்ணம் இருக்கும் (9); உயர்ந்த கொடிகள் ஒளிமிக்க மதிமண்டலத்தளவும் சென்று சேரும்படியான ஓங்கிய சிகரங்களையுடைய அழகிய ஒளிமிக்க மாடமாளிகைகளைக் கொண்டது இவ்வூர் (2,4) ; இவ்வூரில் நான் மறைகள், ஐந்து வேள்விகள், ஆறு சாத்திரங்கள், அரிய கலைகள் இவற்றை ஓம்பும் அந்தணர்கள் வாழ்கின்றனர் (1).

இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க இத்திருத்தலத்தின் அழகிய சூழ்நிலையைக் கற்பனையில் கண்ட வண்ணம் இருப்பூர்திப் பாதை யோரத்தில் நடந்து வருகின்றோம்; அரைமணி நேரத்தில் ஊரை அடைகின்றோம். நாம் வந்தபோது கோயில் திருப்பணி

1. பெரி. திரு. 9.1.

நிறைவுற்ற நேரம். கோயிலின் சுற்றுப் புறம் தூய்மையாக்கப் பெற்று விரிவுபடுத்தப் பெறுகின்றது. திருக்கோயில் சிறியதுதான். இத்திருக்கோயிலில் சேவை சாதிக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? திருப்பாற் கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் வியூகமூர்த்தியே திருக்கண்ணங்குடியில் அர்ச்சாவதார வடிவத்துடன் எழுந்தருளியுள்ளான்.

வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளர வின்அணை மேவி
சங்கமார் அங்கை தடமலர் உந்திச்
சாமமா மேனிஎன் தலைவன்''[2]

(வங்கம் - மரக்கலம்; முந்நீர் - கடல்; வரி - கோடு; நிறம் - அழகு; வாள் - ஒளி பொருந்திய; அரவு - பாம்பு; அணை - படுக்கை; மேவி - பொருந்தி; உந்தி - கொப்பூழ்; சாமம் - நீல நிறம்; மேனி - உடல்)

என்பது ஆழ்வார் திருவுள்ளம். மற்றும், இவனே கசேந்திரன் என்ற யானை அரசு முதலையால் கௌவப்பெற்று வருந்திய போது அம்முதலை துண்டாக அறும்படி திருவாழிப் படையை ஏவி, அந்த யானை சூட்ட நினைந்த தாமரைப் பூவை ஏற்றுக்கொண்டவன் (2); மூவுலகங்களும் பிரளய வெள்ளத்தில் மூழ்கித் துன்புற்ற காலத்தில் பேருருவமும் ஒற்றைக் கொம்பும் வாய்ந்த பெருமீனாகத் திருவவதரித்துத் தன் ஒரு செதிலி னகத்தே கடல் வெள்ளம் ஒடுங்கும்படி செய்த பெருமான் (3); பண்டொருகால் மலைபோல் பெருத்த வடிவையும் வெளுத்த கோரப்பற்களையும் நெருப்போடொத்த கண்களையும் கொண்டவராக உருவமாய்த் திருவவதரித்து பூமிப் பிராட்டியின் பிரிவுத் துன்பத்தைப் போக்கிய பெம்மான் (4); மாவலியிடம் மூவடிமண் பெற்று ஏழுலகங்களையும் ஈரடியால் தாவியளப்பதாக விம்மி வளர்ந்த பெருமான் (5); இருபத்தொரு தலை முறையளவும் பூமியிலுள்ள அரசர்களின் குருதி வெள்ளத்தில் தீர்த்தமாடிக் கோபம் தணியப்பெற்ற பரசுராமனாகத் திருவதரித்தவன் (6); தனது மிடுக்கினால் தேவர்களைத் துன்புறுத்திய இராவணனை முடித்துக்கட்டிய பெருமான் இவன் (7); கழுத்தில் ஓலை கட்டிப் பாண்டவர்கட்காகத் தூது சென்றபோது துரியோதனன் பொய்யான ஆசனத்தையிட்டுக் கொல்ல நினைத்தபோது

2. பெரி. திரு. 9.1:1.

பெரிய திருமேனியையுடையவனாய் வளர்ந்து அவன் திட்டத்தைக் குலைத்தருளிய பெம்மான் இவன் (8); பார்த்தனுக்குச் சாரதியாக நின்று மாபாரதம் முடித்தருளிய மாயனே இவன்(9).

இத்தகைய பெருமான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமண்டலம்கொண்டு சேவை சாதிக்கின்றான். மிகப்பெரிய திருமேனி. எம்பெருமான் திருநாமங்கள் **சியாமள மேனிப் பெருமாள், தாமோதர நாராயணன், உலக நாதன்** என்பவை; திருத்தாயார் **அரவிந்தவல்லி நாச்சியார், உலக நாயகி** என்ற திருநாமங்களால் வழங்கப்பெறுகின்றார். எம்பெருமான் சந்நிதியில் ஆழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

உலவுசொல் மாலை யொன்பதோ டொன்றும்
வல்லவர்க் கில்லைநல் குரவே (10)

(நல்குரவு-வறுமை)

என்றபடி பகவத் கைங்கரிய இலட்சுமி இடையறாதிருக்கும் என்ற உணர்வில் களிக்கின்றோம். இந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ இன்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ - தேறுகிலேன்
எண்ணங் குடியாய் இருந்தான்நின் றான்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து. [3]

(கூறு - தேவங்களில் சிறப்பித்துக் கூறப்பெறும்; இன்னம் - இனிமேலும்; வீழ்த்துதல் - தள்ளுதல். தேறுகிலேன் - அறியேன்; எண்ணம் - மனத்தை; குடியாய் - வாழும் இடமாகக் கொண்டு; கருத்து - அவன் திருவுள்ளம்)

என்பது பாசுரம். ''என் மனத்தில் வந்து புகுந்து நிற்பதும், வீற்றிருப்பதும், பள்ளி கொள்வதுமாக இருக்கும் எம்பெருமான் அடியனேனுக்கு நற்கதி அருள்வனோ? அல்லது பல்வகைப் பிறப்புகளில் அலைந்துழல வைப்பனோ? யாது செய்வனோ? அறிகிலேன்'' என்கின்றார். அய்யங்காரின் கருத்து,

3. நூற். திரு. அந்-27.

"உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும்
விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்
அங்குத்தை வாசம் சாதனம்; இங்குத்தை வாசம் சாத்தியம்" [4]

என்ற ஸ்ரீவசனபூஷண வாக்கியங்களை நினைக்கச் செய்கின்றன. இந்த அநுபவத்துடன் திருநாகைக்குப் போக எண்ணி இருப்பூர்தி நிலையத்திற்கு வருகின்றோம்.

4. ஸ்ரீவச பூஷ-174, 175 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

19. நாகை அழகியார்

அழகு என்பது ஒரு தத்துவம். 'உலகில் அழகுக்கு ஒரு வரையறை காண்பது, அவ்வடிவத்தைப் படைப்பவரின் தொழிற் குறைவினாலேயன்றி, அழகென்னும் பொருளுக்கோ எல்லை இல்லை' என்று சித்தாந்தம் செய்து காட்டுவன் கம்ப நாடன் சூர்ப்பணகையின் வாய்மொழியாக[1]. இந்த அழகு காதலர்களை ஒருவர்பால் மற்றொருவரை ஈர்க்கும் பெற்றியது. சிலசமயம் பால் வேற்றுமையின்றி ஈர்க்கும் தன்மையது. சீதையைக் கண்டவுடன்,

அரவிந்த மலருள் நீங்கி
அடியிணை படியில் தோயத்
திருஇங்கு வருவாள் கொல்லோ
என்றகம் திகைத்து நின்ற [2]

(அரவிந்தம்-தாமரை; இணை-இரண்டு; திரு-இலக்குமி; அகம்-மனம்)

எனத் திகைத்து நின்ற சூர்ப்பணகை அழகு தன்னைப் படுத்தும் பாட்டைச் சொல்லுகின்றாள்.

கண்பிற பொருளில் செல்லா;
கருத்தெனில் அஃதே; கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால்
என்படும் பிறருக்கு [3]

என்கின்றாள். ''சிறந்த மகளிரழகைக் கண்ட ஆடவர்க்குக் கண்ணும் கருத்தும் அவ்வடிவத்தை விட்டு நீங்காமல் அதிலே பதிந்து அழுந்துதல் உலகியற்கை; அங்ஙனமன்றி இவளழகு பெண்பாலாகிய எனக்கே கண்ணும் கருத்தும் வெளிச் செல்லாத

1. ஆரணி. சூர்ப்பண-60
2. மேலது-59.
3. மேலது-60.

படி வியப்பைத் தருகின்றதே! இஃது ஆடவருக்கு எந்நிலையை விளைவிக்குமோ?'' என அதிசயித்துத் திகைத்து நிற்கின்றாள் 'அழியா அழகுடையானிடம்'' தன் மனத்தைப் பறிகொடுத்த சூர்ப்பணகை.

தாடகையின் வரலாறு கூறி அவளை முடித்தற்கென்று இராமனைக் கானகத்தில் நடத்திச் சென்ற விசுவாமித்திரன் இராமனது தோளழகில் ஈடுபட்டு அவனை,

ஆடவர் பெண்மையை
அவாவும் தோளினாய்[4]

(அவாவும் - விரும்பும்)

என்று விளித்துப் பேசுகின்றான். இராமனது தோளினது அழகின் சிறப்பு நோக்கி 'ஆடவரும் மனத்தால் மகளிர் தன்மையை அடைந்து அத்தோளினால் தழுவப்பெற வேண்டுமென்று காதல் கொள்ளுமாறு உள்ளவனே' என்கின்றான். ஆகவே, மகளிர் 'அழியா அழகுடையானின்' தோளழகில் ஈடுபட்டுக் காதல் கொள்வரென்பது கூற வேண்டியதில்லை. 'ஆடவர்' என்று பொதுப்படக் கூறிய தனால், முற்றுத் துறந்த முனிவரும் இவனழகில் துவக்குண்டு ஈடுபட்டு நைவரென்பது பெறப்படும். தண்டகாரணிய முனிவர்கள் இவனழகில் ஈடுப்பட்டுத் தழுவிக்கொள்ள நினைந்ததை யாவரும் அறிவர். இந்த நினைவைக் கிருஷ்ணாவதாரத்தில் இவர்கள் கோபிகையராகப் பிறந்து தம் நினைவை - ஆர்வத்தை - நிறைவேற்றிக் கொண்டனர் என்பதை நாம் அறிவோம்.

பக்தர்களை இவ்வழகு ஈடுபடுத்தும் பாடு சொல்லுந்தர மன்று. அழகியமணவாளனின் ஒவ்வோர் உறுப்பினழகிலும் ஈடுபட்டுப் பேசிய திருப்பாணாழ்வார்,

கொண்டல் வண்ணனைக்
கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என்
உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி
யரங்கன்என் அமுதினைக்

4. பாலகா. தாடகை வதை-41.

கண்ட கண்கள்மற்
றொன்றினைக் காணாவே[5]

(கொண்டல் - மேகம்; வண்ணன் - நிறத்தன்; அண்டர் கோன் - நித்திய சூரிகட்குத் தலைவன்)

என்று முத்தாய்ப்பாகக் கூறுவர். சூடிக்கொடுத்த சுடர்க் கொடி அழகிய மணவாளரை, "என் அரங்கத்து இன்னமுதர், குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில் எழு கமலப்பூ அழகர்"[6] என்று பேசி அவன் அழகில் ஆழங்கால்படுவர். மணக்கால் நம்பிகள் - அழகிய மணவாளனைக் காட்டி- ஆளவந்தாரைப் பக்தி நெறிக்குத் திருப்பின வரலாறும் உண்டு. உறங்கா வில்லியையும் பொன்னாச்சியாரையும் அழகிய மணவாளரின் எழிலுருவத்தைக் காட்டி அவர்களை விஷயகாமத்தினின்றும் பகவத்காமத்திற்குக் கொண்டுசெலுத்திய பெருமையை எம்பெருமானார் பெறுகின்றார்.

நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை அழகரின் திருமேனி அழகில் ஈடுபட்ட திறம் தனிச் சிறப்பு வாய்ந்தது. கற்பகத்தரு கப்பும் கிளையுமாகப் பணைத்துப் பூத்தாற் போலே நிற்கின்றான் எம்பெருமான். அவனது அழகுவெள்ளம் அலைமோதி ஆழ்வார்மீது பாய்கின்றது. எம்பெருமானை நோக்கி வினவுகின்றார்

முடிச்சோதி யாய்உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ?
திருமாலே! கட்டுரையே.[7]

(முடி - தலை; அடி- திருவடி; படிசோதி - இயற்கையான காந்தி; கடி - திருவரை)

என்ற திருப்பாசுரத்தில். "நின் திருமுக மண்லத்தின் காந்தி மேல் முகமாகக் கிளர்ந்து கிரீடச் சோதியாக ஆயிற்றா? நின்

5. அமலனாதி பிரான்-10
6. நாச். திரு. 11.2.
7. திருவாய் 3.1.1.

திருவடிகளின் ஒளிதான் ஆசன பத்மமாகத் தென்படுகின்றதா? நின் திருவரையின் சோதிதான் படிச் சோதி ஆடையாயும் பல்கலனாயும் கலந்ததுவோ? அடியேனுக்குத் தெரிய அருளிச் செய்ய வேண்டும்'' என்கின்றார். ஒவ்வோரழகில் ஈடுபடுகின்ற காலத்தில் அஃதொன்றே சிறந்ததாய்த் தோன்றி நிற்கும் தன்மையை இப்பாசுரத்தில் தெரிவிக்கின்றார் ஆழ்வார். இந்நிலை இராமன் மிதிலைமா நகரில் உலாப் போந்தபோது அவனது திருமேனியழகினைக் கண்ட மாதரின் நிலையை நினைவூட்டுகின்றது.

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன;
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத் தன்னான்
உருவுகண் டாரை வொத்தார்[8]

(கமலம்-தாமரை; தாள்-திருவடி; வாள்கொண்ட- வாளை யொத்த; ஊழ்-பெருமை; உருவு-வடிவு)

ஒவ்வோர் உறுப்பையும் கண்டவர்கள் அதனதன் அழகிலேயே அழுந்தி விட்டார்கள். அதனதன் அழகுக்கு ஓர் எல்லைஇல்லாமையாலே அதனதனினின்றும் தம் கவனத்தைப் பிறிதோன்றில் திருப்ப முடியாது அதனதன் அழகிலேயே ஆழ்ந்து விட்டார்கள் என்பதைத் தெரிவிக்கின்றான் கவிஞன்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் கிழ்வேலூர் இருப்பூர்தி நிலையத்தில் திருவாரூரினின்றும் திருநாகையை நோக்கிச் செல்லும் இருப்பூர்தியில் ஏறுகின்றோம். ஊர்தி திருநாகை இருப்பூர்தி நிலையத்தை அடைந்ததும் நிலையத்திலேயே கைகால் முகங்களைத் தூய்மையாக்கிக் கொண்டு 'விறுவிறு' என்று திருக்கோயிலைநோக்கி நடக்கின்றோம் நாகை அழகியாரைச்சேவிக்க. நம்மைப் போலவே திருக்கண்ணங்குடி எம்பெருமானைச் சேவித்த திருமங்கை யாழ்வாரும் திருநாகை அழகியாரைக் காண வந்ததை நினைக்கின்றோம். அவர் பெற்ற அநுபவத்தையே நாமும் பெற

8. பாலகா. உலாவி.19.

முயல்கின்றோம். அவர் எங்கே? நாம் எங்கே? என்ற சிந்தனை யும் நம்மிடையே எழாமல் இல்லை. முயற்சி திருவினையாக்கும் அல்லவா? இந்த உண்மை பக்தி யநுபவத்திற்கும் விதிவிலக்கு இல்லையன்றோ?

இத்திருத்தலத்திற்கு வந்த திருமங்கையாழ்வார் நாகை அழகியாரின் அழகிலே நெஞ்சைப் பறிகொடுத்துத் தம் ஆண் தன்மையை இழந்து பெண்மை நிலை எய்திப் பரகால நாயகியாகின்றார். தன்னை ஈடுபடுத்தின அழகையும் மற்றும் நடந்த செய்திகளையும் தோழியிடம் சொல்லுவதாகப் பாசுரங்களிட்டுப் பேசுகின்றார். இந்த ஆழ்வார் மட்டிலுமே இந்த எம்பெருமானை மங்காள சாசனம் செய்துள்ளார். திருக்கோயிலினுட் புகுந்து சௌந்தரியராஜனைச் சேவிக் கின்றாள் பரகாலநாயகி. என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோலம் கொண்டிருந்தான் எம்பெருமான். அப்பெரு மானை இன்னா னென்று அறிய மாட்டிற்றிலள். முகத்தை நேரே பார்த்து முன்னிலையாக்கிச் சொற்கள் கூற முடியாதபடி சோதி வெள்ளம் அலை யெறிந்து தள்ளுகின்றது. அதனால் அப்பெருமானுடைய ஒப்புயர்வற்ற வடிவழகையும் திவ்விய அணிகள் திவ்விய ஆயுதங்கள் இவ்ற்றின் பொருத்தங்களையும், சிருங்கார விலாசங்களையும், மற்றும் கண்ட அதிசயங்களையும் தன் தோழியுடன் சொல்லி வியக்கின்றாள்.

பொன்இவர் மேனி; மரக தத்தின்
பொங்குஇளஞ் சோதி அகலத்து ஆரம்
மின்; இவர் வாயில்நல் வேதம் ஓதும்
வேதியர்; வானத்து ஆவர்; தோழி
என்னையும் நோக்கிஎன் அல்குல் நோக்கி;
ஏந்துஇளம் கொங்கையும் நோக்குகின்றார்;
அன்னைஎன் நோக்கும்என்று அஞ்சுகின்றேன்;
அச்சோ ஒருவர் அழகியவா.[9]

(மேனி - உடல்; அகலம் - மார்பு; ஆரம் - மாலை; அல்குல் - நிதம்பம் அச்சோ - ஆச்சரியம்)

"தோழி, நான் பெற்ற பேறே பேறு; அந்தோ! இழந் தாயே! நீ காணப் பெற்றிலையோ" என்கின்றாள் பரகால நாயகி

9. பெரி. திரு. 9.2:1

தோழியை நோக்கி. ''நங்காய், என்ன அற்புதம் காணப் பெற்றாய்? விரித்துரையாய்'' என்று வினாவுகின்றாள் தோழி.

திவ்வியாத்தும சொரூபம், திவ்வியகுணம் முதலானவற்றை யெல்லாம் விட்டு முந்துற முன்னம் திவ்விய மங்கள விக்கிரகத்திலே தன் நெஞ்சு பறியுண்டமை தோன்றச் சொல்லு கின்றாள். 'பொன் இவர் மேனி' என்கிறாள். பொன் நிறம் போன்ற நிறமுடையவளான பெரிய பிராட்டியின் இடைவிடாத சேர்க்கையினாலே எம்பெருமானுடைய கரிய திருமேனியும் அப்படியே பொன்நிறமாக ஆய்விடுகின்றது.

உண்மையான உருவத்தின் நிறம் அடுத்து பேசப் பெறுகின்றது. ''மரகதப் பச்சையின் சோதி போன்ற சோதி யுடைத்தான திருமார்பிலணிந்த திருமாலை மின்னல் போன்றிரா நின்றது'' என்கிறாள். ''இவர் பொன்;மேனி மரகத்தின் பொங்கிளஞ்சோதி; அகத்து ஆரம் மின்'' என்று மூன்று வாக்கியமாக எடுத்துக் காட்டுவார் பிள்ளையமுதனார்.

பரம வைதிகர் என்றும், விஷயாந்தரங்களில் சிறிதும் கருத்தில்லாதவர் என்றும் தோன்றும்படி வேதங்களை உருச்சொல்லிக் கொண்டிருந்தார் போலும். இதனால் ''இவர் வாயில் நல்வேதம் ஓதும் வேதியர்'' என்கின்றாள்.

மேன்மையைப் பார்த்தால் தேவர்களோடொக்கச் சொல்லலாம்படி இருந்தார். ஆகவே,''வானவர் ஆவர்'' என்கின்றாள்.

''வடிவழகைப் பார்த்தால் அரசர்களுடன் ஒப்பச் சொல்லலாம். பேசுகிற பேச்சைப் பார்த்தால் வேதம் ஓதும் வேதியர்களுடன் ஒப்பிட்டுச் சொல்லலாம். மேன்மையைப் பார்த்தால் வானவர்களுடன் ஒப்பிட்டுச் சொல்லலாம். ஆகவே இன்னாரென்று அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லையே தோழீ!'' என்கிறாள்.

தோழியானவள் தலைவியை நோக்கி, ''நங்காய் அது இருக்கட்டும். அவரை நீ ஏறிட்டு நோக்கினாயா? அவர் நின்னை நோக்கினது உண்டோ?'' என்று வினவ, அதற்கு அவள் ''கேளாய்! அதையும் சொல்லுகின்றேன். என்னையும் நோக்கி, என் அங்குலும் நோக்கி, ஏந்திளங் கொங்கையும் நோக்கு கின்றார்'' என்கிறாள். ''மர்மங்களில் கடாட்சியா நின்றார்; பார்த்த

பார்வை ஒருகால் மாற வைக்கிலர்'' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்.

'நம்மைப் பாங்காக அநுபவிப்பதற்குறுப்பான பக்தி இவ்வாழ்வார்க்கு முதிர்ந்ததோ' என்று எம்பெருமான் ஆராய்ந்தமையைச் சொல்லியதாக இதனைக் கொள்ள வேண்டும். போகத்திற்குக் கொங்கை முதலிய உறுப்புகள் எப்படி இன்றியமையாதனவோ அப்படி பகவதநுபவத்திற்குப் பரபக்தி பரஞானம் பரமபக்தி நிலைகள் இன்றியமையாதன வாதலால் உள்ளுறையில்-அவற்றைப் பொருளாகக் கொள்ளல் வேண்டும்.

''அவர் நின்னை நோக்கினபோது நீ செய்ததென்?'' என்று தோழி கேட்க, ''அன்னை என் நோக்கும் என்று அஞ்சுகின்றேன்?'' என்கின்றாள் தலைவி. ''அவர் பார்த்த பார்வை எல்லாம் எனக்கு பெருமகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் இந்த நிலைமையை நம் தாய் காண்பாளாகில் என்ன பாடு படுத்துவளோ என்று அஞ்சி நிற்பதே என் கருமமாயிற்று'' என்கின்றாள். ''நான் பதறி மேல் விழுவேன்; இதனைத் தாய் நோக்கினாளாகில் என்னாகுமோ? என்று அஞ்சி ஒழிந்தேன்'' என்பது குறிப்பு.

பெற்று வளர்த்துப் பெண்பிள்ளை இளமைப் பருவத்தில் தலைவனிடத்துள்ள அன்பு மிகுதியால் அவன் இருப்பிடத்துக்குச் செல்ல வேண்டும்; அவன் மேல் விழுந்து அநுபவிக்க வேண்டும் என்று பதறும்போது அங்ஙனம் படி நடந்து புறப்படுதல் குலமரியாதைக்குப் பொருந்தாது என்று தடுத்து நிறுத்துபவள் உலகில் தாய் எனப்படுபவள். சித்தோபமயமான எம்பெருமானைப் பற்றினவர்கள் பேற்றைத் தாமதித்துப் பெறுதலில் காரணமில்லாமையாலே அதனை விரைவில் பெறுதல் வேண்டுமென்கிற ஆவலைப் பிறப்பித்து அதனால் படி கடந்து நடக்க வேண்டிய நிலை ஏற்படுபொழுது இது பிரபந்நர் குடிக் கட்டுப்பாட்டிற்குச் சிறிதும் சேராதென்று விலக்கி 'எம்பெருமான் தானே வந்து ஆட்கொள்ள வேண்டும்' என்று சொல்லித் துடிப்பை அடக்கப் பார்க்கிற 'நம:' பதத்திற் கூறப்பெற்ற உபாய அத்யவசாயமாகின்ற பிரஞ்ஞாவஸ்தையை (உணர்வு நிலையைத்) தாய் என்று உள்ளுறையாகக் கொள்ள வேண்டும் என்று ஆசாரிய ஹிருதயம் விரித்துப் பேசும். ஆகவே, இங்கு, 'அன்னை என் நோக்கும் என்று அஞ்சு

கின்றேன்' என்றது உபாய அத்தியாவசாயத்தில் ஊற்றத்தாலே பதறுதல் தவிர்ந்தேன்' என்று கூறுவதாகக் கொள்ளல் வேண்டும்!

மேலும் தொடர்ந்து பேசுகின்றாள் தலைவி: ''இப் பெரியார் குடந்தைக் கிடந்த கோவலன் என்னலாம்படி விளங்கு வர்; அதுவும் தெளிவாகத் தெரியவில்லை. திருவாழி திருச் சங்குகள் திருக்கைகளில்ஏந்தியுள்ளார்; இளமகளிர் இளைஞர் களைச் சுற்றிக் கொண்டிருப்பர்களாகையாலே இவரும் இள மகளிர்களால் சுற்றி வணங்கப் பெற்றுள்ளார். அவர்தம் உள்ளம் குளிரும்படி முத்துமயமும் பொன்மயமுமான திருவாபரணங் களை அணிந்து கொண்டுள்ளார்; அம்மகளிரை உவந்து தழுவு வதற்கு நான்கு திருத்தோள்களையுடையவராகத் திகழ்கின்றார். இவருடைய அழகோ நம்மால் பேசிமுடியாது (2); இவருடைய திருக்கண்களின் அழகுதான் என்னே! தாமரைக் கண்ணன் என்னலாம்படி தோன்றுகின்றார். ஓங்கிப் பரந்த மலைகள் போலே திகழ்கின்றனவாய்த் தோள் வளைகள் முதலியவற்றின் புகர் விஞ்சி விளங்கப் பெற்றவையான ஆயிரம் திருத்தோள்களும் அவயவந்தோறும் திருவாபரணங்களும் பொலிந்து நிற்கும் அழகைத்தான் என் சொல்லுவேன்! அலங்காரமும் வேண்டாத வடிவு தானே அமையாதோ என்னலாம் படியான அழகு அமைந்திருப்பதுதான் என்னே! இவ்வழகை நோக்குங்கால் இவர் திருமெய்யத்தில் எழுந்தருளியிருப்பவர் போலவும் தாவி உலகையெல்லாம் அளந்தவர் போலவும் தோன்றுகின்றார் (3).

''தோழி, அவருடைய பரத்துவ சௌலப்பியங்களைக் கூறுகின்றேன், கேளாய். மணங்கமழும் திருத்துழாய் மாலை களைத் தோளிணைமேல் அணிந்துள்ளார்; திருக்கைகளில் திருவாழி திருச்சங்குகளைப் பூவேந்துமாப்போலே ஏந்தி யுள்ளார்; இப்படிப்பட்ட பரத்துவங் கொண்டிருந்தும், எட்டாத வராக இராமல் நாமிருக்குமிடத்திலேயே வந்து புகுந்துள்ளார்! பரமரசிகர். இளமை ததும்பும் பருவமுடையவராகத் திகழ் கின்றார். இவருடைய வாயிதழ்கள் திருப்பவளம் போலிரா நின்றன. திருவுருவமோ செம்பவளத் திரள் போலே விரும்பத் தகுந்ததாக இரா நின்றது. இங்ஙனம் உவமையில்லாதவரை உவமையிட்டுச் சொல்லுவதும் சரியன்று என்னும்படி பேரழகு டையவர் (4); உறையூரையும் தென் மதுரையும் இருப்பிடமாகக் கொண்டு காட்சி தரும் கோபல கிருஷ்ணன் போன்றவர்! மலை போன்ற திண்ணிய நான்கு திருத்தோள்களை யுடையவராகக் காட்சி தருகின்றார். இவருடைய திருமேனியின் தோற்றம்

கருங்கடலை யொத்துள்ளது. இத்தகைய பெருமானை நான் எங்குங் கண்டதாக நினைவில்லை. இவருடைய வடிவழகு பேச்சுக்கு நிலமன்று காண்! இவர் பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு வாழ்ந்திடுக(5).

''தோழி, இவரைப் பார்த்தால் கம்சன் அரண்மனை வாயிலில் மதமூட்டி நிறுத்தி வைக்கப்பெற்ற வேழத்தின் மருப்பொசித்துக் கொன்ற கோவலன் போன்றுள்ளார்; அவர் தானோ இவர்? அணிகள் பூண்ட மங்கையர்தம் நெஞ்சைத் தஞ்சமாகவுடையவரோ இவர்? இன்னாரென்று அறுதியிடக் கூடவில்லையே! தாமரை போன்ற திருக்கண்கள் இருக்கும் அழகை என்னென்று சொல்வேன்! முன்பு கஞ்சனை மஞ்சத்தி னின்றும் தள்ளித் திருத்தாளால் உதைத்த தனி வீரராகவே தோன்றுகின்றார். இராவணனைப் போன்ற வணங்காமுடிகளும் இவரைக் கண்டவாறே பரவசப்பட்டு வணங்கும்படியன்றோ இவர்தம் அதிசயம் இருப்பது? ஓர் அஞ்சனக் குன்றம்தான் இங் ஙனம் வடிவம் கொண்டு நிற்கின்றதோ? என்னலாம்படி இருக் கின்றார் காண். வாய் கொண்டு சொல்ல வொண்ணாத பேரழகு படைத்த இவர் திறத்தில் நான் என்னவென்று சொல்வேன்? (6).

''தோழி, தாமரை மொட்டை மலர்விக்கச் செய்யவல்ல பேரருளாளரான ஆதித்தியனோ இவர்? இவரைப் பார்த்தா வாறே என்பக்கல் நினைவின்றியே என் நெஞ்சு இவரை வணங்கி நிற்கின்றது. உன்னையறியாமல் எனக்கு வரும் நன்மை யொன்றுமில்லையே! அப்படியிருந்தும் உன்னையும் என்னையு மறியாமல் இப்படி ஒரு நன்மையுண்டானது என்னே! இவர் செய்கின்ற காதல் விளையாட்டுகளோ நெடு நாளாக மிகப் பழகியவர் செய்பவைபோல் உள்ளன. ஆயினும், இதற்கு முன்பு இவரைக் கண்டதாகவும் எனக்கு நினைவு இல்லை. உற்றுநோக்குகின்ற திருக்கண்களும் அணைக்க முற்படு கின்ற திருக்கைகளும் திரளச் செறியப் பூத்த தாமரை என்னலாம் படி உள்ளன. திருவடிவமோ மேகத் திரள் என்னலாம்படி உள்ளது. இவர்தம் அழகுக்கு யாரே ஒப்புச் சொல்லவல்லார்? (7); மேகமண்டலத்தளவும் செல்லும்படி ஓங்கி மாமதி வந்து தீண்டும்படியாக உயர்ந்துள்ள திருமாலிருஞ்சோலை மலையை இருப்பிடமாகக் கொண்டுள்ள மாலிருஞ்சோலை மணாளர் தாமே என் நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் எழுந்தருளி ஒரு நொடிப் பொழுதும் நீங்குகிற்றிலர்; திருநீர்மலை எம்பெருமான் போலவும்

திகழ்கின்றார்; அறுதியிட்டுச் சொல்லமுடியாத நிலையிலுள்ளேன். மிக உயர்ந்த பொன்மலைமேலே காள மேகம் படிந்து வருமாப்போலே பெரிய திருவடியின்மீது வீற்றிருந்து எழுந்தருளுங் கோலத்தை வந்து காணுங்கள்! இவருடைய அழகுக்குப் பாசுரமிட என்னாலாகுமா? *(8)*[10]

''தோழி, இப்பெரியாரைக் கண்டதும், 'இவர் ஆபத்துக்கு உதவுபவர்' என்று நினைக்கத் தோன்றுகின்றது. திக்குகள் எட்டிலும் வந்து அலையெறியா நின்றுள்ள கடல்களையும் ஏழுலகங்களையும் ஒருசமயம் திருவயிற்றில் வைத்துப் பிரளயம் கொள்ளாதபடி காத்து ஒரு சிறிய ஆலந்தளிரில் துயில் கொண்ட ஆச்சரியன் என்று தோன்றும்படி உள்ளார். 'கூடாதவற்றையும் கூட்டுவிப்பவர் இவர்' என்று தெரிகின்றது. ஆயினும், இவர்தம் வியத்தகு செயல்களை நான் அறிகின்றிலேன். திருவுருவத்தை நோக்கினால் மேகம்போலவும் மலைபோலவும் தோன்றுகின்றது. திருக்கண்களும் திருப்பவளமும் நறுமணங் கமழும் தாமரைபோல் உள்ளன. இவர்தம் மேன்மைக்குத் தக்க மேன்மையுடையவர்களே இவரைக் கிட்டலாமேயன்றி நமக்குக் கிட்டவொண்ணாது என்று பின்வாங்க நேர்ந்தாலும் இவர்தம் பேரழகு நம்மைப் பின்வாங்க வொட்டுகிறதில்லை *(9)*.

பரகாலநாயகியின் நிலையை நாமும் அடைய முயல்கின்றோம். அஃது அவ்வளவு எளிதானதா, என்ன? அவனருள் இருந்தால்தான் அது இயலும். ஏதோ ஒருவிதமாக அவள் நிலையை ஏறிட்டுக் கொண்டு திருக்கோயிலினுள் புகுந்து கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு , நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **சௌந்தரியராஜனை** - நாகை **அழகியாரைச்** சேவிக்கின்றோம். தாயாரின் திருநாமம் **சௌந்தரியவல்லி.** அவரையும் சேவிக்கின்றோம். தீர்த்தமும் திருத்துழாயும் பெற்று, சடகோபம் சாதிக்கப்பெற்று திருக்கோயிலைச் சுற்றி வருகின்றோம். புராணங்களில் இத்திருக்கோயில் **சௌந்தரநாராயண க்ஷேத்திரம்** என வழங்கப் பெறுகின்றது. இங்கு எம்பெருமான் மூன்று நிலைகளில் காட்சி தருகின்றார். சயனத் திருக் கோலத்தில் **அரங்கநாதரும்**, இருந்த திருக்கோலத்தில் **கோவிந்தராசரும்**, நின்ற திருக்கோலத்தில் **சௌந்தரியராசனும்** சேவை சாதிக்கின்றனர்.

10. 'அஞ்சிறைப் புள்ளும் ஒன்றேறி வந்தார்' என்றதனால் ஆழ்வார் இத்திருப்பதியில் கருடோத்சவம் சேவிக்கப் பெற்றதாகத் தோன்றுகின்றது.

நாகை அழகியாரின் விமானத்திற்கு ஐந்து கலசங்கள் உள்ளன. இது எங்கணும் காணப்பெறாதது. திருமால் துருவனுக்குக் கருடன்மீது இவர்ந்து சேவை சாதித்தது இத்திருத்தலத்தில். திருத்தாயாரின் உற்சவமூர்த்தி **கஜலட்சுமியாக** அமைந்துள்ளது.

திருநாகையில் பெரிய கோபுரம் நாகை அழகியாரின் இராசகோபுரம்தான். இதனைத் தவிர பதினைந்து விமானங்கள் உள்ளன. அரங்கநாதர், கோவிந்தராசர், பச்சை வண்ணர், பவளவண்ணர், வரதராசர், இராமர், சீநிவாசர், வைகுந்த நாதர், ஆண்டாள், ஆஞ்சனேயர், ஆழ்வார்கள் இவர்கட்குத் தனித்தனி சிறுகோயில்கள் இத்திருக்கோயிலினுள் அமைந்துள்ளன. பெரிய திருவடிக்கும் தனிக்கோயில் உண்டு. இவர் இருந்த திருக்கோலத் தில் காட்சி தருகின்றார். இத் திருத்தலத்தின் மற்றோர் அரியகாட்சி **அட்டபுய நரசிம்ம சுவாமியின்** சேவை. இங்கு இவர் இரணி யனைக் கொல்வதால் துஷ்டநிக்ரகத்தையும், பிரகலாதனுக்கு அருள் புரிவதால் சிஷ்டபரிபாலனத்தையும் ஒரே சமயத்தில் செய் வதாக அமைந்துள்ளது. இது எங்கும் காணாத காட்சியாகும்.

இவற்றையெல்லாம் சேவித்துக் கொண்டு இராச கோபுரத்தருகில் வருகின்றோம். ஆழ்வாரின் திருப்பாசுரங்களை மிடற்றொலி கொண்டு சேவிக்கின்றோம்; பரகால நாயகியின் நிலையை அடைந்து விடுகின்றோம். இந்தப் பாசுரங்களை ஓதவல்லவர்கள்,

மன்னவ ராய்உல காண்டு மீண்டும்
வானவ ராய்மகிழ் வெய்துவரே (10)

என்றவாறு இப்பூவுலகில் பேரரசர்களாயும் அதற்கு மேலும் முக்தர்களாகியும் பேரானந்தம் அடைவார்கள் என்ற அநுபவத் தையும் அடைகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வருகின்றது.

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையில்நீ
ஆர்ந்ததற்கோர் கைம்மாறு அறிகிலேன் - பூந்துவரை
மன்னா கையாழி வலவா வலம்புரியாய் தென்னாகை
யாய்அருளிச் செய்.[11]

11. நூற். திரு. அந்-19

(குறுஏவல்-கைங்கரியம்; சிந்தை-மனம்; ஆர்ந்ததற்கு-எழுந்தருளி யிருப்பதற்கு; கைம்மாறு-பதில் உதவி; ஆழி-சுதர்சனம்; வலம்புரி-திருச்சங்கு)

என்பது பாசுரம். ''நான் உனக்கு ஏதேனும் கைங்கரியம் செய்யாதிருந்தும் ஒருகாரணமும் இல்லாத கருணையால் அடியேன் மனத்தில் வந்து குடிபுகுந்தாய். அதற்குத் தக்க கைம்மாறு இல்லாவிடினும், எவ்விதத்திலேனும் போலியான ஒரு பிரதியுபகாரமாவது செய்யக் காண்கின்றிலேன்'' என்கின்றார் அய்யங்கார். ''ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந் தாய் உனக்கோர், கைம்மாறு நான் ஒன்றிலேன்; எனதாவியும் உனதே''[12] என்ற திருவாய்மொழியின் கருத்துக் கொண்டது இப்பாசுரம் என்பதையும் சிந்திக்கின்றோம். நாகராசனுக்குத் திருமால் நேர்காட்சி தந்தமையால் 'நாகப்பட்டணம்' என்று இத்திருத்தலம் திருநாமம் பெற்றது என்ற செய்தியை அறிந்த வண்ணம் நாம் தங்கியிருக்கும் திருவாரூரிலுள்ள விடுதிக்குத் திரும்புகின்றோம்.

12. திருவாய் - 5.7:10.

20. கண மங்கைக் கற்பகம்

> "பிராப்தாவும் பிராபகனும் பிராப்திக்கு
> உகப்பானும் அவனே."[1]

என்ற வாக்கியம் நம் சிந்தையில் எழுகின்றது. இதனை அசை போடுகின்றோம். இங்கு பிராப்தா-அடைகிறவன்; பிராபகன் - அடைவிப்பவன்; பிராப்தி - அடைதல். அடைவிக்கின்றவன் ஈசுவரன் ஆனாலும், அடைகின்றவனும் பேற்றிற்கு உகக்கின்றவனும் இவன் (சீவன்மா) அன்றோ? நிலைமை இங்ஙனம்இருக்க இவன் நினைவினை இப்படி நேராகத் துடைக்கலாமா? என்ற வினாக்கட்கு விடையாக அமைந்துள்ளது இந்த நூற்பா. சீவான்மாவின் தன்மைகளுள் உபாயமாகும் தன்மை சிறிதும் இல்லை என்று துடைத்து, '**ஈசுவரனே உபாயம்**' என்று அறுதியிட்ட போதே அடையும் தன்மையும் பேற்றில் வரும் உகப்பும் இவனுடைய தல்ல என்பதும் உபாயமாக இருக்கின்ற ஈசுவரனுடைய தன்மைகளாகவே பலித்து விடுகின்றன. ஆகவே, மேற்குறிப்பிட்ட வாக்கியம் நுவலும் மூன்று பொருள்களும் இறைவனாகின்றன. இதனை இன்னும் சற்று விளக்குவோம்.

பிராப்தா அவன் ஆகையாவது எங்ஙனம்? என்பதை ஆராய்வோம். சொத்தாக இருக்கும் தன்மை ஆன்மாவினிடத்தில் உள்ளது; சுவாமியாக இருக்கும் தன்மை பரம்பொருளான நாராயணனிடத்தில் உள்ளது. இந்த **உடைமை-உடையவன்** என்னும் சம்பந்தம் அடியாக, உடைமையை அடையும் உடையவனைப் போலவே, இவ்வான்மாவை அடைகிறவன் இறைவனாகவே உள்ளான். ஆன்மா இறைவனுடைய திரு மேனியாகவுள்ளது என்பது **சரீர-சரீரி பாவனையால்** பெறப் படுகின்ற உண்மையன்றோ?

1. ஸ்ரீ வச. பூஷ - 17 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

பிராபகன் அவன் ஆகையாவது எங்ஙனம்? என்பதையும் சிறிது சிந்திப்போம். இறைவனாகிய தான் இவனை (சீவான் மாவை) அடையுமிடத்தில்அடைவிக்கும் உபாயமும், முற்றறி வினையுடையவனாயிருத்தல், எல்லா ஆற்றல்களையுமுடைய வனாயிருத்தல், சத்திய சங்கல்பனாயிருத்தல் முதலான குணங் களோடு கூடினவனாய்த் தடை இல்லாத சுவதந்திரத்தை (Independence)யுடையவனான தானாகவே இருக்கின்றான்.

பிராப்திக்கு உகப்பானும் அவனே என்ற கருத்தையும் ஆராய்வோம். உடைமையை அடைகின்ற காலத்தில் அதனைத் துய்க்கின்றவனான தலைவன் மிக்க மகிழ்ச்சியை அடையுமாறு போலே இவனை (சீவான்மாவை) அடைந்தால் 'அடையப் பெற்றோம்' என்று உகப்பானும் இவ்வான்மாவினை எப்பொழு தும் துய்த்துக் கொண்டிருப்பவனான இறைவனாக இருத்தல்.

'இம் மூன்றும் அவனே' என்ற ஏகாரத்தால் இம்மூன்றனுள் இவனோடு சேர்வது ஒன்றும் இல்லை என்பது பெறப்படு கின்றது. இதில் 'பிராப்தாவும் பிராபகனும் அவனே' என்கை யாலே அவனை அடைவதற்கு வேறு சாதனங்களைச் செய்யும் தன் முயற்சி இவனுக்கு இல்லை என்னும் இடமும், 'பிராப்திக்கு உகப்பானும் அவனே' என்கையாலே அவனுடைய இன்பத் திற்கும் முக உல்லாசத்திற்கும் தான் இருக்கின்றானே தவிர, தன் பயனில் தனக்குச் சம்பந்தம் இல்லை என்னுமிடமும் பெறப்பட்டன.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் திருவாரூரில் நாம் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து திருக்கண்ண மங்கை என்னும் திவ்வியதேசத்திற்குப் புறப்படுகின்றோம். இத்திருத்தலம் திருவாரூருக்கு மேற்கே சுமார் எட்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. திருவாரூரிலிருந்து கும்பகோணத்திற்குச் செல்லும் பேருந்தில் சென்று வழியிலுள்ள திருக்கண்ணமங்கை யில் இறங்குகின்றோம். சாலையிலிருந்து மேற்கே நடந்து திருக் கோயிலை அடைகின்றோம். இடம், தீர்த்தம், மண்டபம், விமா னம், நதி, நகரம், ஆரண்யம் என்ற ஏழு தனிச் சிறப்புகளைக் கொண்டிருத்தலால் இத்திருக்கோயில் '**சப்தாமிர்த க்ஷேத்திரம்**' (ஏழு அமுதங்களைக்கொண்ட திருக்கோயில்) என்ற திருநாமத் தால் திகழ்கின்றது.

திருக்கோயிலுக்கு முன்னதாகத் தென்படுவது திருக்குளம்; புஷ்கரிணி, **தரிசன புஷ்கரிணி** என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுகின்றது. இது சந்திரனுடைய சாபத்தைத் தீர்த்ததாகச்

சொல்வர். பெயருக்கேற்ப தரிசனத்திற்கு மட்டிலுமே ஏற்றது. இறங்கி நீராடுவதற்கு ஏற்றதன்று. ஆகவே, நேராகத் திருக் கோயிலுள் நுழைகின்றோம். திருக்கோயிலினை அடுத் திருப்பது '**பதரி வனம்**' என்ற காடு. திருக்கோயிலின் வடபுறமும் தென் புறமும் காவிரி இரண்டாகப் பிரிந்து எம்பெருமானுக்கு மாலை யிடுவதுபோல் சிற்றோடைகளாகச் செல்லுகின்றது. திருக்கோயி லினுள் ஒரு பெரிய மண்டபம் உள்ளது. இது '**ஸ்ரீ மண்டபம்**' என்ற பெயருடன் திகழ்கின்றது. மகா இலக்குமி இந்த மண்டபத் தில் தவம் இயற்றி எம்பெருமானை மணந்ததாக வரலாறு. இலக்குமி இங்குள்ள திருத்தலத்தில் தீர்த்தமாடிய பின்னரே எம்பெருமான் இவரை மணந்ததால் இவர் '**அபிஷேக வல்லி**' என்ற திருநாமத்தால் திகழ்கின்றார். கோயிலினுள்ளிருக்கும் பெரிய திருவடி நின்ற திருக்கோலத்தில் கூப்பிய கையுடன் பக்தர்கட்கு வரங்களைத் தருவதற்குக் காத்திருக்கிறார்.

இத்திருத்தலத்து எம்பெருமானின் திருநாமம் **பக்தவத்சலர்** என்பது.[2] கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். பெரிய திருமேனியை யுடையவர். தாயாரின் திருநாமம் **அபிஷேகவல்லி** என்பது. திருமங்கையாழ்வார் மட்டிலுமே 15 பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார்.[3] பெரிய திருமடலில் ஆழ்வார் '**கண மங்கைக் கற்பகம்**' என்ற திருநாமமிட்டு இனியராகின்றார். நாம் ஆழ்வாரின் பெரிய திருமொழிப் பாசுரங்கள் கொண்டு சேவிக் கின்றோம்.

பெரும்பு றக்கட லை,அடல் ஏற்றினை
பெண்ணை, ஆணைஎண் இல்முனி வர்க்குஅருள்
தரும்த வத்தை,முத் தின்திரள் கோவையைப்
பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை
அரும்பி னை,அல ரை,அடி யேன்மனத்து
ஆசை யை,அமு தம்பொதி இன்சுவைக்
கரும்பி னை,கனி யை-சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே.[4]

2. திருநின்றவூர்ப் பெருமாளின் திருநாமமும் இதுவே. இவரும் பத்தராவிப் பெருமாள் என்று வழங்கப்பெறுவர் (தொண்டை நாட்டுத் திருப்பதிகள் - காண்க)

3. பெரி. திரு. 7.6;5. 7.10; 10.1:1; 11.6:7; மடல்கள் இரண்டிலும்.

4. மேலது - 7.10:1

(அடல் ஏறு - செருக்குடைய காளை; தவம் - தவப்பயன்; கோவை - மாலை; பத்தர் ஆவி - பக்தர்கட்கு உயிர் போன்றவன்)

என்பது பாசுரம். இதிலும் இதனைத் தொடர்ந்து வரும் ஒன்பது பாசுரங்களிலும் எம்பெருமான் தன் படிகளை எல்லாம் காட்டிக் கொடுத்தமையைப் பரக்கப் பேசி மகிழ்கின்றார் ஆழ்வார். திருக்கண்ணமங்கை எம்பெருமான் எப்படிப் பட்டவன்? இதற்கு விடையாக ஒன்பது பாசுரங்களிலும் எம்பெருமானின் படிகள் விசதமாக நுவலப்பெறுகின்றன. "பரந்த கடல்போலே அளவிட முடியாத சொரூப சுபாவங்களையுடையவன்; செருக்குடைய காளைபோல் மேனாணிப்புள்ளவன்; பெண்ணைப்போல் பாரதந்திரியமே வடிவாயிருப்பவன்; ஆணைப்போல் சுவா தந்திரிய மாயிருப்பவன்; எண்ணிறந்த யோகியருக்கு அருள் பாலிக்கும் தவப்பயனாயுள்ளவன்; முத்தின் திரளாகிய மாலை போன்றவன்; பக்தர்கட்கு உயிர்நிலை யாயிருப்பவன்; முத்துக் குவியல் போன்றிருப்பவன்; அரும்புபோல் இளமையுள்ளவன்; மலர்ந்த பூப்போல் யௌவன பருவமுள்ளவன்; அடியேன் மனத்தில் புத்தம் புதிதாக எழும் ஓசைக்கு இலக்கணமானவன்; அமுதத்தை நீராகப் பாய்ச்சியதனால் வளர்ந்த இன்சுவையுள்ள கரும்புபோல் இனிமையுடையவன்; கனிபோல் கண்டபோதே நுகரத் தக்கவன் (1). பக்தியோகத் திற்குத் தூண்டுபவன்; பரமபதம் அளிக்கவல்ல பிரபத்தி யோகத்திற்கு ஏவுபவன்; அன்பு இல்லாதார்க்குப் பொய்யன்; திருவாழியைத் திருக்கையி லுடையவன்; கடல்நிற வண்ணன்; எல்லாரிலும் மேம்பட்டவன்; ஆலிலையில் பள்ளிகொண்ட ஆச்சரியன்; நேற்றைப் போதில் நுகரப்பெற்ற பொருள்போல் நெஞ்சை விட்டகலாத யோக்யதையையுடையவன். இன்று அநுபவிக்கப்பெறும் பொருள் போன்றவன்; மேலுள்ள காலமும் இப்படியே அநுபவிக்க உரியவன்; திங்கள் ஆண்டு இவற்றிற்கு நிர்வாககன்; கன்னற் கட்டிபோன்றவன்; கருப்பஞ்சாறு போன்றவன் (2).

வேறு புகலற்ற அடியேன் போல்வார் திறத்தில் காரண மில்லாமல் கருணை காட்டுபவன்; சிவனைத் தன் திருமேனியில் வைத்து அதனைத் தன் பேறாக உகந்திருக்கும் சீலகுணத்தாற் சிறந்தவன். எப்போதும் இத்திருக்குணத்தையே இயல்பாக வுடையவன்; பனிமா மதியம் தவழப் பெற்ற ஆகாயமாக இருப்பவன்; வடவேங்கடத்தின் கொடுமுடியைத் தன் இருப்பிட மாகக் கொண்டவன்;நம்மால் விரும்பி வணங்கப் பெறு பவன்;போகம் அநுபவிப்பதற்கான பகல் இராப் பொழுதுகட்கு

நாயகன் (3). பேய்ச்சி முலையிலுள்ள நஞ்சினை அமுது செய்த சிறுக்கன்; தெள்ளியார் வணங்கப்பெறும் தேவன்; திருக் கோவலூரில் இடைக்கழியில் முதலாழ்வார்களால் நெருக்குண்ட இளங்குமரன்; அந்தணர்களின் சிந்தையுள் புகுந்து அவர்களைத் தன்வழியே நியமித்துக் கொண்டிருப்பவன்; பிரகாசமே வடிவாகவுடையவன்; இத்தன்மைகளால் அடியேனை ஆட்படுத்திக் கொண்டவன்; எய்ப்பினில் வைப்பாக இருப்பவன்; பொன்னும் மணியும்போல் எல்லாராலும் விரும்பப் பெறுபவன் (4). நித்தியானந்தத்தால் காளைபோல் மிடுக்குடையவன்; இமயத் திருப்பிரிதியில் தன் இருப்பைக் காட்டி அடியேனை வயப்படுத்திக் கொண்டவன்; இம்மை மறுமைப் பயன்களை விரும்புவார்க்கு அளிக்க வல்லவன்; தான் விரும்பும் மனிதர்களை பரமபதத்தில் கொண்டு வைக்க வல்லவன்; கையில் திருவாழியாழ்வானிருப்பதனால் எதிரிகட்கு எமன்போன்றவன்; திருநின்றவூரில் முத்துத்திரள் போல் வடிவு கொண்டு எழுந்தருளி யிருப்பவன்;[5] நீலமணிமயமான மலை போன்ற வடிவையுடையவன்; ஊற்றின்பத்தைத் தரும் தென்றல் போல் விரும்பத் தக்கவன்; நீர்போல் உயிர் தரிப்பிற்கு ஏதுவானவான் (5).

நினைத்ததை நினைத்தவாறு செய்து தலைக்கட்டிக் கொள்ளவல்ல சாமர்த்தியன்; கேசியை அழித்து 'கேசவன்' என்ற திருநாமம் பெற்றவன்; ஒளிமிக்க அணிகளை வைத்தற்குரிய செப்பு போன்றவன்; திருமகள் கேள்வன்; பவளத்தின் ஒளியை ஒத்திருப்பவன்; ஏழுலகங்கட்கும் நாயகன்; கால தத்துவன்; திருவாழி ஏந்திய திருக்கையன்;அந்தணர்களின் கல்விக்குப் பொருளாக இருப்பவன் (6). எப்பொழுதும் முற்றிலும் மன நிறைவுடையவன்; திசை நான்முகனுக்குத் திருத்தமப்பன்; மூவரில் முதல்வன்; பேரொளி வீசும் திருமேனியை

5. திருமங்கையாழ்வார் இத்தலத்தில் வந்து இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பாடித் துதிக்கையில், திருநின்றவூர்ப் பத்தராவிப் பெருமாள், முன்பு திருக்கடல் மல்லையில் ஒரு பாடல் பெற்றது போதாதென்று மீட்டும் அவ்வூரிலுள்ள நாய்ச்சியாரான என்னைப் பெற்ற தாயாரால் நினைவூட்டப்பெற்றவராய், ஆழ்வாரெதிரில் வந்து காட்சி யளிக்க, ஆலி நாடர் ''நின்றவூர் நித்திலத் தொத்தினை,..... கண்ணமங்கையுட் கண்டு கொண்டேனே'' (பெரி. திரு. 7.10:5) என்று அப்பிரானையும் சேர்த்துத் துதித்தனர் என்பதை அறிக.

யுடையவன்; மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் தலைவன்; சிவனைக் கூறுடம்பாகக் கொண்டவன்; அரி என்ற திருநாமமுடையவன்; எல்லாப் பொருள்களும் தன்னிடத்தில் பொருந்தும்படியான முழுமுதற் கருத்தன் (7). கன்றினால் கனியுதிர்த்தகாளை; பூதனையின் நஞ்சு தீட்டிய முலையுடன் அவளுடைய உயிரையும் உண்ட சிறுவன்; இராவணனை மாய்த்த வீரன்; அன்பர்கட்கு ஆரா அமுதம் போன்றவன்; நச்சுவார் உச்சிமீது நிற்கும் நம்பி; கஞ்சனைக் காலனுலகிற் கனுப்பிய காளை (8). இசைபோல் இனியன்; இசையின் சாரமானவன்; பாலினுள் நெய்போல் மறைந்திருக்கும் பான்மை யன்; நித்திய விபூதிக்கு நாதன்; பேரொளி வீசும் திருமேனியன்; வேள்வி சொரூபி; விளக்கொளி போன்ற சுய ஒளியை யுடையவன்; பூமிபோன்ற பொறுமையுடையவன்; மலை போல் அசைக்க ஒண்ணாதவன்; வேண்டுமிடங்கட்கு வரு வித்துக்கொள்ளவல்ல அலை நீரினைப் போன்றவன்; அடியவ ரிடத்து பேரவாக் கொண்டவன்; சிறந்த ஞானவான்; வைதிகர் கட்குக் கண்போன்றிருப்பவன் (9). இப்படிப்பட்ட எம்பெரு மானைக் கண்ணமங்கையில் கண்டு கொண்டதாகக் களிப் பெய்துகின்றார் ஆழ்வார்.

'நலமந்த மில்லதோர் நாடாகிய திருநாட்டிற்குச் சென்று காண வேண்டிய பரமபுருடனான-புருடோத்தமனை-இந்த நிலத்தில், திருக்கண்ண மங்கையில் காணப்பெற்றேன்' என்று ஆவலுடன் ஆழ்வார் அருளிச் செய்த திருமொழியை நன்கு ஓதி உணர்பவர்கள் விண்ணுலகில் தேவர்களாய்த் திகழ்வார் என்பதுடன் பலன் உரைத்துத் தலைக் கட்டுகின்றார் ஆழ்வார். எம்பெருமானை நோக்கியும் பேசுகின்றார்: "வெண்சங்க மேந்திய கண்ணனே, உனக்கும் இத்திருமொழியில் ஆதரம் உண்டாகில் எனக்குச் சீடனாகவிருந்து கற்கவேண்டுங்காண்" என்கின்றார். அவ்வளவு சீரிய பொருள் குடிகொண்டதாம் இத்திருமொழி என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். இதன் சொல்லின்பமும் பொருளின்பமும் எம்பெருமானையும் வணங்கப் பண்ணி ஈடுபடுத்தும் என்க. "ஒரு வஸிஷ்டன்பாடே ஸாந்தீபிநிபாடே தாழநின்று அதிகரிக்கக் கடவ அவனுக்குத் திருமங்கையாழ்வார்பாடே அதிகரிக்கை தாழ்வோ?" என்பது பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானக் குறிப்பு. இராமா வதாரத்தில் வஸிஷ்ட சீடனனென்றும் கிருஷ்ணாவதாரத்தில்

ஸாந்தீபிநிசீடனென்றும் பேர் பெற்ற பெருமானுக்கு அர்ச்சாவதாரத்தில் பரகால சீடனென்று பெயர்பெறுதல் பெருமையாம் என்பது வியாக்கியான சக்கரவர்த்தியின் கொள்கை.

இன்னொரு திருப்பாசுரத்தில் எம்பெருமானின் காக்கும் தன்மையைப் பேசும் போக்கில் வேறொரு முக்கியமான கருத்தையும் குறிப்பிடுகின்றார்.

மண்நாடும், விண்நாடும், வானவரும்,
தானவரும் மற்றும் எல்லாம்
உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல்
தான்விழுங்கி உய்யக் கொண்ட
கண்ணாளன், கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி, அவனை உள்ளத்து
எண்ணாத மானிடத்தே எண்ணாத
போதுஎல்லாம் இனிய ஆறே.[6]

(மண்நாடு - பூவுலகம்; விண்நாடு - உம்பர் உலகம்; வானவர் - தேவர்; தானவர் - அசுரர்; பெருவெள்ளம் - பிரளய வெள்ளம்; உய்ய - உய்வித்தருளிய; கண்ணாளன் - பரம தயாளன்; கழல்-திருவடிகளை; சூடி- சிரமேல் புனைந்து; மானிடம்-மனிதர்கள்)

என்பது பாசுரம். ''பிரளய வெள்ளத்தினின்றும் ஆபத்து நேராதபடி உலகனைத்தையும் தன் திருவயிற்றினுள் அடக்கி வைத்துப் பாதுகாத்தருளின் எம்பெருமானே கண்ணமங்கையில் திருக்கோயில் கொண்டுள்ளான்; இந்த எம்பெருமானுடைய திருவடிகளைத் தலைமேற் புனைந்து அப்பெருமானையே இடைவிடாது சிந்தித்திருத்தல் நன்றியறிதலுடைய செயலாகும்; அப்படிச் சிந்திக்கமாட்டாத பாவிகளை நாம் நெஞ்சிலும் இட்டு எண்ணாதிருந்தால் அதுவே நமக்குப் பரமபோக்கியம்,'' என்கின்றார் ஆழ்வார். இங்கு வியாக்கியான வாக்கியம், ''ஞானமும் வேண்டா; வைணவ சகவாசமும் வேண்டா, அவைணவர்களை நினையாதபோது இனிதென்கை.'' எம்பெருமானையும் எம்பெருமானின் அடியார்களையும் சிந்திக்கையாகின்ற புருஷார்த்தத்தைக் காட்டிலும் பகவத் பாகவத விமுகர்களை(நோக்கற்றவர்களை) சிந்தியாதிருக்கப் பெறுகையே பரமபுருஷார்த்தமென்பது திருமங்கையாழ்வாருடைய திருவுள்ளம். திருக்கோயிலை வலம் வருங்கால் பல அரிய

6. பெரி. திரு. 11.6:7.

சிற்பங்களைக் காண்கின்றோம். இக்கலை வடிவங்களின் அருமை பெருமைகளை நமக்கு விளக்க வேண்டுமானால் ஒரு **பாஸ்கரத்தொண்டைமான்** நம்முடன் இருக்க வேண்டும் என்பதையும் உணர்கின்றோம்.

அடுத்து, பத்தராவிப் பெருமாளுக்கு வடப்பக்கத்தில் தனிக்கோயில் கொண்டிருக்கின்றார் **அபிஷேக வல்லித்** தாயார். அங்குச் சென்று அவரையும் வணங்குகின்றோம். இச்சந்நிதியில் ஓர் அதிசயம். இங்கு ஒரு பெரிய தேன்கூடு கட்டப்பெற்றிருப் பதைக் காண்கின்றோம். இது எப்போது கட்டப் பெற்றது என்று கணிக்க முடியாத நிலை. இது கட்டப் பெற்றதற்கு ஒரு கதை மட்டிலும் வழங்கி வருகின்றது. கணமங்கை நகராளனைப் பிரிய விரும்பாத முனிபுங்கவர்கள் தேனீயாகப் பிறக்க வரம் வாங்கிக் கொண்டார்களாம் பத்தராவிப் பெருமாளிடம். அப்பெரு மக்களே இங்கு எக்காலத்திலும் நாடோறும் கணமங்கைக் கற்பகத் தையும், அபிடேகவல்லித் தாயாரையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு இசையொலி எழுப்பிக்கொண்டு வாழ்கின்றனர். கணமங்கைப் பெருமான் அணிந்திருக்கும் திருத்துழாய் மாலைகளில் தேனுக்குக் குறைவில்லை. அந்தத் தேனையே உண்டு உண்டு திளைத்து, தேக்கெறிந்து, எந்நேரமும் பாடிக்கொண்டே சுற்றிச் சுற்றி வருகின்றனர். இத்தேன் கூட்டிற்கு (இதில் வாழும் முனிபுங் கவர்கட்கு) நாடோறும் பூசை நடைபெறுகின்றது. ஆகவே, நாமும் இத்தேன் கூட்டை வழிபட்டுத் திரும்புகின்றோம்.

இந்நிலையில் திவ்வியகவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

> **கருத்தினால் வாக்கினால் நான்மறையும் காணா**
> **ஒருத்தனை நீநெஞ்சே உணரில் - பெருத்தமுகில்**
> **வண்ணம்அம் கைக்கண்கால் வனசம் திருவரங்கக்**
> **கண்ணமங்கை ஊரென்று காண்**[7]

(கருத்து - மனம்; காணா - கண்டறிய முடியாத; ஒருத்தன் - ஒப்பற்றவன்; வண்ணம் - நிறம்; வனசம் - செந்தாமரை மலர்; வனசம், வநஜம் - நீரில் தோன்றுவது)

என்பது பாசுரம். ''எம்பெருமானது உண்மை நிலையை உள்ளபடி அறிய விரும்பினால், அவனது திருமேனி நிறம்

7. நூற்.திருப். அந். 27

காளமேகம்; அவனது கை கால் கண்கள் என்ற உறுப்புகள் செந்தாமரை மலர்கள்; அவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் திருவரங்கம், திருக்கண்ண மங்கை போன்ற திருப்பதிகள் என இவ்வாறு தனித்தனியே உவமைப்பொருள்களைக் கொண்டு ஒருவாறு ஊகித்து அறியலாமேயன்றி வேத புருடனது மனம் மொழிக்கு எட்டாத அந்த எம்பெருமானது உண்மை நிலையை நேருக்கு நேரே மெய்ப்பித்து உணர்தல் சிறிதே ஞானமுள்ள நம்மால் எவ்வாற்றானும் முடியாது'' என்பதை உணர்கின்றோம். இத்தலத்தின் சிறப்பான திருவிழா வைகுண்ட ஏகாதசி. வசதியுள்ள திருத்தலப்பயணிகள் இத்திருநாளன்று இத்திருத்தலத்திலிருக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இத் திருத்தலத்தின்மீது **திருக்கண்ண மங்கை மாலை** என்ற ஓர் அருமையான நூல் எழுந்துள்ளது. 101 பாசுரங்களாலான இந்நூல் முத்தமிழ்க் கவி **வீரராகவ முதலியாரால்** அருளிச் செய்யப்பெற்றது. திருமகள் தோத்திரமாக - தேவி வழிபாட்டிற்குரியதாக - அமைந்துள்ள இந்நூலின் பாடல்கள் சொல் நயமும் பொருள் நயமும் பக்திச் சுவையும் செறிந்தவையாகத் திகழ்கின்றன. பாராயணத்திற்கு மிகவும் ஏற்ற நூல்.[8] திருமகள் தோத்திரமாக வேறு தமிழ் நூல் கிடைப்பதரிது. இதிலுள்ள ஒரு சில நயமான பாடல்களை ஈண்டுக் காட்டுவது மிகப் பொருத்தமாகும்.

காவியும் பூவையும் மேகமும்
போல்வண்ணன் கண்ணன் கண்ணும்
ஆவியும் போலும் அபிடேக
வல்லிநின் அஞ்சனக்கண்
ஏவிய முத்தொழின் மூவரும்
கேட்பரன் றேஅகிலும்
நாவியும் நாறும் குழலாய்
கணமங்கை நாயகியே. (8)

இதில் அபிடேக வல்லித் தாயார் அஞ்சனக்கண் ஏவியதால் தான் மூவரும் முத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகப் பேசுகின்றார் கவிஞர்.

8. என் அருமைச் சகோதரராக நான் வைத்துப் போற்றும் வி.பூதூர். திரு. கி. வெங்கடசாமிரெட்டியார் அவர்களின் மணி விழா வெளியீடாக 18-8-1971-ல் அவர்தம் திருமகனார் திரு வே. இலட்சுமிநாராயணன் (B.E.) அவர்களால் வெளியிடப் பெற்றது.

புகைகிளர் வேற்கைச் சனகன்
மகளென்னப் பூத்தமணி
வகைகிளர் செம்பொன் மவுலித்
தசரதன் வாழ்மனைக்குத்
தகைகிளர் செல்வ மருமகளெனைத்
தவமென செய்தார்
நகைகிளர் மாமுகக் கொம்பே
கணமங்கை நாயகியே. (33)

இதில் சனகன் ''நின்னை அருமை மகளாகவும் தசரதன் கிடைத்தற்கரிய மருகளாகவும பெறுவதற்கு என்ன மாதவம் செய்தனரோ?'' என்று வியப்பெய்துகின்றார் கவிஞர்.

பாலாழி யோதிரு வைகுந்த
மோமது பாய்கஞ்சமோ
மாலாக மோசன கேசன்
தசரதன் வாழ்மனையோ
மேலான வுள்ள மிலாத்தமி
யேன்மனம் வீற்றிருந்தாய்
நாலா ரணத்தின் கொழுந்தே
கணமங்கை நாயகியே. (41)

பாற்கடல், வைகுந்தம், தாமரைமலர், திருமாலின் திருமார்பு, சனகனின் வீடு, தசரதனின் இல்லம் இவை எல்லாவற்றையும் விட மேலான உள்ளம் இல்லாத தம்மனத்தில் வீற்றிருப்பது என்னே என்று வியப்பெய்துகின்றார். இதில்

பொன்மணி தாரு பரிதுமபி
யான்பிறை பூவெண்சங்கும்
மென்மது ரத்தெள் ளமுதும்
பயோததி வீசியது
தன்மக ளாம்உனக் கேசீ
தனமென்று தானல்லவோ
நன்மலர் மாளிகை வாழ்வாய்
கணமங்கை நாயகியே (58)

''பொன், மணி, கற்பகத்தரு, பரி, வெண்சங்கு முதலியவை யாற்றையும் கடலன்னை வீசியது தன்மகளாகிய நினக்கு சீதனப் பொருள்களாகவன்றோ?'' என்கின்றார்.

பொன்னூ புரம்இடும் உன்பாத
கீர்த்தி பொலிந்திலங்கும்
தொன்னூல் எலாந்தெய்வ யாழொலி
நங்கன் திருச்செவிக்குப்
பன்னூல்கள் தாம்இருப் பாணிகண்
டாய்மயிர்ப் பாதியைநேர்
நன்னூல் பொருஞ்சிற றிடையாய்
கணமங்கை நாயகியே (70)

என்று திருமகளின் திருப்பாதச் சிறப்பைப் பேசுகின்றார்.

மேலான வைகுந்த வீட்டுக்
கருளின் விளங்கும்ஒரு
மாலாகும் மாலுக்கு மாலாக்கும்
உன்குழல் மாலைதமிழ்
நூலால் அனுதினம் நானூற்
பதுபற்ப நூலினத
னாலானை வீக்கும் தனைத்தே
கணமங்கை நாயகியே (86)

''வைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் மாலுக்கும் மயக்கத்தைத் தரும் உன் குழல் மாலையை என் தமிழ் நூலால் நூற்பன்'' என்கின்றார்.

இங்ஙனம் கணமங்கை நாயகியின்மேல் எழுந்துள்ள பாசுரங்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் கும்பகோணத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

***

எமது வெளியீட்டில்
ஆசிரியரின் பிற நூல்கள்

1. பல்சுவை விருந்து
2. மூவர் தேவாரம்
3. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்
4. சோழ நாட்டுத் திருப்பதிகள் - பாகம் II
5. காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
   ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகள்
6. வடவேங்கடமும் திருவேங்கடமும்
7. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'வைணவ இலக்கியமாமணி'
'தமிழ் வாகைச் செம்மல்'

பேராசிரியர். டாக்டர். ந. சுப்புரெட்டியார்

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி., டி.லிட்.,

இந்நூலாசிரியர் பற்றி...

89 - அகவையைக் கடந்தவர்

பணிகள் :

1. 9 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941- 50)
2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக்கல்லூரி - தமிழ்ப் பேராசிரியர் - துறைத்தலைவர் (1950 - 60)
3. திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் (1960 - 1980)

ஓய்வுக்குப் பின்னர் பணிகள் :

1. 18 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சியம் தலைமைப் பதிப்பாசிரியர்.
2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மதிப்பியல் பேராசிரியர்.
3. சென்னைப் பல்கலைக் கழகம் - தமிழ் இலக்கியத்துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
4. மதிப்பியல் இயக்குநர் - மரபியல் பண்பாடு நிறுவனம் (1995 - 2002) சென்னைப் பல்கலைக் கழகம்.

பிற பணிகள் :

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக் கழகங்களில் பல்வேறு பணிகள் - பொறுப்புகள். 125 நூல்களுக்கு மேற்பட்ட பல்துறை நூல்களின் ஆசிரியர்.

பெற்ற பரிசுகள் : 16 நூல்கள் பரிசு பெற்றவை.

பெற்ற விருதுகள் : பத்துக்கு மேல் - பல்வேறு நிறுவனங்கள் மூலம்.